
# வேங்கடம் முதல் குமரி வரை

## பொன்னியின் மடியிலே



தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வேங்கடம் முதல் குமரி வரை

(இரண்டாம் பாகம்)

- பொன்னியின் மடியிலே -

*கலைமணி*

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

கலைஞன் பதிப்பகம்

10 கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை - 600 017

**Rs. 80.00**

**VENKATAM MUTHAL KUMARI VARAI (Part II)**
by
**Tho. Mu. BASAKARA TONDAIMAN**

First Edition : 1960
Second Edition : 1964
Third Edition : 2000

Published by
**KALAIGNAAN PATHIPAGAM**
10 Kannadhasan Salai
T. Nagar, Chennai - 600 017

Laser by
*GURU COMPUTERS*,
Chennai - 24.

Printed at
***Sakthi Printers,***
Chennai - 600 021.

# முன்னுரை

வேங்கடம் முதல் குமரிவரை என்ற தொடரின் முதல் புத்தகம் **பாலாற்றின் மருங்கிலே** என்ற தலைப்போடு வெளிவந்து ஒன்பது மாதங்கள் தாம் ஆகின்றன. அதற்குள் அதே தொடரில் **'பொன்னியின் மடியிலே'** என்ற தலைப்போடு இரண்டாவது புத்தகமும் வெளிவருகிறது. இவ்வளவு விரைவில் இப்புத்தகம் வெளிவரக் காரணமாக இருந்தவர்கள் தமிழ்நாட்டு ரஸிக நண்பர்களே. 'கல்கி'யில் வெளிவரும் தொடர் கட்டுரைகளைப் படித்துவிட்டு அவற்றையெல்லாம் தொகுத்து புத்தக உருவில் எப்போது வெளியிடப் போகிறீர்கள் என்று கடிதத்திற்குமேல் கடிதம் எழுதிய அன்பர்கள் பலர். முதல் புத்தகம் வெளிவந்த உடனே 'இந்த ஆண்டின் அருமையான புத்தகம் இது' என்று பாராட்டி அதற்கு ஆயிரம் ரூபாய் பரிசொன்றையும் தந்து ஊக்குவித்தவர் சென்னை அருணாசலம் படத்தயாரிப்பாளர் திரு.ஏ.கே.வேலன் அவர்கள். இவர்கள் எல்லாம் காட்டிய ஆர்வமும், தந்த ஊக்கமுமே பொன்னியின் மடியிலே இச்சிறு குழந்தையையும் தவழவிடும் பாக்கியத்தைத் தந்திருக்கிறது எனக்கு.

வேங்கடத்தில் ஆரம்பித்து மதுராந்தகம் வரை தொண்டை நாட்டில் நடத்திய தல யாத்திரையே பாலாற்றின் மருங்கிலே என்ற தலைப்பில் வெளிவந்தது. அத்தலயாத்திரையின் இரண்டாவது சுற்று, நடு நாட்டில் உள்ள மயில மலையில் துவங்கி, தெய்வப் பொன்னி பாய்ந்து பெருகும் சோழநாட்டின் வடகீழ்ப் பகுதிகளை யெல்லாம் கடந்து, கும்பகோணத்தை அடுத்த திரிபுவனத்தில் நிறைவுற்றிருக்கிறது. 'பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத்து இருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே தவழ்ந்தவள்' தமிழ் அன்னை. நமது தல யாத்திரையும் பாலாற்றின்

மருங்கிலே பிறந்து, பொன்னியின் மடியிலே தவழ்ந்து, காவிரிக் கரையிலே நடந்து, பொருநைத் துறையிலே கொலுவீற்றிருக்கத் திட்டமிட்டிருக்கிறது. அதனால் இனிவர இருக்கும் இரண்டு புத்தகங்களும் **காவிரிக் கரையிலே – பொருநைத் துறையிலே** என்ற தலைப்புகளோடு வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தக் கட்டுரைகளில் சொல்லப்படுகிற வரலாறு, விளக்கப்படுகிற கலைவிமர்சனம் எல்லாவற்றையும் பாராட்டு கிறவர்கள் பலர். இக்கட்டுரைகள் மூலம் எடுத்துக் கூறும் இலக்கிய வளத்தையும், பக்தி அனுபவத்தையும் அனுபவிப்பவர்களும் அநேகர். என்றாலும் சிலகுறைபாடுகளையும் காணுகின்றார்கள் ஒரு சிலர். அவற்றில் முக்கியமானது, 'நாம் பக்தியோடு வணங்கும் தெய்வங்களை நையாண்டிக்கு உரிய பொருளாக்கி, அவர்களைக் கேலி பண்ணிப் பேசுவது பொருத்தமன்று. நகைச்சுவை வேண்டும் என்பதற்காக இப்படி எல்லாம் எழுதுவது தவறு என்பதுதான்.

இந்தக் குற்றச் சாட்டிற்கு நானே பதில் சொல்லவேண்டும் என எண்ணியிருந்தேன். அந்த சந்தர்ப்பத்தை எனக்கு கொடுக்க விரும்பவில்லை இந்நூலுக்கு முகவுரை எழுதியிருக்கும் பேராசிரியர் அ.சீநிவாசராகவன் அவர்கள். அவர்களிடமும் பலர் இப்படிக் குறைப்பட்டிருக்கிறார்கள் போலும். அது காரணமாக அவர்களே அந்த பக்தர்களுக்கு பதில் சொல்லியிருக்கிறார்கள் அவர்களது முகவுரையிலே. அந்த 'ரஸிக' நண்பர்களது மனம் கோணாதபடி இவ்வளவு அழகாக என்னால் பதில் சொல்ல முடிந்திருக்காது என்பது எனக்கு இப்பொழுது தான் விளங்குகிறது. இந்தத் திருத்தொண்டைச்செய்ததற்காகவும் நல்ல முகவுரை ஒன்றையும் வழங்கியதற்காகவும் பேராசிரியருக்கு, 'செந்தமிழ்ச் செம்மலுக்கு' என் இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இத் தொடர் கட்டுரைகள் எழுதுவதன் நோக்கம் என்ன?' என்று எனக்கு மிகவும் வேண்டிய நண்பர் ஒருவர் கேட்கிறார்.

அப்படி பெரிய நோக்கம் ஒன்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு நான் இந்தக் கட்டுரைகளை எழுதவில்லை தலவரலாறுகளைப் படிப்பவர்கள் உள்ளத்தில் 'நாம் இந்தக் கோயிலைப் போய்ப் பார்க்கவேண்டும்' என்ற ஆவலை இக்கட்டுரைகள் தூண்டுமானால், அது போதும் என்றே கருதுகிறேன் நான். மேலும் கோயில், குளம், மூர்த்தி, தீர்த்தம் இவைகளைக் காணச் செல்லும் அன்பர்கள் அங்குள்ள சிற்பச் செல்வங்களையும் கண்டு மகிழத் தெரிந்து கொண்டார்கள் என்றால் அதைவிட மகிழ்ச்சி தருவது வேறு ஒன்றும் இல்லை. கட்டுரைகளைப் படிக்கிறவர்கள், பாராட்டுகிறவர்களில் பெரும்பாலோர் பெண்கள். எங்கள் தலைவர் ரஸிகமணி அவர்கள் சொல்கிறபடி பக்தி, பண்பாடு எல்லாம் அவர்களிடம்தானே இன்றும் நிலைத்து நிற்கிறது தமிழ் நாட்டில். இவர்கள் காட்டும் அன்பும் ஆதரவுமே தெம்புதருகிறது மேலும் மேலும் தொடர்ந்து எழுத. அவர்களுக்கு எல்லாம் என் நன்றியும் வணக்கமும்.

இந்த இரண்டாவது புத்தகத்திலே தருமபுரம் ஆதீனத்தார் கோயில்கள் பல இடம் பெற்றிருக்கின்றன. அக்கோயில் நிர்வாகத்தைத் திறம்பட நடத்துகிறவர்கள் ஆதீன கர்த்தர் குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகபராமாச்சார்ய சுவாமிகள், என்னிடம் மிக்க அன்புடையவர்கள் அவர்கள். அவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புத்தகம் வெளிவருவதில் ஆர்வம் காட்டிய அன்பர்கள், புத்தகத்தை அழகாக அச்சிட்டுக் கொடுத்த பிரசுரகர்த்தர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, இக்கட்டுரைகளைத் தொகுத்து புத்தகஉருவில் வெளியிட அனுமதி தந்த 'கல்கி' ஆசிரியர் எல்லோருக்கும் என் அன்பும் நன்றியும்.

'சித்ரகூடம்'
திருநெல்வேலி–6

**தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்**
14.1.61.

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இப்புத்தகம் வெளிவந்து மூன்று வருடங்களுக்குள் அச்சிட்ட புத்தகங்கள் எல்லாம் செலவாகிவிட்டன. இன்னும் புத்தகம் கேட்பவர்களுக்கு இல்லை என்னாதபடி இரண்டாம் பதிப்பையும் வெளியிடுகிறோம்.

பல யாத்திரீகர்கள் இந்தப் புத்தகங்களை வாங்கிக் கொண்டே யாத்திரை துவங்குகிறார்கள். புத்தகத்தில் சொல்லியிருப்பன, கோவில்களை, அங்குள்ள வடிவங்களை, அத்தலத்தைப்பற்றிய வரலாறுகளை எல்லாம் நன்றாக அறிந்து கொள்ள உதவுகின்றன என்று எழுதுகிறார்கள். இப்படி எல்லாம் ஊக்குவிக்கும் அன்பர்களுக்கு என் நன்றி.

பலருக்கு புத்தகம் பயனுடையதாக இருத்தல் கண்டு மகிழ்கிறேன். இப்புத்தக வெளியீட்டை சிறப்பாக நடத்தி எனக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்த தருமபுரம் மகாசன்னிதானம் அவர்களுக்கு என் பணிவான வணக்கம்.

'சித்ரகூடம்'<br>திருநெல்வேலி – 6

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்<br>*1.5.1964*

# சமர்ப்பணம்

தருமபுரம் ஆதீனம்

குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக

ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

அவர்களுக்கு

# முகவுரை

ஒரு கூனன், ஒரு குருடன், ஒரு முடவன், ஓர் ஊமை ஆக நான்குபேர் வடவேங்கடமலை ஏறிய கதையை நண்பர் பாஸ்கரத் தொண்டைமான் சொல்லக் கேட்டிருப்பீர்கள். நான்கு பேரில் ஒவ்வொருவருக்கும் ஒரு குறை, உடற் குறைதான்; ஆனால் வேங்கடவன் அருள் கிட்டியதும் உடற் குறைகள் நீங்கியது இதுவே கதை.

உடற்குறைகளைப் போக்க, உள்ளத்தில் இருந்த பக்தி உதவியது. ஆனால் உள்ளமே கூனாக, குருடாக, முடமாக, ஊமையாக இருந்து விட்டாலோ? அப்படித்தான் நம்மில் பலருக்கு இருக்கிறது. மற்றவர்களைச் சொல்வானேன்? எனக்கு அப்படி இருக்கிறது.

உடலில் குறையில்லை. கண்ணபுரத்திற்கோ, கடவூருக்கோ, தேரழுந்தூருக்கோ, திருப்புன்கூருக்கோ என்னால் போகமுடியும், போயும் இருக்கிறேன். போய் என்ன செய்ய? கோயில் வாசலில் நின்றால் போதுமா? கோயில் என்ற அற்புதம் விளக்குகின்ற உண்மை-உலகத்திற்கு, அந்த வான் முகட்டுக்கு என்னால் ஏறிவிட முடியுமா? முடியாது. ஏன் தெரியுமா? தினசரி வாழ்க்கைச் சிறுமைகளில் சிக்கி என் உள்ளம் கூனிக் குறுகிவிட்டது. அதுவே காரணம். கோபுரங்களையும், மண்டபங்களையும், சிலைகளையும், கல்வெட்டுக்களையும் நானுந்தான் பார்க்கிறேன். பார்த்து? அவற்றின் பொருளைக் காண வேண்டாமா? அதற்கு, வரலாறும், இலக்கியமும், சமயமும், தத்துவமும், எல்லாவற்றிற்கும் மேலாக அழகுணர்ச்சியும் நிறைந்த கலைக்கண் வேண்டியிருக்கிறது. அது இல்லாத உள்ளம் குருடுதானே! இது போலவே, காண்பதை எட்டிப் பிடித்துத் தன்னுடையதாக, அநுபூதியாக மாற்றிக் கொள்ள இயலாத உள்ளம் முடந்தானே! இப்படித்

தவிக்கும் உள்ளம் என்னத்தைப் பேசிவிடப் போகிறது? பேசினால் ஊமையன் பேச்சுத்தான்.

இந்நிலையில்தான் நண்பர் தொண்டைமான் வருகிறார். மெல்ல நம்முடைய கையைப் பிடித்துக்கொண்டு கோயிலின் கோபுர வாசலுக்கு அழைத்துக்கொண்டு போகிறார். இது பெரிய காரியமில்லை. நமது உள்ளத்தைக் கோயிலின் அடித்தலமாக, அதன் பொருளாக, அதன் சோபையாக விளங்கும் சத்திய உலகத்தின் வாசலுக்கே, அதன் கருவறைக்கே அழைத்துப் போக முயல்கிறார். அங்கே, புராணமும், வரலாறும், சமயமும், கலையும், இலக்கியமும் ஒன்றாகக் கலந்து, ஒரு ஞானக் காட்சியை அமைக்கின்றன. அதைத் தொண்டைமான் காட்டுகிறார். இந்தக் காட்சியை அனுபவமாக மாற்றும் சித்து விளையாட்டும், தொண்டைமான் உதவியால் நமக்குக் கிடைக்கிறது. அப்போதுதான் நம்முடைய ஊமை உள்ளமும் பேசத் தலைப்படுகிறது. இதையெல்லாம் நமக்குக் கொஞ்சங்கூட சிரமமில்லாமல், ஆயாசமில்லாமல் இந்த மனிதர் செய்து விடுகிறார் என்றால், அதை ஒரு சாதனை என்று பாராட்டுவதிலே தவறென்ன? ஆம். நண்பர் தொண்டைமான் கையில், சமயம் வெறும் சித்தாந்தமாக இல்லாமல் சுவை பொருந்திய அனுபவம் ஆகிறது. தலைவலியைத் தவறாமல் தரக்கூடிய தத்துவ விசாரமும், வரலாற்று ஆராய்ச்சியும், தெளிந்து, எளிமையினும் எளிமையாகி, தேனாக ஓடுகின்றன. கல்வெட்டு கூடகதையாகிறது. அப்படியென்றால் இலக்கியத்தைப் பற்றிக் கேட்பானேன். அது மணங்கமழும் மெல்லிய பூங்காற்றாக நம் இதயத்தை வருடுகிறது.

''அதெல்லாம் சரிதான், ஐயா! இருந்தாலும் ஏதோ எளிமைக்காக, சுவைக்காக இப்படிக் கடவுளரை பற்றி யெல்லாம் வேடிக்கை வேடிக்கையாகப் பேசி விடலாமா? பாருங்களேன் அவர் சொல்வதை: 'மனைவியுடன் பிணங்கிக் கொண்டதன் பலன் வேங்கடேசனுக்குச் செருப்பு

தேய்கிறது.' இது என்ன பேச்சு?'' இப்படி ஒரு நண்பர் என்னிடம் வருத்தப்பட்டுக் கொண்டார். என்ன சொல்வது என்று நான் தீர்மானிப்பதற்குள் நண்பர் ஒரு போடு போட்டார்.

''திருப்பதி ஆசாமியைப் பற்றி வேண்டுமானால் எதையாவது சொல்லிவிட்டுப் போகட்டும். எங்கள் முழு முதற்கடவுளாகிய சிவபெருமான் தலையிலேயே உங்கள் தொண்டைமான் கைவைத்து விட்டாரே! என்ன சொல்கிறார் தெரியுமா, சொன்னவாறு அறிவார், அவர்தான் ஐயா! எங்கள் சிவபெருமான், ஒரு 'மாட்ரிமோனியல் பீரோ' நடத்து கிறாராம். கேட்டீர்களா கதையை!''

இப்படி நண்பர் கசப்பைக் கக்கியதும், இத்தாலிய நாட்டுப் பாதிரி ஒருவர் சொன்னது எனக்கு நினைவு வந்தது. பாதிரியார் நமது நாட்டிற்குப் புதியவர், ஏதோ தற்செயலாய் ரயிலில் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் சொன்னார். 'உங்கள் நாட்டுத் தத்துவஞானம் உலகப் புகழ் பெற்றது, உண்மைதான். ஆனால் இவ்வளவு தத்துவ உணர்வு பெற்ற நீங்கள் எப்படி ஆண்டுதோறும் உங்கள் கோயில்களில் திருக்கலியாண உற்சவம் கொண்டாடுகிறீர்கள்? மனவாக்குக் கடந்த அருவமாய் உள்ள இறைவனுக்கு மனைவி ஏது? கலியாணம் ஏது? இதுதான் எனக்குப் புரியவில்லை.'

எப்படி அவருக்குப் புரியும்? நம்முடைய நாட்டில் பிறந்து, நம்முடைய மரபிலே வளர்ந்த என் நண்பருக்கே புரியவில்லையே!

கடவுள் எங்கும் இருக்கிறான் என்று பேச்சளவில் சொல்லுகிறோம். ஆனால் அவன், இங்கே நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், இருக்கிறான் என்பதை உணர்ந்து, ஏற்றுக் கொள்வதற்கு தயங்குகிறோம். இந்தத் தயக்கமே, புராணக்கதைகளை உள்ளவாறு அறிவதற்குத் தடையாக இருக்கிறது. நம்முடைய முன்னோர்கள் இப்படித் தயங்கவில்லை.

இறைவன் பிட்டுக்கு மண் சுமந்தான்; பிரம்பால் அடிபட்டான், மாமனாக வந்து வழக்குரைத்தான் என்று பேசினார்கள். மீனாக, ஆமையாக, ஏன் ஆண்டாள் சொல்வதுபோல் 'மானமிலாப் பன்றி'யாகக்கூட இங்கே வந்தான்; 'அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்தில் பிறந்து' வெண்ணெய் திருடி, கடை கயிற்றால் கட்டுண்டு, நந்த கோகுலத்தில் விளையாடினான் என்று நம்பினார்கள். கடவுள் எங்கேயோ நெடுந்தொலைவில் கைலாசத்திலோ, பரமபதத்திலோ, பரலோகராஜ்யத்தில் மட்டும் இருப்பதாக அவர்கள் எண்ணவில்லை. எல்லா இடங்களும், எல்லா நிலைகளும், அவனைக் காணத் துடிக்கும் இந்த மனித உள்ளமும், அவனுடைய இராஜ்யம் என்றே கருதினார்கள். அவர்களுக்குத் திருவையாறு கைலாயம் ஆயிற்று. திருக்கோவலூர் வீட்டு இடைகழி பரமபதமாக மாறியது. பல்வேறு காலங்களில், பல்வேறு தலைமுறைகளில், தமது வாழ்க்கையோடு பின்னிக்கிடக்கும் கடவுள் என்ற சத்தியத்தை, அந்த வாழ்க்கையை ஒளியாகக்கொண்டு, நமது முன்னோர்கள் தொட முயன்றார்கள். 'ஒரு நாமம், ஓருருவம், ஒன்றுமிலார்க்கு' ஆயிரம் ஆயிரம் பெயர் சூட்டித் தெள்ளேணம் கொட்ட முற்பட்டார்கள். எல்லா உறவுகளையும் கடந்த ஒன்றை அது இங்கும் உள்ளது என்ற உணர்வோடு, மனித உறவுகளைக் கொண்டு தேடிக் கண்டார்கள். அன்பெனும் வலையில் அகப்படும் இறைவனுடைய எளிமையை வியந்து பரவினார்கள். எத்தனை எத்தனையோ உருவகங்களால், மனித வாழ்க்கைச் செய்திகளால் அலகிலா அவனை அலகிட்டுச் சிக்கெனப் பிடித்தார்கள். இந்த முயற்சியின் விளைவுதான் புராணக்கதை.

நண்பர் தொண்டைமான் இதை நன்றாக அறிந்தவர். ஆகவேதான், இறைவனைத் தொட்டுத் தொட்டு விளையாடும் புராணக் கதைகளின் விதவிதமான உணர்ச்சிகளையெல்லாம், கனிவோடு, நகைச்சுவையோடு, அவரால் காண முடிகிறது. இதனால், ஏதோ இறைவனுக்குக் குறைவு வந்து விடும் என்று அவர் எண்ணவில்லை.

'கண்ணபுரமாலே கடவுளரின் நீ அதிகம்;
உன்னிலுமோ யானதிகம்; ஒன்றுகேள்'

என்ற பாடல் நிந்தையில்லை. நிந்தாஸ்துதி என்பதை அவர் உணர்கிறார். இது போன்ற வேடிக்கையாகக் கடவுளைப் பற்றிப் பேசுவதெல்லாம், பக்தியின் முதிர்வினால் ஏற்படக் கூடும். அப்படித்தான் மனிதன் தன் முழு ஆற்றலையும், தன் வாழ்வு முழுவதையும் கடவுளை நோக்கித் திருப்பமுடியும் என்பதை அனுபவிக்கிறார், சொல்கிறார். உண்மையான பக்தியும் கவிதை உள்ளமும் படைத்தவர்களுக்கே இது கைகூடும்.

இவர்களில் ஒருவர் நண்பர் தொண்டைமான். அதோடு, தமது பேரறிவையும், தாம் பலகாலம் முயன்று சேர்த்த செய்திகளையும், கலை, தத்துவ, சமய நுணுக்கங்களையும், நம்மோடு நேருக்கு நேர் நின்று பேசுகின்ற பாவனையில் பழகு தமிழில் அமைத்து விளம்புகிறார். தொண்டைமான் படைக்கும் 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற கட்டுரைத் தொடர், கலை, இலக்கியம், வரலாறு, பக்தி என்ற எல்லாம் விளங்கும் சுவை விருந்து. இந்த விருந்தே, நமது உள்ளக் குறைகளைப் போக்கும் அருமருந்தாகவும் அமைகிறது. இதனால்தான், தமிழகம் திரண்டு, இதை வரவேற்று மகிழ்கிறது. தமிழனுக்குத் தெரியாதா, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, சிறந்த பண்பாட்டோடும் பக்தியோடும் வாழ்ந்து வந்திருக்கும் அவனுக்குத் தெரியாதா, எதை எப்படிப் பாராட்டவேண்டும் என்று?

*'பாரதி அகம்'*
*வ.உ.சி.கல்லூரி*
*தூத்துக்குடி.*

**அ. சீநிவாசராகவன்**
***14–1–61***

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | மயிலமலை முருகன் | ... | 15 |
| 2. | ஆமாத்தூர் அம்மான் | ... | 23 |
| 3. | அழல் உருவன் அண்ணாமலையான் | ... | 31 |
| 4. | திருக்கோவலூர் திருவிக்கிரமன் | ... | 41 |
| 5. | வெண்ணெய்நல்லூர் அருள்துறையார் | ... | 50 |
| 6. | அதிகை வீரட்டனார் | ... | 58 |
| 7. | திருப்பா திரிப்புலியூர் அரன் | ... | 66 |
| 8. | பழமலை நாதர் | ... | 74 |
| 9. | தில்லைச் சிற்றம்பலவன் | ... | 83 |
| 10. | சீகாழித் தோணியப்பர் | ... | 95 |
| 11. | வேளூர் வைத்தியநாதன் | ... | 104 |
| 12. | திருப்புன்கூர் சிவலோகன் | ... | 113 |
| 13. | வெண்காடு மேவிய விகிர்தன் | ... | 123 |
| 14. | பட்டினத்துறை பல்லவனீச்சுரர் | ... | 132 |
| 15. | கடலூர் கால சம்ஹாரர் | ... | 142 |

| | | | |
|---|---|---|---|
| 16. | ஆக்கூர் ஆயிரத்து ஒருவர் | ... | 151 |
| 17. | நனிபள்ளி நற்றுணை நாயகர் | ... | 159 |
| 18. | மயூரத்து மயிலாடு துறையார் | ... | 167 |
| 19. | வழுவூர் கஜசம்ஹாரர் | ... | 176 |
| 20. | அம்பர் மாகாளத்தான் | ... | 185 |
| 21. | செங்காட்டாங்குடி உடையான் | ... | 194 |
| 22. | கண்ணபுரத்து அம்மான் | ... | 203 |
| 23. | புகலூர் மேவிய புண்ணியன் | ... | 211 |
| 24. | வீழி மிழலையார் | ... | 221 |
| 25. | அழுந்தூர் ஆமருவியப்பன் | ... | 231 |
| 26. | சொன்னவாறு அறிவார் | ... | 241 |
| 27. | கங்கை கொண்ட சோழீச்சுரர் | ... | 251 |
| 28. | திருப்பனந்தாள் சடையப்பர் | ... | 262 |
| 29. | இடைமருது ஈசனார் | ... | 271 |
| 30. | திரிபுவன கம்பகரேசுரர் | ... | 280 |

# வேங்கடம் முதல் குமரி வரை

## இரண்டாம் பாகம்

## பொன்னியின் மடியிலே

## 1

## மயிலமலை முருகன்

நீலங்கொள் மேகத்தின் மயில் மீதே
நீ வந்த வாழ்வைக்கண்டு அதனாலே,
மால் கொண்ட பேதைக்கு உன் மணம் நாறும்
மார் தங்கு தாரைத்தந்து அருள்வாயே.
வேல்கொண்டு வேலைப்பண்டு எறிவானே!
வீரங்கொள் சூரர்க்கும் குலகாலா!
நாலந்த வேதத்தின் பொருளோனே!
நானென்று மார்தட்டும் பெருமாளே!

என்பது அருணகிரியார் பாடிய திருப்புகழ். முதல் நாலடிகளில், பழைய அகத்துறைப் பாடல்களின் மணம் சிறந்து வீசுகிறது. நீலமயில் வாகனனான முருகனைக் கண்டு காதலித்து மயக்கமுற்றுக் கிடக்கும் பேதைப் பெண்ணின் மயக்கம் தெளிவிக்க, அவன் மார்பிலே புரளும் மாலையையே வேண்டி நிற்கிறாள் தோழி. முருகனை நினைத்தால் மயிலை நினைக்கிறார்; மயிலை நினைத்தால் அவன் ஏந்திய வேலை நினைக்கிறார் கவிஞர். 'வேலுண்டு வினை இல்லை. மயிலுண்டு பயமில்லை' என்று தானே முருக பக்தர்கள் உள்ளத்தில் உரம் பெறுகிறார்கள். மயிலோடும் வேலோடும் முருகனைத் தொடர்பு படுத்தி முதன்முதல் அந்த அழகனைக் கற்பனை பண்ணியவன் சிறந்த கலைஞனாக இருந்திருத்தல் வேண்டும்.

இறைவன் படைத்த இயற்கை, மிக்க அழகுடையது என்பதை அறிவோம். விரிந்து பரந்து கிடக்கும் நீல வானம். அகன்று ஆழ்ந்து கிடக்கும் அக்கருங்கடல், அக்கடலின் அடி வானத்திலே உதயமாகும் இளஞ்சூரியன், அச் சூரியனிட மிருந்தே ஒளியைக் கடன் வாங்கி, அதை உலகுக்கு வழங்கும் குளிர் நிலா. அந்நிலாவோடு போட்டி போட்டு, மின்னி மினுக்கும் விண் மீன்கள் எல்லாம் நிரம்ப அழகு வாய்ந்த வையே.

இன்னும் இப்பூமியில் உள்ள மலை, மலை யிலிருந்து விழும் அருவி, ஓடிப் பெருகும் ஆறு, ஆற்றங் கரையில் நின்று நிழல் தரும் மரங்கள், அம்மரங்களில் பூத்துக் குலுங்கும் பூக்கள், கனிகள், பரந்த வயல்களிலே பச்சைக் கம்பளம் விரித்தால் போல இலங்கும் நெற்கதிர்கள், புல் பூண்டுகள், ஊர்வன, பறப்பன, நடப்பன எல்லாம் இயற்கை அன்னையின் அழகு வடிவங்கள் தாமே. இவை தானே மனிதனால் 'கைபுனைந்து இயற்றாக் கவின் பெறுவனப்பு'. இந்த வனப்பிலே உள்ளம் பறிகொடுத்து நின்ற கவிஞனே 'முற்றிய ஆழியிலே அலைவந்து மோதி எறிகையிலே கற்றைக் கதிர் எழும்' காட்சியைக் கண்டிருக்கிறான். 'உலகம் உவப்பப் பலர் புகழ் ஞாயிறு கடற்கண் எழும்' காட்சியிலே, அழகைக் கண்டிருக்கிறான்; இளமையைக் கண்டிருக் கிறான்; இறைமையைக் கண்டிருக்கிறான்.

விரிந்திருக்கும் நீலவானம் நீல நிறத் தோகையை விரித்தாடும் மயிலாகக் காட்சி அளித்திருக்கிறது. அந்த வானில் ஒளி வீசிக் கொண்டு தோன்றும் செஞ்சுடர்த் தேவனாம் இள ஞாயிறையே வேலேந்திய குமரனாகவும் கண்டிருக்கிறான். இன்னும் மேட்டு நிலங்களிலே தினைக் கதிர் விம்மி விளைந்து, அங்கு ஒரு காட்டு மயில் வந்து நின்றால் அங்கேயும் கலைஞன் உள்ளத்தில் காதல் விளைந்திருக்கிறது. இப்படித்தான் நீண்ட காலத்துக்கு

முன்னாலேயே, ஆம். உலகம் தோன்றி, அதில் மனிதன் தோன்றித் தமிழ் பேசக் கற்றுக்கொண்ட அந்தக் காலத்திலேயே, அவன் கண்ட முதற் கடவுள் முருகனே. உருவமே இல்லாத கடவுளுக்கு உருவத்தைக் கற்பிக்க முனைந்த தமிழ்க் கலைஞன் கண்ட முதற்கடவுள், முருகனாக, இளைஞனாக, அழகனாக உருப் பெற்றிருக்கிறான்.

இதனால்தான் முருகனை நினைத்தால், அவன் ஏறி வரும் மயிலை நினைக்கிறோம். 'எட்டும் குலகிரி எட்டும் விட்டோட எட்டாத வெளி மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரத்தன்' என்று கவிஞர்கள் முருகனை அழைத்திருக் கிறார்கள். இப்படி விரித்த தோகையோடு கூடிய மயில்மேல் வருகிறான் அவன் என்று எண்ணினாலும், சிற்ப வடிவங் களிலே விரியாத தோகையோடு கூடிய மயிலையே வடித்திருக்கிறார்கள். இதனாலேயே எங்கேயாவது ஒரு சிறிய குன்று, ஒரு பக்கம் உயர்ந்தும், மறுபக்கம் தாழ்ந்தும் மயில் தோகையைப் போல் படிந்தும் கிடந்தால், அந்தக் குன்றின் பேரிலே முருகனைப் பிரதிஷ்டை செய்யத் தமிழர்கள் மறக்கவில்லை. இத்தகைய குன்றுகளில் இரண்டு பிரபலமானவை. ஒன்று காரைக்குடியை அடுத்த குன்றக்குடி. இரண்டாவது தென்ஆர்க்காட்டு மாவட்டத்தில் விழுப்புரத் துக்கும் திண்டிவனத்துக்கும் இடையே உள்ள மயிலம். இரண்டிடத்தும் குன்றுகள் படிந்த தோகையை உடைய மயில் போலவே இருந்தாலும், பின்னுள்ள தலத்தையே மயிலம் என்று பெயரிட்டு அழைத்திருக்கிறார்கள். முருகன் ஊர்ந்துவரும் மயிலோடு தொடர்புபடுத்தியுள்ள தலம் இது ஒன்றுதான் என்று அறிகிறோம். இந்த மயிலம் என்ற தலத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

தொண்டை நாட்டின் வடகோடியிலுள்ள வேங்கடத்தில் துவக்கிய நமது பயணத்தில், தொண்டை நாட்டின் பல தலங்களையும் பார்த்துவிட்டு, நடுநாட்டுக்குள்

நுழைகிறோம் இப்போது, அந்தப் பயணம் மயிலேறும் பெருமாளோடு துவங்குகிறது, மகிழ்ச்சிக்குரியதே.

இந்த மயிலத்தை அடைவது எளிது. சென்னை, திருச்சி 'டிரங்க் ரோட்டில்' திண்டிவனத்துக்குத் தெற்கே எட்டாவது மைல்வரை வந்து பின்பு கிழக்கு நோக்கிப் பாண்டிச்சேரி செல்லும் வழியில் திரும்பினால், அந்த ரோட்டில் மூன்றாவது மைலில் நீண்டுயர்ந்த கோபுரத்தோடு கூடிய ஒரு சிறு குன்று தோன்றும். கோயிலை நோக்கிக் காரைத் திருப்பினால் முதன்முதல் நாம் காண்பது ஒரு தமிழ்க் கல்லூரி. இதை நிறுவியவர் சிவஞான பாலய சுவாமிகள். பொம்மையபுரம் மடாதிபதி இவர்கள். இவர்களது முன்னோர்களே மயிலத்து முருகன் கோயிலை உருவாக்கியிருக்கிறார்கள். மலைமீதே காரைக்கொண்டு செல்ல ஒரு வழி அமைத்திருக்கிறார்கள். அதன் வழியே செல்லலாம் மலைமேலே. இல்லை, முருகன் ஊர்ந்து வரும் மயிலாம் மயில மலைமீது நாம் காரில் செல்லுவதாவது? என்று கருதினால் கல்லூரி வாயிலிலேயே காரை நிறுத்திவிட்டு, கற்களைப் பரப்பி அமைத்திருக்கும் பாதை வழியாகவே மலை ஏறலாம். இந்த மயிலமலை மிகச் சிறிய குன்றுதான். ஆதலால் ஏறுவது ஒன்றும் சிரமமாக இராது. இந்தப் பாதை வழியாகக் குன்றின்மீது வந்து சேர்ந்தால் கோயிலின் தெற்கு வாயிலுக்கு வந்து சேருவோம். கோயிலின் பிரதான வாயில் கிழக்கு நோக்கியிருந்தாலும் அந்த கோபுர வாயில் எப்போதும் அடைத்து வைக்கப்பட்டே இருக்கும். அதனால் தெற்கு வாயில் வழியாகவே கோயிலில் நுழைய வேணும்.

இந்த மயிலமலையும், இங்குள்ள கோயிலும் எப்படி உருவாயிற்று என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? முருகனோடு போர் செய்த சூரபதுமன் முருகன் எடுத்த பேர் உருவைக் கண்டு நல்லறிவு பெறுகிறான்.

கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னை
பாலன் என்றிருந்தேன் அந்நாள்,
பரிசு இவை உணர்ந்திலேன் யான்,
மால் அயன் தனக்கும் மேலை
வானவர் தனக்கும், யார்க்கும்
மூல காரணமாய் நின்ற
மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ!

என்று பாடிப் பரவுகிறான். இப்படிப் பாடியவன் அப்பெருமான் ஊர்ந்து வந்த மயிலுருவத்திலேயே, தான் அவருக்கு வாகனமாக இருக்க அருள் புரிய அவரை வேண்டுகிறான். அவ்வரும் தண் தமிழ்நாட்டிலே வராக நதிக்கு வடகரையிலே மயில் வடிவம் கொண்ட மலையாக நின்று தவம் செய்தால், அவன் விருப்பம் நிறைவேறும் என்கிறார். அப்படியே மயில் உருவத்தில் மலையாகி சூரபதுமன் தவம் செய்த இடமே மயிலம் என்னும் மயூராசலம்.



மயிலம் முருகன் கோயில்

இதே சமயத்தில் கணத் தலைவர் களில் ஒருவரான சங்கு கன்னர் செய்த ஒரு தவறுக்காக இறைவன் அவரைப் பூலோகத்தில் மனிதனாகப் பிறக்கும்படி சபிக்கிறார். சாப விமோசனம் வேண்டி நின்றபோது, 'நீ பூமியின்கண் அவதரித்து வேத சிவாகமங்களை விளக்கி, சைவம் நன்கு வளரச் செய்து, பல சித்தர்களுக்கு அருள் செய்வாய்; அப்போது முருகனோடயே போர் செய்யும் நிலை வாய்க்கும், அப்போது முத்தி அடைவாய்' என்கிறார்.

அந்தச் சங்கு கன்னராம் கணத் தலைவரே, மயிலை மலைக்கு கிழக்கேயுள்ள கடலிலே, பத்து வயதுடைய பால சித்தராக, சடைமுடி கவச குண்டலம், இட்டலிங்கம், உருத்திராக்கத்துடன் தோன்று கிறார். மயில மலைக்கே வந்து தவம் இயற்றுகிறார் முருகனைக் குறித்து. முருகனோ அவர் சிவ அபராதி எனச் சொல்லித் தரிசனம் தர மறுக்கிறார். பால சித்தருக்குப் பரிந்து பேசி வெற்றிபெறாத வள்ளி தெய்வானை இருவரும் கோபித்துக்கொண்டு, பால சித்தரது ஆசிரமத்துக்கே வந்து அவருக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள். இனியும் முருகப் பெருமானால் சும்மா இருக்க முடியுமா? தன் மனைவியரைத் தேடிக்கொண்டு மயிலமலைக்கே வருகிறார். பால சித்தரும் வந்திருக்கும் வேட்டுவன் யார் என்று அறியாது அவரோடு போர் புரிகிறார்; மல்யுத்தமே செய்கிறார். பின்னர் பால சித்தருக்கும் சூரபதுமனுக்கும் முருகன் தம் உருக் காட்டுகிறார். தம் இரு மனைவியருடனும், பால சித்தர் விருப்பப்படியே கல்யாண கோலத்திலேயே அம்மலைமீது கோயில் கொள்கிறார். இப்படித்தான் மயில மலை எழுந்திருக்கிறது இங்கே. அந்த மலைமேல் முருகனும் ஏறி நின்றிருக்கிறான். பால சித்தரது அருளால் அம்மனை அம்மையார் திருவயிற்றில் அவதரித்த சித்தரே, சிவஞான பாலய தேசிகர், பொம்மையபுரம் திருமடம் நிறுவியவர்.

இவருடைய பரம்பரையிலே பதினெட்டாவது பட்டத்தில் இருப்பவர்கள்தான் இன்றைய சிவஞான பாலய சுவாமிகள்.

இத்தனையும் தெரிந்தபின் கோயிலுள் நுழையலாம். முதலில் விநாயகரை வணங்கிவிட்டு மேலே நடக்கலாம். கோயிலின் தெற்குக் கட்டில் விசுவநாதரும் விசாலாக்ஷியும் இருக்கிறார்கள். பால சித்தரைத் தன்னோடு ஐக்கியப் படுத்திக்கொண்ட சிவலிங்கத் திருஉருவே விசுவநாதர். இந்த விசுவநாதரை வணங்கி விட்டு, அடுத்த வடக்கு வாயிலின் வழியாகச் சென்று மேற்கு வாயிலில் திரும்பினால், முருகனைக் கண்குளிரக் காணலாம், வள்ளி தெய்வானை யுடன், கிழக்கு நோக்கியவராய்க் கல்யாண கோலத்திலேயே நிற்கிறார் மூலமூர்த்தி. மலையின் வடதலை உயர்ந் திருப்பதுபோல, இங்குள்ள மயிலும் வடக்கு நோக்கிய முகத்தோடேயே நிற்கிறது. முருகன் நல்ல அழகன், இளைஞன். இந்த மூர்த்தியைத் தரிசித்தபோது எனக்கு ஓர் ஐயம். இந்த அழகான குமரனையா 'குறிஞ்சிக் கிழவன் என்று ஓதுகிறது குவலயம்?' என்று. எப்படியும் இருக்கட்டும்; அந்தக் கிழவனாம் குமரனைத் தரிசித்து விட்டு, சென்ற வாயில் வழியே வெளியே வந்து பிராகாரத்தைச் சுற்றி, ஒன்றுக்கு மூன்றாக இருக்கும் உற்சவ மூர்த்திகளையும் வணங்கிவிட்டு வெளியே வரலாம். வெளியில் வந்ததும், தென்பக்கத்தில் உள்ள திருமடத்தில் இருக்கும் சிவஞான பாலய சுவாமிகளையும் கண்டு நம் வணக்கத்தைத் தெரிவிக்கலாம்.

இந்தத் தலத்தின் பெயருக்கு ஏற்ப இங்கு ஒரு நல்ல அழகான தங்க மயில்வாகனம் ஒன்றும் செய்து வைத்திருக்கிறார்கள். நிரம்பப் பெரிய வாகனம். இந்தத் தங்க மயிலின்மேல் ஆரோகணித்து முருகன் மலைமேலிருந்து இறங்கிவரும்போது கீழே இருந்து நோக்கினால், ஒரு பெரிய மயில் உண்மையிலேயே பறந்து வருவது போலவே

மயிலின்மேல் ஆரோகணித்து முருகன் மலைமேலிருந்து இறங்கிவரும்போது கீழே இருந்து நோக்கினால், ஒரு பெரிய மயில் உண்மையிலேயே பறந்து வருவது போலவே நமக்குத் தோன்றும். இந்தத் தங்க மயில் வாகனக் காட்சி காண வேண்டுமானால் தைப்பூசத்தன்றாவது அல்லது பங்குனி மாதம் நடக்கும் பிரமோத்சவத்தில் ஐந்தாம் திரு நாளன்றாவது சென்று இரவு பத்துப் பதினோரு மணிவரை அம்மலையிலேயே காத்துக் கிடக்க வேண்டும். சும்மா கிடைக்குமா மயிலாசலன் பாதம்? இந்த மயில்மேல் வரும் முருகனைத் தரிசித்தால்,

எங்கும் தன் வடிவுஎன
விசுவ ரூபங் கொண்ட
சிறப்பொடு பிறப்பிலான்,
நம்பிறவி மாற்றவே
ஈசன் ஒரு மதலையானோன்,
அங்கை கொண்டு எட்டிப்
பிடிக்குமுன், முருகனுடன்
அம்புலி ஆடவாவே!
அயில்வேலன் மயிலம் வரும்
மயில் வாகனத்தன் உடன்
அம்புலி ஆடவாவே!

என்று சிதம்பர முனிவருடன் சேர்ந்தே நாமும் பாடலாம். பிள்ளைத்தமிழ் பாடிக்கொண்டே திரும்பலாம்.

# 2

# ஆமாத்தூர் அம்மான்

ஒரு குடும்பத்திலே அண்ணன் தம்பி இருவருக்கிடையே பாகப் பிரிவினை. பாகப் பிரிவினை என்றால் அண்ணன் தம்பியரிடையே மனக் கசப்பு, அதனால் ஏற்படும் பிணக்குகள், விபரீதங்கள் எல்லாம் நாம் அறிந்தவைதானே. (சமீபத்தில் திரைப்படமாக வந்த பாகப்பிரிவினையைப் பார்த்தே எல்லோரும் பாகப் பிரிவினை என்றால் எத்தனை மனக் கசப்புகள் அண்ணன் தம்பிமாரிடையே வளர்கிறது என்று தெரிந்து கொள்கி றோமே. ஆனால் நான் சொல்லும் கதையிலோ, பாகப் பிரிவினையில் அண்ணன் தம்பிக்குச் செய்யும் துரோகத்தால் அவன் அழிந்தே போகிறான். தெய்வ கோபத்துக்கே ஆளாகிறான்.) குடும்பத் தலைவனான தந்தை இறக்கும் போது மூத்த மகன்தான் உடன் இருக்கிறான். இளையவன் வெளியூர் சென்றிருக்கிறான். பின்னரே இளையவன் ஊர் திரும்புகிறான். ஈமக் கடன்கள் எல்லாம் கழிந்ததும், தன் தந்தையின் செல்வத்தில் பங்கு எதிர்பார்த்த இளையவன் அண்ணனை அணுகித் தனக்கு உரியதைப் பகிர்ந்து கொடுக்க

ஒன்றுமே வைக்கவில்லை, பாகம் பண்ணுவதற்கு ஒன்றுமே இல்லை' என்கிறான். தம்பி ஊரில் உள்ள பெரியவர்களிடம் முறையிடுகிறான். ஊராரும் தம்பிக்குப் பரிந்து பேசுகிறார்கள். ஆனால், அண்ணனோ ஒன்றுமே தன்னிடம் இல்லை என்று சாதிக்கிறான். ஊராரும் தம்பியும் 'அப்படியாயின் திருவாமாத்தூரில் உள்ள வட்டப் பாறைக்குச் சென்று அதில் கைவைத்துச் சத்தியம் செய்து கொடுக்கட்டும்' என்கிறார்கள். அந்த வட்டாரத்திலே மக்கள் சிக்கலான வழக்குகளில் தீர்ப்புக் காண வட்டப் பாறையைத் தான் நம்பி இருந்தார்கள்.

பாறையில் கை வைத்து யார் பொய்ச் சத்தியம் செய்தாலும், பாறை வெடித்து நாகம் ஒன்று கிளம்பிப் பொய்ச் சத்தியம் செய்தவரை மடிய வைத்து விடும் என்பது நம்பிக்கை. அண்ணன் இணங்குகிறான், வட்டப் பாறையில் சத்தியம் செய்து கொடுக்க. ஊரார் புடைசூழ அண்ணன் தம்பி எல்லோருமே வட்டப் பாறை வந்து சேர்கிறார்கள். பாறையை நெருங்கியதும், தன் கையில் வைத்திருந்த தடி ஒன்றைத் தம்பி கையில் கொடுத்துவிட்டு, அண்ணன் 'எங்கள் குடும்பத்தில் முன்னோர் தேடி வைத்த பொருள் ஒன்றுமே என்னிடம் இப்போது இல்லை' என்று சொல்லி வட்டப் பாறையைத் தொட்டுச் சத்தியம் செய்கிறான். ஊராரும் தம்பியும் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. அண்ணன் உண்மையே சொல்லி யிருக்கிறான் என்று நம்புகிறார்கள். தம்பி கையில் கொடுத்த தடியைத் திரும்ப வாங்கிக் கொண்டு அண்ணன் நடக்கிறான். எல்லோரும் ஊர் நோக்கித் திரும்புகிறார்கள்.

நாலு மைல் தூரம் வந்ததும் திடீரென்று அண்ணன் முன்னிருந்த சிறிய பாறை ஒன்று வெடிக்கிறது. அதிலிருந்து ஒரு நாகம் தோன்றி அவனைத் தீண்டி விடுகிறது. அங்கேயே விழுந்து சாகிறான் அவன். அவன் கையிலிருந்த தடியும் கீழே

விழுந்து முறிகிறது. அப்படி முறிந்த தடியிலிருந்து எண்ணற்ற பொற்காசுகள் வெளியே சிதறுகின்றன. அப்போது விளங்குகிறது அண்ணன் செய்த சாகசம். முன்னோரின் பொருளையெல்லாம் பொற் காசுகளாக்கி அதனைக் கைத்தடிக்குள்ளே மறைத்து வைத்து தான் சத்தியம் செய்வதற்கு முன்னமேயே தம்பியிடம் கைத்தடியைக் கொடுத்து, அப்படிச் சொன்னதன் மூலமாக வட்டப்பாறை தெய்வத்திடமிருந்து தப்பி விடலாம் என்று அண்ணன் எண்ணியிருக்கிறான். பாவம், அவன் அறியான் 'அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' என்பதை. பொய்ச் சத்தியம் பண்ணி விட்டுத் தடியைத் திரும்ப வாங்கிக் கொண்டதும் வட்டப் பாறைத் தெய்வம் தனது கோபத்தைக் காட்டி விடுகிறது. மூத்தவன் உயிர் நீத்த இடம் தும்பூர். திருவாமாத்தூருக்கு வடக்கே நாலு மைல் தூரத்தில் இருக்கிறது. வட்டப் பாறை இருப்பது திருவாமாத்தூர் கோயிலுள் அம்மன் சந்நிதிக்குப் பக்கத்தில். இங்கு கோயில் கொண்டிருப்பவள் முத்தாம்பிகை. அவளே வட்டப் பாறைத் தெய்வமாக விளங்குகிறாள் என்பர். அதற்கேற்றாற்போல் தும்பூரில் தோன்றிய பாம்பின் தலை அங்கிருக்க, அதன் வால் முத்தாம்பிகையின் திருவடிக்கீழ் நீட்டிக் கொண்டிருக்கிறது கல் உருவில். வட்டம் என்றால் ஏதோ வட்ட வடிவமான பாறை என்றெல்லாம் நினைக்க வேண்டாம். ஏதோ சிவலிங்கத்துக்கு என்று அமைந்த ஒரு சிறு சந்நிதிதான் அது. இப்படி வட்டப் பாறையால் பிரசித்தி அடைந்த தலம்தான் திருவாமாத்தூர்.

இந்த ஆமாத்தூர் விழுப்புரத்துக்கு மேற்கே நாலு மைல் தூரத்தில் இருக்கிறது. விழுப்புரம்–செஞ்சி ரோட்டில் விழுப்புர நகர எல்லை கடந்ததும் மேற்கு நோக்கி ஒரு மண் ரோடு செல்லுகிறது. அந்தப் பாதையிலே நடந்துதான் செல்ல வேண்டும். அப்படிச் சென்றால் திருவாமாத்தூர்

வந்து சேருவோம். காமதேனு நந்தி பசுக்கள் எல்லாம் மற்ற விலங்குகளின் தாக்குதலை எதிர்க்க வேண்டி இறைவனைப் பல வருஷங்கள் தவம் கிடந்து கொம்பு பெற்றன என்று கூறும் தல புராணம். அதனாலேதான் இந்தத் தலத்துக்குத் தாயூர் என்றும் ஆமாத்தூர் என்றும் பெயர் வழங்கி யிருக்கிறது. இதனையே கோமாதுருபுரம் என்றும் புராணம் விவரித்துக் கூறுகிறது. கோயிலை அடுத்து பெண்ணை யிலிருந்து பிரியும் பம்பை நதி ஓடுகிறது. கோயில் இந்த ஆற்றின்மேல் கரையில் இருக்கிறது இன்று. ஆனால், திருவாமாத்தூர் கலம்பகம் பாடிய இரட்டையர்கள் காலத்தில் கோயில் பம்பையாற்றின் கீழ்க்கரையில் இருந்திருக்கிறது. இதைச் சரியாகக் கவனிக்காமல் இரட்டையர் ஒரு பாட்டுப் பாடுகிறார்கள் கலம்பகத்தில்.

> ஆற்குழையோ, அரவோ, ஆயர்பாடி அருமனையோ
> பாற்கடலோ, திங்களோ தங்கும் ஆகம் பலபலவாம்
> மாற்கமும் ஆகிநின்றார் மாதைநாதர் வலங்கொள்பம்பை
> மேற்கரையில் கோயில் கொண்டார் புரம்சீறிய
> வெங்கணைக்கே

என்பது பாட்டு. இந்தக் கலம்பகம் அரங்கேறும்போது தான், பிறர் இப்பிழையைச் சுட்டிக் காட்ட இரட்டையர் மனம் மறுகிறார்கள். 'யானும் அறியேன் அவளும் பொய் சொல்லாள்' என்று பழியை அந்தக் கலைமகள் தலையிலே போடுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய அறியாத வர்களாக இருக்கிறார்கள். ஆனால் அரங்கேற்றம் நடந்த அன்றிரவு ஒரு பெருமழை. ஆற்றிலே வெள்ளம். விடிந்ததும் பார்த்தால் கோயிலுக்கு இடப் பக்கத்தில் ஓடிய பம்பை, தன்னுடைய வழியை மாற்றிக் கொண்டு கோயிலுக்கு வலப்புறம் ஓடி இருக்கிறது; ஆற்றின் கீழ்க்கரை யிலிருந்த கோயில் இப்போது ஆற்றின் மேல் கரைக்கே சென்று விடுகிறது! 'வலங்கொள் பம்பையின் மேற்கரையில்

கோயில் கொண்டார்' என்று இரட்டையர்கள் பாட்டு நிலைத்து விடுகிறது. இன்றும் ஆறுமுன் ஓடிய நிலையும், இன்றைக்கு ஓடும் நிலையையும் காணலாம். எல்லாம் தெய்வத் தமிழ் செய்கின்ற காரியம்.

இத்தனை விவரங்களையும் தெரிந்தபின் இனி நாம் கோயிலுக்குள் செல்லலாம். இத்தலத்தில் கோயில்களை அமைத்திருப்பதில் ஒரு புதுமை. சோழ மன்னர்கள் கட்டிய கோயில்கள் பலவற்றில் இறைவன் கிழக்கு நோக்கிய வராகவும், அவருக்கு இடப்பக்கம் தெற்கு நோக்கிய சந்நிதியில் அம்பிகையும் இருப்பார்கள். சில இடங்களில் அன்னையை, இறைவனுக்கு இடப்பாகத்தில் கிழக்கு நோக்கியவராகவே நிறுத்தியிருக்கிறார்கள். பின்னர் நாயக்க மன்னர்கள் இடப்பக்கமிருந்த அம்பிகையும் வலப் பக்கத்துக்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இத்தனையும் இல்லாமல் இறைவனுக்கும் இறைவிக்கும் தனித்தனியாக ஒன்றை ஒன்று எதிர் நோக்கிய வண்ணம் கோயில்கள் கட்டியிருக்கிறார்கள் இங்கே. இறைவன் கிழக்கு நோக்கிய வராகவும் இறைவி மேற்கு நோக்கிய வண்ணமும் இருக்கிறார்கள். இறைவன் கோயில் வாயிலில் கோபுரம் இல்லை. அடிப்படை போட்டது போட்டபடியே நிற்கிறது. இறைவன் திருப்பெயர் அபிராமேசுவரர். அழகியநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இவரையே ஆமாத்தூர் அம்மான் என்று பாடிப் பரவுகிறார் திருஞான சம்பந்தர்.

புள்ளும் கமலமும் கைக் கொண்டார்
தாம் இருவர் உள்ளும் அவன் பெருமை
ஒப்பளக்கும் தன்மையதே

அள்ளல் விளை கழனி ஆமாத்தூர்
அம்மான் எம் வள்ளல் கழல் பரவா
வாழ்க்கையும் வாழ்க்கையே.

என்பது ஞானசம்பந்தர் தேவாரம். இந்த ஆமாத்தூர் அம்மான் சுயம்பு மூர்த்தி. பசுக்கள் வழிபாடு செய்த அடையாளமாகக்

குளம்புச் சுவட்டைத் தம் தலையிலே தாங்கி நிற்கிறார். இவரையே இராமன் இலங்கையிலிருந்து திரும்பும்போது வழிபாடு செய்திருக்கிறான். அதனால் 'இராமனும் வழிபாடு செய்யும் ஈசன் இவர்' என்பது அப்பர் திருவாக்கு. ஞானசம்பந்தர், அப்பர் இருவரையும் தவிர சுந்தரராலும் பாடப் பெற்றவர் இவர். இந்த சுந்தரர்தான் பொல்லாதவர் ஆயிற்றே. இந்த ஆமாத்தூர் அழகனிடமும் பொற்காசு பெறத் தவறவில்லை.

பொன்னவன் பொன்னவன்
　　பொன்னைத் தந்து என்னைப்போகவிடான்
மின்னவன் மின்னவன்
　　வேதத்தின் உட்பொருளாகிய
அன்னவன் அன்னவன்
　　ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால்
என்னவன் என்னவன்
　　என் மனத்து இன்புற்று இருப்பவனே

என்று பாடவும் அவர் மறக்கவில்லை.

இந்த இறைவன் கோவிலுக்கு இரண்டு பிரகாரங்கள். முதல் பிராகாரத்தில் வடகிழக்கு மூலையில் இக்கோயில் கட்டிய அச்சுத தேவராயன் சிலை இருக்கிறது. இரண்டாம் பிரகாரத்தில் விநாயகர், இராமர், காசி விசுவநாதர், சுப்பிரமணியர் எல்லாம் தனித் தனி சந்நிதிகள். முருகன், திருமகள் எல்லாம் இத்தலத்தில் வழிபட்டு அருள் பெற்றவர் என்பது புராண வரலாறு.

இறைவனை வணங்கிய பின் 'முத்தை வென்ற முறுவலாள்' கோயிலுக்குச் செல்லலாம். இக் கோயிலுக்குத் தான் நீண்டுயர்ந்த கோபுரம். அன்னையின் திருப் பெயர் முத்தாம்பிகை. அழகிய நாயகி அவள். அதனால்தான் அழகை ஆராதித்த அந்த அருணகிரியார் 'முத்தார் நகை அழகுடையாள்' என்றே பாடி மகிழ்கிறார். அற்புத

அழகோடு கூடியவளும், வரப் பிரசித்தி உடையவளுமான அன்னையைத் தரிசித்துவிட்டு மேல் நடக்கலாம். அந்தக் கோயில் பிராகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றித் தெற்குப்பக்கம் வந்தால், பிரசித்தி பெற்ற வட்டப் பாறை இருக்கிறது. இங்குள்ள லிங்கத் திருவுக்கும் வணக்கம் செலுத்திவிட்டு வெளியே வரலாம். தல விருட்சம் வன்னி. அடியிலே மூன்று கவடுகளோடு கிளம்பிப் பெரிய மரமாகவே வளர்ந்திருக் கிறது. இக்கோயிலின் வாயிற்புறத்தில் விஷ்ணு துர்க்கை, சிவதுர்க்கை இருவரும் இருக்கிறார்கள். சங்கு சக்கர தாரியாய் நிற்கும் விஷ்ணு துர்க்கை நல்ல சிலாவடிவம். அருள் பொழியும் அந்தத் திருவுருவத்தைப் பார்த்துக் கொண்டே நின்றால் நேரம் போவதே தெரியாது.



ஆமாத்தூர் விஷ்ணு துர்க்கை

இத்தனையும் பார்த்துவிட்டுத் திரும்பும்போது என் உள்ளத்தில் மட்டும் ஒரு குறை. எங்கள் திருநெல்வேலியிலே, எங்கள் தெருவை அடுத்த அனவரததானத் தெருவிலே பிறந்து, எனது பாட்டனாருக்கும் அவர்தம் சிறிய தகப்பனாருக்கும் குருமூர்த்தியாக விளங்கிய வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் என்னும்

ஒரு குறை. எங்கள் திருநெல்வேலி யிலே, எங்கள் தெருவை அடுத்த அனவரததானத் தெருவிலே பிறந்து, எனது பாட்டனாருக்கும் அவர்தம் சிறிய தகப்ப னாருக்கும் குரு மூர்த்தியாக விளங்கிய வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் என்னும் முருகதாச சுவாமிகள் இந்தத் திருவாமாத்தூரில் ஒரு மடம் நிறுவினார்கள் என்றும், இங்கேயே ஞானசமாதி கொண்டார்கள் என்றும் சொல்வார்கள். அந்தச் சமாதியைப் பார்க்கவில்லையே என்று நான் ஏங்கினேன். உடனே உடன் வந்த நண்பர் பக்கத்தில் உள்ள நந்தவனத்துக்கு அழைத்துச் சென்றார்.

அங்குதான் தூய்மையான சூழ்நிலையில், தவத்திரு முருகதாச சுவாமிகளின் சமாதி இருக்கிறது. சமாதியையும் சமாதியின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் சின்னஞ்சிறிய பழனி ஆண்டவன் திருக்கோலத்தையும் கண்டு வணங்கி விட்டுத் திரும்பினேன். முருகதாச சுவாமிகள் இத்தலத்தையும் இங்குள்ள மூர்த்தியையும் பற்றி மூவாயிரத்து நானூற்று எண்பத்து மூன்று பாடல்கள் பாடியிருக்கிறார்கள் என்று சொன்னாலே போதும். அதை விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை யல்லவா?

திருவாமாத்தூர் அம்மானின் கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணி வேலைகள் நடந்து முடிந்து, சென்ற சித்திரையில் கும்பாபிஷேகமும் நடந்திருக்கிறது. வசதியுள்ளவர்கள் எல்லாம் சென்று முத்தாம்பிகையையும் அபிராமேசுவரரையும் வணங்கலாம். ஒரேயொரு எச்சரிக்கை. பாகப் பிரிவினையில் தம்பியை ஏமாற்ற முனைந்த தமையனைப் போல் ஏதாவது ஏமாற்றுக் கச்சவடம் மட்டும் செய்து விடாதீர்கள். வட்டப் பாறை தெய்வம் பொல்லாதது.

# 3

# அழல் உருவன் அண்ணாமலையான்

ஒரு பலத்த போட்டி, பிரம்மாவுக்கும் மகாவிஷ்ணுவுக்கும்தான். ஆம் தந்தையும் மகனுமே தம்மில் யார் பெரியவர் என்று வாதமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாதத்தைத் தீர்த்து வைக்க சிவபிரான் வருகிறார். எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறார். இருவரும் கேட்கிற படியாக இல்லை. கடைசியாக அவரே ஒரு போட்டியை ஏற்பாடு பண்ணி அந்தப் போட்டியில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே பெரியவர் என்று தீர்மானிக்கலாம் என்கிறார். இருவரும் இசைகிறார்கள்.

அவ்வளவுதான், அவர் வானுற ஓங்கி வளரும் ஒரு அழல் பிழம்பாக மாறுகிறார். அந்த அற்புத உருவின் அடியையோ முடியையோ யார் முதலில் கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்று போட்டி அமைகிறது. மகா விஷ்ணு வராக உருவில் அடிதேடப் புறப்படுகிறார். அதல பாதாளங்களையே ஊடுருவிச் செல்கிறார். அன்ன உருவில் பிரம்மா வானுலகில் பறந்து பறந்து செல்கிறார் முடிகாண. சென்றுகொண்டே இருக்கிறார்கள் இருவரும். அடியையோ முடியையோ கண்டபாடாக இல்லை இருவருக்கும். இருவரில் விஷ்ணு கொஞ்சம் யோக்கியமானவர். ஆதலால் அடியைக் காண இயலவில்லை என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பிவிடுகிறார் பூலோகத்திற்கு. பிரம்மா

அப்படித் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. ஏதாவது குயுக்திபண்ணி இறைவன் முடியைக்கண்டு விட்டதாகச் சொல்ல விரும்புகிறார்.

அந்தச் சமயத்தில் ஒரு தாழம்பூ தலை கீழாக வருகிறது. எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டால், இறைவன் முடியிலிருந்து வருகிறேன் அதிலிருந்து நழுவி கற்பகோடி காலங்கள் ஆகிவிட்டன என்று சொல்கிறது தாழம்பூ. அதைச் சரிக்கட்டுகிறார் பிரம்மா. தன்னை இறைவன் முடியிலிருந்து பிரம்மா எடுத்து வந்ததாகப் பொய் சாட்சியம் சொல்லச் செய்கிறார். இவர்கள் சொல்வது பொய் என்று அறிய எவ்வளவு நேரம் செல்லும் இறைவனுக்கு. பிரம்மாவைப் பூலோகத்தில் சாதாரண மனிதனாகப் பிறக்கும்படி சபிக்கிறார். தாழம்பூ தன்னுடைய பூசைக்கே உரியதல்ல என்று இறைவனால் விலக்கப்படுகிறது. விஷ்ணு தன் தோல்வியை ஒப்புக் கொண்டதை மெச்சி அவருக்குத் தன் அடியையும் முடியையுமே காட்டுகிறார். அதற்காக அழல் உருவில் இருந்த இறைவன் மலை உருவில் குறுகுகிறார். அப்படிப் பொங்கழல் உருவனாக இருந்த இறைவனே அண்ணா மலையானாக மாறி நிற்கிறார்.

இப்படி ஒரு கதை, அண்ணாமலை என்னும் மலை பூவுலகில் தோன்றியதற்கு. இந்தக் கதையை எல்லாம் இன்றைய பகுத்தறிவாளர்கள் ஒப்புக் கொள்வார்களா? கதைக்குப் பின்னால் இருக்கும் தத்துவ உண்மையைச் சொல்லாவிட்டால். தன்னைப் படைத்துக் காத்து அழிக்கும் தலைவனான இறைவனைக் காண மனிதன் எவ்வளவோ காலம் முயன்றிருக்கிறான். மக்களுள் இரண்டு பிரிவினர். ஒருவர் செல்வத்தால் சிறந்த சீமான்கள்; மற்றவர் அறிவால் உயர்ந்த அறிஞர்கள். செல்வத்தால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமே இல்லை என்று செருக்குடையவர் செல்வந்தர். அறிவால் அறிய முடியாத செயல் ஒன்றும் இருக்கவே

இருக்காது என்ற கர்வம் உடையவர் அறிஞர். உண்மை என்ன என்றால் இவர்கள் இருவராலேயுமே இறைவனைக் காண்பது இயலாது என்பது தான். செருக்கும் கர்வமும் நிறைந்த உள்ளத்தால், இறைவன் முடியை என்ன. அடியையுமே காண முடியாது என்ற உண்மையைத்தான் விளக்குகிறது அண்ணாமலையார் கதை.

செல்வராலும் அறிஞராலும் அறியொணாத இறைவன் பின்னர் யாருக்கு எளியவனாகத் தன் உருவைக் காட்டுகிறான் என்றால்,காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் பக்தர் களுக்குத்தான். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய மணிவாசகர், அண்ணாமலையில் அந்தப் பொங்கழல் உருவமான அண்ணாமலையானை கண்டபோது 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி' என்ற தன் திருவெம்பாவைப் பாடலை ஆரம்பிக்கிறார். பத்தொன்பது பாட்டுப்பாடி முடிந்ததும் ஆதியாகிய முடி எங்கேயிருக்கிறது, அந்த மாகிய அடி எங்கே இருக்கிறது என்று கண்டுவிடுகிறார். இறைவன் காண்பதற்கு எளியவனாக அமைந்து விடுகிறான்.

ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள் என்றுதானே, திருவெம்பாவை இருபதாம் பாட்டு கூறுகிறது. ஆம். இறைவனது அடியும் முடியும் அவனது திருத்தாள்களே என்ற உண்மையைப் பக்தனான கவிஞன் எவ்வளவு எளிதாகக் கண்டு விடுகிறான். மகாவிஷ்ணு வையும் பிரம்மாவையுமே மண்ணைக் கௌவ வைத்து விடுகிறானே அவன். 'விண்ணிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளக்கொளியாய் எண்ணிறந்து எல்லை இலாதானாக' இருக்கும் இறைவனை எவ்வளவு எளிதாகச் சுட்டிக்காட்ட முடிகிறது கவிஞனுக்கு. இத்தனை அரிய உண்மைகளை விளக்கிக்கொண்டு நிற்கின்ற மலைதான் திரு அண்ணாமலை. அந்த மலையின் அடிவாரத்திலே கோயில் கொண்டிருக்கிறவர்தான் அண்ணாமலையார்.

அண்ணாமலையை நினைக்கின்ற போதெல்லாம், இல்லை அண்ணாமலையானைக் கண்டு தொழுகின்ற போதெல்லாம் இறை வழிபாடு உலகத்தில் எப்படித் தோன்றிற்று, என்ற உண்மையுமே விளக்கமுறும். மனிதனுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் அவன் வாழ்வதற்கு ஒளியும் என்று அறிகிறோம். சூரியன் இல்லாத பகலும், சந்திரன் இல்லாத இரவும், நட்சத்திரங்கள் இல்லாத வானும் இருந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்ப்போம்.


இறைவனது படைப்புகளில் எல்லாம் சிறந்த படைப்பு ஞாயிறுதானே. அதனிடமிருந்து எழுகின்ற ஒளியும் வெம்மையும் இல்லாவிட்டால் உலகமும் உயிர்களும் உய்வதேது? ஆதலால் சிந்திக்கத் தெரிந்த மனிதன் ஞாயிறையே, ஞாயிறு மூலமாக அதனை உலகுக்குத் தந்த இறைவனையே வந்தித்து வணங்க முற்பட்டிருக்கிறான். இப்படித்தான் எல்லாச் சமயத்தாரிடத்தும் இறை வழிபாடு ஒளி வழிபாடாகவே உரு எடுத்திருக்கிறது. இருள் போக்கும் தன்மையோடு, மருள் நீக்கும் தூய்மையும், ஆக்கி, காத்து அழிக்கும் தன்மையும், அருவாய், உருவாய், அருவுருவாய் இயங்கும் இயல்பும், பஞ்ச பூதங்களில் ஒன்றான தீயினிடத்தே தான் மிகுந்திருக்கின்றன. இப்படி அக்கினியின் இயல்பும் இறைவன் இயல்பும் இணைந் திருப்பதன் காரணமாக ஒளி வழிபாடே தீ வழிபாடாக பரிணமித்திருக்கிறது.

' இறைவனை ஞானச் சுடர் விளக்காய் நின்றவன் என்று அப்பர் பாடினால், ஆதி அந்தம் ஆயினாய், சோதியுள் ஓர் சோதியானாய் என்று சம்பந்தர் வழிபடுகிறார். சோதியே, சுடரே, சூழ் ஒளி விளக்கே என்று மாணிக்கவாசகரும், தூண்டா விளக்கின் நற்சோதி என்று சுந்தரரும் இறைவனை அழைத்தால், கற்பனை கடந்த சோதி, கருணையே

உருவமாக நிற்கிறான் என்று சேக்கிழார் பாடிப் பரவி மகிழ்கிறார். பயிலும் சுடர் ஒளி மூர்த்தி பங்கயக்கண்ணன் என்று நம்மாழ்வார் பாற்கடல் சேர்ந்த பரமனைக் குறித்தால், திருத்தக்கத்தேவர் சுடரிற் சுடரும் திருமூர்த்தி என்றே பாடு வார். இப்படியே அடியார்களும் கவிஞர்களும் இறைவனைப் பொங்கழல் உருவனாகவே காண்கிறார்கள். இந்த அனல் வழிபாடே பின்னர் திருவிளக்கு வழிபாடாக மக்களிடையே இன்றும் நிலைத்திருக்கிறது. இச்சிறிய திருவிளக்கு வழி பாடே, பெரிய கார்த்திகைத் திருநாளாக அண்ணாமலையில் கொண்டாடப்படுகிறது.

அண்ணாமலை கார்த்திகை தீப தரிசனம் ஓர் அற்புதமான அனுபவம். கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தன்று லக்ஷக் கணக்கான மக்கள், ஆண் பெண் பிள்ளைகள் எல்லாம் அண்ணாமலையார் கோயில் பிராகாரத்திலும், நகரின் தெருக்களிலும், வீடுகளின் மாடிகளில்லும் குழுமியிருக்கின்றனர். சரியாய் மாலை ஆறு மணிக்கு, முழுமதி வானில் எழுந்து கோபுர உச்சியைத் தடவி நிற்கிறது. அந்தச் சமயத்தில் கோயிலுள்ளே பஞ்ச மூர்த்திகளும் மண்டபத்தில் வந்து நிற்கிறார்கள். அதிர்வெடி யொன்று கிளம்புகிறது வானை நோக்கி. ஐந்து கற்பூர ஆரத்தித் தட்டுகளை உயர்த்துகிறார்கள் அர்ச்சகர்கள். அதே சமயத்தில் அண்ணாமலையின் உச்சியில் உள்ள கற்பூரக் கொப்பறையிலிருந்து சுடர் எழுந்து வான் நோக்கி நிமிர்கிறது. ''அரோகரா, அண்ணாமலைக்கு அரோகரா'' என்ற கோஷம் மக்களிடையே எழுகிறது உச்ச ஸ்தாயியிலே. பார்ப்பவர் உடல் புல்லரிக்கிறது; உள்ளம் விம்மிப் பெருமிதம் அடைகிறது பொங்கழல் உருவனைக் காணுவதால்.

இத்தனை அனுபவத்திற்கும் நிலைக்களனாய் இருப்பது தான், வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை என்னும் தலத்திலே உள்ள அண்ணாமலையார் கோயில். இக்கோயில் சுமார் இருபத்து




திருவண்ணாமலை

நான்கு ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் அமைந்திருக்கிறது. கோயிலைச்சுற்றி உயரமான மதில். மதிலின் நான்கு புறத்தும் நான்கு பெரிய கோபுரங்கள். கிழக்கே பிரதான வாயிலில் உள்ள ராஜகோபுரம் பதினொரு நிலைகளும் இருநூற்றுப் பதினேழு அடி உயரமும் உடையது. பரத சாத்திரத்தில் உள்ள தாண்டவ லட்சணம் என்னும் நாட்டிய நிலைகள் நூற்று எட்டையும் விளக்கும் சிற்ப வடிவங்கள் இருபக்கத்துச் சுவர்களிலும் நிறைந்து இருக்கும். இந்த வாயிலைக் கடந்தால் முதலில் நாம் சென்று சேர்வது கம்பத்து இளையனார் கோயில். அருணகிரியார் பிரார்த்தனைக்கு இரங்கி, பிரபுட தேவராயருக்கு முருகப் பெருமான் கம்பத்தில் காட்சி அருளிய இடத்தில் இந்தத் திருக்கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு வில்லேந்திய வேலன் மயில் மீது காலையூன்றி கம்பீரமாக எழுந்து நிற்கும் நிலை கலையுள்ளம் படைத்தவர் கண்களுக்கு ஒரு பெரு விருந்தாகும்.

இனி சர்வ சித்தி விநாயகர், பாதாள லிங்கேசுவரர், கோபுரத்து இளையனார் முதலியவர்களைத் தரிசித்த பின் நாம் கடக்க வேண்டியது வல்லாள மகாராஜன் கோபுரம்.

உடல் நோயால் நலிந்த அருணகிரியார் தன் உயிரை மாய்த்துக்கொள்ள இக்கோபுரத்தின் மீதேறி அங்கிருந்து குதித்தார் என்றும், அப்போது முருகப் பெருமானே அவரைத் தன் கையில் ஏந்தித் தரைதனில் விட்டார் என்றும், அன்று முதல், உடலில் மட்டும் அல்லாமல் உள்ளத்திலேயும் நலிவடையாதவராய் திருப்புகழ் பாடத் துவங்கினார் என்றும் அறிகிறோம். அருணகிரியாரைத் தாங்கியது போல நம்மையும் தாங்குவான் என்ற நம்பிக்கை மட்டும் இருந்தால் நாமும் கோபுரத்தில் ஏறிக் குதிக்க முனையலாம். இதன் பின் கிளிக் கோபுரத்தையும் பஞ்சமூர்த்தி மண்டபங்களையும் கடந்து சென்றால் அண்ணாமலையாரைக் கண்டு தொழலாம். நல்ல லிங்கத் திருவுருவில் அமைந்தவர் அண்ணா மலையார். பொன் போர்த்த நாகாபரணமும் நிறைய மலர்மாலைகளும் அணிந்தவராக காட்சி தருவார். இந்த அண்ணாமலையாரையே 'லிங்கோத்பவர்' என்று கலையுலகம் உருவாக்கியிருக்கிறது. ராஜராஜனும் அவனுக்குப் பின் வந்த சோழர்களும் கட்டிய கோயில்களில் எல்லாம் கோஷ்ட விக்கிரகமாக இவர் நின்று கொண்டிருப்பதை நாம் அறிவோம்.



அண்ணாமலையான் ஆலய வெளித்தோற்றம்

அண்ணாமலையாரை வலம் வந்து, பின்னர் அவருக்கு இடப்பக்கத்திலே கோயில் கொண்டிருக்கிற உண்ணாமுலையம்மையைத் தரிசிக்கப் போகலாம். மகா மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் நவசக்தி மண்டபம். அங்கு உருவாகியிருக்கும் சக்திகளும், காலசம்ஹாரரும் வீணாதாரரும், இருபதாம் நூற்றாண்டு சிற்பிகளின் கைத்திறன். ஆதலால் அவைகளில் மிக்க கலை அழகை எல்லாம் எதிர்பார்த்தல் இயலாது. கர்ப்பக் கிரகத்தில் இருக்கும் அண்ணாமலையாரின் தர்ம பத்தினி உண்ணா முலையம்மை, கம்பீரமான திருஉரு அல்லாவிட்டாலும் அழகும் எழிலும் நிறைந்த உருவம். இந்த அண்ணா மலையார் கோயிலின் பெரும் பகுதி வல்லாள மகாராஜனால் கட்டப்பட்டது என்று கர்ணபரம்பரை கூறும்.

இந்த வல்லாளன் சரித்திர பிரசித்தி பெற்ற வனில்லை என்றாலும் இவனைப்பற்றி, இவனது பக்தியைப் பற்றி ஒரு கதை. ஒரு நாள் அண்ணாமலை அண்ணல் அடியவர் வடிவந்தாங்கி வல்லாள ராஜனிடம் வருகிறார். வந்தவர், 'அன்றிரவு தன்னுடன் தங்க ஒரு பெண் வேண்டும்' என்கிறார். இல்லை என்று சொல்ல அறியாத வல்லாளன் தேவதாசிகளில் ஒருத்தியை அனுப்ப விரைகிறார். அவர்கள் ஒவ்வொருவரும் அன்று பிறர் வயப்பட்டு இருப்பதாகத் தகவல் வருகிறது. மன்னன் இதை அறிந்து மயங்கியபோது, மன்னனின் இளையராணி சல்லமாதேவியே அடியவர்க்குத் தன்னுடலைத்தத்தம் பண்ண முனைகிறாள். ஆனால் பஞ்சணையில் தூங்கிய அடியவரைத் துயில் எழுப்ப அவர் ,பாதத்தைச் சல்லமை தீண்டலும் அவர் பச்சைப் பசுங் குழவியாகி வருகிறார். அரசன் அரசியரது பிள்ளைக் கலிதீர்க்க வந்த இந்த பிள்ளைப் பெருமான், பின்னர் இடபாரூடராய்க் காட்சி தந்து மறைகிறார். இப்படி வல்லாளன் மகனாக அவதரித்த அண்ணாமலையார் இன்று மாசி மகத்தன்று பள்ளிகொண்டாபட்டுக்கு எழுந்தருளி, வல்லாளனுக்கு வருஷாப்தீகச் சடங்கையெல்லாம்

செய்கிறார். இறைவனின் பிள்ளைகளாக மக்கள் இருப்பதை அறிவோம். இறைவனே பக்தனது பிள்ளையாக மாறி அவனுக்கு ஈமக்கடன் செய்யும் முறையை இங்கேதான் அறிகிறோம்.

இக்கோயிலில் நூற்றுஆறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. உத்தமச்சோழன், பரகேசரிவர்மன், ராஜேந்திர சோழதேவன், திரிபுவன சக்கரவர்த்தி ராஜராஜ தேவன் முதலிய சோழ மன்னர்களும். மாறவர்மன், குலசேகரன் முதலிய பாண்டிய மன்னர்களும் ஏற்படுத்திய நிபந்தங்களைக் குறிக்க எழுந்தவையே இதில் பெரும் பகுதியான கல் வெட்டுக்கள். கீழ் வாசலில் உள்ள ராஜ கோபுரத்தை விஜய நகர மன்னன் கிருஷ்ணதேவராயன் கட்டி முடித்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. இவனே ஆயிரக்கால் மண்டபம்,சிவகங்கைக்குளம் முதலியவற்றை உருவாக்கி யவன் என்றும் அறிகிறோம். விஜயநகர நாயக்க மன்னர்கள் ஆட்சிக்கு உட்பட்ட ராஜ நாராயண சாம்புவராயன் ஒரு கோபுரம் கட்டினான் என்றும் அந்தக் கோபுரத்தில் இருந்தே 'ஜீரணோத்தார தாஸகம்' என்ற கோயில் திருப்பணி விளக்க நூலை வாமதேவன் எழுதினான் என்றும் ஒரு கல்வெட்டு கூறுகின்றது. கோயில் நிரம்பப் புராதனமான கோயில் என்பதும், இக்கோயிலைச் சோழர், பாண்டியர், நாயக்கர், நகரத்தார் எல்லாம் கட்டியும் புதுப்பித்தும், நிபந்தங்கள் ஏற்படுத்தியும், பாதுகாத்திருக்கிறார்கள் என்றும் அறிகிறோம்.

கோயிலை விட்டு வெளியே வருமுன் உங்களை ஓர் அற்புதமான மூர்த்தியின் முன்னர் கொண்டு சென்று நிறுத்த விழைகிறேன். ராஜராஜசோழனுக்கு முந்திய சோழ மன்னர்கள் கட்டிய கோயில்களில் எல்லாம் கர்ப்பக் கிரகத்திற்கு வெளியே மேற்கே பார்த்த கோஷ்டத்தில் அர்த்தநாரியின் அழகிய சிலாவுருவம் இருக்கப் பார்ப்போம். ஆனால் அற்புதமாக செப்புச் சிலை வடிவத்தில் நடராஜரையும், திரிபுராந்தகரையும், பிக்ஷாடணரையும் வடித்தெடுத்த சோழநாட்டுச் சிற்பிகள்

அர்த்தநாரியை மட்டும் செப்புச்சிலை வடிவில் அமைக்க மறந்துவிட்டிருக்கிறார்கள். இதன் காரணம் யாதோ? திருச்செங்கோட்டு மலையில் உள்ள கோயிலில் அர்த்தநாரி என்னும் மாதிருக்கும் பாதியன், கல்லிலும் செம்பிலுமே உருவாகி இருக்கிறான் என்றால் அது சோழர்களுக்கு மிகவும் பிந்திய காலத்தில்தான். ஆனால் அந்த மாதிருக்கும் பாதியனை, பஞ்சின் மெல்லடியாள் பாகனை அற்புதமான செப்புச்சிலை வடிவில் பார்ப்பது இத்தலத்தில்தான். நல்ல சோழர் காலத்துச் செப்புச் சிலை. நிரம்ப அழகு வாய்ந்த திருஉருவம். அந்தத் திரு உருவின் முன் நின்று,

உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்,
பெண்ணாகிய பெருமான் மலை
திருமாமணி திகழ,
மண் ஆர்ந்தன அருவித்திரள்
மழலை முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை
வழுவா வணம் அறுமே

என்று நாமும் ஞானசம்பந்தரோடு சேர்ந்து பாடினால் நமது வினைகளும் அகலும். ஆதலால் தயாராயிருங்கள் அடுத்த தீபத் திருநாளன்று அண்ணாமலை சென்று தொழ.

# 4

# திருக்கோவலூர் திருவிக்கிரமன்

தென் பெண்ணை ஆற்றங்கரையிலே ஒரு சிறிய கிராமம். அங்குள்ள வீதி ஒன்றில் சிறிய வீடு ஒன்று. நேரமோ இரவு. அந்தச் சமயத்தில் வீதி வழி வந்த பெரியார் ஒருவர் அந்த வீட்டுக்காரரிடம் இரவு தங்க இடம் கேட்கிறார். வீட்டுக்காரரோ பரம பாகவதர். ஆதலால் வீடு தேடி வந்த பெரியவரிடம் வீட்டில் இருந்த இடைகழியை (ரேழி என்று சொல்லுகிறோமே, அதைத்தான்) காட்டி, 'இதில் ஒருவர் படுத்துக் கொள்ளலாம். படுத்துக் கொள்ளுங்கள்' என்கிறார். அவரும் இசைந்து அங்கே படுத்துக் கொள்கிறார். கொஞ்ச நேரம் கழிந்ததும் மழை பெய்கிறது. இரண்டாவது ஆளாக ஒருவர் வருகிறார். அவரும் தங்க இடம் கேட்கிறார். 'ஓ! இந்த ரேழியிலே இருவர் இருக்கலாம், வாருங்கள்' என்று அவரையும் உள்ளே அழைத்துக் கொள்கிறார் முதலில் வந்தவர். இன்னும் கொஞ்ச நேரம் சென்றதும், மூன்றாவது ஆளாக ஒருவர் வருகிறார். அவருமே தங்க இடம் கேட்கிறார். 'சரிதான் இந்த ரேழியிலே ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம், வாருங்கள், வாருங்கள்' என்று உபசரித்து அவரையும் சேர்த்துக் கொள் கிறார்கள். இப்படியே, ஒரு சிறிய இடைகழியிலே மூன்று பேர்கள் நின்று இரவைக் கழிக்கிறார்கள். நட்ட நடுநிசியில், இவர்களோடு இன்னொரு ஆளும் வந்து நின்று கொண்டு

இட நெருக்கடியை உண்டு பண்ணுகிறார். இப்படி சொல்லாமல் கொள்ளாமல் வந்து கூடவே நிற்கும் ஆள் யார் என்று தெரியவில்லை. விளக்கு போட்டுப் பார்க்கவும் முடியவில்லை. முன் வந்த மூவரும் சிறந்த பக்தர்கள். ஆகவே, அவரவர்கள் எண்ணத்தில் எழுந்ததை, ஆளுக்கு பாட்டாக பாடுகிறார்கள். முதலில் வந்த பொய்கையாரும், இரண்டாவது வந்த பூதத்தாரும், ஞானச் சுடர் விளக்கை ஏற்றுகிறார்கள், தங்கள் தங்கள் பாட்டால். மூன்றாவது வந்த பேயரோ, நான்காவது ஆளாக வந்து நெருக்கும் நபர் யாரென்று கண்டுபிடித்து விடுகிறார். அதைச் சொல்கிறார்.

**திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன்–செருக்கிளரும்**
**பொன்ஆழி கண்டேன் புரி சங்கம் கண்டேன்**
**என் ஆழி வண்ணன்பால் இன்று**

என்ற அழகான பாட்டில். ஆம்! மூன்று பக்தர்கள் கூடிய இடத்தைவிட வந்து இருந்து கொள்ள வேறு நல்ல இடம் அந்தப் பரந்தாமனுக்குக் கிடைக்கவா போகிறது? இப்படிப் பெருமானை நெருக்கத்திலே கண்ட மூவர் வேறு யாருமில்லை. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்பவர்கள் தான். இவர்களையே தமிழ் உலகம் முதல் ஆழ்வார்கள் என்று போற்றி வழிபடுகிறது. இந்த நிகழ்ச்சி நடந்த இடம் தான் திருக்கோவலூர் என்ற தலம். இந்தக் கோவலூரை உள்ளடக்கிய அந்த நாட்டையே,

பாவரும் தமிழால் பேர் பெறு
பனுவல் பாவலர் பாதிநாள் இரவில்
மூவரும் நெருக்கி மொழிவிளக்கு
ஏற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு

என்று பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் குமாரர் வரந்தருவார் புகழ்ந்து பாடுகிறார்.

இந்தத் திருக்கோவலூர், பெண்ணையாற்றின் தென் கரையில் இருக்கிறது. விழுப்புரம் திருவண்ணாமலை ரயில் வழியில் விழுப்புரத்துக்கு மேற்கே இருபத்தைந்து மைல் தொலைவில் இருக்கிறது. ரயில் வழியாகவும்,இல்லை ரோடு வழியாகவும் போகலாம். காஞ்சியைப் போல் இந்த ஊரும் இரண்டு பிரிவாக இருக்கிறது மேலூர், கீழூர் என்று. மேலூரில் கோயில் கொண்டிருப்பவர் திருவிக்கிரமன் என்னும் மகாவிஷ்ணு. கீழூரில் இருப்பவர் வீரட்டேசுரர் என்னும் சிவபெருமான். ஆம்! அன்று கச்சியிலே முந்திக் கொண்டு அதிக இடத்தை வளைத்துக்கொண்டாரே அந்த ஏகம்பன். அதற்கு எதிர்ப்புக் காட்டுவதுபோல் பெருமாள் இங்கு முந்திக் கொண்டு, அதிக இடத்தை பிடித்துக் கொண்டிருக்கிறார்; பெரிய கோயிலைக் கட்டிக் கொண்டிருக்கிறார்; இதையெல்லாம் விட அந்தச் சிவனை ஆற்றங்கரைப் பக்கத்துக்கே ஒதுக்கி இருக்கிறார். ஊரிலே பெரிய உத்சவமெல்லாம் பெருமாளுக்குத்தான். ஆதலால் நாமும் முதலிலே பெருமாளையே தரிசித்துவிடலாம்.

இந்தப் பெருமாளின் சந்நிதி, வீதியின் கீழ்க் கோடியில், ஒரு பெரிய கோபுரம் பதினொரு நிலைகளோடு உயர்ந்திருக்கிறது. ஆனால் கோயிலின் பிரதான வாயிலில் ஒரு சின்னக் கோபுரம் தான். பெரிய கோபுரத்தை எட்டியிருந்து பார்த்து விட்டே, கோயில் வாசலுக்கு வந்து விடலாம். கோபுர வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தால் மங்கை மன்னன் கட்டிய கோபுர வாயில் வரும். அதனையும் கடந்தால் பாண்டியன் மண்டபம், பின்பு தான் மூலஸ்தானம். அங்கேதான் நிற்கிறார் உலகளந்த திருவிக்கிரமன். நல்ல நெடிய திருவுருவம். 'வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கிய' பெருமாள் அல்லவா? அதனால் விண்ணுற நிமிர்ந்தே நிற்கிறார். மூலவர் திருவுரு, மரத்தால் ஆன வடிவம். முகத்திலே நல்ல வசீகரம் என்றாலும், தூக்கிய திருவடி அவ்வளவு இயற்கையாக இல்லை. திருவிக்கிரமன் பத்தினி (திருவிக்கிரமி) மிருகண்டு, மகாபலி எல்லோரும்

காலடியிலேயே இருக்கிறார்கள். இந்த திருவிக்கிரமனை வணங்கிய பின் கோயிலைச் சுற்றலாம்.

கோயிலின் முதல் பிராகாரத்தின் முகப்பிலே துர்க்காம்பாள். விக்கிரமன் ஆணையின் பேரில், கோவிலுக்கு அவள் காவல் நிற்பதாகக் கூறுவர். துர்க்கை சிலை அநேகமாக விஷ்ணு கோயில்களிலே காண்பது இல்லை. இந்தப் பிராகாரத்திலேயே லக்ஷ்மிநாராயணன், லக்ஷ்மிவராஹன், லக்ஷ்மி நரசிம்மன் மூவருக்கும் தனித்தனி சந்நிதி. இன்னும் ராமர், உடையவர், திருக்கச்சி நம்பி, ஆண்டாள், மணவாள மாமுனிகளின் சந்நிதிகளும் தனித் தனியே இருக்கின்றன. இரண்டாவது பிராகாரம் கல்யாண மண்டபம் எல்லாம் கடந்து சென்றால் புஷ்ப வல்லித் தாயாரைக் கண்டு சேவிக்கலாம். கோயில் பிரும்மாண்ட மான கோயில். கட்டட நிர்மாணத்தைக் கவனித்தால் நாயக்க மன்னர்களே கோயிலின் பெரும் பகுதியைக் கட்டியிருக்க வேண்டும். அதற்கேற்றாற் போல் நாயக்க மன்னர்கள் சிலையும் அங்கே நிறைய இருக்கின்றன. பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரோடும் திருமங்கை மன்னனும் இந்தத் தலத்தை மங்களா சாஸனம் செய்திருக்கிறார். 'தீங்கரும்பும் கண் வளரும், கழனி சூழ்ந்த திருக்கோவலூர் அதனுள் அடியவர்களுக்கு ஆரமுதம் ஆனான் தன்னைக் கண்டேன் யானே' என்று பெருமிதத் தோடு பாடுகிறார் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார்.

இவ்வளவு தூரம் வந்த நாம், இன்னும் கொஞ்சம் காலை எட்டிப்போட்டு மேற்கே பத்துமைல் போய் இதே பெண்ணையாற்றங்கரையிலே உலகளந்த அலுப்புத் தீரக் காலை நீட்டி நிமிர்ந்து படுத்து கிடக்கும் திருவரங்கத் தானையுமே பார்த்து விடலாம். 'எல்லோரும் தொழ நின்ற திருவரங்கம்' அந்த பொன்னியாற்றிலே உள்ள தீவிலே இருக்கிறது என்றுதானே அறிவோம். இல்லை, இந்தப் பெண்ணையாற்றங் கரையிலுமே ஒரு திருவரங்கம்.

உண்மையில் இந்தக் கிராமமே, ரெவின்யூ கணக்குகளில் திருவரங்கம் என்று பதிவாகி இருக்கிறது. இங்குள்ள அரங்கநாதனே தமிழ்நாட்டில் உள்ள சயனத் திருக் கோலங்களில் அளவில் பெரியவர். அத்துடன் ஒரு சிறப்பும் கூட, சீதேவியின் மடியில் தலை சாய்த்துப் பூதேவி அடி வருடப் பள்ளிக்கொள்கிறார். வலக்கையைத் தலைக் கணைத்து, இடக்கையை உயர்த்தி, பிரம்மாவுக்கு உப தேசிக்கின்ற நிலை. சுதையில் உருவானவரே என்றாலும், தைலக்காப்பு எல்லாம் இல்லாமல் அழகாக இருக்கிறார். உலகளந்தார் நீண்டு வளர்ந்தவர் என்றால் இவர் நீட்டிப் படுக்க இருபத்து நான்கு அடி நீளம் உள்ள படுக்கை வேண்டியிருக்கிறது. அத்தனை பெரிய வடிவத்தார் அவர்.

இந்தத் திருவரங்கம் பெரிய கோயில் என்றாலும், கோயிலின் முன் முகப்பும் பல பாகங்களும் சிதைந்தே கிடக்கின்றன. காவிரித் திருநதியிலே துயிலும் கருணைமா முகிலுக்கு அடித்த அதிர்ஷ்டம் இவர் பங்கில் இல்லை. இங்கும் தாயார் சந்நிதி உண்டு. ராமர், ஆண்டாள் எல்லாம் நல்ல அழகிய வடிவங்கள். இத்தனை அழகிய ஆண்டாளை வேறு கோயில்களில் நான் காணவில்லை. ஆனால் அவளோ அங்கு கேட்பாரற்று நிற்கிறாள். ஆண்டாளை வணங்கியபின், அங்கு நிற்கவே தோன்றாது நமக்கு. தமிழ் நாட்டில் இவளைப்போல் எத்தனை சிறப வடிவங்களோ? இன்னும் பழுதுற்று நிற்கும் கோயில்கள்தான் எத்தனை எத்தனையோ என்ற நம் சிந்தை அலையும். ஆதலால் திரும்பவும் திருக் கோவலூருக்கே வந்து, அங்கு பார்க்காமல் விட்டுப்போன வீரட்டேசுவரரைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி விடலாம்.

திருக்கோவலூர் கீழூரில், ஆற்றங்கரைப் பக்கம் உள்ள கோயிலில் மேற்கே பார்த்து நின்று கொண்டிருக்கிறார். பிறப்பே இல்லாத சிவனுடைய மூர்த்தங்கள் அனந்தம். அவற்றுள் அறுபத்துநான்கை வகைப்படுத்தி அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் என்று சிவ

பராக்கிரமம் கூறும். அந்த மூர்த்தங்களில் சில சாந்த நிலை, சில ஆடும் தாண்டவ நிலை, சில அனுக்கிரகிக்கும் நிலை, சில சம்ஹார நிலை. சம்ஹார மூர்த்தங்கள் எட்டு. அந்த மூர்த்தங்களில் சிவனை வழிபடும் தலங்களையே அட்ட வீரட்டம் என்று சொல்கிறோம். அந்தகாசுரனைச் சம்ஹரித்த தலமே திருக்கோவலூர். இங்குள்ள மூர்த்தியை அந்தகாசுர சம்ஹாரமூர்த்தி என்று அழைக்கிறார்கள். மூலவர் லிங்கத் திருவுருவில்தான் இருக்கிறார் மேற்கு நோக்கிய சந்நிதியில். அந்தக் கோயிலுக்குள்ளேயே செப்புச் சிலை வடிவில் அந்தகாசுர சம்ஹாரரும் உருவாகியிருக்கிறார். அந்தகாசுரனைக் காலின் கீழ் போட்டு மிதித்துக்கொண்டு அவன் பேரில் சூலத்தைப் பாய்ச்சுகின்ற நிலையில் வடித்திருக்கிறான் சிற்பி. நல்ல சோழர் காலத்துச் செப்புப் படிமம். ஓங்கியும், தாழ்ந்தும் சூலம் ஏந்தும் கைகள். அதை ஓர் உயிர் ஓவியமாக ஆக்கிவிடுகிறது. இந்தக் கோயில் சமீப காலத்தில் திருப்பணி செய்யப்பட்டு நல்ல அழகாக வைக்கப்பட்டிருக்கிறது. அம்மையின் பெயர் சிவானந்த வல்லி. அவளது கோயில், வீரட்டேசுரர் கோயிலுக்கு இடப்புறம் தனித்ததொரு கோயில் மேற்கு நோக்கி இருக்கிறது. அம்மையின் வடிவம் அழகானது. இத் தலத்துக்கு ஞான சம்பந்தரும் அப்பரும் வந்திருக்கிறார்கள். இருவருமே இந்த வீரட்டானரைப் பாடியிருக்கிறார்கள்.

> தலைசுமந்து இருகை நாற்றி
> தரணிக்கே பொறையது ஆகி
> நிலையிலா நெஞ்சம் தன்னுள்
> நித்தலும் ஐவர் வேண்டும்
> விலைகொடுத்து அறுக்க மாட்டேன்,
> வேண்டிற்றே வேண்டி எய்த்தேன்
> குலைகொள் மாங்கனிகள் சிந்தும்
> கோவல் வீரட்டன் நீரே.

என்பது அப்பர் பாடிய தேவாரம்.

மேலூர் உலகளந்தாரைக் காணச் சென்றவர்கள், திரு அரங்கநாதரையும் தரிசித்துத் திரும்பியதுபோல், கோவல் வீரட்டனாரைக் காணச் செல்பவர்கள் பெண்ணையின் வடகரையில் உள்ள அறையணி நல்லூர், அறையணி நாதரையும் அவரது மனைவி அருள் நாயகியையும் கண்டு வழிபட்டுத் திரும்பலாம். திருக்கோவலூரிலிருந்து அறையணி நல்லூர் செல்ல ஆற்றைக் கடக்கும்போது ஆற்றின் நடுவிலே, பாறையிலே ஒரு சிறிய கோயிலைப் பார்க்கலாம். அதனை இடைச்சிக் குன்று என்பார்கள். பெண்ணையின் நீர்ப் பெருக்கமோ பிரசித்தி உடையது. 'வெண்ணெய் உருகுமுன் பெண்ணை பெருகும்' என்பார்கள். எவ்வளவோ காலங்களுக்கு முன் இடைச்சி ஒருத்தி அறையணி நல்லூரிலிருந்து கோவலூருக்குச் செல்ல ஆற்றைக் கடந்திருக்கிறாள். அக்கரையில் இறங்கும்போது தண்ணீரே இல்லாதிருந்த ஆற்றில்,இக்கரை சேருமுன் பெருவெள்ளம் வந்திருக்கிறது. ஆற்றின் நடுவிலே இருந்த பாறைமீது ஏறி நின்று தப்பித்திருக்கிறாள். அவளே அப் பாறையில் ஒரு கோயில் கட்டி படிகளும் அமைத் திருக்கிறாள். அதனையே இடைச்சிக் குன்று என்று கூறுகிறார்கள் மக்கள். அங்கே கபிலர்பிரதிஷ்டை செய்த லிங்கத் திருஉரு இருப்பதாகச் சொல்வார்கள். ஏறிப் பார்க்க வேண்டியதில்லை. ஆனால் ஆற்றைக் கடக்கும்போது இக்குன்றைப் பாராமலும் இருக்க முடியாது.

அறையணி நல்லூரை, மக்கள் அரகண்ட நல்லூர் என்கிறார்கள். இங்குதான் திருக்கோவலூர் ரயில்வே ஸ்டேஷன், போலீஸ் ஸ்டேஷன் எல்லாம் இருக்கின்றன. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து போலீஸ் ஸ்டேஷன் வந்து பின்னும் தெற்கே சென்றால், ஒரு சிறிய குன்றின் மேல் பெரிய கோபுரத்தோடு கூடிய கோயில் ஒன்றிருக்கும். கோபுரம் தனித்துத் தென் வாயிலில் இருக்கிறது. அதற்கு ஒரு தொடர்பும் இல்லாமல் மேற்கே பார்த்த சந்நிதியில்

அறையணிநாத ஈசுவரர் இருக்கிறார். அருள்நாயகியோ தனித்த சிறு கோயிலில் கிழக்கு நோக்கி நிற்கிறாள். கோயில் வாயிலில் வலம்புரி விநாயகர் சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டிருக்கிறார். விரசண்ட ரிஷி பூசித்த தலம் என்பார்கள். இவர்களையெல்லாம் வணங்கிவிட்டுத் திரும்பலாம். கோயிலுக்குக் கிழக்கிலும் தெற்கிலும் பாறையிலேயே ஒரு பெருங் குளம் இருக்கிறது. அக்குளக் கரையிலே பஞ்ச பாண்டவர் குகை ஒன்றும் உண்டு. அதில் ஐந்து அறைகளும், திரௌபதைக்கு என்று ஒரு சிற்றறையும், ஒரு சிறு சுனையும் இருக்கின்றன. ஏதோ ஜைன முனிவர்கள் தங்க அமைத்த குடைவரைச் சைத்தியமாக இருக்க வேண்டும். ஐந்தும் ஒன்றும் சேர்ந்து ஆறு அறைகள் இருப்பதனால், பஞ்ச பாண்டவர்களின் தொடர்பு ஏற்படுத்திப் பேசுகிறார்கள் என்று தோன்றுகிறது. மாமல்லபுரத்தில் ஐவர் ரதம் என்று கூறுவது போல, இங்கும் இக்குகைகள் பஞ்சபாண்டவரோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இத் திருக்கோவலூர் ஏதோ சமயப் பிரசித்தி மட்டும் பெற்ற ஊரில்லை. நல்ல இலக்கியப் பிரசித்தியும் பெற்றுள்ள ஒரு பழைய நகரம். சங்க காலத்திலே மலையமான் நாடு மலாடு என்று புகழுடையதாக இருந்திருக்கிறது. வள்ளல் பாரி மகளிராம் அங்கவை சங்கவையை மணம் புரிந்த தெய்வீகன் இருந்து அரசாண்ட இடம். இவன் வழி வந்தவர்களே மெய்ப்பொருள் நாயனார், நரசிங்க முனையரையர் முதலியோர். இந்தத் தெய்வீகனோ மலையமான் திருமுடிக்காரியின் வழித் தோன்றல். இந்தத் திருமணத்தை முடிப்பதையே தம் கடமையாகக் கொண்டவர் பாரியின் நண்பர் புலவர் கபிலர். திருமணம் முடிந்த பின்னர் இத்திருக்கோவலூரிலேயே ஒரு பாறை மீது எரி வளர்த்து அதில் வீழ்ந்து முத்தி எய்தித் தம் ஆருயிர் நண்பர் பாரி சென்ற இடம் சேர்ந்தார் என்பது வரலாறு. இதைச் சொல்கிறது ஒரு கல்லிலே பொறித்த கவிதை.

வன்கரை பொருது வருபுனல் பெண்ணை
தென்கரை உள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத்து இயலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதை செஞ்சொல் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலம்
பெண்ணை மலையற்கு உதவி...
மினல்புகும் விசும்பின் வீடுபேறு எண்ணிக்
கனல்புகும் கபிலக் கல்.

என்பது கவிதை. இந்தக் கபிலக் கல்லுக்கும் வணக்கம் செலுத்திய பின்னர் நாம் திரும்பலாம், கோவலூரை விட்டு.

# 5

# வெண்ணெய் நல்லூர் அருள்துறையார்

கவிச் சக்கரவர்த்தி கம்பர் வீட்டிலே ஒரு விசேஷம். அதற்கு ஊரே திரண்டு வந்திருக்கிறது. கம்பரது அத்தியந்த நண்பரான சடையப்ப முதலியாரும் வந்திருக்கிறார். வந்தவர் கூட்டத்தில் ஒரு பக்கத்தில் ஒதுக்குப்புறமாக உட்கார்ந்து கொள்கிறார். இதைக் கம்பர் கவனிக்கவில்லை. கம்பரது மனைவி பார்த்து விடுகிறாள். உடனே தன் கணவனை அணுகி, 'அண்ணா வந்து, ஒதுக்குப் புறமாக உட்கார்ந்திருக்கிறார்; அவரை அழைத்து வைக்க வேண்டிய இடத்திலே உட்கார வையுங்கள்' என்று சொல்கிறாள். இதற்குக் கம்பர் சொல்கிறார், 'இப்படி இவரை இன்று சபைக்கு நடுவே வீற்றிருக்க வைத்து விட்டால் போதுமா? அவரை வைக்க வேண்டிய இடத்தில் வைக்க மறக்க மாட்டேன்' என்கிறார். இதை ஞாபகத்திலே வைத்துக் கொண்டு தானோ என்னவோ, பின்னர் தாம் ராமாவதாரம் பாடும்போது தன்னை ஆதரித்த அந்த வள்ளல் சடையப்பரைக் காவியத்திலே பத்து இடங்களிலே கொலு வீற்றிருக்கச் செய்துவிடுகிறார் கம்பர். ராம லக்ஷ்மணர்கள் விசுவாமித்திரரோடு மிதிலை சென்று தங்குகிறார்கள். அன்று பௌர்ணமி, இரவில் நிலவொளி பரந்து வீசுகிறது. எப்படி நிலவொளி பரந்திருக்கிறது? சடையன் புகழ்போல் எங்கும் பரந்திருக்கிறது என்பதே அவருடைய உவமை. இதைச் சொல்கிறார் அழகான ஒரு சொல்லோவியத்தி வாயிலாக,

வண்ணமாலை கைபரப்பி, உலகை
வளைந்த இருள் எல்லாம்
உண்ண எண்ணி, தண்மதியத்து
உதயத்து எழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசைஅனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநல்நீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்
புகழ்போல் எங்கும் பரந்துளதால்

என்பதுதானே கம்பர் பாட்டு. இந்த வள்ளல் சடையப்பர் பிறந்த பதியே வெண்ணெய் நல்லூர். சடையப்பர் பிறந்த பதியைப் பற்றியும் ஒரு விவாதம். தென் பெண்ணைக் கரையிலுள்ள திருவெண்ணெய்நல்லூரா? இல்லை, காவிரிக் கரையில் குத்தாலம் பக்கத்திலுள்ள கதிர்வேய் மங்கலமா என்று (கதிராமங்கலம் என்று பெயர் நிலவுகிறது). கதிர்வேய் மங்கலத்தையும் அங்குள்ளவர்கள் வெண்ணெய் நல்லூர் என்றே அழைக்கிறார்கள். இந்த விவாதத்துக்கு விடை கூற முயல்கிறது, சோழ மண்டல சதகப் பாட்டு ஒன்று.

எட்டுத் திசையும் பரந்தநிலா
எறிக்கும் கீர்த்தி ஏருழவர்
சட்டப்படுஞ்சீர் வெண்ணெய் நல்லூர்
சடையன், கெடிலன் சரிதம்எலாம்
ஒட்டிப்புகழ, ஆயிரம் நாவு
உடையார்க்கு அன்றி, ஒருநாவால்
மட்டுப்படுமோ? அவன் காணி
வளஞ்சேர் சோழ மண்டலமே.

வெண்ணெய் நல்லூர்ச் சடையனைக் கெடிலன் என்றும் போற்றுவதால், கெடில நதி ஓடுகின்ற நடுநாடே அவன் நாடு என்றும், ஆனால் அவனுக்குக் காணி வளம், சில காலம் சோழ நாட்டில் இருந்திருத்தல் கூடும் என்றும் தெரிகிறது.

விவாதம் எப்படியும் இருக்கட்டும். கம்பனால் புகழ் பெற்றிருக்கிறார் சடையப்பர். அந்தச் சடையப்பரால் புகழ் பெற்றிருக்கிறது வெண்ணெய் நல்லூர். அந்த வெண்ணெய் நல்லூருக்கே செல்கிறோம் நாம் இன்று.

திருவெண்ணெய் நல்லூர் விழுப்புரத்துக்குத் தெற்கே பன்னிரண்டு மைல் தொலைவில் இருக்கிறது. விழுப்புரம் –திருச்சி ரயில் மார்க்கத்தில் சென்றால் திருவெண்ணெய் நல்லூர் ரோட் ஸ்டேஷனில் இறங்கலாம். அப்படி இறங்கினாலும் அங்கிருந்து நான்கு மைல் மேற்கே போகவேணும். இல்லை, திருக்கோவலூர் உலகளந்தார், வீரட்டர் முதலியவர்களைத் தரிசித்து விட்டு வருபவர்கள் திருக்கோவலூருக்கு நேர் கிழக்கே பதினான்கு மைல் ரோட்டில் வரவேணும். அப்படிச் சென்றால் இத்தலத்தை அடையலாம். எங்கு எல்லாமோ சுற்றிக் கொண்டு செல்லும் பாதை, முதலில் ஒரு தெப்பக் குளக்கரையில் கொண்டு சேர்க்கும். அக்குளத்துக்கு இரண்டு பக்கமும் இரண்டு கோயில்கள். குளத்துக்குத் தென்புறம் இருப்பது விஷ்ணு கோயில். வடபுறம் இருப்பது சிவன் கோயில். இருவரும் இப்படி ஒற்றுமையாக அடுத்தடுத்து இருந்தாலும் மக்கள் என்னவோ பிராதான்யம் கொடுப்பது சிவன் கோயிலுக்குத் தான்; அங்குள்ள கிருபாபுரி ஈசுவரருக்குத் தான். இந்தக் கிருபாபுரி ஈசுவரரின் பெயர் இன்று மங்கி மறைந்து போய்விட்டது. இன்று அவர் தடுத்து ஆட்கொண்ட நாதர் என்ற பெயரிலேயே பிரபலமாக இருக்கிறார். இத்தலத்துக்கு வெண்ணெய் நல்லூர் என்று ஏன் பெயர் வந்தது, இவர் ஏன் தடுத்தாட் கொண்ட நாதர் என்று பெயர் பெற்றார் என்று தெரிந்து கொண்ட பின்னர் கோயிலுக்குள் போகலாம். உமாதேவிக்குப் பசுக்களாகிய உயிர்களின் பேரில் அடிக்கடி இரக்கம் பிறந்து விடும். அதனால் கைலையை விட்டுத் தவம் செய்யப் பூலோகத்துக்கே வந்து விடுவாள். அப்படி வந்தவள் பசு வெண்ணெய்யினால் கோட்டை கட்டிக்

கொண்டு அதனிடையே பஞ்ச அக்கினியை வளர்த்துத் தவம் புரிகிறாள். (அடே! இந்த வெண்ணெய் உருகியே பெண்ணை பெருகிற்று போலும்!) அப்படித் தவம் புரிந்து பேறு பெற்ற தலம் ஆனதனாலேதான் இத்தலத்துக்கு வெண்ணெய் நல்லூர் என்று பெயர். அம்மை அருள் பெற்ற கோயில் ஆனதனாலே கோயிலுக்கே அருள்துறை என்று பெயர் அமைகிறது.

இந்த வெண்ணெய் நல்லூருக்குத் தென் கிழக்கே ஏழு எட்டு மைல் தூரத்தில் நாவலூர் என்று ஒரு ஊர். அந்த நாவலூர்தான், சைவ சமயாச்சாரியார்களில் ஒருவரான சுந்தரர் பிறந்த ஊர். கைலையில் இறைவனுக்கு உகந்த தொண்டராக இருந்த ஆலால சுந்தரரே திருநாவலூரில் சடையனார், இசை ஞானியர் என்னும் நல்ல சைவத் தம்பதிகளின் தவப் புதல்வராக வந்து பிறக்கிறார். நம்பி ஆரூரர் என்று நாமகரணம் செய்யப்படுகிறார். அந்த நாட்டு மன்னர் நரசிங்க முனையரையரால் வளர்க்கப்படுகிறார். வளர்ந்து வாலிபப் பருவம் எய்திய இவருக்கு, நாவலூரை அடுத்த புத்தூரில் திருமணம் நடக்க ஏற்பாடு ஆகிறது. திருமணம் நடக்க இருக்கிற நேரத்திலே, ஒரு வயோதிக அந்தணர் 'இம் மணமகன் எனக்கு அடிமை, இவன் பாட்டன் எழுதிக் கொடுத்த அடிமைச் சீட்டு என்னிடம் இருக்கிறது. இவன் என் பணியாளனாக வேலை செய்தல் வேண்டும். மணம் முடித்தல் கூடாது' என்று இடை புகுந்து தடுக்கிறார். நம்பி ஆரூரர், 'இது என்ன பித்துக்குளித் தனம்? எங்காவது அந்தணன் வேறொரு அந்தணனுக்கு அடிமை யாவதுண்டா?' என்று மறுக்கிறார். ஆத்திரத்தில் கிழ வேதியர் நீட்டிய ஓலையையும் பிடித்து இழுத்துக் கிழித்து எறிந்து விடுகிறார். வலுத்த கிழவரும் சளைக்கவில்லை. 'இந்த நம்பி ஆரூரன் கிழித்தது நகல்தான், மூல ஓலை என்னிடம் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கிறது' என்று அங்கு இழுத்தே செல்கிறார். பேரவையைக் கூட்டித் தம்

வாதினை உரைக்கிறார். மூல ஓலையையே காட்டித் தம் கட்சியை நிலைநிறுத்துகிறார். வேறு வழியில்லை. நம்பியாரூரர் கிழவர் பின்னாலேயே செல்கிறார். முன் சென்ற கிழவர் அங்குள்ள அருள்துறை என்னும் கிருபாபுரி ஈசுவரர் கோயிலுள் நுழைந்து 'இதுவே என் வீடு' என்று சொல்லி மறைகிறார். அப்போதுதான் உணர்கிறார். இறைவனே தம்மைத் தடுத்து ஆட்கொள்ளக் கிழவேதியராக வந்திருக்கிறார் என்பதை. இறைவனும், நீ நம்மோடு வன்மை பேசி வாதிட்டாய், ஆதலால் நீ வன் தொண்டனாகவே விளங்குவாய், எம்மேல் சொல் தமிழ் பாடல்கள் பாடு' என்று ஏவுகிறார். 'எபடிப் பாடுவது' என்று வன்தொண்டர் மயங்கியபோது, 'நீ நம்மைப் பித்தன் என்றெல்லாம் பேசி ஏசினாய் அல்லவா, பித்தன் பித்தன் என்றே பாடு' என்று வேறே அடியெடுத்துக் கொடுக்கிறார். பாடுகிறார் வன்தொண்டர்.

> **பித்தா! பிறைசூடி!**
> **பெருமானே! அருளாளா!**
> **எத்தால் மறவாதே!**
> **நினைக்கின்றேன் மனத்து உன்னை**
> **வைத்தாய் பெண்ணைத் தென்பால்**
> **வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்**
> **அத்தா! உனக்கு ஆளாய் இனி**
> **அல்லேன் எனலாமே.**

என்றே பாடிப் பரவுகிறார்.

அருள் துறை கோயில் வாயிலுக்கு வந்ததும் இந்தப் பாடல் எனக்கு ஞாபகம் வந்தது. பெண்ணைக்குத் தென் பக்கம் இக்கோயில் இருக்கிறது. என்கிறாரே இவர். நாம் வந்த வழியில் இந்த ஊருக்கு வடக்கே நான்கு மைல் தொலைவில் அல்லவா தென்பெண்ணை இருந்தது என்று எண்ணினேன். உடன் வந்த அன்பர்களையும் விசாரித்தேன்.

ஆம்! நம்பி ஆரூரர் காலத்தில் பெண்ணை இவ்வூரை அடுத்து ஓடியிருக்கிறது. பின்னர்தான் திசை திரும்பி வடக்கே ஒதுங்கியிருக்கிறது என்றார்கள். மேலும் பெண்ணை யாற்றின் கிளையான ஒரு மலட்டாறு, ஊரை அடுத்து ஓடுகிறது என்கிறார்கள். நீரே இல்லாததால் மலட்டாறு என்று பெயர் பெற்றதோ, இல்லை, மலாடர் நாட்டில் ஓடுவதால் மலட்டாறு என்று பெயர் பெற்றதோ தெரிய வில்லை. ஆனால் இந்த மலட்டாற்றின் கரையிலேயே வெண்ணெய் நல்லூர் இருக்கிறது. அருள்துறை கோயிலும் இருக்கிறது.

இனி கோயிலுள் நுழையலாம். கோயிலுள் நுழைந்ததும் தலவிநாயகரான பொள்ளாப் பிள்ளையாரை வணங்கி விட வேண்டும். (பொள்ளா என்றால் உளியால் பொளியாத சுயம்பு என்று பொருள்) அப்படி வணங்கா விட்டால் அவர் பொல்லாதவராகவே மாறலாம். அப்பனைப் போல் பிள்ளையும், 'அற்புதப்பழ ஆவணங் காட்டி நம்மை ஆட்கொள்ளவே' முனையலாம் அல்லவா? இனி தடுத்து ஆட்கொண்ட தேவரையும் அவரது துணைவி வேற்கண்நங்கையையும் கண்டு தொழலாம். இவர்களைப் பற்றிச் சிறப்பாகச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. இந்தக் கோயிலுக்கு உள்ளேயே சிவஞான போதம் அருளிய மெய்கண்டாருக்கு ஒரு தனிச் சந்நிதி இருக்கிறது. அவர் வெண்காடர் அருளினாலே பெண்ணாகடத்திலே அச்சுதக் களப்பாளர் மகனாகப் பிறந்தவர். வெண்ணெய் நல்லூரிலே மாமனார் வீட்டிலே வளர்ந்தவர். பரஞ்சோதி முனிவர் அருளினாலே ஞானோபதேசம் பெற்று மெய்கண்டார் என்ற தீக்ஷாநாமம் பெற்றவர். சிவஞான போதம் என்னும் சாத்திரத்தை எழுதி, சித்தாந்த சைவத்தை நிலை நிறுத்தியவர். இவருக்குக் கோயிலுள் முக்கியத்துவம் அளித்ததுபோல், கோயிலுக்கு வெளியேயும் திருவாவடு துறை மடத்தார் மடம் நிறுவி அதனைப் பரிபாலித்து வருகிறார்கள்.

இத்தனையும் பார்த்தாலும் அந்த வன் தொண்டரைக் காணவில்லையே என்று எண்ணுவோம். அவருக்கு இந்தக் கோயிலில் முக்கிய இடம் உண்டு. கோயிலின் தெற்குப் பிராகாரத்திலே மேற்கே பார்த்த சிறுகோயிலில் செப்பு வடிவிலே இவரைச் சமைத்து வைத்திருக்கிறார்கள். மற்றக் கோயில்களில் எல்லாம் கோலாகலமாக இருக்கும் இந்த ஆலாலசுந்தரர், இங்கு அடக்க ஒடுக்கமாக அடிமை ஓலை ஏந்திய கையராய் நிற்கிறார். நிரம்பவும் பிற்பட்ட காலத்திலேதான் செய்து வைத்திருக்க வேணும். அவரைப் பார்த்து விட்டே திரும்பலாம். இந்தக் கோயிலிலே கல்வெட்டுக்கள் பிரசித்தம். எல்லாம் பன்னிரண்டாம் பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுந்தவை. அவைகளில் இரண்டு முக்கிய மானவை. ஒன்று கோப்பெருஞ் சிங்கன் காலத்தியது. 1268-ல் வெட்டப்பட்டது. செஞ்சியைச் சேர்ந்த உடையான் ஸ்ரீ கைலாயமுடையான், திருவெண்ணெய் நல்லூர் ஆட் கொண்ட தேவருக்குப் பிச்சன் பாடச் சொன்னான் என்றும், பெயருடைய இரண்டு வெள்ளிமுரசும் ஒரு பொன் கல்காறையும் தானம் செய்ததைப் பற்றியும். மற்றொன்று குலோத்துங்க சோழன் காலத்தியது, வழக்கு வென்ற திருவம்பலம் என்ற கல்மண்டபம் கட்டச் சில குடிகளுடைய வீடுகளை எடுத்துக் கொண்டு வேறு இடம் தந்ததைக் குறிக்கும். இம்மண்டபமே கோயில் பிராகாரத்தில் வடகிழக்கு மூலையில் இருக்கிறது. இவை தவிர, தடுத்து ஆட்கொண்ட தேவர், ஆவணம் காட்டி ஆட்கொண்டான் என்றெல்லாம் கல்வெட்டில் குறிப்புகள் இருக்கின்றன. இன்னும் திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கே இரண்டு மைல் தொலைவில் தடுத்து ஆட்கொண்ட ஊர் என்று ஒரு கிராமமும் அதற்கும் கிழக்கே பண்ணுருட்டி ரோட்டில், பண்ணுருட்டிக்கு மேற்கே நான்கு மைல் தொலைவில் மணம் தவிர்த்த புத்தூர் என்று ஒரு கிராமமும் இருக்கின்றன. இவையெல்லாம் சுந்தரனை இறைவன் தடுத்து ஆட்

கொண்டது, ஏதோ கர்ண பரம்பரைக் கதை என்றல்லாமல் உண்மையாய் நடந்த வரலாறு என்பதை வலியுறுத்தும்.

இத்தனையும் தெரிந்து கொண்ட இந்த மூச்சிலேயே சுந்தரர் பிறந்த நாவலூருக்குச் சென்று, அங்குள்ள பக்தஜனேசுவரையும் மனோன்மணியையும் வணங்கி விட்டே திரும்பலாமே. சென்னை திருச்சி டிரங்க் ரோட்டில் விழுப்புரத்துக்குத் தெற்கே பதினாறு மைல் சென்றதும், ரோட்டடியிலேயே திரு நாமநல்லூர் சமுதாய வளர்ச்சித் திட்ட ஆபீஸ் கட்டிடங்கள் தென்படும். அன்றைய திருநாவலூரே இன்று திருநாமநல்லூர் என்று விரிந் திருக்கிறது. அந்த மெயின் ரோட்டிலிருந்து இடப்பக்கம் திரும்பி ஒரு மைல் சென்று வடபக்கம் திரும்பினால் நாவலேசுவரர்கோயில் வாயில் வந்து சேரலாம், இறைவன், இறைவி சுந்தர நாயகியை எல்லாம் கண்டு தொழலாம்.

இந்தக் கோயிலுக்குள் ஒரு கோயிலிலே வரதராஜப் பெருமாள் வேறே இடம் பிடித்துக் கொண்டிருக்கிறார். வெண்ணெய் நல்லூரில் சுந்தரரை ஆட்கொண்டு அவர் முடிக்க இருந்த திருமணத்தைத் தடுத்து நிறுத்திய இறைவனே, பின்னர் ஒன்றுக்கு இரண்டாக, திருவாரூர் பரவையையும் திரு ஒற்றியூர் சங்கிலியையும் இவருக்கு மணம் முடித்து வைத்திருக்கிறார். இந்த இரண்டு மனைவியரோடு ஒருங்கிருந்து இவர் குடித்தனம் பண்ணினார் என்று அவர் சரித்திரம் கூறவில்லை. என்றாலும் பிறந்த இடத்துப் பெரியவர்கள், சுந்தரருடன் பரவை, சங்கிலி இருவரையுமே செப்புச் சிலையாக வடித்து, இரு பக்கங்களிலும் நிறுத்தி மகிழ்ந்திருக்கிறார்கள். நல்ல அழகான வடிவங்கள். சுந்தரரே இந்தத் தலத்தைத்தானே மிகவும் விரும்பியிருக்கிறார். 'வேயாடியார் வெண்ணெய் நல்லூரில் வைத்து என்னை நா யாடியார்க்கு இடமாவது திருநாவலூரே' என்பதுதானே அவரது தேவாரம். எவ்வளவு தான் பற்று அற்றவர்கள் ஆனாலும் பிறந்த இடத்துப் பாசம் போகுமா, என்ன?

# 6

# அதிகை வீரட்டனார்

மூன்று அசுரர்கள், வித்துண்மாலி, தாருகாக்ஷன் கமலாக்ஷன் என்று. மூவரும் வர பலம் மிக்கு உடையவர்கள். மூவரும் மூன்று கோட்டைகளைக் கட்டிக் கொள்கிறார்கள். பொன், வெள்ளி, இரும்பால் ஆனவை அக்கோட்டைகள். இந்தக் கோட்டைகளோடேயே எவ்விடமும் செல்லக் கூடியவர்கள் அவர்கள். இவர்களது ஆட்சி எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும்? மக்கள் தேவர் நரகர் எல்லாம் இந்த ஆட்சியில் துன்புறுகின்றனர். எல்லோருமே சென்று முறை யிடுகிறார்கள், சிவபெருமானிடம். அவரும் இந்தத் திரிபுரங்களைத் தகர்த்தெறிய, இந்த அசுரர்களுடன் போர்புரிய சன்னத்தர் ஆகிறார். பூமியையே தட்டாகவும், சூரிய சந்திரர்களையே சக்கரங்களாகவும் கொண்டு அமைத்த தேர் தயாராகிறது. வேதங்களே குதிரைகளாக அமைகின்றன. பிரும்மாவே சாரத்தியம் செய்ய வருகிறார். மேரு மலை வில்லாகிறது. வாசுகி நாணாகிறது. மகா விஷ்ணுவே பாணம் ஆகிறார். இத்தனை ஏற்பாடு செய்துகொண்டு போருக்குப் புறப்பட்ட பெருமான் தேரில் ஏறியதும் சிரிக்கிறார். அவ்வளவுதான்; திரிபுரங்கள் மூன்றும் வெந்து பொடி சாம்பலாகி விடுகின்றன. நல்ல சிவபூஜை செய்தவர் களானதனாலே, அந்த அசுரர்கள் மூவரில் இருவர், எம்பிரான் கோயிலுக்கு வாயில் காவலராக அமைகிறார்கள். ஒருவர் குடா முழக்கும் பணியாளராக வேலை ஏற்கிறார். இந்தத்

திரிபுரி தகனம் நடந்த இடம்தான் திரு அதிகை. அங்கு கோயில் கொண்டிருப்பவர்தான் அதிகை வீரட்டனார்.

அட்ட வீரட்டங்களில் ஒன்றான இந்தத் திரு அதிகை வீரட்டானம் மிக்க புகழ் பெற்ற தலம். ஊருக்கு அதிகை என்று ஏன் பெயர் வந்தது? அதிகப் புகழ் படைத்த ஊரானதனாலே அதிகை என்று ஆகியிருக்குமோ? திரிபுர தகனம் நடந்த இடம் அதிகப் புகழ் பெற்ற இடம் என்று சொல்ல வேறு ஆதாரமா தேட வேண்டும்? அந்தப் பழைய சங்க காலத்திலேயே இந்த அதிகை மன்னன் அதியமான் என்ற பெயரோடு புகழ் நிறுவி இருக்கிறான். ஔவைக்கு அமரத்துவம் அளிக்கக் கூடிய நெல்லிக்கனியைக் கொடுத்து, அவன் அருளைப் பெற்றிருக்கிறான். பாடலும் பெற்றிருக்கிறான். இவனையே சிறுபாணாற்றுப் படை என்னும் பத்துப்பாட்டில் ஒரு பாட்டு.

**மால்வரைக் கமழ் பூஞ்சாரல்**
**கவினிய நெல்லி**
**அமிழ்து விளை தீங்கனி**
**ஔவைக்கு ஈந்த**
**உரவுச் சினங் கனலும்**
**ஒளிதிகழ் நெடுவேள்**
**அரவக் கற்றானை அதிகன்.**

என்று வியந்து கூறுகிறது. ஆம்! அதிகையில் இருந்தவன் அதிகன். இல்லை, அதிகன் இருந்த ஊர் அதிகை என்றே கொள்ளலாம். இந்த அதிகைக்கே செல்லலாம் நாம்.

இத்தலத்துக்குச் செல்ல, விழுப்புரம் கடலூர் ரயில் பாதையில் பண்ணுருட்டி என்ற ஸ்டேஷனில் இறங்க வேண்டும். பண்ணுருட்டி அல்லது பண்ருட்டி. பண்ருட்டி பலாப்பழம் பிரசித்தமானதாயிற்றே. அதனைச் சொன்னாலே நாவில் நீர்ஊறுமே! மேலும் பண்ருட்டிப் பொம்மைகள் வேறே அந்த ஊருக்கு அதிகப் புகழைத் தேடித்

தந்திருக்கின்றனவே. இந்தப் பண்ணுருட்டி ஸ்டேஷனில் இறங்கி வண்டி பிடித்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். திரு அதிகை செல்ல வேண்டும் என்று சொன்னால் வண்டிக்காரர்களுக்குத் தெரியாது. திருவதி என்று சொன்னால் தான் தெரியும். (அவர்கள் என்ன? நெடுஞ்சாலைப் பொறியர்கள்கூட, ரோட்டிலே திருவதி என்று எழுதித்தானே போர்டு நட்டு வைத்திருக்கிறார்கள்!) ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கடலூர் செல்லும் ரோட்டில் ஒரு மைல் சென்றால், தென்புறம் ஒரு பெரிய கோபுரம் தென்படும். அங்கு வண்டியைத் திருப்பிக்கோயில் வாயிலில் வண்டியை விட்டு இறங்கலாம். அங்கு ராஜகோபுரத்தையும் முந்திக்கொண்டு ஒரு மண்டபம் நிற்கும். மண்டபத்துக்கு வடக்கே அப்பர் திருமடம், மண்டபத்தின் முகப்பிலே இறைவனுடைய திருமணக் கோலம். அக்கோலத்திலே, எல்லா இடங்களிலும் இறைவனுக்குப் இடப்பக்கம் இருக்கும் அம்பிகை, இங்கு வலப்பக்கமாக நிற்கிறாள். இந்த வேடம் வேண்டுமென்று கேட்டுத் தவம் செய்து பெற்றாள் என்று தலபுராணம் கூறும். இதற்கேற்பவே கோயில் உள்ளும் திரிபுரசுந்தரி இறைவனுக்கு வலப்புறமே கோயில் கொண்டிருக்கிறாள். சோழ-நடு நாட்டில் உள்ள கோயில்களில் இறைவி, இறைவனுக்கு வலப்புறம் இருப்பது இக்கோயில் ஒன்றுதான் என்று நினைக்கிறேன்.

இன்னும் இந்தத் திருஅதிகை, நாவுக்கரசராம் அப்பரை வாழ்வித்த இடமும்கூட. திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூர் என்ற ஊரிலே மாதினியாரின் தவப்புதல்வியாக, திலகவதியார் பிறக்கிறார். இந்தத் திலகவதியாருக்கு ஒரு தம்பி மருள்நீக்கியார் என்ற பெயரோடு. அப்போது நாடெல்லாம் சமணம் பரவி யிருக்கிறது. மன்னன் மகேந்திர வர்மனே ஜைன சமயத்தைச் சார்ந்திருக்கிறான். சைவ மரபிலே பிறந்த மருள் நீக்கியாரும் சமணம் ஆகிறார். சமண மடத்திலே தருமசேனர் என்ற பெயரோடு தங்கி வாழவும் செய்கிறார். இந்தச் சமயத்தில்

திலகவதியாரைத் திருமணம் முடிக்க இருந்த சேனாபதி கலிப்பகையார் போர்க்களத்தில் இறந்து விடுகிறார். 'மணம் செய்து கொள்ளா விட்டாலும் மனத்தால் நான் அவருக்கே உரியவள், ஆதலால் அவர் இறந்த பின்னர் வேறு ஒருவரைத் திருமணம் புரியேன்' என்று வைராக்கிய சித்தத்தோடு வாழ்கிறார் அவர். திருமடம் ஒன்று அமைத்து, ஆலயத் திருப்பணி முதலியன செய்து வந்த இவர், தம் தம்பியாம் மருள்நீக்கியார் மருள் நீக்கம் அடையாது வாழ்வது குறித்து வருந்தி நைகிறார். இவர் படும் வருத்தம் தாளாது, இறைவன் தருமசேனரின் மருள் நீக்க முனைகிறார். இறை அருளால் தருமசேனரை சூலை நோய் பற்றுகிறது. எந்த வைத்தியம் செய்தும் தீராத காரணத்தால், தமக்கையிடம் ஓடி வந்து வணங்கி, அவர் அளித்த நீற்றை அணிந்து, நீரை உண்டு, அதிகை வீரட்டனாரை வணங்குகிறார்.

**கூற்றயினவாறு விலக்ககலீர்,**
**கொடுமைபல செய்தன நான் அறியேன்**
**ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்**
**பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாது என் வயிற்றின் அகம்படியே**
**குடரோடு துடக்கி முடக்கி இட**
**ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில**
**வீரட்டானத்து உறை எம்மானே**

என்று துவங்கும் திருப்பதிகமும் பாடுகிறார். சூலை நோயும் அகல்கின்றது. இப்படித்தான் தருமசேனர் மீண்டும் சைவராகி நாவுக்கரசர் என்னும் நல்ல புகழோடு வாழ்கிறார். சமணர்கள் பேச்சைக் கேட்டு அரசனும் இவரை நீற்றறையில் வைக்கிறான்; நஞ்சு கலந்த உணவு ஊட்டுகிறான்; யானைக் காலால் இடற வைக்கிறான்; கல்லில் கட்டிக் கடலில் எறிகிறான். எல்லா இடர்களினின்றும் இறை அருளால் தப்புகிறார். கோயிலைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் உழவாரப் பணி செய்தே வாழ்கிறார். மன்னன் மகேந்திர

வர்மனும், சைவ சமயமே சமயம் என உணர்ந்து சைவனா கிறான். இந்த நாவுக்கரசராம் நல்லவர் வாழ்க்கை யோடு தொடர்பு கொண்ட நற்பதியே இத்திரு அதிகை.

இனி கோயிலுக்குள் நுழையலாம். வான் நோக்கி உயர்ந்த இந்தக் கோபுர வாயிலின் இரு பக்கமும் பரத சாத்திரத்திலுள்ள நூற்று எட்டுத் தாண்டவ லட்சணங்களை விளக்கிக் கொண்டு பெண்கள் நிற்கிறார்கள். இதை யெல்லாம் பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தால் ஒரு பெரிய வெளி முற்றம். அங்கே தென்பக்கம் சங்கர தீர்த்தம். வடபக்கம் ஒரு புத்தர் சிலை. அடே! இந்தத் தலத்தில் ஜைனர்கள் மாத்திரம்தான் இருந்தார்கள் என்று இல்லை. பௌத்தர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களையும் வெல்ல வேண்டியிருக்கிறது அப்பருக்கு.

இந்த முற்றத்தையும், அதன்பின் இடை வரும் இடைவழிக் கோபுரத்தையும் கடந்துதான் பிரதான கோயிலுக்குள் நுழைய வேண்டும். கோயிலினுள் நுழைந்ததும் இடப் பக்கம் திரும்பினால் தனித்தொரு மாடத்தில் செப்புச் சிலை வடிவில் பெரிய உருவிலே நாவுக்கரசர் நிற்கிறார். சமீப காலத்தில் வடித்த செப்பு விக்கிரகமாகவே இருக்க வேண்டும். வடித்த சிற்பி அவனுக்கு இருந்த ஆர்வத்தில் ஒரு பெரிய தவறு செய்திருக்கிறான். அப்பர் ஏந்தியிருக்கும் உழவாரப் படையின் முகப்பிலே சிவலிங்கத்தையே அமைத்திருக்கிறான். இதை அப்பர் கண்டிருப்பாரானால் கடிவதோடு நின்றிருக்க மாட்டார். எனக்கு மட்டும் ஒன்று தோன்றுகிறது. 'நின்னாவார் பிறர் இன்றி நீயே ஆனாய்' என்று பாடியவர் தானே அவர். ஆதலால் அவர் ஏந்திய உழவாரத்திலும் சிவபெருமான் இருக்கத்தானே வேண்டும். அதை வடித்துக் காட்டிய சிற்பியைக் கோபித்துக் கொள்வானேன் என்று அவரையே கேட்டிருப்பேன்.

இனி அப்பரைப் பார்த்த கண்ணுடனேயே அப்பரின் தமக்கையார் திலகவதியாரையுமே பார்த்து விடலாம்.

தெற்குப் பிராகாரத்தின் திருமாளிகைப் பத்தியில்தான் திலகவதியார் சந்நிதி. கற்சிலையில் உருவானவரைவிடச் செப்பு வடிவில் உருவாகியிருப்பவர்தான் நம் உள்ளம் கவர்கிறார். 'தம்பியார் உளர் ஆக வேண்டும் என்ற கருணையோடு, அம்பொன் மணிநூல் தாங்காது அனைத் துயிர்க்கும் அருள் தாங்கி இம்பர்மனைத் தவம் புரியும்' திருக்கோலத்திலேயே அவரைப் பார்க்கிறோம்.

இந்தத் தெற்குப் பிராகாரத்திலேயே அம்பிகை கோயிலும் இருக்கிறது. பெரிய நாயகி, திரிபுர சுந்தரி என்ற பெயர் தாங்கி நிற்கிறாள் அவள். தஞ்சைப் பெரிய நாயகியைப் போல் ஆறு, ஏழு அடி உயரம் இல்லையென்றாலும், நான்கு ஐந்து அடிக்குக் குறை வில்லை. திரிபுர சுந்தரியின் கோயில் வாயிலுக்கும் வெளியில் உள்ள முற்றத்திலிருந்து மூலக் கோயிலின் விமான தரிசனம் செய்யலாம். சோழர்கள் பெரு உடையார்க்குக் கல்லால் கட்டிய விமானம் போலவே மிக்க அழகாகச் சுதையில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த விமானம் எண் கோணத்தில் அமைந்திருக்கிறது. விமானம் அடித் தளத்திலிருந்து ஸ்தூபி வரை சிற்ப வடிவங்கள்தான். ஏல்லாம் சுதையால் ஆனவை. நல்ல வர்ணம் தீட்டப் பெற்றவை. இவைகளில் பிரசித்தமான வடிவம்தான் திரிபுராந்தகர் வடிவம், பன்னிரண்டு திருக்கரம். சூலம் ஏந்திய கை ஒன்று, வில்லேந்திய கை ஒன்று. ஒரு காலைத் தேர்த் தட்டிலும் மற்றொரு காலை உயர்த்தியும் வில் வளைத்து நிற்கிறார். கம்பீரமான தோற்றம். பார்த்துக் கொண்டே இருக்கலாம். இந்தச் சிற்ப வடிவத்தைக் கண்ட பின் கர்ப்பக்கிருஹ விமானத்தையே ஒரு சுற்றுச் சுற்றத் தோன்றும். விநாயகர், அவருடன் நிற்கும் தேவகணங்கள், கைலை மலையானும், அந்த மலையையே அசைக்கும் மன்னன் ராவணனும், இன்னும் கோவர்த்தனதாரி, அக்னி, ஏகபாத மூர்த்தி எல்லாம் நல்ல நல்ல வடிவங்களாகச்

சுதையில் உருவாகியிருக்கிறார்கள். இவற்றைப் பார்த்துக் கொண்டே வடக்குப் பிராகாரத்துக்கு வந்தால் அங்கு ஒரு கிணறு. அதனையே சூல தீர்த்தம் என்கின்றனர். தருமசேனரின் சூலைநோய் தீர்த்து அவரை நாவுக்கரசராக்கிய தீர்த்தம் அல்லவா?

இப்படிக் கோயிலை வலம் வந்து, தென் பக்கமாக உள்ள படிகளில் ஏறிக் கோயிலுள் சென்றதும், நம்முன் நிற்பவர் திரிபுராந்தகரும் திரிபுர சுந்தரியுமே. அம்பிகை வடிவமும் அழகானதாக இல்லை. செப்பு வடிவில் சோழ நாட்டுக் கோயில்களில் வடித்து வைத்திருக்கும் திரிபுராந்தகர்களோடு ஒப்பிட இயலாது. வில் அளவுக்கு மிஞ்சிய காத்திரம். இந்தத் திரிபுராந்தகரை வணங்கிவிட்டு, கர்ப்பக் கிருஹம் நோக்கிச் சென்றால் அங்கே மூலவரைத் தரிசிக்கலாம். இவரே வீரட்டானர். சோடசலிங்கம். பதினாறு பட்டைகள் தீட்டிப் பளபளவென்றிருக்கிறார். இவருக்குப் பின்னாலே கர்ப்பக் கிருஹச் சுவரிலே உமையுடன் கூடிய இறைவன்; மணக்கோலம் என்பார்கள். பல்லவர் கோயில்களில் உள்ள சோமாஸ்கந்த மூர்த்தமாகவே இருக்கலாம். கந்தர் தெரியவில்லை. லிங்கத் திருவுரு மறைத்துக் கொண்டிருக்கிறது அந்தப் பகுதியை. இந்த வீரட்டானரை வணங்கிவிட்டு, வெளியே வரலாம்.

இன்னும் இத்தலத்தை ஒட்டிப் பார்க்க வேண்டியவை இரண்டு உண்டு. ஒன்று குணதரவீச்சுரம் மற்றொன்று வேகாக்கொல்லை. குணதரவீச்சுரம் வீரட்டானர் கோயிலுக்குப் பக்கத்திலே இருக்கிறது. சமணனாக இருந்த மகேந்திர வர்மன் நாவுக்கரசரால் சைவனாகிய ஆர்வத்தில் சமணப் பள்ளிப் பாழிகளை இடித்து அந்தக் கற்களைக் கொண்டு கட்டியது குணதரவீச்சுரம்.

வேகாக்கொல்லை திருவதிகைக்குத் தெற்கே எட்டு மைல் தொலைவில் இருக்கிறது. திரிபுர தகன காலத்தில்

இந்த ஓர் இடம் மட்டும் வேகவில்லையாம். அந்த இடத்து மண் வெண்மையாகவே இருக்கிறது. ஆம்! திரிபுராந்தகராம் செம்மேனி எம்மான் சுட்ட மண் செம்மண். அவரால் சுடப்படாத மண் வெள்ளை மண். இப்படி வேகாக் கொல்லையின் வெண் மண்ணும், திருஅதிகையின் செம் மண்ணும் திரிபுர தகனத்துக்குச் சான்று பகர்ந்து கொண்டு இன்னும் இருக்கின்றன. இதையெல்லாம் நம்ப மறுக்கிற நம் மனமுமே செம்மைப்பட வேண்டுமே..

# 7

# திருப்பாதிரிப்புலியூர் அரன்

இந்நில உலக மக்களிலே மூன்று வகையினர். ஒரு வகை, பிறர்க்குச் செய்யும் நல்ல காரியங்களை எல்லாம் அவர்களிடம் முன்கூட்டி சொல்லாமலே தாமாகச் செய்து முடிப்பவர்கள. இன்னொரு வகை, செய்யுங் காரியங்களை எல்லாம் முன் கூட்டியே தம்பட்டம் அடித்து அதன் பின்பு செய்து முடிப்பவர்கள். மூன்றாவது வகை, ஏதோ வாய் விரிய அதைச் செய்வதாக, இதைச் செய்வதாகச் சொல்வார்கள்; ஆனால் ஒன்றுமே செய்யமாட்டார்கள். இவர்கள் மூவரையும் பெரியவர், சிறியவர், கயவர் என்று வகைப்படுத்துகிறார் ஒரு புலவர். இவர்களுக்கு உவமை தேடித் திரிகிறார். அவர் கண்டுபிடித்த உவமைகளே பலா, மா, பாதிரி மரங்கள். பலா பூக்காமலேயே காய்க்கும் இயல்புடையது. மா பூத்துக் காய்க்கும் தன்மையுடையது. பாதிரியோ பூக்கும், ஆனால் காய்க்காது. இதைச் சொல்கிறார் ஒரு, பாடலில்,


**சொல்லாமலே பெரியர்,**
**சொல்லிச் செய்வர் சிறியர்**
**சொல்லியும் செய்யார்**
**கயவரே–நல்ல**
**குலாமாலை வேற்கண்ணாய்!**

கூறு உவமைநாடின்
பலா மாவைப் பாதிரியைப்பார்

பலாவும் மாவும் நமக்குத் தெரியும், பாதிரியை நாம் பார்த்ததில்லை. ஆதலால் பாதிரிப்புலியூர் என்று ஒரு தலத்தின் பெயரைக் கேட்டதுமே, அங்கு பாதிரியைப் பார்க்கலாமென்று போனேன். அங்குள்ள கோயிலுக் குள்ளும் விரைந்தேன். பாதிரியின் இயல்போடேயே கோயில் இருந்தது. சில கோயில்களில் வெளியில் ஒன்றும் இருக்காது. ஆனால் கோயிலுள் நுழைந்தால் ஒரே கலை மயம். சிறபச் செல்வங்கள் நிறைந்திருக்கும். சில கோயில்களில் உள்ளும் புறமுமே கலைவளம் நிரம்பி யிருக்கும். ஆனால் நான் சென்ற பாதிரிப்புலியூர் கோயிலோ, கோபுரம் நன்றாக இருக்கிறது, கோபுரத்துக்கு வடபுறம் குளம் நன்றாக இருக்கிறது. கோயிலின் முன் மண்டபத்தில் குதிரைமீது ஆரோ கணித்து வரும் வீரர்கள் இருக்கிறார்கள். ஆனால், கோயில் உள்ளே கலையழகு என்பது கொஞ்சம் கூட இல்லை. காரணம் பழைய கோயில் பழுதுற் றிருந்ததைப் புதுப்பித்துத் திருப்பணி செய்ய முனைந்த வர்கள், பழைய கற்களை, பழைய கலை வடிவங்களை யெல்லாம் அப்புறப்படுத்தி விட்டு, நன்றாக ஒழுங்கு செய்யப்பட்ட (Well dressed stones) புதிய கற்களை அடுக்கிக் கோயில் கட்டியிருக்கிறார்கள்.

இந்தக் கோயிலில் இறைவனும் இறைவியும் மாத்திரமே பழையவர்கள். மற்றவர்கள் எல்லாம் இருபதாம் நூற்றாண்டின் கைத்திறன். தல விருக்ஷமான பழைய பாதிரி மரமும் பட்டுப் போயிருக்கிறது. என்றாலும் பட்ட மரத்தை தகடு பொதிந்து மொட்டையாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மற்றவைகளைப் புதுக்கியதுபோல், புதிய பாதிரி மரம் ஒன்றைத் தேடி எடுத்து நட்டு வளர்த்திருக்கலாம். அதைச் செய்யத் தவறி விட்டார்கள். பழைய பாதிரி மரம் பழைய பெயரின் சின்னமாக விளங்குகிறதே ஒழிய வளரவோ,

பூக்கவோ, காய்க்கவோ செய்கிறதில்லை. பாதிரி பூக்கும், காய்க்காது என்ற கவிஞனையும் அல்லவா விஞ்சி யிருக்கிறது இந்தப் பாதிரி. இந்தப் பாதிரி மரத்தையுடைய திருப்பாதிரிப்புலியூர் கோயிலுக்குத்தான் இன்று செல்கிறோம் நாம்.



திருப்பாதிரிப்புலியூர் – கோயில்

தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைமை நகரம் கடலூர் என்.டி. அந்த ஸ்டேஷனில் இறங்கி வடமேற்காகச் செல்லும் பாதையில் அரை மைல் சென்றால் திருப்பாதிரிப் புலியூர் கோயில் வாயிலுக்கு வந்து சேரலாம். கோயிலின் ராஜகோபுரத்துக்கும் முந்திக் கொண்டு ஒரு மண்டபம். அந்த மண்டபத்துக்கு வடக்கே ஒரு குளம் நல்ல படிகட்டுகளுடன். இதனையே சிவகரதீர்த்தம் என்கிறார்கள். கோயில் முன் மண்டபத்திலே குதிரை வீரர்களை ஏந்தி நிற்கும் கற்றூண்களும் பழைய கலைஞர்கள் செய்ததல்ல. இன்றைய கலைஞர்கள் வேலையே. ஆதலால் கவர்ச்சிகரமாக இல்லை.



கல்தூண்

அந்த மண்டபத்திலிருந்து தெற்கே கோயில் மதிலைச் சுற்றப் புறப்பட்டால், கோயில் காவல்காரரே சொல்வார். அங்கெல்லாம் ஒன்றுமில்லை வீணாக அலைய வேண்டாம் என்று. ஆதலால் நாம் கோயிலுக்குள்ளேயே நுழையலாம். கலையழகு இல்லாவிட்டாலும், கடவுளர் இருக்கிறாரே அவரைக் கண்டு வணங்கி அருள் பெறலாம் தானே. நல்ல பெரிய பிரகாரம்; அதற்கேற்ற பிரும்மாண்ட மான தூண்கள். எல்லாம் கூடாது குறையாது அளவோடு இருக்கும். இந்தப் பிராகாரத்தைப் பார்த்தால் கோயில் கட்ட பத்து லக்ஷமாவது செலவாகியிருக்க வேண்டும் என்று தோன்றும். பிராகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றினால் தகடு பொதிந்த பாதிரி மரத்தையும் பார்க்கலாம். இறைவன் சந்நிதிக்கு வந்து அவரை வணங்கிவிட்டு, வடபுறம் இருக்கும் அம்மன் கோயிலுக்குப் போகலாம். இங்கும் தூண், மண்டபம், கர்ப்பக் கிருஹம் எல்லாமே புதிதுதான். அம்மை பெரிய நாயகியைத் தரிசித்துவிட்டு வெளியே வரலாம்.

தலத்தை விட்டுக் கிளம்பு முன் இத்தலத்துக்குப் பாதிரிப் புலியூர் என்று பெயர் வரக் காரணம் என்ன என்று

அறியத் தோன்றும், ஸ்தல விருக்ஷம் பாதிரியானதால் பாதிப் பெயருக்கு விளக்கம் பெறுவோம். அதிலும் உமையம்மை ஏதோ தவறு செய்ய அதற்குப் பிராயச்சித்தமாக அம்மையை இவ்வுலகில் பிறக்கும்படி இறைவன் சபிக்க, அந்தச் சாப விமோசனம் பெற அம்மை சப்த கன்னிகைகளுடன் கெடில நதிக்கரையில் உள்ள இப்பாதிரி வனத்துக்கு (பாடலவனம் என்றும் சொல்வார்கள்) வந்து தவம் புரிய, இறைவன் பாதிரி மரத்தடியிலே ஜோதி மயமாகத் தோன்றி ஆட்கொண்டார் என்று தல வரலாறு கூறும். அதற்கேற்பவே, அன்னை பெரியநாயகி அருந்தவநாயகி என்றே அழைக்கப்படுகிறாள். பாதிரியோடு புலியூர் சேருவானேன் என்றால் புலிக்கால் முனிவர் (வியாக்கிர பாதர்) பூசித்துப் பேறு பெற்றதால் என்று விளக்கம் பெறுவோம்.

இந்தத் தலத்துக்கும், முயலுக்கும் ஏதோ மிக்க நெருங்கிய தொடர்பு இருந்திருக்க வேணும். அதற்குக் கதைகள் இரண்டு உண்டு. ஒன்று வியாக்கிரபாதர் மகன் உபமன்யு பூஜை செய்யும்போது அவரது பாதம் அம்மை எழுந்தருளியுள்ள பீடத்தில் பேரில் பட்டிருக்கிறது. அருந்தவ நாயகியே அவள் என்றாலும் இதைப் பொறுத்துக் கொள்வாளா? உபமன்யு முனிவரை முயல் வடிவு எய்துக என்று சபிக்கிறாள். ஆனால் அந்த முயலோ அங்குள்ள பாதிரி மரத்தின் கிளை மீது பட்டதால் முயல் உரு நீங்கிப் பழைய உபமன்யுவாகவே ஆகிவிடுகிறது. சரிதான், மனைவி சாபம் கொடுக்க, அதற்கு நிவர்த்தியைக் கணவன் அருளி விடுகிறார். இவர்களது தாம்பத்திய உறவு எப்படி நன்றாக இருத்தல் கூடும் என்றே எண்ணத் தோன்றுகிறது நமக்கு. இரண்டாவது முயல் கதை வேறே. மங்கணர் என்று ஒரு முனிவர், அவர் இறைவன் பூசனைக்கு மலர் பறிக்கிறார். காலில் முள் தைக்கிறது. முள் தைத்த இடத்திலிருந்து ரத்தம் ஒழுகாது நன்னீர் பெருகுகிறது. இதைக் கண்டு ஆனந்தத்தால் துள்ளிக் குதிக்கிறார். இப்படிக் குதித்தவரது கால்கள்

அவ்வனத்தில் தவம் செய்யும் தூமப்ப முனிவர் சிரத்தில் படுகின்றன. தூமப்பர் மங்கணரை முயல் ஆகுக எனச் சபிக்கிறார். மனைவியிட்ட சாபத்தையே நிவர்த்தி செய்த இறைவன் முனிவர் இட்ட சாபத்தை மாற்றத் தயங்குவாரா? கார்த்திகைச் சோமவாரத் தீப தரிசனத்தின் மகிமையால் மங்கணர் பழைய உரு எய்துகிறார். இப்படி முயலுக்கு அருள் செய்த இறைவனது கருணையை, இந்தத் தலத்துக்கு வந்த சம்பந்தர் உணர்கிறார், பாடுகிறார்.

முன்ன நின்ற முடக்கால்
முயலுக்கு அருள்செய்து நீள்
புன்னை நின்று கமழ்
பாதிரி புலியூர் உளான்
தன்னை நின்று வணங்கும்
தனைத் தவம் இல்லிகள்
பின்னை நின்ற பிணி
யாக்கை பெறுவார்களே

என்பதுதான் சம்பந்தர் தேவாரம்.

இப்படி முயல்களுக்குக்கூட அருள் செய்த பரமன் அருள் கனிந்த அடியவரான அப்பர் தளர்கின்றபோது சும்மா இருப்பாரா? சைவ மரபிலே பிறந்த மருள்நீக்கியார், சமண மதத்தைச் சார்ந்து தருமசேனர் ஆகிறார். இவரது தமக்கையார் திலகவதியார் விரும்பியபடி இவருக்குச் சூலை நோய் தந்து, ஆட்கொள்கிறார் இறைவன் திரு அதிகையிலே. இப்படி நாவுக்கரசர் சமணராயிருந்து சைவராக மாறி விட்டது, சமணர்களுக்குப் பிடிக்கவில்லை. சமணனாக இருந்த மன்னன் மகேந்திர வர்மனிடம் சொல்லி எத்தனையோ இன்னல்களை உண்டாக்குகிறார்கள். எத்தனை கொடுமைகளெல்லாம் உண்டோ, அத்தனையும் செய்து பார்த்துவிடுகிறான் அம்மன்னன். அதில் ஒன்று நாவுக்கரசரைக் கல்லிலே கட்டிக் கடலிலே தள்ளுதல்.

ஆனால் அதற்கெல்லாம் திருநாவுக்கரசர் அஞ்சிவிட வில்லை. அவருக்கோ சிவபிரானிடம் அழியாத நம்பிக்கை.

சொல் துணை வேதியன்,
சோதி வானவன்,
பொன்துணை திருந்து அடி
பொருந்தக் கைதொழ,
கல்துணைப் பூட்டி ஓர்
கடலில் பாய்ச்சினும்,
நல்துணையாவது
நமச்சிவாயவே!

என்று பாடுகிறார். நீரில் மூழ்கும் கல் நாவுக்கரசருக்குத் தெப்பமாகி மிதக்கிறது. அலைமோதும் கடல் தெப்பத் தோடு சேர்ந்த நாவுக்கரசரைக் கரை சேர்க்கிறது. இப்படி நாவுக்கரசர் கரையேறிய இடம் இன்றும் கரை ஏறவிட்ட குப்பம் என்ற பெயரோடேயே கடலூர் பக்கத்தில் நிலவுகிறது. பாதிரிப்புலியூர் அரன், தோன்றாத் துணை யாயிருந்து நாவுக்கரசர் நல்வாழ்வு பெற உதவியிருக்கிறான். இதை நினைத்தே,

ஈன்றாளுமாய், எனக்கு எந்தையும்
ஆய், உடன்தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்து
உகந்தான் மனத்து உள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன்
திருப்பாதிரிப் புலியூர்
தோன்றாத் துணையாயிருந்தனன்
தன்னடி யோங்களுக்கே.

என்ற பாடுகிறார் நாவுக்கரசர். இப்பாடலை நாவுக்கரசர் பாடிய பின்னரே, இத்திருப்பாதிரிப் புலியூர் அரனுக்குத் தோன்றாத் துணைநாதர் என்ற பெயர் நிலைத்தது போலும். இப்படி நாவுக்கரசர் கரையேறியதை இன்று சித்திரை அனுஷ

நாளன்று கரைஏறவிட்ட குப்பத்தில் திருநாளாகவே சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

எங்கெல்லாமோ சென்ற சுந்தரர் இத்தலத்துக்கு வந்தார் என்று வரலாறு இல்லை. ஆனால் மணிவாசகர் இங்கு வந்ததாக வரலாறு உண்டு. வாதவூர் அடிகளாம் மணிவாசகர் இத்தலத்துக்கு வரும்போது கெடில நதியிலே வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியிருக்கிறது. நதியைக் கடக்க முடியவில்லையே என்று வருந்தி அக்கரையிலேயே அன்ன ஆகாரம் இல்லாமல் நின்றிருக்கிறார் அவர். ஈசனைக் காணாமல் மணிவாசகருக்கு அவ்விடத்தை விட்டு நகர மனமில்லை.

அடியார்களின் துயர் தீர்ப்பதே தனது பணியாகக் கொண்ட இறைவன் ஒரு சித்தர் வடிவத்தில் மணிவாசகர் முன் தோன்றி அவருக்காக நதியை வடபால் போகும்படி செய்து, கோயிலுக்குக் கூட்டிவந்து, பாடலவனநாதனைத் தரிசிக்க வகை செய்து மறைந்திருக்கிறார்.

மணிவாசகர் விரும்பிய வண்ணமே, கங்கையும் கெடிலமும் கலந்த ஒரு தீர்த்தமாக சிவகர தீர்த்தத்தையும் அமைத்திருக்கிறார் அந்தச் சித்தர்.

கலை வளர்க்கும் கோயில் வரிசையில் இக்கோயில் இன்று இடம் பெறாது என்றாலும் தோன்றாத் துணையும் அருந்தவநாயகியும் கோயில் கொண்ட தலம் என்பதால் பிரசித்தி உடையதுதானே. அதிலும் சமயக் குரவர்களில் வயதால் மூத்த நாவுக்கரசருக்கும் நல்வாழ்வு கொடுத்த பதியாயிற்றே. ஆதலால், 'கரையேறவிட்ட பிரான் ஒரு பாகம் வளர் கருணைப் பிராட்டியாள், தரையேறு புகழ்ப் புரிசை பெரியநாயகி சரணம் தலைமேல் கொண்டு' திரும்பலாம் இங்கு சென்றால், என்று சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்.

# 8

# பழமலை நாதர்

சைவ சமய குரவரில் ஒருவரான சுந்தரர் ஒரு தலத்துக்குப் போனார். அந்த ஊர்ப் பெயர் என்ன என்ற விசாரித்தார். விருத்தகிரி என்றார்கள். அங்கு கோயில் கொண்டிருப்பவர் யார் என்றார், விருத்தகிரி ஈசுவரர் என்றார்கள். 'அம்பிகை?' என்றார். 'ஆம். அவளும் விருத்தாம்பிகையே' என்றார்கள். 'என்ன! இந்த ஊர், இந்த உரில் உள்ள இறைவன், இந்த இறைவனது துணைவி எல்லோருமே கிழடு தட்டியவர்களாக இருக்கிறார்களே. இங்கு நமக்கு ஜோலியில்லை', என்று சொல்லி மேலும் நடையைக் கட்டினார். இப்படி ஓடிவிட்டால் விருத்தகிரி ஈசுவரர் விட்டு விடுவாரா? 'ஏனப்பா என்னைப் பாராதே, என்னைப் பாடாதே போகிறாய். என் மனைவி அப்படி ஒன்றும் கிழவியில்லை; வந்துதான் பாரேன்' என்று அழைக்கிறார். சுந்தரர் வருவதற்கு முன்னே, ஒரு பாலாம்பிகையைச் சிருஷ்டி பண்ணித் தம் பக்கத்தில் வைத்துக் கொள்கிறார். இந்தப் பாலாம்பிகையைப் பார்த்த பின்னரே சுந்தரர் பாடத் துவங்கினார் விருத்தகிரியாரை. விருத்தாம்பிகை கோயில் வெளியில் இருக்க, பாலாம்பிகை சந்நிதி விருத்தகிரியார் கோயில் உள்ளேயே இருப்பதைப் பார்த்து இன்றும் மக்கள், 'பாருங்களேன் இந்தக் கிழவன்

காரியத்தை, 'மனைவி கிழவியாகி விட்டாள் என்று தள்ளி வைத்து விட்டு, சின்னஞ்சிறு குமரியாம் மனைவியை மட்டும் பக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறாரே!' என்றெல்லாம் பேச வாய்ப்பாகச் சந்நிதிகள் அமைந் திருக்கின்றன அந்தக் கோயிலில்.

ஆனால் இந்தக் கதையில் கொஞ்சமும் உண்மையே இல்லை. ஆதாரமுமே இல்லை. அப்படி என்றால் இந்தக் கதை எப்படி எழுந்தது? விருத்தாசலத்திலே விருத்தாம்பிகை என்னும் பெரியநாயகிக்குத் தனி சந்நிதி, தனியே ஒரு கோயில். ஆனால், சுவாமி கோயிலிலே வடகிழக்கு மூலையிலே ஒரு சிறு சந்நிதி, அந்தச் சந்நிதியில் நிற்பவள் பாலாம்பிகை. இந்தப் பாலாம்பிகை இங்கே உருவானதே பதினாறாம் நூற்றாண்டிலேதான். கதை இதுதான்: கி.பி. பதினாறாம் நூற்றாண்டிலே குரு நமச்சிவாயர் என்ற பெரியார் திருவண்ணாமலையில் இருந்திருக்கிறார். அங்கிருந்தவர் தில்லையை நோக்கிப் புறப்பட்டு வரும் வழியில், இந்த விருத்தாசலம் என்னும் திரு முதுகுன்றத்துக்கு வந்திருக்கிறார். இங்குள்ள விருத்தகிரியார் என்னும் பழமலை நாதரையும், பெரியநாயகியையும் தரிசித்து விட்டுக் கோயிலில் ஒரு பக்கத்தில் படுத்திருக்கிறார். நடுநிசியில் பசி வருத்தியிருக்கிறது. அவரோ அன்னையின் கருணையை நன்கு உணர்ந்தவர். தாயிடம் சோறு கேட்டால் கொடுப்பாள் என்று நம்பி,

நன்றி புனையும் பெரிய
நாயகி எனும் கிழத்தி,
என்றும் சிவனார்
இடக்கிழத்தி—நின்ற
நிலைக் கிழத்தி மேனி முழு
நீலக் கிழத்தி
மலைக்கிழத்தி சோறுகொண்டு வா.

என்று பரிவோடே கேட்டிருக்கிறார். குரு நமச்சிவாயர் பெண் என்ற பொருளிலேயே கிழத்தி என்று விளித்திருக்கிறார் அன்னையை. ஆனால் அன்னைக்கு, தன்னை இவன் வேண்டுமென்றே கிழவி என்ற பொருளில் அழைத்திருக்கிறான் என்று தோன்றியிருக்கிறது. உடனே பெரியநாயகி முதியவள் வடிவில் வந்து, 'ஏனப்பா, என்னைக் கிழத்தி கிழத்தி என்று பாடினாய். கிழவியால் எப்படிச் சோறு எடுத்துவர இயலும்?' என்று கேட்டிருக்கிறாள். ஒரு பாவமும் அறியாத குரு நமச்சிவாயர், 'இதுதானா கோபம்?' என்ற கேட்டுவிட்டுப் பாட்டை மாற்றி விடுகிறார்.

**முத்த நதி சூழும்**
**முது குன்று உறைவாளே!**
**பத்தர் பணியும்**
**பதத்தாளே–அத்தன்**
**இடத்தாளே முற்றா**
**இளமுலை மேல் ஆர**
**வடத்தாளே சோறு கொண்டுவா.**


என்று பாடியிருக்கிறார். இதைக் கேட்டுப் பெரியநாயகி மகிழ்ச்சியுற்று இளமைநாயகி உருவில் வந்து குரு நமச்சிவாயருக்குச் சோறும் நீரும் கொடுத்து உதவி யிருக்கிறாள். அன்று முதல் இளமைநாயகிக்கு ஒரு சந்நிதி இந்தக் கோயில் உள்ளே என்பது தல வரலாறு. இது கூட எவ்வளவு உண்மையோ அறியேன். கன்னி, குமரி, அன்னை, கிழவி எல்லாம் ஒருத்தியேதான். 'அகிலாண்டகோடி ஈன்ற அன்னை என்றாலும், பின்னேயும் கன்னி என மறை பேசும் ஆனந்த ரூப மயிலாயிற்றே' அவள். இதையெல்லாம் உணர்ந்த அன்பர் ஒருவர் அம்பிகை பெயர் விருத்தாம்பிகை, பெரியநாயகி என்று மட்டும் இருப்பானேன், இளமை நாயகி, பாலாம்பிகை என்றும் இருக்கட்டுமே என்று நினைத்திருக்கிறார். இந்த நினைவின் ஞாபகமாகக்

கோயிலுக்குள் ஒரு கோயிலை, இளமைநாயகிக்கு பின்னால் யாரோ எடுத்திருக்க வேண்டும். விருத்தாம்பிகையோடு பாலாம்பிகையும் நிலைத்துவிடுகிறார்கள் இக்கோயிலில். இதை வைத்து மக்கள் கயிறு திரிக்கவும் வகை செய்து விடுகிறார்கள்.

நாம் இன்று செல்வது, விருத்தாம்பிகை, பாலாம்பிகை சமேதராகத் திரு முதுகுன்றத்தில் கோயில் கொண்டிருக்கும் பழமலை நாதரைக் காணவே. விழுப்புரம், திருச்சி கார்டு லைனில், விருத்தாசலம் சந்திப்பில் இறங்கிப் போகலாம். பாஸஞ்சர் வண்டி என்றால் விருத்தாசலம் டவுன் ஸ்டேஷனில் இறங்கியும் போகலாம். எங்கிருந்து போனாலும் ரயிலை விட்டு இறங்கியதுமே பெரிய கோபுரங்கள் தெரியும். கோயிலை அடுத்து ஓடும் மணிமுத்தாற்றைக் கடக்க நல்ல பாலம் ஒன்றும் உண்டு. பாலத்துக்கும் கிழக்கே நின்று கோபுர தரிசனம் செய்து விட்டு, கோயில் வாயிலுக்கு வரலாம். விருத்தாசலம், முதுகுன்றம், பழமலை என்றெல்லாம் சொல்கிறார்களே ஆதலால் கோயில் ஏதோ ஒரு மலை மீது இருக்கும் போலும் என்ற எண்ண வேண்டாம். கோயில் நல்ல கெட்டியான தரையிலேயே கட்டப்பட்டிருக்கிறது.

கோயில் மிகப் பெரிய கோயில். மூன்று மதில்கள் பிராகாரங்களுடன் கூடியது. புறச் சுற்று மதில் 660 அடி நீளமும் 392 அடி அகலமும் உடையது. உயரம் இருபத்தாறு அடி. கனம் நான்கு அடி என்றால் மதில் எவ்வளவு உறுதியானது என்று தெரிந்து கொள்ளலாம் தானே? நான்கு திசைகளுக்கும் நான்கு வாயில்கள்; வாயில்கள் ஒவ்வொன்றிலும் ஏழு நிலைகள் உள்ள பெரிய கோபுரங்கள் எல்லாம் கம்பீரமாக நிற்கின்றன. கீழைக் கோபுர வாயிலுக்கு முன்னால் வெளியே பதினாறு கால் மண்டபம் ஒன்று. கோபுர வாயிலின் இரு பக்கத்திலும் பரதநாட்டியப் பெண்மணிகள் 72 பேர். ஆம்! கற்சிலைகளாகத் தான். இந்த

வாயிலைக் கடந்து வந்தால் பரந்த வெளிச்சுற்று. இதனையே கைலாயப் பிராகாரம் என்பர். இங்கு பார்க்க வேண்டியவை விபசித்து முனிவர் மண்டபம், அக்கினி தீர்த்தம், ஆழத்துப் பிள்ளையார் கோவில், சக்கர தீர்த்தம், ஆகமக் கோயில்கள். இவற்றையெல்லாம் சுற்றிப் பார்க்கக் காலில் நல்ல வலுவேண்டும். போதிய அவகாசமும் வேண்டும். அவை எல்லாம் இல்லாதவர்கள் ஆழத்துப் பிள்ளையாரைத் தரிசித்துவிட்டுக் கோயிலுள் நுழைந்து விடலாம். இவர் பூமியில் தன் தளத்துக்குப் பதினெட்டு அடி தாழ்ந்து ஆழத்தில் தனிக் கோயிலில் இருக்கிறார்.



ஆழத்துப் பிள்ளையார் கோயில்

இரண்டாவது சுற்று மதிலும், வெளிச் சுற்று மதிலைப் போலவே கனமானது, உயர்ந்த கோபுரம் உடையது. இந்த மதில் சுவருக்குள்ளேயே வன்னியடிப் பிராகாரம் இருக்கிறது. இங்கு தலவிருக்ஷம் வன்னிமரம் ஆயிற்றே. வன்னி மரத்தடியிலே, விபசித்து முனிவர், உரோமச முனிவர், விதர்க்கண செட்டி, குபேரன் தங்கை எல்லாரும் இருக்கிறார்கள். இப்பிராகாரத்தின் தென் மேற்கு மூலையில் வல்லபைக் கணபதி இருக்கிறார். ஏதோ பிரம்மச்சாரி என்று

நாம் நினைத்துக் கொண்டிருப்பவர், வல்லபையைத் தூக்கி மடியில் இருத்திக் கொண்டு உல்லாசமாய் இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த வன்னியடிப் பிரகாரத்தைச் சுற்றி வந்தால் கொடி மண்டபத்துக்கும் மேற்கேயுள்ள இசை மண்டபத்துக்கு வந்து சேருவோம். அம்மண்டபத்தில்தான் பெரிய நாயகர் (பெரிய நாய்க்கர் இல்லை) இருக்கிறார். இவரே இக்கோயிலில் உள்ள பெரிய உற்சவமூர்த்தி என்றாலும் ஆண்டுக்கு ஒரு முறை மாசிமகம் ஆறாம் நாள் மட்டுமே வெளியே உலாவ வருவார். மற்ற உற்சவங்களுக்கு ஒரு 'டெபுடி' நியமித்திருக்கிறார். அவர்தான் சின்னப் பழமலைநாதர். அவரைக் கோயிலுள் சென்று பார்க்கலாம். இந்த இசை மண்டபத்தின் வட பக்கத்தே நடராஜர், சிவகாமி அம்மையுடன் கொலு இருக்கிறார். அவர்களையும் வணங்கிவிட்டே உள்மதிலையுங் கடந்து பிரதான கோயிலுள் நுழையலாம். இங்குள்ள பிராகாரத்தை அறுபத்து மூவர் பிராகாரம் என்பர். அறுபத்து மூவரோடு எண்ணற்ற திருவுருவங்கள் இந்தப் பிராகாரத்திலே. அவர்களில் முக்கியமானவர்கள் யோகதக்ஷிணாமூர்த்தி, மாற்றுரைத்த பிள்ளையார், பிந்து மாதவப் பெருமாள் முதலியோர். இங்கேயே சின்னப் பழமலை நாதரும் இருக்கிறார். நல்ல சோமாஸ் கந்த வடிவினர் அவர். இங்கு வடமேற்கு மூலையிலேதான் இளமைநாயகியார் கோயில்.

ஆம், விருத்தாம்பிகையை ஒதுக்கி வைத்துவிட்டு இளைய மனைவியை நெருக்கமாகவே வைத்துக் கொண்டிருக்கிறார் முதுகுன்றர் என்ற பரிகாசத்துக்கு எல்லாம் உள்ளானவள் அவள். இத்தனைச் சுற்றுச் சுற்றி இவ்வளவு தூரம் நடந்ததெல்லாம் பழமலை நாதரைக் காணவே. அவரையே காணலாம் கர்ப்பக் கிருஹத்தில். நல்ல அழகான லிங்கத் திருவுரு. அவரை வணங்கித் தொழுதுவிட்டு விறுவிறு என வெளியே வந்து, இரண்டாம் பிராகாரத்து வடக்கு வாயில் வழியாய் அன்னை பெரிய


பழமலை – வடக்குக் கோபுரம்

நாயகியின் கோயிலுக்கு வரலாம். இந்தக் கோயிலே ஒரு பெரிய கோயில், ஏழு நிலைக் கோபுரத்தோடு, இங்குள்ள அலங்கார மண்டபம், இடைவெளி மண்டபம் எல்லாம் கடந்து கர்ப்பக் கிருஹம் சென்று பெரியநாயகியையும் தொழலாம்.

இக்கோயிலில் உள்ள கோஷ்டங்களில் கஜசம்ஹாரர், மகிஷமர்த்தினி, துர்க்கை, நரசிம்மி (அதாவது நரசிம்ம வடிவம், ஆனால் தனங்களுடன் கூடிய பெண்ணுரு) எல்லாம் உண்டு. இவைகளைப் பார்க்கும்போது விருத்தகிரி ஈசுவரர் கோயிலுக்கும் முந்திக் கட்டப்பட்ட கோயிலே என்று தோன்றும். அம்பிகை விருத்தாம்பிகை என்றே அன்னையை அழைத்தாலும் அவள் முகத்தில் தெய்வக் களி துலங்கு நகையைக் காணலாம். கண்டு நாமும் மகிழலாம். இவள் தம் கோயிலை விட்டு நாம் வெளியே வருவதைக் கோயில் கோபுரத்திலுள்ள ஒரு குகையிலிருந்து மயில் வாகனான குமரன் கவனித்துக் கொண்டிருப்பதையுமே பார்க்கலாம். இவனையே குகை முருகன் என்கிறார்கள். இங்கேயே நாதசர்மா, அநவர்த்தினி எல்லாம் இருக்கிறார்கள். இவர்கள் இந்தத் தலத்துக்கு வந்து, பெரிய நாயகியை வணங்கி, சாரூப பதவி பெற்றவர்கள் என்று தல வரலாறு கூறும்.

இக்கோயில் ஆதியில் விபசித்து முனிவரால் கட்டப்பட்டிருக்கிறது. ஆதனால்தான் இன்றுவரை விபத்துக்கள் ஒன்றுக்கும் ஆளாகாமலே நின்று கொண்டிருக்கிறது. இக்கோயிலின் பெரும் பகுதியைக் கற்றளியாகத் திருப்பணி செய்தவர். கண்டராதித்த சோழன் மனைவி செம்பியன்மாதேவியே. ராஜராஜ சோழனுக்கு முன் சோழ நாட்டைச் சிறிது காலமே ஆண்ட உத்தம சோழனின் உத்தமத் தாய். சிறந்த சிவபக்தை. ராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் திருப்பணிகள் நடந்திருக்கின்றன. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏழிசை மோகனான குலோத்துங்க சோழ காடவராதித்தன், ஏழிசை மோகன திருமண்டபம் கட்டினான் என்று இங்குள்ள கல்வெட்டு கூறுகிறது. கச்சிராயன், வீரசேகரக் காடவராயன், நாயக்க மன்னர்கள், பெரம்பலூர் உடையார் முதலியோர் எல்லாம் கோயிலின் பல பகுதிகளைக் கட்டியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் விரிக்கில் பெருகும்.

இவர்கள் மாத்திரம் என்ன, வெள்ளைக்கார கலெக்டர்களும் இப்பழமலை நாதர் கோயில் திருப்பணியிலே பங்கு பெற்றிருக்கிறார்கள். மகம்மதியர்கள் காலத்திலே இக்கோயிலைப் பாதுகாப்புக்கு உரிய கோட்டையாக்கி யிருக்கிறார்கள். 1803–ல் கும்பினி ஜாகீர் கலெக்டராக இருந்த சார்ல்ஸ் ஹைட் என்பவர் கைலாசப் பிரகாரத்துக்குத் தளவரிசை போட்டிருக்கிறார். தேர் இழுக்க இரும்புச் சங்கிலி, கும்பஹாரத்துக்கு வெள்ளிக் குடம் எல்லாம் செய்து வைத்திருக்கிறார். நகரத்தார்களும் இந்தக் கோயில் திருப்பணியில் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

இக்கட்டுரையைச் சுந்தரர் தலையிலே பழியைப் போட்டு ஆரம்பித்தோம். அந்த வரலாறு உண்மையல்ல என்றும் கண்டோம். ஆனால் இந்தச் சுந்தரர் இங்கு உண்மை யிலேயே செய்த காரியம் ஒரு ரஸமான வரலாறு. சுந்தரருக்கு எப்போதுமே பணமுடை. எந்தக் கோயிலுக்குச் சென்றாலும், எங்கெல்லாம் இறைவனைக் கண்டாலும்

கையை நீட்டி விடுவார். அந்த இறைவனும் இல்லை என்னாது கொடுக்கத் தயங்குவதில்லை. பழமலை நாதர் மற்றவர்களுக்குச் சளைத்தவரா, என்ன?

உம்பரும் வானவரும்
உடன்நிற்கவே எனக்கு
செம்பொனைத் தந்து அருளி
திகழும் முதுகுன்று அமர்ந்தீர்;
வம்பு அமரும் குழலாள்
பரவை இவள் வாடுகின்றாள்;
எம் பெருமான் அருளீர்
அடியேன் இத்தளம் கெடவே

என்று பாடினாரோ இல்லையோ, பொன்னை அள்ளிக் கொடுத்திருக்கிறார். இப்படி எளிதாகப் பொன்னைப் பெற்ற சுந்தரர் இன்னும் ஒன்றும் செய்திருக்கிறார். பொன்னை எப்படி அந்தத் தொலை தூரத்தில் உள்ள திருவாரூருக்குக் கொண்டு செல்வது? பொன்னைக் கட்டி மணிமுத்தாறு நதியில் போட்டிருக்கிறார், அதில் கொஞ்சம் மாற்றும் எடுத்துக் கொண்டு. அதற்கு மாற்றுரைத்த பிள்ளையாரை சாட்சி வைத்திருக்கிறார். இறைவனிடம் 'பழமலையானே! நீர் கொடுத்த பொன்னை இங்கே மணிமுத்தாற்றில் போட்டுவிட்டேன், திருவாரூர் சென்று கமலாலயத்தில் கேட்பேன். அங்கு எடுத்துத் தரவேணும், என்ன சொல்கின்றீர்?' என்று கேட்டிருக்கிறார். 'சரி' என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வார்? சொன்னது மாத்திரமா அப்படியே எடுத்தும் கொடுத்திருக்கிறார் கொஞ்சமும் மாற்றுக் குறையாமல். ஏதோ 'பாங்கு டிராப்ட்' ஒன்றும் வாங்காமலேயே பணத்தை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கொண்டு போக, நல்ல வழி கண்டு பிடித்திருக்கிறார் சுந்தரர். இந்த சுந்தரர் மாத்திரமல்ல சம்பந்தர், நாவுக்கரசர் எல்லோருமே இந்தப் பழ மலையானைப் பெரியநாயகியைப் பாடிப் பரவி யிருக்கிறார்கள். நாமும் பாடிப் பரவலாம், அங்கு சென்றால்.

# 9

# தில்லைச் சிற்றம்பலவன்

மேனாட்டில் நடனப் பிரசித்திப் பெற்ற ரஷ்ய நாட்டு மாடம் பாவ்லோவா ஒரு நாள் தன் நடனங்களை ஒரு பெரிய அரங்கிலே ஆடிக் காண்பிக்கிறாள். நடனங்களைக் கண்டு களித்த ரசிகர் ஒருவருக்கு, கடைசியாக அந்த அம்மையார் ஆடிய நடனத்தின் பொருள் விளங்கவில்லை. ஆதலால் நடனம் முடிந்து திரையிடப் பெற்றதும் அவசரம் அவசரமாக, அந்த ரசிகர் கிரீன் ரூமுக்குள்ளேயே ஓடி அம்மையாரைக் கண்டு மிக்க ஆர்வத்தோடு கேட்கிறார்: 'அம்மையே! தாங்கள் நடன நிகழ்ச்சியில் கடைசியாக ஒரு அற்புதமான நடனம் ஆடினீர்களே அந்த நடனத்தின் பொருள் என்ன?' என்று. மாடம் பாவ்லோவா சிரித்துக் கொண்டு, 'அவ்வளவு எளிதாக அந்த நடனத்தின் பொருளைச் சொல்லக்கூடும் என்றால் அதை நான் நடனம் ஆடிக் காட்டியிருக்கவேண்டாமே' என்கிறாள். உண்மைதான். வெறும் வார்த்தைகளிலே நடனத்தின் பொருளை எல்லாம் சொல்லி விடக்கூடும் என்றால், அதை நடனம் ஆடிக் காண்பிப்பானேன்? அரங்கம், திரைச்சீலை, பக்க வாத்தியம், உடை, அணி என்றெல்லாம் சிரமப்பட்டு தேடுவானேன்! சொல்லால் விளக்க முடியாததை எல்லாம் நடனம் ஆடித்தான் காட்ட முடியும் என்பதே பாவ்லோவாவின் சித்தாந்தம். இந்தச் சித்தாந்தத்தை எத்தனையோ கற்பகோடி காலங்களுக்கு முன்னால் உலக மக்களுக்கு விளக்கியவன் நடனராஜன். அந்த

நடராஜரது நடனத் திருவுருவத்தின் தத்துவங்களை, உண்மை விளக்கம், திருமந்திரம் சித்தியார், சிதம்பர மும்மணிக் கோவை முதலிய நூல்கள் விரிவாகவே கூறுகின்றன என்றாலும், அந்த நடராஜ மூர்த்தியிடமே விளக்கம் கேட்போமானால் அவரும், மாடம் பாவ்லோவாவைப் போல், 'அந்தத் தத்துவங்களை யெல்லாம் இப்படி வார்த்தைகளிலே சொல்லிவிட முடியும் என்றால் நான் ஏன் நடனம் ஆட வேண்டும்?' என்றே நம்மிடம் திரும்பக் கேள்வி போடுவார். சொல்லால் விளக்க முடியாத அற்புதத் தத்துவம் அது. அதை நடனம் ஆடித்தான் விளக்க முடியும். அதற்காகத்தான் அவன் ஆடுகிறான், ஆடுகிறான் அனாதி காலமாக. ''வானம் மணிமுகடாய் மால்வரையே தூணாக ஆன பெரும்பார் அரங்காக'' அமைத்துக் கொண்டு ஆடிக்கொண்டே இருக்கிறான். இந்த ஆடும் பெருமானின் அற்புத தரிசனம் காண, தில்லைப்பதிக்கே செல்லவேண்டும். ஆம்! அந்தத் தில்லை என்னும் சிதம்பரத்துக்கே செல்கிறோம் இன்று நாம். தொண்டை நாடு நடுநாடு எல்லாம் கடந்து சோழவள நாட்டுக்குள்ளேயே நுழைகிறோம். சோழ நாட்டிலே இந்த க்ஷேத்திராடனம் தில்லைப்பதியிலேயே துவங்குகிறது மகிழ்ச்சி தருகிறது நமக்கு.

சிதம்பரம் செல்வதற்கு வழி சொல்ல வேண்டிய தில்லை. ரயில்வே ஸ்டேஷன்களில் எந்த ஸ்டேஷனில் ரயில் ஏறினாலும், சிதம்பரத்துக்கு என்று ஒரு டிக்கட் கேட்டு வாங்கலாம். சென்னை தனுஷ்கோடி போட் மெயிலில் ஏறின்ாலும், இல்லை வேறு சாதாரண பாஸஞ்சர் வண்டிகளில் ஏறினாலும் சரி, தஞ்சைக்கும் விழுப்புரத்துக்கும் இடையே உள்ள இந்தத் தலத்துக்கு வந்து சேரலாம் எளிதாக. ரயிலை விட்டு இறங்கியதும் நேரே கோயிலுக்கே செல்லலாம். இரவில் ஊர் வந்து சேர்ந்தால் நண்பர்கள் வீட்டிலோ அல்லது வேறு ஏதாவது தங்கும்

இடங்களிலோ தங்கிவிட்டுக் காலை ஐந்து மணிக்கே எழுந்து, ஸ்நானம் முதலியவற்றையும் முடித்துக் கொண்டு ஓட்டம் ஓட்டமாக ஆறு மணிக்குள் கோயிலுள் நுழைந்துவிட வேண்டும். கீழ்க்கோபுர வாயிலில் நுழைந்து விரைவாகப் பரந்து கிடக்கும் வெளிப் பிரகாரத்தைக் கடந்து நடராஜன் நடனம் ஆடிக் கொண்டிருக்கும் சிற்றம்பலம் வந்து சேரவேண்டும். அங்கு நமக்கு முன்னமேயே அன்பர் பலர் வந்து காத்து நிற்பார்கள். தில்லை மூவாயிருவர் கூட்டத்தைச் சேர்ந்த அர்ச்சகர் வருகைக்காக. அப்போது மலையாளத்துச் செண்டை வாத்தியம் போன்ற ஒரு முழவு அதிரும். அந்த முழவு கொட்டும் போதே நம் கால்கள் ஆடும்; முழவின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, நம் இதயத் துடிப்பின் வேகமுமே அதிகரிக்கும்.

அச்சமயத்தில் சிற்றம்பலத்தின் பொற் கதவுகள் திறக்கப்படும். ஆரத்தி காட்டப்படும். நன்கு அலங்கரிக்கப் பட்ட நடராஜனது திருக்கோலத்தைக் கண்டு உடல் புளகாங்கிதம் அடையும், உள்ளம் குழைந்து நெகிழும்.

இந்த நடனத் திருக்கோலத்தையே ஆனந்த நடனம் என்பார்கள். இக்கோலத்தைக் கண்டு தொழுதே அன்று திருமூலர்,

**ஆனந்தம் ஆடரங்கு, ஆனந்தம் பாடல்கள்**
**ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்**
**ஆனந்தமாக அகில சராசரம்**
**ஆனந்தம் ஆனந்தக்கூத்து உகந்தானுக்கே**

என்று பாடியிருக்கிறார். ஆனந்தம் ஆனந்தம் என்று பரவசமாக ஆடியிருக்கிறார். இந்த ஆனந்தக் கூத்தனின் திருவோலக்கக் காட்சி எப்படி இருக்கும்? கண் குளிரக் கண்டு நாமும் பரவசம் அடைந்தாலும், சொல்லத் தெரிய வேண்டாமா? சொல்லத் தெரிந்த அப்பர் சொல்கிறார்:

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்
வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

அப்பர் பாட்டுக்கு, ஒரு சிறிய திருத்தம். வெறும் மனித்தப் பிறவி மட்டும் போதுமா? நடராஜனது திருநடனத்தை அனுபவிக்கும் அனுபவத்தோடு ஒட்டிய பிறவி, தமிழ் மனிதப் பிறவியாகவும் இருக்க வேண்டாமா? இந்தச் சமயத்தில் நம் உள்ளத்தில் ஓர் ஐயம் எழும். சித்சபையில் நடனம் ஆடுகிறான் நடராஜன். அப்படி அவன் ஆடுவது ஒரு பெரிய சிதம்பர ரகசியம் என்பார்களே! அப்படி ஒன்றும் காணோமே, நடராஜன் ரகசியமாக ஆடவில்லையே, நல்ல பகிரங்கமாகத்தானே ஆடிக் கொண்டிருக்கிறான் என்றெல்லாம் எண்ணத் தோன்றும். அப்போது அந்தச் சபாநாயகரின் வலப்பக்கத்தில் உள்ள ஒரு சிறு வாயிலையும் திறப்பார்கள். திரையை அகற்றுவார்கள். ஆரத்தி காட்டுவார்கள். நாம் உற்றுப் பார்த்தாலும் அங்கு ஒன்றும் தோன்றாது. ஏதோ தங்கத்தால் ஆன வில்வதள மாலை ஒன்றைக் கட்டித் தொங்கவிட்டிருப்பது மாத்திரமே தெரியும். 'இங்கு தான் மூர்த்தி ஒன்றும் இல்லையே, எதற்கு வில்வதளம், எதற்கு ஆரத்தி?' என்று கேட்போம் நாம். அதுதான் 'ரகசியம்'. இறைவன் இங்கு ஆகாய உருவில் இருக்கிறான் என்பதால், அகண்ட பெருவெளியில் நிறைந்திருக்கும் அவனை எந்த உருவில் வணங்குவது? நல்ல வெறும் வெளியையே இறைவனாக வழிபட வகை செய்திருக்கிறார்கள். ஆம்! இறைவன் 'வான் நின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பும் எங்கும் ஊனும்

உயிரும், உணர்வும்போல், உள்ளும் புறத்தும்' நிறைந்து நிற்பவன் அல்லவா? திருவாரூரில் மண்ணாக, ஆனைக் காவில் நீராக, அண்ணாமலையில் அனலாக, காளத்தியில் காற்றாக வழிபடப் பெறும் இறைவனையே இங்கு ஆகாய உருவில் வழிபடுகிறோம் நாம். இறைவனை ஆகாய உருவில் வழிபடுதல்தான் எத்தகைய சிறந்த வழிபாடு.

எடுத்த எடுப்பிலேயே, நடராஜனைத் தரிசித்து அவர் மிகவும் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருக்கும் ரகசியத்தையும் தெரிந்துகொள்கிறோம். இனி கோயில் வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாம். இந்தத் தலத்தின் பழைய பெயர் தில்லை. தில்லைச் செடிகள் நிறைந்த காடா யிருந்ததனால் தில்லை என்று பெயர் பெற்றிருக்கிறது. வியாக்ரபாதர் பூஜித்த தலம் ஆனதால் பெரும்பற்றப் புலியூர் என்று பின்னர் வழங்கியிருக்கிறது. என்றும் சிற்றம்பலத்தை உள்ளடக்கி யிருப்பதால் சிதம்பரம் என்றும், பின்னர் இந்தச் சிற்றம்பலத்தையே பராந்தகன் பொன் வேய்ந்து சிறப்புச் செய்த காரணத்தால் பொன்னம்பலம் என்றும் விரிந்திருக்கிறது.

நடராஜன், உலக மக்கள் எல்லாம் உய்யத் தன் ஆனந்த தாண்டவத்தை ஆடிக்காட்ட எல்லா இடங்களையும் விட்டு விட்டு இந்தத் தலத்தை ஏன் தேடிப் பிடித்து எடுத்தான் என்பது ஒரு ரஸமான வரலாறு. வியாக்ர பாதர் (புலிக்கால் உடைய முனிவர் ஆனதனாலே இப்பெயர். அவருக்குத் தந்தை தாயார் இட்டபெயர் என்னவோ தெரியவில்லை..) காசியில் வாழ்ந்தவர். தில்லையின் பெருமையைத் தந்தை சொல்ல, காசியை விட்டுத் தில்லைக்கு வருகிறார். தில்லைக் காட்டின் நடுவிலே ஓர் ஆலமரத்தின் அடியிலே முளைத்து எழுந்த லிங்க உருவைக் காண்கிறார். அந்த உருவுக்கே வழிபாடு செய்கிறார். (இந்த லிங்கத் திருவுருவே இன்று இந்தத் திருக்கோயிலில் கர்ப்பக் கிருஹத்தில் கோயில் கொண்டிருக்கும் திரு மூலட்டானேசுவரர். இந்த உருவைக்

சுற்றியே கோயில் உருவாகியிருக்கிறது. பின்பு) வழிபாட்டுக்குரிய மலர்களை, வண்டு சுவைக்கு முன்பே எடுத்துப் பூஜிக்க நினைக்கிறார். அதற்காகப் பொழுது புலராமுன் மரங்களில் வழுக்காமல் ஏறப் புலிக் கால்களையும், இருட்டிலும் நன்றாகக் கண் தெரியப் புலிக் கண்களையும் இறைவனை வேண்டிப் பெறுகிறார். இப்படி இந்த வியாக்கிரபாதர் வாழும் நாளில் பதஞ்சலி முனிவரும் வந்து சேருகிறார் தில்லைக்கு. அன்று அந்த வான் அரங்கிலே நடராஜன் ஆடிய ஆட்டத்தைப் பற்றி பதஞ்சலியிடம் சொல்கிறார். இருவரும் சேர்ந்தே தவங்கிடக்கிறார்கள் இறைவனை நோக்கி, அவர்களுக்கு அந்த அற்புத நடனத்தைக் காட்ட. இதே சமயத்தில், இத் தில்லை வனத்தின் அதிதேவதையான தில்லைக்காளி, நடனத்தில் தன்னை ஒப்பாரும், மிக்காரும் இல்லை எனத் தருக்கித் திரிகிறாள். தில்லைக் காளியின் செருக்கு அடக்கவும், முனிவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும், இறைவன் பூவுலகுக்கு இறங்கி வருகிறார். தில்லைக் காளியுடன் போட்டியிட்டு நடனம் ஆடுகிறார். அவளுமே சளைக்காமல் ஆடுகிறாள். கடைசியில் தில்லைக் காளி ஆட முடியாத அந்த



தில்லை சிற்பங்கள்

ஊர்த்துவ தாண்டவத்தையே ஆடுகிறார். காளி தோல்வியை ஒப்புக் கொள்கிறாள். நிருத்த சபை, நடராஜனது முழு ஆளுகைக்குள் வந்து விடுகிறது. தில்லைக் காளியோ செருக்கடங்கி, ஊருக்கு வடபுறத்தே ஒதுங்கி எல்லைக் காளியாகி விடுகிறாள். இப்படித்தான் சிற்றம்பலத்தான் இந்தத் தில்லையிலே இடம் பிடித்துக் கொண்டிருக்கிறாள் என்று கூறும் தல வரலாறு.




**தில்லை சிற்றம்பலவன் கோயில் கோபுரம்**


இந்தத் தில்லைச் சிற்றம்பலமுடையான் கோயில் மிகப் பெரிய கோயில். 'கோயில்' என்றாலே வைணவர்களுக்கு ஸ்ரீரங்கம், சைவர்களுக்கு இந்தச் சிதம்பரம் என்று ஆகிவிட்டது தமிழ் நாட்டில். இக்கோயிலின் விஸ்தீரணம் நாற்பது ஏக்கர் பூமி. நான்கு வாயிலிலும் நான்கு ராஜகோபுரங்கள். இந்தக் கோபுரங்களை இணைத்து நல்ல கருங்கல் மதில்கள். கீழ்க் கோபுரம் கி.பி. 1250-ல் மதுரையிலிருந்து அரசாண்ட சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டது என்றும் பின்னர் பச்சையப்ப முதலியாரால் செப்பனிடப்பட்டது என்றும் கூறுவர். வடக்கு கோபுரம் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகர மன்னனாக இருந்த கிருஷ்ண தேவராயனால் அவனது ஒரிஸ்ஸா வெற்றியின் நினைவாகக்

கட்டப்பட்டது. தெற்குக் கோபுர வாயில் பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கோப்பெருஞ்சிங்கதேவன் என்ற பல்லவ மன்னனால் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கோபுரங்களில் எல்லாம் எண்ணற்ற சிற்ப வடிவங்கள். அகஸ்தியர், திருமூலர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், அக்கினி தேவர், அசுவினி தேவர்களோடு, சந்திரசேகரர், கல்யாண சுந்தரர், பாசுபதர், அர்த்தநாரி, திரிபுராந்தகர், கஜசம்ஹாரர் முதலிய எண்ணற்ற திருக்கோலங்கள் கோபுரத்திலுள்ள மாடங்களில் நிறைந்திருக்கின்றன. எங்கும் காணாத திருக்கோலங்களை யெல்லாம் இங்கே கண்டு மகிழலாம். மேலும் இந்த நான்கு கோபுர வாயில்கள் வழியாகவே, சமய குரவர் நால்வரும் நுழைந்திருக்கிறார்கள் என்பது வரலாறு. கிழக்குக் கோபுர வாயிலாக மணிவாசகரும், தெற்குக் கோபுர வாயிலாக ஞானசம்பந்தரும், மேற்குக் கோபுர வாயிலாக அப்பரும், வடக்குக் கோபுர வாயிலாகச் சுந்தரமூர்த்தியும் நடராஜப் பெருமானை வணங்கி வழிபட எழுந்தருளி யிருக்கிறார்கள். அதனாலேயே கோபுரம், கோபுர வாயில் எல்லாம் புனித மடைந்தவைகளாகக் கருதப்படுகின்றன.

கோயிலுக்குள் நுழைந்த பின் எங்கெங்கெல்லாம் செல்ல வேண்டும், எந்தெந்த மூர்த்தியை எல்லாம் தொழ வேண்டும் என்றும் எளிதாகச் சொல்ல முடியாத அளவுக்கு மூர்த்திகளும் சுற்றுக் கோயில்களும், மண்டபங்களும் அங்கே உண்டு. ஆலயத்தின் வெளிப் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் முக்குறுணி விநாயகர். மேலைக் கோபுரத்தை அடுத்து கற்பக விநாயகர். இவர் ஏழு திருக்கரங்களோடு கூடிய நர்த்தன கணபதி. இவரே தல விநாயகர். இங்கு சண்முகருக்குத் தனித்ததொரு சந்நிதி இருப்பதோடு, பிராகாரத்தின் வடமேற்கு மூலையில் பெரியதொரு கோயில் வேறே இருக்கிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் கட்டிக் கொடுத்த கோயில் ஆனதால், இவர் பாண்டிய நாயகர் என்ற பெயரோடு விளங்குகிறார்.


தில்லை கோயில் தூண்கள்

இவை தவிர, மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோயில், அம்மன் சந்நிதி, துர்க்கை கோயில்கள் எல்லாம் உண்டு. இன்னும் இந்தக் கோயிலில் நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், சிவகங்கைத் தீர்த்தம் முதலியவைகளும் இருக்கின்றன. முன்னர் விவரித்த சித்சபை, கனக சபைகளோடு ஊர்த்துவ தாண்டவர்


கோயில் (சிதம்பரம்)

இருக்கும் நிருத்த சபை வேறே. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் பெரிய சிவன் கோயிலுக்குள்ளே கனகசபைக்குப் பக்கத்தில் தென் திசையில் தலை வைத்து வடதிசைக் காலை நீட்டித் தில்லை கோவிந்தராஜர் வேறே படுத்துக் கொண்டிருக்கிறார். 'கருது செம்பொனின் அம்பலத்தில்' ஒரு கடவுள் நின்று நடித்தால் காவிரித் திருநதியில் துயிலும் கருணை மாமுகிலான அரங்க நாதனும், இங்கேயே வந்து காலை நீட்டிப் படுத்துக் கொள்கிறார். தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் நடராஜரைச் சேவிப்பது போலவே இவரையும் சேவிக்கிறார்கள்.

மூவாயிர நான்மறை யாளர்
முறையால் வணங்க
தேவாதி தேவன் திகழ்கின்ற
தில்லைத் திருச்சித்ர கூடம்

என்று இந்தக் கோவிந்தராஜர் கோயில் கொண்டிருக்கும் சித்ர கூடத்தை, திருமங்கையாழ்வார் மங்களா சாஸனம் செய்திருக்கிறார். பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற் பகுதியில் சோழ நாட்டை ஆண்ட இரண்டாம் குலோத்துங்கன் நடராஜரது சந்நிதியை விரிவாக்க விரும்பி, இந்தக் கோவிந்தராஜரை எடுத்துக் கடலில் எறிந்து விட்டான் என்றும், ராமானுஜர் இந்த விக்கிரகத்தைக் கைப்பற்றித் திருப்பதியில் பிரதிஷ்டை செய்தார் என்றும், பதினாறாம் நூற்றாண்டிலே கிருஷ்ணதேவராயனது சகோதரன் அச்சுதராயன் திரும்பவும் கோவிந்தராஜரைத் தில்லையிலே பிரதிஷ்டை செய்திருக்கிறான் என்றும் சரித்திரம் கூறும். சைவமும் வைணவமும் பின்னிப் பிணைந்து இணைந்து வாழும் பெருங் கோயிலாக இக் கோயில் இன்று நிலவுகிறது என்று சொன்னால் வியப்பில்லை.

அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூவரும் பாடிய திருப்பதி இது. இந்த மூவரால் பாடப் பெற்ற பெருமையோடு,

மணிவாசகரை முழுக்க முழுக்க ஆட்கொண்டு, அவர் பாடிய திருவாசகத்துக்குப் படி எடுக்கும் பெருமானாக அமைந்தவன் சிற்றம்பலவன். மணிவாசகரைக் கோவையார் பாடச் சொன்னவனும் அவனே. இது தவிர, திருநீலகண்டர், திருநாளைப் போவார், கூற்றுவர், கோச்செங்கட் சோழர், கணம்புல்லர், சேரமான் பெருமாள் முதலிய அடியவர்கள் முத்திபெற்ற ஸ்தலம். பொன்வண்ணத்தந்தாதி பாடிய சேரமான் பெருமானுக்கு ஆடிய பாதத்தின் சிலம்பொலி கேட்கச் செய்தவன் இந்தச் சபாநாயகன். இன்னும் இத்தலத்தில் தான் சேக்கிழார் எழுதிய திருத் தொண்டர் பெரிய புராணமும் அரங்கேறி இருக்கிறது. இத்துணை பிரசித்தி பெற்ற இக்கோயிலின் வரலாறு மிகப் பழமையானது. பல்லவ மன்னர்களும், சோழப் பேரரசர்களும், பாண்டியர்களும் போட்டி போட்டுக் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். அம்பலத்துக்குப் பொன் வேய்ந்திருக்கிறார்கள், நிபந்தங்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். சிவபாத சேகரனான ராஜராஜன் தில்லைச் சிற்றம்பலவனிடத்திலே எல்லையில்லாத காதல் கொண்டவன். அவன் ராஜ்யத்தில் நிலம் அளக்கும் கோல் 'சிற்றம்பலக்கோலாக' இருந்தது. நெல் அளக்கும் மரக்காலோ 'ஆடவல்லானாகவே' இருந்தது. மேலும் திருமுறைகளை எல்லாம் இச்சிற்றம்பல முடையான் கோயிலிலிருந்து எடுத்துத் திருமுறை வகுத்திருக்கிறான் அந்தத் திருமுறை கண்ட சோழன் ராஜராஜன்.

இந்தத் தில்லையை அடுத்தே, இன்று அண்ணாமலை சர்வகலாசாலை உருவாகியிருக்கிறது. ஒரு பெரிய சர்வகலாசாலையை அமைக்க இதைவிட ஒரு சிறந்த இடத்தை, ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தேர்ந்தெடுத்திருக்க முடியாது. தில்லை நடராஜன் அல்லும் பகலும் ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டிருப்பதற்கு உரிய காரணங்களை நாம் அறிவோம். ஆனால் கவிமணி

தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களோ வேறு ஒரு காரணமும் கூறுகிறார்கள். அவர்கள் கூறும் காரணம் இதுதான்:

**"தில்லைப் பதி உடையான்**
**சிற்றம்பலந் தன்னில்**
**அல்லும் பகலும் நின்று**
**ஆடுகின்றான்–எல்லைக்கண்**
**அண்ணா மலை மன்**
**அமைத்த கலைக்கழகம்**
**கண்ணாரக் கண்டு களித்து."**

இன்னும் அதிகமாக நான் ஏதாவது சொல்ல வேண்டுமா என்ன?

# 10

# சீகாழித் தோணியப்பர்

ஆறு ஏழு வருஷங்களுக்கு முன் நான் தஞ்சையில் உத்தியோகம் ஏற்றிருந்தேன். அப்போது அமெரிக்க நண்பர் ஒருவர் தம் மனைவியுடன் தஞ்சை வந்திருந்தார். அவருக்குக் கோயில், குளம், சிற்பம், கலை முதலியவற்றைக் காண்பதில் மிகுந்த அக்கறை. (ஏதோ நம் நாட்டு உற்சவங்களில் நடக்கும் கேளிக்கைகளைப் படம் பிடித்து இந்தியர்களின் அநாகரிக வாழ்க்கை என்று அமெரிக்கப் பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதும் கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்ல அவர்) உண்மை யிலேயே அவருக்கு நமது கோயில் கட்டிட நிர்மாணத்தில், சிற்பக் கலையில் எல்லாம் நல்ல ஈடுபாடு. அவரைத் தஞ்சை ஜில்லாவில் உள்ள சில பெரிய கோயில்களுக்கு அழைத்துச் சென்று காட்டினேன். அந்தச் சுற்றுப் பிரயாணத்தில் ஓர் இரவு மாயூரத்தில் வந்து தங்கினோம் நாங்கள். அவருக்கு நம் கோயிலில் நடக்கும் உற்சவம் ஒன்றையும் காண வேண்டும் என்று அவா. மாயூரத்தில் விசாரித்தால், மறுநாட் காலை சீகாழியில் திருமுலைப்பால் உற்சவம் நடைபெறுகிறது என்றார்கள். எனக்குமே அந்த உற்சவத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசை. ஆதலால் நானும் நண்பரும் அவரது மனைவியும் அதிகாலையில் எழுந்து ஸ்நானத்தை யெல்லாம் முடித்துக்கொண்டு சீகாழி சென்றடைந்தோம். அங்குள்ள சட்டைநாதர் ஆலயத்தின் ஆஸ்தான

மண்டபத்துக்குப் போனோம். காலை எட்டு மணியாவதற்கு முன்னமேயே கூட்டம் கூடிவிட்டது கோயில் பிராகாரத்தில். அந்த ஊரில் உள்ளவர்கள் பக்கத்து ஊரில் உள்ளவர்கள், ஆண் பெண் குழந்தைகள் அடங்கலும் திரளாக வந்திருந்தார்கள். கிட்டத்தட்ட முப்பதாயிரம் பேர் அங்கே கூடியிருந்தார்கள். எல்லோர் கையிலும் ஒவ்வொரு செம்பு. பணக்காரர்கள் வெள்ளி கூஜா வைத்திருந்தார்கள். கோயிலின் பரம்பரை தர்மகர்த்தரான தருமபுர ஆதீனத்து மகாசந்நிதானம் அவர்களும் அவர்களது பரிவாரம் புடைசூழ எழுந்தருளியிருந்தார்கள். நாங்களோ நல்ல ஒரு கைப்பிடிச் சுவரில் ஏறி நின்றுகொண்டோம்.

சரியாய் ஒன்பது மணி அளவில், உற்சவ மூர்த்திகளான தோணியப்பர், பெரிய நாயகி சகிதம் இரண்டு பெரிய சப்பரங்களில் வெளியில் வந்தார்கள். அதே சமயத்தில் ஒரு சிறிய அழகான பல்லக்கில் ஞானசம்பந்தர் அவருக்கு என்று ஏற்பட்ட கோயில் உள்ளேயிருந்து வெளியே வந்தார். ஞான சம்பந்தர் வந்ததும் பெரிய நாயகியை ஞானசம்பந்தர் பல்லக்குக்கு அருகில் கொண்டு வந்தார்கள். அம்மையின் மடிமீது வெள்ளிக் கலசத்திலிருந்த பாலை ஞானசம்பந்தருக்குக் கொடுக்கும் பாவனையில் அர்ச்சகர்கள் பரிமாறினார்கள். அவ்வளவு தான்; அந்த நேரத்தில் உற்சவம் காண வந்திருந்த அன்பர்கள் அனைவரும் அவரவர் கொண்டு வந்திருந்த செம்புப் பாத்திரங்களை, வெள்ளி கூஜாக்களைத் தலைக்கு மேலே தூக்கினர். அப்படித் தூக்கி நிவேதனம் பண்ணிவிட்டு ஒவ்வொருவரும் அந்த இடத்திலேயே, செம்பிலிருந்த பாலைத் தாமும் உண்டு மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். பால் செம்பு கொண்டு போகாத எங்களுக்குமே, ஆதினத் தலைவர் பால் கொடுக்க மறக்க வில்லை. நானும் என்னுடன் வந்த நண்பர்களுமே பாலை உண்டு மகிழ்ந்தோம். கூட்டத்தை விட்டு வெளியில் வந்தோம். வெளியே வந்ததும் அமெரிக்க நண்பர் கேட்டார்: 'இது எல்லாம் என்ன?' என்று. அவருக்கு விளக்கினேன், கிட்டத்தட்ட ஆயிரத்து நானூறு

*வருஷங்களுக்கு முன்னால் உலகீன்ற அன்னையாம் பெரிய நாயகி ஞான சம்பந்தராம் பிள்ளைக்கு ஞானப்பால் ஊட்டிய வரலாற்றை. அந்த வரலாறு இதுதான்:*

*சீகாழியில் சிவபாத இருதயரது குமாரராக, பகவதி அம்மையார் வயிற்றில் ஞானசம்பந்தர் அவதரிக்கிறார். மூன்று வயதுப் பாலகனாக வளர்ந்திருந்தபோது, ஒருநாள் நீராடச் சென்ற தந்தையாருடன் தானும் உடன் வருவதாகப் பிடிவாதம் பிடிக்கிறது குழந்தை. எனவே குழந்தையை அழைத்துச் சென்று குளக்கரையில் நிறுத்திவிட்டு, குளத்தில் இறங்கி நீரில் மூழ்கி, அகமர்ஷண மந்திரத்தை ஓதிக் கொண்டிருக்கிறார் தந்தை. முழுகிய தந்தை விரைவாக எழாததைக் கண்டு குழந்தை 'அம்மையே! அப்பா!' என்று கதறி அழுகிறது. இந்த அழுகுரலைக் கேட்ட அன்னையாம் பெரியநாயகியும் அத்தனாம் தோணியப்பரும் ரிஷப வாகனத்தில் எழுந்தருளியதோடு அம்மை இறங்கி வந்து தன் திருமுலைப் பாலைக் கறந்து அதில் சிவஞானத்தையும் கலந்து குழந்தைக்கு ஊட்டி விட்டு மறைகிறார்கள். நீரிலிருந்து எழுந்த தந்தை குழந்தையின் வாயில் பால் வடிவதைக் கண்டு, 'யார் கொடுத்த பாலைக் குடித்தாய்?' என்று அதட்டி, குழந்தையை அடிக்க ஒரு குச்சியை ஓங்குகிறார். அருள்ஞானம் பெற்ற குழந்தையோ உடனே வான வெளியைச் சுட்டிக் காட்டி,*

**தோடுஉடைய செவியன் விடைஏறி**
**ஓர் தூவெண் மதிசூடிக்**
**காடுஉடைய சுடலைப் பொடிபூசி,**
**என் உள்ளம் கவர் கள்வன்**
**ஏடு உடைய மலரான் முனைநாள்**
**பணிந்து ஏத்த அருள்செய்த**
**பீடுஉடைய பிரமா புரம்**
**மேவிய பெம்மான் இவன் அன்றே!**

என்று பாட ஆரம்பித்து விடுகிறது. சிவபாத இருதயருக்கோ ஒரே மகிழ்ச்சி, தம் குழந்தைக்கு அன்னை தன் ஞானப் பாலையே ஊட்டியிருக்கிறாளே என்று. இந்த அதிசய சம்பவத்தை நினைவுகூறவே இந்தத் திருவிழா என்றேன். இத் திருவிழா நடக்கும்போது மக்கள் எல்லாம் கொண்டு வந்திருந்த பாலை ஞானசம்பந்தருக்கு நிவேதனம் பண்ணிவிட்டு உண்டால், அவரவர்க்குத் தம் அறியாமை நீங்கி அருள் ஞானம் பிறக்கும் என்று நம்பிக்கை. 'திருமுலைப்பால் உண்டார் மறுமுலைப்பால் உண்ணார்' என்பது பழமொழி. அதுதான் இன்று அத்தனை பேர் பாலை நிவேதித்து அருந்தினர் என்று நண்பரிடம் விளக்கினேன்.


நண்பர் சொன்னார்: 'என்ன அருமையான அனுபவம்! எவ்வளவு அழுத்தமான பக்தியில் பிறந்திருக்கிறது இந்த நம்பிக்கை. பக்தி நம்பிக்கையை வளர்க்கிறது உள்ளத்தில்; அந்த நம்பிக்கை பக்திக்கு ஊன்றுகோலாய் நின்று உதவுகிறது' என்றெல்லாம் வியந்து கொண்டேயிருந்தார். அமெரிக்க நண்பருக்கும் அவர் மனைவிக்கும் அது புதிய அனுபவம். எனக்கோ அது உளம் உருக்கும் அரிய அனுபவம். இந்த அனுபவம் பெற விரும்பினால் சித்திரை மாதம் நடக்கும் பிரம்மோற்சவத்தில் இரண்டாம் நாள் திருவாதிரை நக்ஷத்திரத்தன்று சீகாழி செல்ல மறவாதீர்கள். 'ஞான சம்பந்தர் வாழ்விலேயே ஒரு விசேஷம் அவர் பிறந்தது திருவாதிரையிலேயே; அவர் ஞானப்பால் உண்டது ஒரு திருவாதிரையிலேயே; அவர் முத்திப் பேறு பெற்றதும் ஒரு திருவாதிரையிலேதான் என்று அறிவோம்.) இந்த ஞானப்பால் உண்ட வைபவம் ஏதோ கர்ண பரம்பரைக் கதையல்ல, உண்மையிலேயே நடந்து ஒன்று என்பதற்கு,

போதையார் பொற் கிண்ணத்து
அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவு உறத்
தான் எனை ஆண்டவன்

என்று ஞான சம்பந்தர் பாடிய பாடலே நல்ல அகச்சான்று, இப்படி ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட தலமாகிய சீகாழிக்கே செல்கிறோம் நாம் இன்று.

சீகாழி தென்பிராந்திய ரயில் பாதையில் மாயூரத்துக்கும், சிதம்பரத்துக்கும் இடையிலுள்ள ஒரு சிறிய ஊர். ஊர் சிறியது என்றாலும் பேர் பெரியது. பிரமபுரம், வேணிபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம் என்றெல்லாம் பன்னிரண்டு திருப்பெயர் கொண்டது. இத்தனை பெயர்களும் காணாதென்று, பெருஞ்சாலை இலாக்காக் காரர்கள் மைல் கற்களில் எல்லாம் சீர்காழி என்று அழுத்தமாக எழுதியிருக்கிறார்கள். இவர்களுக்கு ரயில்வேக் காரர்கள் என்ன சளைத்தவர்களா? சிய்யாழி என்றே புதிய பெயர் ஒன்றைச் சூட்டி மகிழ்கிறார்கள்.

இந்தச் சீகாழி சென்றதும் நேரே கோயிலுக்குப் போகலாம். மதில்களும் கோபுரங்களும் கூடியதொரு பெரிய கோயில் அது. சட்டைநாதஸ்வாமி தேவஸ்தானம் என்ற பெயரோடு விளங்குகிறது. தருமபுர ஆதீனத்தார்



சீகாழி

மேற்பார்வையில் இருக்கிறது. 1400 ஏக்கர் நன்செய் நிலமும், 300 ஏக்கர் புன்செய் நிலமும், வருஷத்துக்குச் சர்க்கார் தரும் ரூ. 2479-ம் அந்தத் தேவஸ்தானத்தின் சொத்து என்றால் கேட்கவா வேண்டும்? நிர்வாகம் சிறப்பாக நடக்கிறது. தருமபுரத்து ஆதீனத்துக்கோயில் ஆனதினாலே கோயில் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. கோயில் மூன்று பகுதியாக இருக்கிறது. பெரிய பகுதியில் இறைவன் தோணியப்பர், சட்டைநாதர் எல்லாம். வட பக்கத்தில் திருநிலை நாயகி கோயிலும் அக்கோயிலின் முன் உள்ள பிரம தீர்த்தமும். இந்தத் தீர்த்தக் கரையிலேயேதான் ஞானப்பால் உண்டிருக்கிறார் ஞானசம்பந்தர். இரண்டு கோயில்களுக்கும் இடையில் மேற்குக் கோடியில் ஞானசம்பந்தருக்குத் தனித்ததொரு கோயில்.

கோயிலில் நுழைந்து ஆஸ்தான மண்டபத்தைக் கடந்ததும் கர்ப்பக்கிருஹம் சென்று லிங்க உருவில் இருக்கும் பிரமபுரி ஈசுவரரை வணங்கலாம். அவருக்கு வலப்பக்கத்தில் மகா மண்டபத்தில் ஞானசம்பந்தர் உற்சவ மூர்த்தியாக இருக்கின்றார். அவர் சின்னஞ்சிறு குழந்தை வடிவினர் ஆனதனாலே, வயிர நகைகளும், பட்டாடை களும் உடுத்தி, அழகாகவே நிற்பார். வஸ்திரங்களை யெல்லாம் களைந்து விட்டுப் பார்த்தால், அந்தப் பிள்ளையின் முகத்தில் பால்வடியும். கையிலே வழக்கமாக இருக்கும் பொற்றாளம் இராது. இடது கையில் சிறு கிண்ணம் இருக்கும். (அம்மை அருள் ஞானத்தைக் குழைத்துக் கொடுத்த பால் கிண்ணம் அதுவே போலும்.) வலது கையோ தோடுடைய செவியனாம் தோணி புரத்தானைச் சுட்டிக் காட்டும். இந்த ஞான சம்பந்தரையும் தரிசித்து வணங்கிவிட்டு, கோயிலின் மேற் பிராகாரத்திலுள்ள கட்டு மலைமீது எளிதாக ஏறலாம்.

அங்கே அந்த மலை மீது குருமூர்த்தமான தோணியப்பர் பெரிய நாயகி சமேதராகக் காட்சி

கொடுக்கிறார். அவருக்கும் மேல் தளத்திலே, மலை உச்சியிலே தென் திசை நோக்கியவராயச் சட்டைநாதர் நிற்கிறார். தோணியப்பரும் சட்டைநாதரும் சுதையாலான திருவுருவங்களே. இந்தப் பேரண்டத்தைச் சுற்றி வளைந்து கிடக்கும் பெருங்கடல் ஊழிக்காலத்தில் பொங்கி எழுந்து அண்டத்தையே அழித்தபோது, உமாமகேசுவர் பிரணவத்தை தோணியாகக் கொண்டு கடலில் மிதந்து, இத்தலத்துக்கு வந்து தங்கித் திரும்பவும் அண்டத்தை உருவாக்கியிருக்கிறார். (ஆம்! பைபிளில் வரும் Deluge என்னும் மகா பிரளயமும் Noah's Arc என்னும் தோணியும் இதனையே குறிக்கின்றன போலும்) அன்று அப்படி வந்த தோணியப்பரே இன்று தோணி ஒன்றும் இல்லாமலேயே இக்கட்டு மலையில் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இரணியனது உயிர் குடித்த நரசிங்கம் அகங்கரித்துத் திரிந்தபோது அதனை அடக்கி, அதன் எலும்பைக் கதையாகவும், தோலைச் சட்டையாகவும் தரித்த வடுக நாதரே சட்டைநாதர் என்று தலவரலாறு கூறும். இது சிவனது பைரவ மூர்த்தங்களில் ஒன்று. இவரையே ஆபத்துத்தாரணர் என்று மக்கள் வணங்குகின்றனர். இவரையே,

"துங்க மாமணித் தூணில் வந்து,
இரணியன் தோள் வலி
தனை வாங்கும்
சிங்கஏற்று உரி அரைக்கு அசைத்து,
உலகு எலாம் தேர்ந்து அளந்து
அவன் மேனி
அங்கம் யாவும் ஓர் கதையதாய்க்
கொண்டு, அதன் அங்கியாய்ப்
புனைகாழி
சங்கவார் குழைச் சட்டைநாயகன்
துணைத் தாமரைச்
சரண் போற்றி''

என்று தலபுராணம் போற்றி வணங்குகிறது. இதே சட்டைநாதர் முத்துச் சட்டைநாதர் என்ற பெயரோடும் வலம்புரி மண்டபத்தில் யோக ஸ்தானத்தில் அஷ்ட பைரவர் உருவிலும் காட்சி கொடுக்கிறார் இக்கோயில் உள்ளேயே.

இவர்களையெல்லாம் பார்த்த பின்னர் வெளியே வந்து பிரம தீர்த்தத்தைச் சுற்றிக் கொண்டு திருநிலைநாயகி சந்நிதி சென்று வணங்கலாம். அதன்பின் ஞானசம்பந்தர் கோயிலுள்ளும் நுழைந்து அங்கு சிலை உருவில் இருக்கும் ஞானசம்பந்தரையுமே கண்டு தொழலாம். ஒரு அர்ச்சனையுமே செய்யச் சொல்லலாம். அப்படிச் சொன்னால் ஓர் உண்மை விளங்கும். முருகப்பெருமானுக்கு உரிய அஷ்டோத்தரத்தைச் சொல்லியே அர்ச்சனை செய்வார் அர்ச்சகர். இது என்ன என்று வினவினால், முருகனது அவதார மூர்த்தம்தானே ஞானசம்பந்தர் என்ற விடை பெறுவோம். இப்போது தெரிகிறது, பெரியநாயகி ஏன் இறங்கி வந்து ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டினார் என்று. எத்தனை அவதாரம் எடுத்தாலும் தன் குழந்தையைத் தெரியாமல் போய்விடுமா தாய்க்கு? ஞானசம்பந்தர் பிறந்து வளர்ந்த இந்தத் தலத்துக்கு அப்பர் வந்திருக்கிறார்; சுந்தரர் வந்திருக்கிறார். இத்தலத்தின் புனிதத்தன்மையை உணர்ந்து இதை மிதிக்க அஞ்சி எட்ட இருந்து பார்த்து விட்டே திரும்பியிருக்கிறார் சுந்தரர்.

> முத்தியும் ஞானமும் வானவர் அறியா
> முறைமுறை பலபல நெறிகளும் காட்டி,
> கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்
> கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே

என்பதுதானே அவரது தேவாரம்.

இத்தலத்தின் சரித்திர ஏடுகளைப் புரட்டினால் எவ்வளவோ விஷயங்கள் அறியலாம். இக்கோயிலில் நாற்பத்து ஏழு கல்வெட்டுகள் இருக்கின்றன. சோழ மன்னர்களது கல்வெட்டுகளோடு வீர விருப்பண்ண

உடையார் கல்வெட்டுகளும், கிருஷ்ணதேவராயரது கல்வெட்டுகளும் இருக்கின்றன. இந்தக் கல்வெட்டு களிலிருந்து பல பழக்க வழக்கங்களும், நில அளவை முறைகளும், தலம் மூர்த்தி இவைகளின் அமைப்புகளும் விளங்கும். ''இராஜராஜ வளநாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேசம் திருக்கழுமலம்'' என்ற நீண்ட பெயரில் இத்தலம் குறிப்பிடப்பட்டிருக்கும். வீர ராஜேந்திரன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன், ராஜாதிராஜன் முதலிய சோழ மன்னர்கள் ஏற்படுத்தியுள்ள நிபந்தங்கள் கணக்கில் அடங்கா. இவற்றையெல்லாம் சரித்திர ஆராய்ச்சி யாளர்களுக்கு விட்டு விட்டு நாம் திரும்பி விடலாம்.

சீகாழி தோணியப்பரையும், ஆளுடைய பிள்ளையையும் தரிசித்த சூட்டோடேயே ஞானசம்பந்தர் திருமணத்தோடு சிவசாயுஜ்யம் பெற்ற தலமான அந்த நல்லூர்ப் பெருமணத்திற்குமே போய் வந்து விடலாமே. நல்லூர்ப் பெருமணம், ஆச்சாள்புரம் என்ற பெயரோடு இன்று விளங்குகிறது. சீகாழிக்கு வடக்கே பத்து மைல் தொலைவில் உள்ள சிறிய ஊர் அது. பதினாறு வயது நிரம்பிய ஞானசம்பந்தருக்கு, பெருமண நல்லூரில் இருந்த நம்பியின் பெண் ஸ்தோத்திர பூரணியைத் திருமணம் பேசுகிறார்கள். திருமணச் சடங்குகள் நடக்கின்றன. திருமணச் சடங்குகள் முடிந்ததும், மனைவியையும் உடன் வந்த உற்றார் உறவினர் அனைவரையுமே கூட்டிக்கொண்டு கோயிலுள் நுழைந்து 'காதலாகிக் கசிந்து' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிக்கொண்டே அங்கு தோன்றிய சோதி யிலேயே எல்லோரும் இரண்டறக் கலந்தனர் என்பது வரலாறு. ஞானசம்பந்தரது திருமணக்கோலம் இக் கோயிலில் இருக்கிறது; மிகவும் பிற்பட்ட காலத்தில் செய்து அமைத்த வடிவம் என்றே தோன்றுகிறது. இவரைக் கல்யாண சம்பந்தர் என்கிறார்கள். குழந்தையாகக் கண்ட ஆளுடைய பிள்ளையைக் கல்யாணக் கோலத்திலும் கண்ட திருப்தியோடேயே நாம் இத்தலத்திலிருந்து திரும்பலாம்தானே.

# 11

# வேளூர் வைத்தியநாதன்

'மூலிகை மர்மம்' என்று ஒரு புத்தகம். அதில் வேம்பு என்று ஓர் அத்தியாயம். அதில் நம் வீட்டுப் புழக்கடையிலும், ஊர் வெளிப்புறங்களிலும் வளரும் வேப்ப மரத்தின் குணங்களைப் பற்றியே விரிவாகக் கூறப்பட்டிருக்கும். 'முறை சுரங்களுக்கும், இரத்த சுத்திக்கும் வேம்பின் வேர், பட்டை முதலியன கைகண்ட மருந்து. வேப்பமரத்து இலையே வீக்கங்களை வற்ற வைப்பதற்கும், விஷக்கிருமிகளைக் கொல்வதற்கும், விஷ வாயுக்களைத் தடுத்துச் சுகாதாரத்தை உண்டு பண்ணுவதற்கும் ஏற்றது. சுவாச ரணங்களுக்கும், மூளைக்குப் பலம் தருவதற்கும் இரத்தத்திலுள்ள விஷங்களை மாற்றுவதற்கும் வேப்பம் பழம் சிறந்தது.

இதைப் போல் வேப்பம் விதை, வேப்பம் எண்ணெய் எல்லாம் கடுமையான நோய் தீர்க்க வல்லவை. வேப்பம் பூ வடகமும், வேப்பம் பூ ரஸமும் உணவோடு உணவாக வயிற்றுக் கோளாறுகளைத் தீர்க்கக் கூடியவை. நிரம்பச் சொல்வானேன்? வேப்ப மரத்துக் காற்றை உட்கொள்பவர்கள் எல்லாம் நோய் நொடி இல்லாமல் வாழ்வார்கள். அவர்களை விஷ வாயுக்களால் உண்டாகும் வாந்திபேதி, பிளேக், வைசூரி முதலியவை அண்டாது. வேம்பும் அரசும் சேர்ந்து விட்டாலோ அவற்றைச் சுற்றி


வலம் வரும் பெண்களின் கருப்பையின் கோளாறுகளை யெல்லாம் நீக்க வல்லது. இப்படி இன்னும் என்ன என்ன எல்லாமோ விரிவாக வேப்பமரத்தைப்பற்றியும் அதன் கிளை, தளிர், பழம், பட்டை முதலியவற்றைப் பற்றியும் அந்த மூலிகை மர்மத்தில் எழுதியிருந்தது. இந்த மர்மங்களை நமக்கு அந்த நூலாசிரியரான வைத்தியர் விளக்குவதற்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒருவர் தெரிந்து வைத்திருக்கிறார். அது காரணமாக அவர், அந்த வேப்ப மரத்தடியிலேயே கடையை விரித்திருக்கிறார். தம்மை வைத்தியநாதன் என்று விளம்பரப்படுத்தி யிருக்கிறார். தீரா நோய்களைத் தீர்க்கும் வைத்தியராக வாழ்ந்திருக்கிறார். இவரையே, சமயக் குரவர்களில் வயது முதிர்ந்தவரான அப்பர் பெருமான்

**பேராயிரம் பரவி வானோர்**
**ஏத்தும் பெம்மானைப், பிரிவிலா**
**அடியார்க்கு என்றும்**
**வாராத செல்வம் வருவிப்பானை,**
**மந்திரமும் தந்திரமும்**
**மருந்தும் ஆகி**
**தீரா நோய் தீர்த்து அருள**
**வல்லான் தன்னைத் திரிபுரங்கள்**
**தீ எழத் திண் சிலை கைக்கொண்ட**
**போரானை, புள்ளிருக்கு**
**வேளூரானைப் போற்றாதே**
**ஆற்ற நாள் போக்கினேனே**

என்று பாடியிருக்கிறார். இந்த வைத்தியநாதன் கோயில் கொண்டிருக்கும் புள்ளிருக்கு வேளூருக்கே செல்கிறோம் இன்று.

சாதாரணமாக, புள்ளிருக்கு வேளூர் என்றால் ஒருவருக்கும் ஊர் எங்கிருக்கிறது என்று தெரியாது. ஆனால்

வைத்தீசுவரன் கோயில் எங்கிருக்கிறது என்றால் தெரியும். தென் பிராந்திய ரயில்வேயில் மாயூரத்துக்கும் சீகாழிக்கும் இடையில் இருக்கிறது. சீகாழிக்கு அடுத்த தென்பக்கத்து ஸ்டேஷன் என்று ரயில்வே அட்டவணையைப் பார்க்காமலேயே சொல்லி விடுவார்கள். ரயில்வே ஸ்டேஷனில் இறங்கிக் கிழக்கு நோக்கி நடந்தால் தெற்கு ரதவீதியில் கொண்டு வந்துவிடும். அதன்பின் ஒரு பிரச்சினை. கோயிலுக்குக் கிழக்கும் மேற்கும் பெரிய கோபுரங்கள் இருக்கின்றனவே, கோயிலுக்குள் எப்படி நுழைய வேணும் என்ற கேள்வி எழும். மேற்கே பார்த்தவராக வைத்தியநாதர் இருப்பதால் மேலக் கோபுர வாயில் வழியாக நுழைந்து மண்டபங்களைக் கடந்து வரலாம். ஆனால் நாம் இந்தக் கோயிலுக்கு வருவது, நமது பழவினையாம் நோய் தீர்க்க மாத்திரம் அல்லவே. உடலில் உறவாடும் நோயையும் தீர்க்கத்தானே. ஆதலால் அன்று அந்த வேம்படியில் கடைவிரித்த வைத்தியாநாதனை அல்லவா முதலில் சந்தித்து, நம் நோய் விவரங்களைக் கூறி அதற்கு மருந்து தேட வேண்டும். ஆதலால் தெற்கு



புள்ளிருக்கு வேளூர்–கோயில்

ரதவீதியைக் கடந்து கீழை ரதவீதி வழி வந்து கீழைக் கோபுர வாயில் வழியாகவே உள் நுழையலாம்.

ராஜ கோபுரத்தைக் கடந்த உடனே அங்கிருக்கும் வெளி அத்தனையையும் ஆக்கிரமித்துக் கொண்டு பெரியதொரு வேப்ப மரம் நிற்கும். அந்த மரமே இங்கு தலவிருட்சம். அந்த மரத்தடியிலேயே மேற்கே பார்த்தவராக இருக்கிறார் ஆதி வைத்தியநாதர். இந்த இடத்தையே வேம்படி மால் என்று கூறுவார்கள். இந்த ஆதி வைத்தியநாதரிடம் நாம் நம் நோய்க்கு மருந்து பெற முடியாது. வியாபாரம் பெருத்துவிட்ட காரணத்தால் கடை முதலாளி கோயிலுக்கு உள்ளே போய்விட்டார் என்பர். கோயிலுக்குள்ளிருக்கும் புதிய வைத்தியநாதரே, எல்லா நோய்களுக்கு கண்கண்ட மருந்தான திருச்சாத்துருண்டை வியாபாரம் செய்து வருகிறார். இந்த மருந்து பெற விரும்புபவர் சுக்கில பக்ஷத்தில் நல்ல நாழிகையில் அங்குள்ள சந்தான தீர்த்தத்தில் நீராடி, அங்குள்ள மண்ணை எடுத்துப் புதுப்பாத்திரத்தில் வைத்து, கோயிலுள் வந்து விபூதி குண்டத்தில் உள்ள விபூதி, சித்தாமிர்த தீர்த்தத்திலுள்ள தண்ணீர் இவைகளையும் சேர்த்துப் பிசைந்து முத்துக்குமரர் முன்புள்ள குழி அம்மியில் இட்டு அரைத்துக் கடுகு அளவு உண்டைகள் செய்து, தையல்நாயகி திரு முன்பு வைத்து அருச்சனை செய்து எடுத்துப் போய் உண்ண வேண்டும் என்பர் கோயில் நிர்வாகிகளும், அர்ச்சகர்களும். இப்படியே சொல்லி யிருப்பார்கள் போலும் அன்று இக்கோயிலுக்கு வந்த காளமேகத்தினிடமும். உடனே அவர்,

**மண்டலத்தில் நாளும்**
**வைத்தியராய்த் தாமிருந்து**
**கண்டவினை தீர்க்கின்றார்**
**கண்டீரோ?–தொண்டர்**

விருந்தைப் பார்த்து உண்டருளும்
வேளூர் என் நாதர்
மருந்தைப் பார்த்தால்
சுத்த மண்.

என்று ஏளனமாகவே பாடியிருக்கிறார். நான் கூடக் காளமேகம் கட்சிதான். திருச்சாத்துருண்டை உருட்டக் கஷ்டப்பட வேண்டாம் என்பேன். ஆதி வைத்தியநாதரைச் சுற்றி வளர்ந்திருக்கும் வேம்படியில் சும்மா அரை மணி நேரம் அப்படியே தங்கி இருந்து விட்டால், தீராத நோய் எல்லாம் தீர்ந்து போகுமே என்றுதான் சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

இப்படி நம் உடல் நோயைத் தீர்த்துக் கொண்டபின் உள நோயைத் தீர்க்கக் கோயில் உள்ளேயே நுழையலாம். பரந்து கிடக்கும் தெற்கு வெளிப் பிராகாரத்தைக் கடந்து பிரதான கோயில் மண்டபத்துக்கு வந்தால் தென்பக்கம் ஒரு பெரிய வாயில் இருக்கும். அதில் நுழைந்தால் சித்தாமிர்த தீர்த்தத்தினிடம் கொண்டு சேர்க்கும். காமதேனு பால் சொரிந்து இறைவனை அபிஷேகம் செய்ய, அந்தப் பால் பெருகியே இந்தத் தடாகம் நிரம்பி இருக்கிறது என்பர்.இல்லை சித்தர் கணத்தர் இறைவன் திரு முடியில் கொட்டிய தேவாமிர்தமே இங்கு நிறைந்திருக்கிறது, அதனாலேயே சித்தாமிர்த தீர்த்தம் என்று பெயர் வந்தது என்றும் கூறுவர். இந்தத் தீர்த்தத்தில் ஒரு விசேஷம். இதில் பாம்பும் தவளையும் எப்போதுமே இருந்ததில்லை. ஏதோ சாதனந்தர் இட்ட சாபத்தால் நேர்ந்தது இது என்பர். இதனால் கொஞ்சம் துணிந்தே இக்குளத்தில் இறங்கலாம், குளிக்கலாம், நீச்சல் அடிக்கலாம். வேம்படி மாலில் தீராத வியாதி மிச்சம் இருந்தால் அது கட்டாயம் இத்தீர்த்தத்தில் குளித்ததும் தீர்ந்து போகும்.

இனி, கோயிலுள் நுழைந்து, கர்ப்பக் கிருஹம் சென்று வைத்தியநாதனைக் கண்டு வணங்கலாம், பின்னர்



ஆதி வைத்திய நாதர்

அவரை வலம் வரலாம். அப்படி வரும்போது 'இந்தத் தலத்துக்கு வைத்தீசுவரன் கோயில் என்ற பெயர் மிகவும் பொருத்தமாக இருக்க, இதை ஏன் புள்ளிருக்கு வேளூர் என்று அழைக்கிறார்கள் என்று உடன் வரும் நண்பர் கேட்பார். அவருக்கு விடை சொல்லும் இந்தப் பிராகாரம். ஜடாயு என்னும் புள் (பறவை), ரிக்குவேதம், முருகனாம் வேள், சூரியனாம் ஊர், நால்வரும் பூஜித்த தலம் ஆனதால் இந்த பெயர் வந்தது என்று தல வரலாறு கூறும். இதற்கேற்ப இங்குள்ள தெற்குப் பிராகாரத்தில் சடாயு குண்டம் இருக்கிறது. ராமாயணத்தில் வரும் சடாயு இராவணனோடு போர் ஏற்று விழுந்து மாண்ட இடம் என்றும், அந்த சடாயுவைப் பின்னர் ராம லக்ஷ்மணர்கள் தகனம் செய்த இடமே இது என்றும் அறிவோம். அங்குள்ள ஒரு குண்டத்தில் சடாயுவின் சாம்பல் இன்றும் இருப்பதைக் காணலாம். சடாயுவும் சம்பாதியும் முத்திபெற்ற இந்தப் புள்ளிருக்கு வேளூரை ஞானசம்பந்தர் பாடுகின்றபோது இரண்டு பறவை அரசினையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டே பாடியிருக்கிறார்.

**கள்ளார்ந்த பூங்கொன்றை**
**மதமத்தம் கதிர்மதியம்**
**உள்ளார்ந்த சடைமுடி எம்**
**பெருமானார் உறையும் இடம்**
**தள்ளாய சம்பாதி சடாயு**
**என்பார்தாம் இருவர்**
**புள்ளானார்க்கு அரையனிடம்**
**புள்ளிருக்கு வேளூரே.**

என்பதுதானே அவர் பாடிய தேவாரம். சடாயு குண்டத்தைக் கடந்து வரும் வழியில், செவ்வாய்க் கிரஹம் ஆன அங்காரகனது உற்சவமூர்த்தத்தையுமே கண்டு வணங்கலாம். நீங்கள் கோயிலுக்குப் போன நாள் செவ்வாய்க்கிழமையாக இருந்தால் சிறப்பான அலங்காரத்தைக் காண்பதுடன், விசேஷமான நைவேத்தியங்களும் இங்கு கிடைக்கும். தலத்தில் நவக்கிரஹங்கள் ஒருவரை ஒருவர் வக்கரித்துக் கொண்டிருப்பதில்லை. சூரியனுக்கும் அங்காரகனுக்கும் தனித்தனி சந்நிதி அமைத்து விட்டதால், மற்ற ஏழு பேரும் கைகட்டி வாய் பொத்தி வரிசையாக கீழைத் திருமாளிகைப் பத்தியில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

இவர்களைப் பார்த்தபின் நடந்தால் தெற்கு நோக்கி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் தையல்நாயகியிடம் வருவோம். தையல் நாயகி நல்ல அழகான வடிவம், கரும்புருவச் சிலை, வரிக்கயல் விழி, வள்ளைவார் காது, முல்லை அரும்பும் இளநகை, செங்கனிவாய், பிறைநுதல் எல்லாம் படைத்தவளாய்ப் புள்ளூர் மேவும் இந்த வாலாம்பிகையை வணங்கிவிட்டு வடக்கு நோக்கிப் போகலாம். அங்கு தானே சண்முகர் சந்நிதி இருக்கிறது. இந்தச் சண்முகரின் உற்சவமூர்த்தமே செல்வமுத்துக் குமாரர். இவர் உண்மையிலே நல்ல செல்வந்தர். அதிலும் கார்த்திகை தினத்தன்று நடக்கும் சந்தனாபிஷேகம், அலங்காரம் எல்லாம் கண் குளிரக் காண வேண்டியவை.

*இவரையே அருணகிரியார், குமரகுரபரர் எல்லாம் பாடிப் பரவி யிருக்கிறார்கள். குமரகுருபர் பாடிய முத்துக் குமரன் பிள்ளைத் தமிழ் மிகச் சிறப்பு வாய்ந்தது.*

**கூன் ஏறு மதிநுதல் தெய்வக்**
**குறப்பெண் குறிப்பறிந்து**
**அருகு அணைந்து,**
**குற்றேவல் செய்ய, கடைக்கண்**
**பிணிக்கு எனக் குறை இரந்து**
**அவள் தொண்டைவாய்**
**தேனூறு கிளவிக்கு வாயூறி**
**நின்றவன் செங்கீரை**
**ஆடி அருளே**

*என்று பாடும் பிள்ளைத் தமிழில், தமிழ் கொஞ்சி விளையாடுகிறது.*

*கோயில் நிரம்பப் பெரிய கோயில் ஆனதால் சுற்றிச் சுற்றி வரலாம். அங்கு கோயில் கொண்டிருக்கும் மூர்த்திகளை யெல்லாம் கண்டு கண்டு தொழலாம். இக்கோயிலில் எட்டு கல் வெட்டுக்கள் இருக்கின்றன. அவை கூட முழுவதும் சிதையாமல் இல்லை. திருப் பணி செய்தபோது சிதைந்திருக்கலாம். இக்கல் வெட்டுக் களில் சிறப்பானது கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழ நாட்டை ஆண்ட விக்கிரம சோழன் காலத்தியது; இவன் முதற்குலோத்துங்கன் மகன். இவன்றன் மெய்க்கீர்த்தியை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.*

**திருவடி இரண்டும் தன் முடியாகத்**
**தென்னவர்சூட, முன்னும் மனுவாறு பெருக,**
**கலியாறு வறப்ப, செங்கோல் திசை**
**தொறும்செல்ல, வெண்குடை நிலவளாகம்**
**எங்கணும் தங்க, வெண்ணிலாத் திகழ,**
**ஒருதனி மேருவில் புவியின் பொன்னேமி யாவும்**

**தன்னேமி நடப்ப, விளங்கு ஜயமகளை**
**இளங்கோப் பருவத்து சக்கரக் கோட்டத்து**
**வீரத் தொழிலால் வது மணந்தான்**

என்பது ஒன்று. இதனால் இவன் இக்கோயிலுக்குச் செய்த பணி விளங்கவில்லை என்றாலும் மன்னனது கீர்த்தி மட்டும் பெரிதாகவே இருந்திருக்கிறது என்று அறிகிறோம். வீர ராஜேந்திர பாண்டியன் காலத்திய கல்வெட்டு ஒன்றில் திரு அம்பலமுடையானான தொண்டைமானால் திருப் புள்ளிருக்கு வேளூர் நாயகனுக்கு இறையிலியாக விடப் பெற்ற நிலங்களைக் குறிக்கின்றது. இன்னும் அச்சுதப்ப நாயக்கர், துளஜா மகாராஜா முதலியவர்கள் விட்ட நிபந்தங்களைக் குறிக்கும் கல்வெட்டுக்களும் உண்டு.

இக்கோயில் தருமபுர ஆதீனக் கோயில்களில் பெரியது. பொருள் வளம் உடையது; சிறப்பு மிக்கது. 6105 ஏக்கர் நன்செய் நிலமும் 1176 ஏக்கர் புன் செய்யும், லக்ஷத்து அறுபதாயிரம் ரூபாய் மதிப்புள்ள திரு ஆபரணமும் இக்கோயிலுக்கு உண்டு என்றால் வேறு அதிகம் சொல்வானேன். இன்றைய ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாச்சர்ய சுவாமிகள், இந்த வைத்தியநாதன் தம்பதிகளிடத்தும் அவர்களைவிட அந்தச் செல்வமுத்துக்குமரனிடமும் அளவிலா பக்தி உடையவர்கள் ஆதலால் கோயில் காரியங்களை யெல்லாம் தம் நேரடிப் பார்வையிலேயே நடத்துகிறார்கள். திருப்பணி செய்து கொண்டே யிருக்கிறார்கள். தங்கக் கவசத்துக்கு மேல் தங்கக் கவசமாக மூர்த்திகளுக்கு அணிந்து அணிந்து பார்த்து மகிழ்கிறார்கள். சென்னையிலேயே 'வேளூர் இறை பணி மன்றம்' ஒன்றை நிறுவி, சைவ சமயப் பற்றை வளர்க்கிறார்கள். இதனால்தானே வைத்தியநாதனையும் செல்வமுத்துக் குமரனையும் ஆர, அமர இருந்து பார்த்து வழிபட்டுத் திரும்ப முடிகிறது நமக்கு.

# 12

# திருப்புன்கூர் சிவலோகன்

தீண்டாமை ஒழிப்பு, ஹரிஜன ஆலயப் பிரவேசம் எல்லாம், நம் சமூகத்தில் உள்ள குறைகளை நீக்க எழுந்த சமீப கால முயற்சிகள். 'எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓரினம்' என்ற அடிப்படையில் சமுதாய வாழ்வில் எல்லோரும் பங்கு பெறவேணும் என்பதற்காக எழுந்த இயக்கம் அவை. நாடு சுதந்திரம் பெற்று மக்கள் சுபிட்சமாக வாழ, சமுதாயத்தில் உள்ள உயர்வு தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்ற பிரசாரம் தீவிரமாக நடந்தது; நடக்கிறது. இந்த இயக்கத்துக்கு முழு ஆக்கம் தந்தவர் மகாத்மா காந்திஜி.

எந்தக் கோயிலில் ஓர் இனத்தவரைத் தீண்டத் தகாதவர் என ஒதுக்கி உள்ளே விட மறுக்கிறார்களோ, அந்தக் கோயிலினுள் நுழைய காந்திஜி மறுத்திருக்கிறார். தமிழ் நாட்டிலே மீனாக்ஷி சந்நிதியிலே, அரங்கத்து அரவணையான் கோயிலிலே, பழனி ஆண்டவன் முன்பெல்லாம், ஹரிஜனங்களை அழைத்துக் கொண்டு காந்திஜி சென்று ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை விழாக்களாகவே நடத்தியது எல்லாம் சரித்திரப் பிரசித்தம். இன்று தமிழ் நாட்டில் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்படாத கோயில்களே இல்லை என்று எளிதாகச் சொல்லி விடலாம். ஆனால் இந்த இயக்கத்தை எண்ணற்ற வருஷங்களுக்கு முன்னாலேயே முன்னின்று

நடத்தியிருக்கிறார் ஒரு சிவலோகநாதர். கோயிலுள் விட வேண்டாம், தேரடியில் நின்று தரிசிப்பதற்காவது வழி செய்ய வேண்டும் என்ற ஹரிஜன பக்தனான நந்தனுக்காக வழிமறைத்திருக்கும் நந்தியை 'சற்றே விலகி இரும் பிள்ளாய்' என்று உத்தரவு போட்டார் அவர். அந்தச் சிவலோக நாதரைக் காணவே இன்று செல்கிறோம் திருப்புன்கூருக்கு.

திருப்புன்கூர், வைத்தீசுவரன் கோயிலுக்கு, நேர் மேற்கே இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. வைத்தீசுவரன் கோயில் ஸ்டேஷனில் இறங்கி பஸ்ஸில் ஏறியோ இல்லை, கார், வண்டி ஏதாவது வைத்துக் கொண்டோ செல்லலாம். போகிற வழியெல்லாம் செந்நெல் வயல்கள், பங்கயங்கள் மலரும் பழனங்கள், எங்கு பார்த்தாலும் ஒரே தென்னஞ் சோலைகள். ரோட்டை விட்டுத் தெற்கே திரும்பி ஒன்றிரண்டு பர்லாங் தூரம் வளைந்து வளைந்து சென்றால், கோயிலை அடுத்த குளக்கரை வந்து சேருவோம். குளக்கரையிலிருந்து கோயிலைக் காண்பதே ஓர் அழகான காட்சி.



திருப்புன்கூர் கோயில்


விலகிய நந்தி

கோயில் சந்நிதித் தெருவின் கீழ்க் கோடியில், தேரடியில் ஒரு சிறு கோயில் புதிதாகக் கட்டி அதில் நந்தனைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அந்தத் தேரடியில் நின்றுதானே நந்தன் கதறி இருக்கிறான். 'வழி மறைத் திருக்கிறதே, ஐயே! மலை போல ஒரு மாடு படுத்திருக்குதே' என்று. நாமும் நம் வண்டியை விட்டு அங்கேயே இறங்கி விடலாம். அங்கிருந்தே நந்தன் தரிசித்த சிவலோக நாதனைக் கண்டு தரிசித்து விடலாம். அன்று நந்தனுக்கு வழி மறைத்த நந்திதான், பின்னர் வழியைவிட்டு வடபக்கமாக விலகி எல்லோரும் தேரடியில் நின்று தரிசிக்க இடம் தந்திருக்கிறதே. இந்த இடத்தில் நின்றே நந்தன் சரித்திரம் முழுதையும் கேட்டு விடலாம், தெரிந்தவர்கள் மூலம். அப்படித் தெரிந்தவர்கள் அகப்படாவிட்டால், பெரிய புராணம் எழுதிய சேக்கிழாரும், நந்தன் சரித்திரக் கீர்த்தனம் பாடிய கோபால கிருஷ்ண பாரதியும் நமக்கு துணை வரத் தயாராயிருக்கிறார்கள். கதை இதுதான்.

சோழவள நாட்டிலே ஆதனூர் என்ற ஒரு சிறிய ஊர். (இன்று மேல ஆதனூர் என்று வழங்குகிறது. திருப்புன் கூருக்கும் மேற்கே இரண்டு மைல் தொலைவில் இருக்கிறது) அங்கு ஒரு புலைப்பாடி. அதில் நந்தன்

பிறக்கிறான். ஓர் அந்தணரிடம் பண்ணையாளாக வேலை பார்க்கிறான். அவனுக்கு எப்படியோ ஓர் ஆசை பிறந்து விடுகிறது தில்லையில் நடம் ஆடும் கூத்தனைக் கண்டு தரிசிக்க வேண்டும் என்று. அதற்குத் தன் சேரியில் ஆள் திரட்டுகிறான். சேரியிலுள்ளவர்களைத் தில்லைவாழ் அந்தணர்கள் கோயிலுள் விடமாட்டார்களே என்று அவர்கள் எண்ணுகிறார்கள். 'இது எல்லாம் நமது ஜாதிக்கு அடுக்காத காரியம்' என்று நாட்டாண்மைக் கிழவன் வேறே தடுக்கிறான். இருந்தாலும் ஒரு சிலரைக் கூட்டிக்கொண்டு பக்கத்திலிருக்கும் திருப்புன்கூரில் உள்ள சிவலோக நாதனைத் தரிசிக்கப் புறப்பட்டு வருகிறான்.

**சிவலோக நாதனைக் கண்டு**
**சேவித்திடுவோம் வாரீர்!**
**பாவமயங்களைப் போக்கி—அவர்**
**பரமபதத்தைக் கொடுப்பார் அந்த**
**சிவலோக நாதனைக் கண்டு**
**சேவித்திடுவோம் வாரீர்!**

என்று பாடிக்கொண்டே வந்துவிட்டான் திருப்புன்கூர் தேரடிக்கு. அதன் பின்தான், சிவலோக நாதனைக் கண்டு தரிசிப்பது எளிதல்ல என்று தெரிகிறது. முதலில் சந்நிதித் தெருவிலே நுழையவே அனுமதி கிடையாது. அதன் பின் கோயில் வாயிலில் பெரிய நந்தி வேறே படுத்துக் கிடக்கிறது. எப்படி எட்டி நின்று தரிசிப்பது? அவனது ஏக்கம் எல்லாம் தேரடியில் நின்று தரிசித்தாலும் போதும் என்பதுதான். 'உற்றுப் பார்க்கச் சற்றே இந்த நந்தி விலகாதா' என்று எண்ணியிருக்கிறான். அவ்வளவுதான், சிவலோக நாதன் தன் நந்தியைப் பார்த்து, 'சற்றே விலகியிரும் பிள்ளாய், நம் சந்நிதானம் மறைக்குதாம்' என்று வேண்டிக் கொள்கிறான். நந்தியும் அப்படியே விலகிக் கொள்கிறது. நந்தன் குதூகலித்து ஆடிப்பாடுகிறான். இப்படி நந்தி விலக அருள் செய்தான் சிவலோகநாதன் என்பதைச் சேக்கிழார்,

**சீர் ஏறும் இசைபாடித்**
**திருத்தொண்டர் திருவாயில்**
**நேரே கும்பிட வேண்டும்**
**எனநினைந்தார்க்கு, அதுநேர்வார்**
**கார் ஏறும் எயில் புன்கூர்**
**கண்ணுதலார் திருமுன்பு**
**பேர் ஏற்றை விலங்க அருள்**
**புரிந்து அருளிப் புலப்படுத்தார்**

*என்று பாடுகிறார் அவரது திருத்தொண்டர் புராணத்தில். நந்தி விலகி தரிசனத்துக்கு வழிசெய்த காரணத்தால், தில்லைச் சிற்றம்பலவனுமே அருள் புரிவான் என்ற நம்பிக்கை வலுக்கிறது நந்தன் சகாக்களிடத்தே. நாளையே போக வேணும் என்று துடிக்கிறான் நந்தன். ஆனால் ஆண்டானான அந்தணர் எளிதாக இடங் கொடுத்து விடுவாரோ? நாற்பது வேலி நிலத்துக்கு நடவு நட்டு விட்டுத்தான் போகவேணும் என்கிறார். எப்படி இதனை முடிப்பது என்று நந்தன் மயங்கி நின்றபோது இறைவனே இந்த வேலையையும் முடித்துக் கொடுக்கிறார். அந்தணரோ நந்தன் பக்தியின் பெருமையை உணர்ந்து அவன் காலிலேயே விழுந்து வணங்கி எழுந்து விடை கொடுக்கிறார். பின்னர் ஆறாத பெருங்காதல் ஒப்பரிதாய் வளர்ந்தோங்க, உள்ளுருகிக் கைதொழுத கோலத்தோடு தில்லை சென்று இறைவன் அருளியபடி எரி மூழ்கி, உலகுய்ய நடம் ஆடும் நடராஜனை வழிபட்டு முத்தி பெற்றார் என்பது வரலாறு. இந்த நந்தி விலகிக் கிடக்கும் நேர்த்தி யொன்றைக் காண்பதற்கே இக்கோயிலுக்குப் போகலாம். வெளியில் நின்று பார்த்தாலும் சிவலோகன் தரிசனம் கிட்டும்.*

*சிவலோகநாதன் சந்நிதிக்கே போய்விட்டாலும் அங்கிருந்து பார்த்தால் நந்தி எவ்வளவு தூரம் வடபக்கம் விலகி வழி மறையாதிருக்கிறது என்றும் தெரியும்.*

இதைவிட எல்லாம் அழகு, அவசரத்தில் விலகிய நந்தி கொஞ்சம் ஒருக்களித்துச் சாய்ந்து கிடப்பது. நந்தி விலகிய வரலாற்றை நம்ப மறுக்கும் அன்பர்கள்கூட இதைக் கண்டு வாய்மூடி மௌனியாக நிற்க வேண்டியதுதான். கோபுர வாயிலைக் கடந்து நந்தி மண்டபம் வந்து, இறை அருளிலே நம்பிக்கை அதிகம் பிறக்கச் செய்யும் நந்தியெம் பெருமானையும் வணங்கிய பின் கோயிலுள் நுழையலாம். கோயில் நிரம்பப் பெரிய கோயிலும் இல்லை, சின்னஞ் சிறிய கோயிலும் இல்லை. மகா மண்டபத்திலே தெற்கு நோக்கி அந்தச் சிவகாமிநாதன் சிவகாமியோடு நடம் ஆடிய கோலத்தில் நிற்கிறான். அந்தத் திருவுருவைப் பார்க்கும் போது, அவரது திருவடியில் குடமுழாவையும், பஞ்சமுக வாத்தியத்தையும் முழக்கும் பூதகணங்களையும் பார்க்கத் தவறி விடாதீர்கள். நீங்கள் தவறினாலும் இத்தலத்துக்கு வந்த சுந்தரர் ஞாபகமூட்டத் தவறமாட்டார்.

**மானை நோக்கியோர்**
**மாநடம் மகிழ மணிமுழா**
**முழக்க அருள் செய்த**
**தேவ தேவ! நின் திருவடி**
**அடைந்தேன் செழும்பொழில்**
**திருப்புன்கூர் உளானே.**

என்பதைப் பாடிக் காட்டியே நமக்கு அறிவுறுத்துவார். நடராஜ தரிசனம் செய்தபின் இங்கே கோயில் கொண்டிருக்கும் சௌந்திரநாயகியாம் அம்மையையும் கண்டு வணங்கலாம். இத்தலத்துக்குச் சிவலோக நாதனை விடப் பெருமை தேடித்தந்த அந்தத் திருநாளைப் போவாராம் நந்தனையும் செப்புச் சிலை வடிவில் கண்டு மகிழலாம்.

இத்தலத்துக்குச் சம்பந்தர் வந்திருக்கிறார், அப்பர் வந்திருக்கிறார். ஆளுக்கு ஒரு பதிகம் பாடிப் பரவி இருக்கிறார்கள்.

கலைஞானம் கல்லாமே
கற்பித்தானை, கடுநரகம் சாராமே
காப்பான் தன்னை
பலவாய வேடங்கள் தானே
ஆகிப் பணிவார்கட்கு
அங்கங்கே பற்றா னானை
சிலையால் புரம் எரித்த
தீ ஆடியை, திருப்புன்கூர்
மேவிய சிவலோகனை

நினைந்து நினைந்து பாடிய நாவுக்கரசர் பாட்டு எவ்வளவோ அரிய உண்மைகளையெல்லாம் வெளியிடுவதாக இருக்கிறது. அப்பரும் சம்பந்தரும் சும்மாப் பாடிப் பரவுவதோடு நிறுத்தினால் இங்கு எழுந்தருளிய சுந்தரர் சிவலோகனுக்கு நிலம் சேர்த்து வைக்கவே முனைந்திருக்கிறார். சோழ நாட்டிலே ஒரு காலத்தில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. மழையே பெய்யாமல் வறண்டிருக்கிறது. கோன்நோக்கி வாழும் குடிகள் வான்நோக்கி வருந்தி இருக்கிறார்கள். சோழ மன்னன் வேறே நைந்து உருகியிருக்கிறான். அவன் திருபுன்கூருக்கு வந்திருந்த அன்றே சுந்தரரும் தனது சுற்றுப் பிரயாணத்தில் அங்கு வந்து சேர்ந்திருக்கிறார். அரசனும் குடிகளும் மழை வளம் இல்லாது நாடு வறண்டிருப்பதைக் கூறுகிறார்கள். 'சரி பன்னிரண்டு வேலி நிலத்தைக் கோயிலுக்கு எழுதித் தருகிறீர்களா?'' என்று கேட்டிருக்கிறார். அப்படியே எழுதிக் கொடுத்திருக்கிறான் மன்னன். உடனே பாடியிருக்கிறார் சுந்தரர். அவ்வளவுதான்; மழை பெய்ய ஆரம்பித்திருக்கிறது. மக்களும் மன்னனும் குதூகலத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். ஆனால் பெய்ய ஆரம்பித்த மழை பெய்து கொண்டேயிருக்கிறது. நாள் ஒன்று இரண்டு என வளர்ந்து பத்து நாட்களாகியும் நிற்கக் காணோம். மழை போதும் போதும் என்ற பின்னும் நிற்காவிட்டால் கஷ்டந்தானே. 'ஐயனே! மழையை நிறுத்தும்'

என்று சுந்தரரிடமே குறை இரந்திருக்கிறார்கள். 'சரி, பெய்யும் மாரியையும் பெருகும் வெள்ளத்தையும் நிறுத்துகிறேன். என்ன தருகிறீர்கள்? இன்னுமொரு பன்னிரண்டு வேலிநிலம் சிவலோகனுக்குத் தருகிறீர்களா?' என்று கேட்டிருக்கிறார். சரி, என்று தலையசைத் திருக்கிறார்கள் மக்களும் மன்னனும். பாடியிருக்கிறார் சுந்தரர். மழை நின்றிருக்கிறது. மீட்டும் பன்னிருவேலி கிடைத்திருக்கிறது கோயிலுக்கு. இவ்வளவும் சும்மா கற்பனைக் கதையல்ல, சுந்தரரே சொல்கிறார்:

வையகம் முற்றும் மாமழை
மறந்து, வயலில் நீர்இலை
மாநிலம் தருகோம்

உய்யக்கொள் மற்று எங்களை
என்ன, ஒளிகொள் வெண்முகிலாய்
பரந்து எங்கும்

பெய்யும் மாமழைப் பெருவெள்ளம்
தவிர்த்து, பெயர்த்தும் பன்னிரு
வேலிகொண்டு அருளும்

செய்கைகண்டு நின் திருவடி
அடைந்தேன், செழும் பொழில்
திருப்புன்கூர் உளானே

என்ற பாட்டை விட இந்த நிகழ்ச்சிக்கு வேறு என்ன சான்று வேண்டும்.

இன்னுமொரு வரலாறு, இக்கோயிலுக்கு இன்னும் நிலம் சேர்ந்ததற்கு. வீரவிக்ரம சோழன் மகனான சிற்சபேச நடேசன் பிறக்கிறான், வளர்கிறான். (இவனை எல்லாம் சரித்திரத்தில் தேடக்கூடாது) அவன் திருப்புன்கூரிலுள்ள தேவதாசி சௌந்தரத்தைத் தன் காதல் கிழத்தியாகக் கொண்டு அவளுடன் வாழ்ந்திருக்கிறான். திருப்புன்கூரை விட்டுத்

திருவாரூர் போக அவன் விரும்பியபோது தாசி சௌந்தரம் உடன் செல்ல மறுத்திருக்கிறாள். அதனால் மன்னன் தான். அவளுக்குக் கொடுத்த பொருளையெல்லாம் அவள் அறியாமல் கைப்பற்றியிருக்கிறான். கேட்டால் தனக்கு ஒன்றுமே தெரியாதே என்றும் சொல்லியிருக்கிறான். அவள் அப்படியே சத்தியம் செய்து தரச் சொல்லி திருக்குளத்துக்கு இழுத்திருக்கிறாள். பொய்ச் சத்தியம் பண்ண முனைந்த மன்னனைப் பாம்பைக் காட்டிப் பயமுறுத்தியிருக்கிறார் சிவலோகன். அதனால் சிற்சபேசன் வேண்டிய நிலபுலங்களைக் கோயிலுக்கு எழுதிவைத்து, தன்னை அண்டிய பழியினின்றும் நீங்கியிருக்கிறான் என்று கதை.

இந்தச் சிவலோகநாதர் இப்படி நிலங்களைச் சேர்த்தாரே தவிர, அவைகளை வைத்துக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியவில்லை. எப்படியோ கோட்டை விட்டுவிட்டார். அன்று சுந்தரர் தேடிக் கொடுத்ததும் பின்னர் சிற்சபேசன் எழுதிக் கொடுத்ததுமான நிலங்களெல்லாம் இன்று தேவஸ்தானத்தின் சொத்தாக இல்லை. ஏதோ தனக்கு வேண்டிய கொஞ்ச நிலங்களையும் புலன்களையும் மாத்திரமே வைத்துக் கொண்டிருக்கிறார். (பின்னால் நில உடைமைக்கு உச்ச வரம்பு வரும், அது கஷ்டம் தரும் என்பதை யெல்லாம் தெரியாமலா இருந்திருப்பார்!)

திருப்புன்கூர் இறைவனை வழிபட்டு முத்தி பெற்றவர்கள் ஜாபிதா நிரம்பவும் நீளம். சூரியசந்திரர், இந்திரன், பிரம்மா, அகஸ்தியர், அக்கினி, பதஞ்சலி வியாக்கிரபாதர், சப்த கன்னியர் எல்லாம் வழிபட்டு முத்தியடைந்தனர் என்று தலபுராணம் கூறும். அறுபத்து மூன்று நாயன்மார்களில் விறல்மிண்டர், ஏயர்கோன் கலிக்காமர் எல்லாம் இங்குதான் முத்தி பெற்றார்கள் என்றும் அறிவோம். இத்தனை தெரிந்தபின் இத்தலம் ஏன் புன்கூர் என்று பெயர் பெற்றது என்று தெரிய வேண்டாமா? வேறு

ஒன்றும் இல்லை. புங்கம் செடிகள் நிறைந்த ஊர் இது, கரிஞ்சாரண்யம் என்றே ஒரு பெயர் இவ்வூருக்கு. இந்த ஊரின் நிலவளம் ஏன் செழிப்பாயிருக்கிறது என்று எனக்கு இப்போது விளங்குகிறது. பசுந்தழை உரத்தில் புங்கன் தழைக்குமேல் நல்ல உரம் கிடையாதே. புங்கமரமே இங்கு தல விருட்சம். உரம் இருந்தது, உழத் தெரிந்தது. ஆனால் கிடைத்த நிலங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியவில்லையே இந்தச் சிவலோகநாதருக்கு என்பதே நமது வருத்தம்.

# 13

# வெண்காடு மேவிய விகிர்தன்

பேய் அடையா, பிரிவு எய்தும்
பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர்,
ஐயுறவேண்டா ஒன்றும்.
வேய் அனதோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குள நீர்
தோய் வினையார் அவர் தம்மைத்
தோயாவாம் தீவினையே


என்பது ஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகத்தில் ஒரு பாட்டு. பாட்டு நல்ல சுவையானது. மயங்கி நையும் உள்ளத்துக்குத் தெம்பு கொடுக்கும் பாட்டு. இந்தப் பாட்டைச் சுற்றி ஒரு வரலாறு. வரலாறு இது தான். பெண்ணாகடத்திலே நல்ல சைவ வேளாளராக வசிக்கிறார் அச்சுத களப்பாளர். நீண்டகாலமாக அவருக்கும் அவர் மனைவிக்கும் ஒரு குறை, புத்திரப் பேறு இல்லையே என்று. ஆதலால் திருத்துறையிலே வசித்த தனது குலகுருவாகிய அருணந்தி சிவாச்சாரியாரிடம் விண்ணப்பித்துத் தம் குறை நீங்க வேண்டி இருக்கிறார். அவருக்குத் திருமுறைகளிடத்து நிரம்ப நம்பிக்கை. ஆதலால் திருமுறை ஏட்டை எடுத்து அதற்குப் பூசனை செய்து அதில் கயிறு சாத்துகிறார். கயிறு

சாத்துதல் என்றால், ஏட்டை அவிழ்த்து இறைவனை நினைத்து ஏட்டின் கயிற்றை ஏதாவது ஒரு பக்கம் வரும்படி இழுப்பது. அப்படி இழுத்த பக்கத்தில் இருக்கிற பாடலைப் படிப்பது. அதில் எதை வேண்டி நின்றோமோ, அதற்கு ஊன்றுகோலாக ஒரு கருத்து நிற்கும். அப்படிக் கயிறு சாத்திப் பார்த்ததில் அன்று வந்த பாட்டுத்தான் 'பேயடையா பிரிவு எய்தும்' என்ற ஞானசம்பந்தரது தேவாரம். அந்தத் திருப்பாட்டிலே 'பிள்ளையினோடு உள்ள நினைவு ஆயினவே வரம் பெறுவர், ஐயுற வேண்டா ஒன்றும்' என்றிருக்கவே அச்சுத களப்பாளர் மிகுந்த மகிழ்ச்சியோடு, திருவெண்காட்டுக்கு வருகிறார் தம் மனைவியுடன். அங்குள்ள சுவேதவன ஈசுவரரது கோயிலில் நுழைகிறார். அங்குள்ள சூரிய தீர்த்தம், அக்னி தீர்த்தம் எல்லாவற்றிலும் முழுகி எழுகிறார். வெண்காடரையும் பிரம்ம வித்யா நாயகியையும் வழிபடுகிறார்.

சில நாட்கள் சென்றதும் ஒருநாள் இரவில், இறைவன் அச்சுத களப்பாளரின் கனவில் தோன்றி, 'இப் பிறவியில் மகப்பேறு எய்தும் பாக்கியம் உனக்கில்லையே' என்கிறார். அச்சுதகளப்பாளரும் 'பரவாயில்லை, புத்திரப் பேறு அரசர்களுக்குத்தான் மிகமிக அவசியம். என் போன்றாருக்கு அவ்வளவு முக்கியமில்லை தான். என்றாலும், பெரிய நாயகியின் திருமுலைப்பாலுண்டு அருள்ஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையின் திருவாக்கு அடியேன் வினை காரணமாகப் பொய்த்துப் போகிறதே என்றுதான் வருந்து கிறேன்' என்கிறார். அவ்வளவுதான்; சுவேதவன ஈசுவரருக்கு ரோசம் வந்து விடுகிறது. அச்சுத களப்பாளரது பழவினை களைக்களைகிறார். அவர் மனைவி கருவுற்று நல்லதொரு ஆண்மகனைப் பெற்றெடுக்கிறாள். மெய்கண்டார் என்னும் தீக்ஷாநாமம் பெற்று சைவ சித்தாந்தத்தின் தலையாய நூலான சிவஞான போதத்தையே இயற்றுகிறார்.

இத்தகைய பெருமகனைப் பெறுவதற்கு காரணமாகி இருந்தது ஞானசம்பந்தர் தேவாரம். அந்த தேவாரத்தில் சிறப்பாக இருப்பது முக்குளநீர்; அந்த முக்குளம் இருப்பது வெண்காடர் கோயில். அந்த கோயிலுக்கே செல்கிறோம் நாம் இன்று.

இந்த திருவெண்காடு சீகாழிக்குத் தென் கிழக்கே ஏழு எட்டு மைல் தூரத்தில் இருக்கிறது. சிகாழியிலிருந்தும், வைத்தீசுவரன் கோயிலில் இருந்தும் காரிலோ, பஸ்ஸிலோ இல்லை வண்டியிலோ, எளிதாகச் செல்லலாம். அவகாசம் இருந்தால், செல்லும் வழியிலிருந்து கொஞ்சம் விலகி விலகிச் சென்று, திருமங்கை ஆழ்வார் அவதரித்த திருஆலித் திரு நகரையும் திரு நாங்கூர்த் திருப்பதிகளையும் அங்குள்ள பெருமாள், ஆழ்வார்களையும் தரிசித்து விட்டுச் செல்லலாம். இந்தத் திருவெண்காடு முத்திநகர், ஞான வனம், ஆதி சிதம்பரம், பேரரங்கம், தருமகோடி என்றும் இன்னும் எண்ணற்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்தது அந்த நாளில், என்று தலவரலாறு கூறும். இங்குள்ள சுவேதவன ஈசுவரர் கோயிலுக்கு மேல வாயில் வழியாகவும் செல்லலாம். கீழ வாயில் வழியாகவும் செல்லலாம். இரண்டு வாயிலும் எப்போதும் திறந்தே இருக்கும்.



வெண்காடு மேல வாசல்

இரண்டு வாயிலிலும் இரண்டு கோபுரங்கள் உண்டு. நாம் வழக்கம்போல், கோயிலை வலம் வந்து கீழவாயில் வழியாகவே நுழைவோம்.

கோயில் பெரிய கோயில். கோயில் மதில் கிழமேல் 792 அடி நீளம், தென்வடல் 310 அடி என்றால் கொஞ்சம் கற்பனை பண்ணியும் பார்த்துக் கொள்ளலாம் தானே. கோயிலுள் நுழைந்து நீண்டு பரந்து திறந்தவெளியைக் கடந்ததும் வந்து சேருவது, சமீப காலத்தில் நாற்பதினாயிரம் ரூபாய் செலவில் உருவான கல்யாண மண்டபந்தான். எல்லாம் ஒரே சிமிண்ட் மயம். வர்ணங்களை வேறே வாரித் தெளித்திருக்கும். அதில் உள்ள வண்ண விஸ்தாரங்கள் எல்லாம் இருபதாம் நூற்றாண்டு ரகத்தைச் சேர்ந்தவை. இங்கே நீண்ட நேரம் இருந்து பார்க்கும் கலை அழகு இல்லை.

நாம் இங்கு வந்தது முக்குளநீரில் நம்மைத் தோய்த்துக்கொள்ளவே. அப்படி முக்குள நீரில் தோய் பவர்களை தோயாவாம் தீவினை என்பதுதானே நாம் அறிந்த உண்மை. ஆதலால் 'விறுவிறு' என்று கோயிலின் வலப் பக்கத்தில் உள்ள சூரியகுளம், அக்கினி குளத்திலும் இடப் பக்கம் உள்ள சந்திர குளத்திலும் இறங்கி முங்கி முழுகலாம்.

ஆனால் நமக்கு முன்னமேயே அந்த ஊரில் உள்ளவர்கள் பலரும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கும், சோப்புத் தேய்த்துக் குளிப்பதற்கும் இந்தக் குளங்களையே உபயோகித்துக் கொண்டிருப்பர். அதோடு நிரம்பவும் தாராளமாகக் குடங்களை விளக்குவர், வேட்டி சேலை களைத் துவைப்பர். ஆதலால் நம் போன்றோருக்குக் குளத்தில் குளிக்க உற்சாகம் இராது. ஆகவே, நீரை அள்ளித் தலைமேல் தெளித்தே நம் தீவினைகளை அகற்றிக் கொள்ள வேண்டும். இந்தக் குளங்களில் பெரியது சந்திர குளம்தான். அக் குளத்தின் கீழ்க்கரையிலேயே மிகப் பெரிய வட விருக்ஷம் அதாவது ஆலமரம் இருக்கிறது. இம்மரத்தடியில் செய்யப்படும் ஜபதபம், தானம், பிதிர்க்கடன் எல்லாம் நல்ல

பயன் தரும் என்கிறார்கள். இத்தலத்துக்கு, இந்த வட ஆலைத் தவிர, அம்மை ஆலயத்தின் பக்கம் இருக்கும் வில்வமும், அகோர மூர்த்தியின் பின்புறம் இருக்கும் கொன்றையும் தல விருட்சங்கள். முக்குளம் உடைத் தாயிருப்பதுபோல, மூன்று மரங்களையும் உடையதாக இருக்கிறது இக்கோயில்.

இனி இக்கோயிலினுள் நுழைந்து சுவேதவனப் பெருமாளை வணங்கி வெளியில் வரலாம். வெண்காடரை வணங்கிய பின் உட்பிரகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றலாம். அங்கேதான் மேலப் பிராகாரத்தில் இத்தலத்துக்கே சிறப்பான அகோர சிவம் தெற்கு நோக்கி நிற்கிறார். அவரை எதிர் நோக்கியே காளியம்மை சந்நிதி இருக்கிறது. இருவருமே நம் உள்ளத்தில் அச்சத்தை எழுப்பு கிறவர்கள்தான். காளியையாவது மற்றக் கோயில்களில் கண்டு வணங்கியிருப்போம். அகோர சிவனை இங்கு மாத்திரம்தான் பார்க்கிறோம்.

**கருநிறமும், மணிமாலை புனை அழகும்,**
**வளை எயிறும், கவினச்செய்ய**
**எரிசிகையும், நுதல்விழியும், நடைக்கோல**
**இணையடியும் இலக, எட்டுக்**
**கரநிலவ மணி, பலகை, வெண்டலை வாள்**
**கடிதுடி ஏர்சூலம் ஏற்று,**
**வெருவ மருத்துவனை அடர் அகோர சிவன்.**

என்றே தலபுராணம் இவரை வர்ணிக்கிறது என்றால் அதிகம் சொல்வானேன். சிவபெருமானை நல்ல சாந்த சொரூபியாய் அனுக்கிரஹ மூர்த்தியாகத்தான் பல தலங்களிலும் பார்த்திருப்போம். சம்ஹார மூர்த்தியாக இருக்கும்போது கூட முகத்தில் ஆங்காரம் இருக்குமே தவிர, பயங்கரம் இருக்காது. சாது மிரண்டால் என்ன ஆகும் என்று கேள்விப்பட்டிருப்போம். ஆம்! இங்கு சிவனாம் சாது

மிரண்டே அகோர சிவனாக இருக்கிறார். அந்த அகோர சிவன் உருவான வரலாறு இதுதான். மருத்துவன் என்று ஓர் அசுரன் இறைவனை நோக்கித் தவம் பண்ணி, வர பலமும் வலியுடைய சூலாயுதத்தையுமே பெற்றவன். அவன் வழக்கம்போல் தேவர்களுக்கு இடுக்கண் செய்கிறான். தேவர்களோ பயந்து தேவர் உலகை விட்டே ஓடி வந்து இத்தலத்தில் வேற்றுருவத்தில் நின்று தவஞ்செய்கிறார்கள். அங்கேயும் வந்து துன்புறுத்த முனைந்து விடுகிறான் மருத்துவன். சிவபெருமானோ முதலில் சாந்தமாக மருத்துவனைத் துரத்தி விரட்ட ரிஷபதேவரையே அனுப்புகிறார். ஆனால் அவனோ சிவபிரானிடம் பெற்ற 'சூலாயுதத்தினால் ரிஷபதேவரது கொம்புகளை முறித்து, காதுகளை அறுத்துத் துரத்தி விடுகிறான். அவரும் வந்து முறையிட பிறக்கிறது கோபம் சிவனுக்கு. அந்தக் கோபமே அகோர சிவனாக உரு எடுக்கிறது. மருத்துவன் பேரில் பாய்கிறது; அவனை சம்ஹரிக்கிறது. அப்படி உருவான அகோர சிவமே கோயிலுக்குள் மேலப் பிராகாரத்தில் கம்பீரமாக நின்றுகொண்டிருக்கிறார். நல்ல சிலை உருவில். ஏன், உற்சவ மூர்த்தமாகச் செப்புச் சிலை வடிவிலுங்கூட நிற்கிறார்.

இந்த அகோர சிவனுக்கு இடப்பக்கம் உள்ள தாமிர சபையிலே இருக்கிறார் நடராஜர் சிவகாமியுடன். சிதம்பரத்தில் உள்ளது போலவே ரகசியம், சபை எல்லாம் இங்கும் இருக்கிறது. இது ஆதி சிதம்பரம் அல்லவா? நடராஜ தரிசனம் செய்த பின் வெளிப் பிராகாரத்துக்கே வரலாம். மேல் வாயிலில் உள்ள கூடகோபுரம் மிகவும் அழகானது. நல்ல சுதை வேலைகள் நிரம்ப உடையது. இந்த வெளிப் பிராகாரத்தின் மேற்குக் கோடியிலே அம்மை பிரம்ம வித்தியா நாயகியின் கோயில். இந்த அம்மையை வணங்கி வெளிவரும்போது அம்மை சந்நிதானத்துக்கு வடபக்கம் உள்ள புதனையுமே வணங்கி விடலாம். இதன்பின் நூற்றுக் கால் மண்டபம் வரை நடந்து அங்குள்ள ஆறுமுகப்


அகோர சிவம்

பெருமானையும் தரிசிக்கலாம். இவர்களைத் தவிர இங்கு கண்டு வணங்க வேண்டியவர்கள் தல விநாயகரான பெரிய வாரணப் பிள்ளையார், துண்டி விநாயகர், காட்சி விநாயகர், காசி விசுவேசுரர் முதலியவர்கள் எத்தனையோ உண்டு. கோயிலைச் சுற்றும் போதே இவர்களையும் தரிசித்து வணங்கிவிட்டு வெளியே வரலாம்.

இங்கு வெண்காடர் வரப் பிரசித்தி உடையவர் என்பதை முன்பே காண்போம். மார்க்கண்டனைப் போல் எட்டு வயதிலே மரணம் என்றிருந்த சுவேத கேதுவுக்காக, யமனுடைய வலிமை அழித்து சுவேத கேதுவுக்கு நித்யத்வம் வழங்கியவர் இவர் என்றும், பின்னார் வேதராசி என்ற பிராமணனைப் பிடித்திருந்த பிரம்மஹத்தி நீங்க வகை செய்தவர் இவர் என்றும் தலவரலாறு கூறும். இவரைப் பூஜித்து அருள் பெற்றவர்களோ, இந்திரன், ஐராவதம் முதலியோர். இவற்றை எல்லாம் விரிக்கில் பெருகும். இக்கோயிலுக்கு ஞான சம்பந்தர் மாத்திரம்தான் வந்தார் என்றில்லை. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் எல்லோருமே வந்திருக்கிறார்கள். வெண்காடரைத் துதித்துப் பாடியிருக்கிறார்கள்.

தூண்டு சுடர்மேனித் தூநீறு ஆடி,
சூலம்கை ஏந்தி ஓர் சுழல் வாய் நாகம்
பூண்டு பொறி அரவம் காதில் பெய்து,
பொற் சடைகள் அவைதாழப் புரிவெண்நூலர்
நீண்டு கிடந்து இலங்கு திங்கள்சூடி
நெடுந்தெருவே வந்துஎனது நெஞ்சம் கொண்டார்
வேண்டுநடை நடக்கும் வெள்ளேறு ஏறி
வெண்காடு மேவிய விகிர்தனாரே

என்பது அப்பர் தேவாரம். சுந்தரருக்கோ இந்த வெண்காடரைக் கண்டதும் சந்தேகத்தின் பேரில் சந்தேகம் எழுந்திருக்கிறது. ஆதலால் கேள்விமேல் கேள்வியாகப் போட்டுத் தள்ளி விட்டார். 'விடங்கராகித் திரிவதென்னே? விடை ஏறித் திரிவதென்னே? விண்ணுளீராய் நிற்பதென்னே? விடம் மிடற்றில் வைத்ததென்ன?' என்பது அவர் கேட்ட கேள்விகளில் சில. இத்தனை கேள்விகளுக்கும் விடை பெறாமலா திரும்பியிருப்பார்? 'விருந்தினனாகி வெண்காடு அதனில் குருந்தின் கீழ் அன்றிருந்த கொள்கையை' விளக்கினார் மணிவாசகர். பின்னர் பட்டினத்தார் என்று பெயர் பெற்ற வெண்காடர் இத்தலத்துக்கு வந்து சிவ பூஜை செய்யும் பேறுபெற்றார் என்பது வரலாறு.

இக்கோயிலின் சரித்திர ஏடுகளைப் புரட்டினால் இன்னும் என்ன என்ன தகவல்கள் எல்லாமோ கிடைக்கும். இக்கோயிலில் சுமார் எண்பது கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ராஜராஜன், கங்கை கொண்ட சோழன், ராஜாதி ராஜன், முதற் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர்கள், சுந்தர பாண்டியன், குலசேகர பாண்டியன், விக்கிரம பாண்டியன் முதலிய பாண்டிய கல்வெட்டுக்களில் ஒரு கல்வெட்டில் 'வடகரை நாங்கூர் நாட்டு, நாங்கூர் ஸ்ரீ திருவெண்காடு உடைய தேவர் ஆலயம்' என்று இக்கோயில் குறிக்கப்

பட்டிருக்கிறது. இந்த நாடு ராஜாதிராஜ வள நாடென்று பெயர் பெற்றிருக்கிறது. சில கல்வெட்டுக்கள் ஆடவல்லார், பிச்சதேவர், இடபவாகன தேவர் உருவங்களைப் பிரதிஷ்டை செய்ததை அறிவிக்கின்றன. சில கல்வெட்டுகளிலிருந்து வளத்து வாழவிட்டான் சந்தி, குலசேகரர், தொண்டைமான் சந்தி முதலிய கட்டளைகளின் பெயர்கள் புலப்படுகின்றன. ஆடரங்கம், ஆரியக் கூத்து நடந்ததை யெல்லாம் இக்கல்வெட்டுக்கள் கூறும். இன்னும் எண்ணிறந்த தகவல்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்க்குக் கிடைக்கும்.

இத்தலத்துக்குச் சென்று முக்குள நீர் தோய்ந்தால் தோயாது தீவினைகள் என்பர் சம்பந்தர். ஆனால் அப்பரோ 'வெண்காடே, வெண்காடே என்பீராகில் வீடாத வல்வினை நோய் வீட்டலாமே' என்றே கூறியிருக்கிறார். நாம் அப்பரோடு சேர்ந்து 'வெண்காடா!' என்று கூவி அழைத்து நம் வல்வினைகளை நீக்கி வீடு திரும்பலாம்.

# 14

# பட்டினத்துறை பல்லவனீச்சுரர்

காவிரிப்பூம் பட்டினம் காவிரியாறு கடலுடன் கலக்கும் இடத்தில் அன்று இருந்தது. இன்று அதன் பெரும் பகுதி கடல் கொள்ளப்பட்டு விட்டது. சங்க காலச் சோழ மன்னர்களுக்குத் தலைநகரமாக விளங்கிய பட்டினம் அது. கடற்கரைத் துறைமுகப்பட்டினம் ஆனதால் அங்கு வியாபாரம் நன்றாகச் செழித்து வளர்ந்திருக்கிறது. பிற நாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வாணிகம் செய்ய வந்தவர்கள் வந்திறங்கும் துறைமுகம் அதுதானே. திருமாவளவன் கரிகாலன் காலத்தில் அந்தப் பட்டினத்துத் தெருக்களின் சிறப்பை, கடியலூர் உத்திரங் கண்ணனார் பட்டினப் பாலையில் விரிவாகச் சொல்கிறார்.

நீரின்வந்த நிமிர் பரிப்புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப்பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காளகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெறிய ஈண்டி

வளம் தலைமயங்கி நின்றது அந்த நகரத்திலே அன்று என்பது நன்கு அறியக் கிடக்கிறது. காப்பிய நாயக நாயகியான கோவலனும் கண்ணகியும் பிறந்து வளர்ந்து மணம் புரிந்திருக்கிறார்கள் அங்கு.

சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள் இந்தக் காவிரிபூம் பட்டினத்தைப் புகார் என்றும், அங்கு இருந்து அரசாண்ட சோழ மன்னனைக் காவிரிநாடன் என்றும் குறித்திருக்கிறார்.

அந்தப் பட்டினத்தில் உள்ளவர்கள் எந்தப் பொருளையும் விரும்பி வேறு இடங்களுக்குச் செல்ல மாட்டார்கள். ஆதலின் அந்த நகரத்தாரே 'புகார்' என்ற பெயருக்கு உரியவர்களாக இருந்திருக்கிறார்கள். (ஐயகோ! பின்னால் அப்பட்டினம் கடல் கொள்ளப்பட்டு அங்குள்ள தன வணிகர்கள் எல்லாம் ராமநாதபுரம் வட்டாரத்தை அல்லவா தேடி வந்து அங்கு புகுந்திருக்கிறார்கள். அவர்கள் தானே இன்று நகரத்தார் என்று அழைக்கப்படுகிறார்கள்.)

**நிறைமதியும் மீனும் என**
**அன்னம் நீள் புன்னை**
**அரும்பிப் பூத்த**
**பொறைமலி பூங்கொம்பு ஏற,**
**வண்டு ஆம்பல் ஊதும்**
**புகாரே எம் ஊர்.**

என்று அந்த நகர மக்கள் பெருமையோடு பாடும் நிலையில் இருந்திருக்கிறது அந்நாளில் அந்தப் பூம்புகார்ப்பட்டினம். அந்தக் காவிரிப்பூம்பட்டினத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

இந்தக் காவிரிப்பூம்பட்டினம் இன்று பொலிவிழந்து கிடக்கிறது. நகரத்தின் பெரும் பகுதி கடல் கொள்ளப்பட்டு விட்டது என்கின்றனர். எஞ்சிய பகுதியும் ஒரே மணற்

பரப்பாகவே இருக்கிறது. வெள்ளாமை விளைச்சல் அதிகம் இருப்பதாக தெரியவில்லை. அந்தப் பழைய பட்டினத்துப் புகழை ஏதோ ஓர் அளவுக்காவது இன்று வைத்துக் கொண்டிருப்பது அங்குள்ள பல்லவனீச்சுரர் கோயிலே. கோயிலும் கோயிலைச் சார்ந்த கிராமமும் பல்லவனீச்சுரம் என்றே அழைக்கப்படுகின்றன. இக்கோயிலில் தான் பல்லவ னீச்சுரர் சௌந்தர நாயகியுடன் கோயில் கொண்டிருக்கிறார். இப்பல்லவனீச்சுரர் கோயில் சென்று சேர, ரயிலிலிருந்து, சீகாழியில் இறங்க வேணும். அங்கிருந்து தென்கிழக்காகப் பத்து மைல் பஸ்ஸிலோ, வண்டியிலோ போக வேணும். வழியில் இருக்கும் வெண்காட்டில் இறங்கி சுவேதாரண் யேசுரரையும் வணங்கிவிட்டே மேல் நடக்கலாம். பல்லவனீச்சுரர் கோயில் பெரிய கோயில் அல்ல, நல்ல மதில், ராஜகோபுரம் விமானம் எல்லாம் உடைய சிறிய கோயில் தான். இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் ஒரு பெரிய தனவணிகர், கோயிலுக்குத் திருப்பணி செய்து கோயிலை முழுக்க முழுக்கப் புதுப்பித்திருக்கிறார். 'ஆலயம் புதுக்குக, அந்தணாளர்தம் சாலையும் சதுக்கமும் சமைக்க' என்று அன்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடினானே. அவன் கட்டளையைத் தலைமேற்கொண்டு, இந்தப் பட்டினத்துறை பல்லவனீச்சுரர் கோயிலைப் புதுப்பித்திருக்கிறார். சமீப காலத்தில் இந்தக் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்திருக்கிறது. 1951-ம் வருஷம் இங்கு மிகவும் விமரிசையாகச் சிலப்பதிகார மகாநாடு ஒன்றும் நடந்தது.

பல்லவ அரசனால் கட்டப்பட்ட காரணத்தால் பல்லவனீச்சுரம் என்று பெயர் பெற்றது என்பர். எந்தப் பல்லவ அரசன் என்று தெரியக் கூடவில்லை, கல் வெட்டுக்கள் ஒன்றும் இல்லாத காரணத்தால். இந்தப் பல்லவனீச்சுரத்துக்கு சமய குரவர்களில் சம்பந்தர் ஒருவரே வந்திருக்கிறார். அவர் பாடிய பதிகமும் ஒன்றுதான் என்றாலும் பாடிய பாடல்கள் பதினொன்றும் அழகாக இருக்கின்றன.

பரசு பாணியர் பாடல் வீணையர்
பட்டினத்துறை பல்லவனீச்சுரத்து
அரசு பேணி நின்றார்
இவர் தன்மை யாரறிவார்?

என்று மயக்கமுற்றார்போல் தொடங்கி, செம்மேனி எம்மானாகிய சிவபெருமானது மேனி அழகினையும் இயல்புகளையும் விரித்தே சொல்கிறார். பவளமேனியர், திகழும் நீற்றினர், பண்ணில் யாழினர், பச்சைமேனியர், பிச்சைகொள்பவர், பைங்கண் ஏற்றினர், திங்கள் சூடுவர், பாதம் கைதொழ வேதம் ஓதுவர் என்றெல்லாம் பாடிப் பரவியபின் இந்த இறைவனைப் பற்றிச் சொல்வதற்கு வேறு ஏதேனும் மிச்சம் இருக்கவா போகிறது?


இந்தப் பாடல்களைப் பாடிக்கொண்டே நாமும் கோயிலுள் நுழையலாம். கோயிலின் வெளிப் பிராகாரத்திலே தெற்கு மதிலையொட்டி ஒரு சிறு கோயிலைக்கட்டி அங்கு பட்டினத்து அடிகளை இருத்தி யிருக்கிறார்கள். இது சமீபத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. பட்டினத்துப் பிள்ளையார் என்பதனாலேயே அவர் இந்தக் காவிரிப்பூம்பட்டினத்துக்காரர் என்பதை அறிவோம். அவர் அந்தப் பட்டினத்திலே சிவநேயர் என்னும் தனவணிகரின் மகனாய்த் தோன்றுகிறார். பக்கத்திலேயுள்ள, திருவெண்காடரது பெயரையே தாங்குகிறார். நீண்ட காலமாகப் பிள்ளை இல்லாதிருந்து, கடைசியில் திருவிடை மருதூர் மருதவாணனையே குழந்தையாகப் பெறுகிறார். அந்த மருதவாணன் வளர்ந்து பெரியவனாகிய பின், ஒருநாள் தன் தாயாரிடத்து ஒரு சிறிய பெட்டியைக் கொடுத்து விட்டு மறைந்து விடுகிறான். மனைவியிடம் இருந்த பெட்டியை வெண்காடர் வாங்கித் திறக்க. அதனுள்ளே ஓர் ஓலைச் சுருளும் ஒரு காதற்ற ஊசியும் இருப்பதைக் காண்கிறார். ஓலைச் சுருளை நீட்டிப் படித்தால் அதிலே 'காதற்ற ஊசியும்

வாராது காண் உம் கடை வழிக்கே' என்று எழுதப் பட்டிருக்கிறது. அவ்வளவுதான், ஞானோதயம் உண்டாகி விடுகிறது வெண்காடருக்கு.

> சூதுற்ற கொங்கையும் மானார்
> கலவியும் சூழ் பொருளும்
> போதுற்ற பூசலுக்கு என்செயலாம்?
> செய்த புண்ணியத்தால்
> தீது அற்ற மன்னவன் சிந்தையில்
> நின்று தெளிவதற்கோ
> காது அற்ற ஊசியைத் தந்து
> விட்டான் என்றன் கைதனிலே

என்று பாடிக்கொண்டே வெளியேறிவிடுகிறார். அன்று முதல் இந்த வெண்காடர் பட்டினத்துப் பிள்ளையார் என்ற பெயரோடு, தமிழகம் முழுவதும் உலவி, அரிய உபதேசங்களைப் பாடல்களாகப் பாடி, கடைசியில் திருஒற்றியூர் சென்று முத்தி பெற்றிருக்கிறார். திருஒற்றியூர் கடற்கரையிலே உள்ள சமாதிக் கோயிலைத்தான் முன்பே பார்த்திருக்கிறோமே. அந்தப் பட்டினத்துப் பிள்ளையையே இந்தப் பல்லவனீச்சுரத்து மக்கள், அவர் பிறந்த ஊர்ப் பெருமையுற, கோயில் கட்டி பிரதிஷ்டை செய்து வணங்குகிறார்கள். நாமும் அவரை வணங்கி விட்டுப் பிரதான கோயிலுக்குள் நுழையலாம். கோயில் மகா மண்டபத்தை ஒட்டியே தெற்கு நோக்கியவளாய், சௌந்தர் யநாயகி நிற்கிறாள். அவளையும் வணங்கி அதன்பின் உட்கோயிலுள் சென்றால் அங்கு லிங்கத் திருவுருவில் இருக்கும் பல்லவனீச்சுரரையும் தொழலாம். இந்த அன்னையையும் அத்தனையையும் பற்றிச் சிறப்பாகச் சொல்வதற்கு ஒன்றும் இல்லைதான். என்றாலும் இக்கோயிலில் உள்ள செப்புச் சிலைகளைப் பற்றி கூறாமல் இருத்தலும் இயலாது. இங்குள்ள சோமாஸ்கந்தர்,

திரிபுராந்தகர் எல்லாம் நல்ல சோழர் காலத்துச் செப்புப் படிமங்கள்; அழகானவை. இவைகளையெல்லாம் தூக்கி அடிக்கும் அன்னையின் வடிவம் ஒன்றும் இங்கு உண்டு. சாதாரணமாக அன்னையையும் அத்தனையும் சேர்த்துச் சமைத்து இருவருக்கும் இடையிலே கந்தனை நிறுத்தி அந்த மூர்த்திக்கு சோமாஸ்கந்தன் என்று பெயர் சூட்டி வைத்திருக்கும் கோலமே அநேகம். ஒவ்வொரு கோயில் பிரம்மோற்சவத்துக்கு எழுந்தருளப் பண்ணும் வடிவம் இந்த சோமாஸ்கந்த மூர்த்தம் தானே. இங்கே அன்னை மடிமீது தவழ்ந்த முருகன் அவசரம் அவசரமாக இறங்கி எங்கோ ஓட முயலும் நிலை. அன்னை பார்வதி ஒரு காலைத் தூக்கி வைத்து ஒருகாலைத் தொங்கவிட்டு ஒயிலாக இருக்கிறாள். ஓட விரும்பும் பாலனைத் தன் பக்கம் இழுத்துத் தழுவ முனையும் நிலையைச் சிற்பி அற்புதமாக வடித்திருக்கிறான். இந்தத் தாயையும் சேயையும் சேர்த்து வடிக்கத் தோன்றிய கலைஞனது கற்பனை உயர்ந்தது. இந்தச் செப்புப் படிமம் ஒன்றைக் காணவே இக்கோயிலுக்கு ஒரு நடை போய் வரலாம்.



பல்லவனீச்சுரம் தாயும் சேயும்

பல்லவனீச்சுரர் கோயிலில் நிற்கும்போதே நம்மிடம் அங்குள்ளவர்கள் சொல்லுவார்கள்.

'இது பட்டினத்தாரது அவதாரத் தலம் மாத்திரம் அல்ல, அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவரான இயற்பகை நாயனாரின் அவதாரத் தலமும் இதுவேதான்' என்று. அவரைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமே. காவிரிப்பூம்பட்டினத்து வணிகர் மரபிலே ஒரு பெரியவர். அடியார்கள் எதைக் கேட்டாலும் இல்லை என்று கூறாத இதயம் படைத்தவர் அவர். இப்படி உலக மக்களின் இயல்புக்கே மாறாக இருந்த காரணத்தால் இயற்பகையார் என்றே எல்லோராலும் அழைக்கப்பட்டார். இவரது பெருமையை உலகுக்கு அறிவிக்க இறைவன் திருவுள்ளம் கொள்கிறார், கிழவேதியர் வடிவில் வந்து. இயற்பகையிடம் அவருடைய மனைவியையே தமக்குத் தர வேண்டுகிறார். அவரோ தமக்கு உரிய பொருள் எல்லாம் சிவனடியார்க்கே உரியன என்பவர் ஆயிற்றே. ஆதலால் மனைவியை அழைத்து வேதியரிடம் ஒப்புவித்து விடுகிறார். இந்த அநியாயத்தைப் பார்த்துக் கொண்டு உற்றார் உறவினர் சும்மா இருப்பார்களா? அவர்கள் வந்து தடுக்கின்றனர். இயற் பகையோ அவர்களை யெல்லாம் ஆயுதங்களால் தாக்கி, பக்கத்தில் உள்ள சாய்க்காடு என்னும் தலம்வரை சென்று வழியனுப்பி விட்டுத் திரும்புகிறார். திரும்பவும் இறைவன்

**இயற்பகை முனிவா ஓலம்!**
**ஈண்டு நீ வருவாய் ஓலம்!**
**செயற்கரும் செய்கை செய்த**
**தீரனே ஓலம் ஓலம்!**

என்று கூவுகிறார். இயற்பகையார் ஓடிவந்தால் வேதியர் விடை ஏறும் வித்தகனாக காட்சி தந்து பக்கத்தில் உள்ள கோயிலுள் சென்று மறைகிறார். இயற்பகையின் பெருமையை உலகம் அறிகிறது அதனால்.

இயற்பகை நாயனார் சரிதம் நம்மைப் பல்லவனீச்சுரத்திலிருந்து சாய்க்காட்டுக்கே இழுத்து

வந்திருக்கிறது. வந்ததோ வந்தோம், நாமும் சாயாவனம் என்று இன்று வழங்கும் சாய்க்காடு சென்று அங்குள்ள சாயாவனசுவரரையும் குயிலினும் நன்மொழியாளையும் வணங்கி விட்டே திரும்பலாம். சாய்க்காட்டுக்கு வெகு தூரம் நடக்க வேண்டியதில்லை. உள்ளூர்க்காரரைக் கேட்டால் பல்லவனீச்சுரத்திலிருந்து கூப்பிடு தூரமே என்பார்கள். ஆனால் நடந்துபோனால் ஒன்று ஒன்றரை மைலுக்குக் குறைவில்லை. பல்லவனீச்சுரத்துக்கு மேற்கே இருக்கிறது கோயில். ஆதிசேடனது நாகரத்தினம் இந்தக் காட்டில் ஒளி வீசிய காரணத்தால் இத்தலம் சாய்க்காடு என்று பெயர் பெற்றது என்பர். (சாய் என்றால் ஒளி என்று பொருள்தானே) உபமன்யு முனிவர் இங்கு வந்து பூசித்துப் பேறு பெற்றிருக்கிறார். கோயிலுக்கு எதிரே ஐராவதத் தீர்த்தம் இருக்கிறது. கோயிலை ஒட்டித் தேர் போன்ற விமானம் ஒன்றும் சக்கரத்துடன் இருக்கிறது. தேவர் கோனாகிய தேவேந்திரன் தன் தாயாருக்காக இக்கோயிலை அப்படியே விண்ணுலகத்துக்கு எடுத்துச் செல்ல முயன்றான் என்றும், அதில் தோல்வியுற்றான் என்றும் அவன் அன்று கொண்டு வந்த தேரே இன்றும் இருக்கிறது என்றும் அறிவோம். இக்கோயிலில் பதின்மூன்று கல்வெட்டுக்கள். பத்து,சோழர் காலத்தியது, மூன்று பாண்டியர்காலத்தியது. விக்கிரம சோழ தேவன், கோனேரின்மைகொண்டான், மூன்றாம் குலோத்துங்கன், திரிபுவனச் சக்கரவர்த்தி, சுந்தர பாண்டிய தேவன் முதலியோர் ஏற்படுத்திய நிபந்தங்களைப் பற்றியெல்லாம் கல்வெட்டுகள் கூறும்.

இந்த விவரங்கள் தெரிந்து கொள்ளத்தானா இங்கு வந்தோம் என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் விழுகிறது. நான் உங்களை இங்கு அழைத்து வந்தது இதற்காக எல்லாம் அல்ல. இங்கு ஒரு மூர்த்தி செப்புச் சிலை உருவில், பார்த்த உடனேயே தெரியும் அவன் சுப்பிரமணியன் என்று. வலது கையிலே சக்தி வேலைத்



சாய்க்காடு வேலவர்

தாங்கியிருப்பதுடன் ஒரு நீண்ட வேலையும் அணைத் தவனாகத் தானே நிற்கிறான். ஆனால் இவன் தன் இடது கையில் ஒரு வில்லையும் தாங்கி யிருக்கிறானே! இவன் என்று வில்லை ஏந்தினான்? என்று ஐயுறுவோம் நாம். வில்லை ஏந்தியவன் ராமன். வேல் எடுத்தவன் முருகன். இந்த இருவரையும் இணைத்து வில் லேந்திய வேலன் ஒருவனை உருவாக்கு வதன் மூலமாக சைவ வைணவ வேற்றுமைகளையே தகர்த்து எறிய முடியாதா? என்று எண்ணியிருக்கிறான் ஒரு கலைஞன். வடித்திருக்கிறான் ஒரு திருவுருவத்தை. அந்த வில்லேந்திய வேலனது திருக் கோலத்தை இந்தச் சாய்க்காட்டில் கொண்டு வந்து நிறுத்தியும் இருக்கிறான். நல்ல மூன்று அடி உயரம், தலையிலே நீண்டுயர்ந்த கிரீடம், கழுத்திலே அணிகொள் முத்தாரம் தோளிலே புரளும் வாகுவலயம், காலிலே கழல் என்றெல்லாம் அமைத்ததோடு, வில்லையும் சேர்த்துத் தாங்க இடையினை வளைத்துத் தலையினைச் சாய்த்து நிற்கும் நிலை எல்லாம் கலை உரைக்கும் கற்பனையையும் கடந்து நிற்கிறது. இந்த வில்லேந்திய வேலன் ஆதியில் திருச்செந்தூரில் இருந்தவன் என்றும், பின்னர் காவிரிப்

பூம்பட்டினத்தை அடுத்த கடலிலிருந்து வெளி வந்தவன் என்றும் கூறுகின்றனர் அங்குள்ளவர்கள். ஆம்! சூரசம்ஹாரம் முடிந்தபின் இவன் கடலுள் பாய்ந்து கிட்டத்தட்ட இருநூறு மைல் நீந்தி இந்தக் காவிரிப்பூம்பட்டினத்திலே வந்து கரையேறியிருக்க வேணும். இல்லாவிட்டால் இவன் எப்படி இந்தச் சாய்க்காட்டில் வந்து நின்று கொண்டிருக்க முடியும் என்று கேட்கிறேன்? பல்லவனீச்சுரரைக் காணச் சென்ற நாம் வில்லேந்திய வேலனையுமே கண்டு தொழுது திரும்புகின்றோம் இன்று.

# 15

## கடவூர் கால சம்ஹாரர்

மார்கண்டன் கதை சிரஞ்சீவித் தன்மை பெற்றதொன்று. மிருகண்டு முனிவனுக்குப் புத்திரப்பேறு இல்லை. அதற்காக அவன் தவம் புரிகிறான். அவன் தவத்துக்கு இரங்கிய இறைவன் 'நீண்ட ஆயுளும் குறைந்த அறிவுமுடைய புத்திரன் வேண்டுமா? இல்லை, குறைந்த ஆயுளும் நிறைந்த அறிவும் உள்ள புத்திரன் வேண்டுமா?' என்று கேட்கிறான். முனிவனோ 'புத்திரன் குறைந்த ஆயுள் உள்ளவனாக இருந்தாலும் பரவாயில்லை. நிறைந்த அறிவுடையவனாகவே இருத்தல் வேண்டும்' என்கிறான்.

மிருகண்டுவின் புத்திரனாய் மார்க்கண்டன் பிறக்கிறான். பதினாறு வயது வரையே அவன் இந்நில உலகில் வாழுதல் கூடும் என்று இறைவன் திட்டமாக உரைத்து விடுகிறான். பதினாறு வயது நிறைவெய்தும் காலம் வருகிறது. அன்னை தந்தையர் அனுமதியோடு, கடவூருக்கு வருகிறான். அங்கு கோயில் கொண்டுள்ள அமிர்தகடேசுவரரைப் பூசை செய்கிறான். அவன் பூசை செய்து கொண்டிருக்கும் பொழுதே அவனுக்குக் குறித்த பதினாறு வயது நிரம்பி விடுகிறது. வருகிறான் காலன். மார்கண்டன் மீது பாசக் கயிற்றையே வீசுகிறான். அவனோ பூசை செய்யும் லிங்கத் திருவுருவையே கட்டிப் பிடித்துக் கொள்கிறான்.

அப்போதும் விடுகிறானில்லை காலன். இறைவனுக்கோ காலன் பேரிலேயே கடுங்கோபம். 'எந்த நியதிக்கும் விதிவிலக்கு என்பது கிடையாதா? என்னையே கட்டிப் பிடித்திருக்கிற நேரத்திலுமா இவன் தன் கடமை தவறாது அவன் உயிர் கவர வரவேணும்?' என்று எண்ணுகிறான். லிங்கத்திலிருந்தே கிளம்பி எழுந்து காலனை எட்டி உதைத்து விலக்குகிறான்; சூலத்தையே பாய்ச்சுகிறான். மார்கண்டன் என்றும் பதினாறு வயதுடன் நித்யத்வம் பெற்றுச் சிரஞ்சீவியாய் வாழ்கிறான். இப்படி இறைவன் காலனைக் காய்ந்த வரலாற்றைச் சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாத்திரம் அல்ல, திருவிளையாடல் புராணம் பாடிய பரஞ்சோதியுமே பாடியிருக்கிறார்.

**கொன்றாய் காலனை, உயிர்கொடுத்தாய்**
**மறையோனுக்கு, மான்**
**கன்றாருங் காவாக் கடவூர்**
**திருவீரட்டத்துள்**
**என் தாதை பெருமான்**
**எனக்கு யார்துணை நீயலதே?**

என்பதுதான் சுந்தரர் பாடிய பாட்டு. இப்படி மார்கண்டனுக்கு அருள் செய்யக் காலனைக் காய்ந்த கால சம்ஹாரர் பிரதான மூர்த்தியாக விளங்கும் தலம் தான் திருக்கடவூர். இன்றும் நீண்ட வாழ்வைப் பெற விரும்புபவர்கள் சென்று ஆயுஷ் ஹோமம் எல்லாம் செய்யும் இடமும் இதுதான். இந்தத் திருக்கடவூருக்கே செல்கிறோம் நாம் இன்று.

இந்தத் திருக்கடவூர் தஞ்சை ஜில்லாவிலே மாயூரம் தாலுகாவிலே இருக்கிறது. மாயூரம் தரங்கம்பாடி ரயில்ப் பாதையிலே சென்று 'திருக்கடையூர்' என்னும் ஸ்டேஷனில் இறங்கி இரண்டு பர்லாங்கு கிழக்கு நோக்கி நடந்தால் போதும். இல்லை, இன்னும் கொஞ்சம் விரைவாகவே

செல்ல விரும்பினால் மாயூரம் ஜங்ஷனில் இறங்கி, காரில் ஏறிக் கண்ணை மூடிக்கொண்டு நேர்கிழக்கே பதின்மூன்று மைல் சென்றாலும் இத்தலம் வந்து சேரலாம். (திருக்கடவூர் என்பதையே திருக்கடையூர் ஆக்கியிருக்கிறார்கள் மக்களும்' ரயில்வே நிர்வாகத்தாரும். இதற்குத் தக்க ஆதாரம் இல்லாமலும் இல்லை. அந்தப் பழைய சங்கீதக் கோவலன் நாடகத்திலே 'திருக்கடையூர்' என்பதும் இது தானோ? தேரோடு வீதி என்பதும் இது தானோ?' என்று பாடிக் கொண்டே கோவலன் மாதவியைத் தேடிக்கொண்டு இங்கு வந்திருக்கிறான், அது போதாதா?) அட்டவீரட்டத் தலங்களில் இந்தத் திருக்கடவூர் ஒன்று.

இந்தத் தலத்துக்குத் திருக்கடவூர் என்று ஏன் பெயர் வந்தது? அன்று பாற்கடலையே தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து கடைந்து அமுதம் எடுத்திருக்கின்றனர். இந்த அமுதத்தை அசுரர்களுக்குக் கொடுக்காமல் தாங்களே உண்டு அமரத்வம் பெற தேவர்கள் எண்ணி அதை அசுரர்கள் அறியாமல் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அப்படிக் குடத்திலே நிரப்பிக்கொண்டு வந்த அமுதத்தை ஓரிடத்தில் இறக்கி வைத்துவிட்டு நீராடச் சென்றிருக்கின்றனர். நீராடிவிட்டு வந்து குடத்தை எடுக்க முயன்றால் அது பூமியிலே வேர் ஊன்றி நின்று எடுக்கவே இயலாதிருந்திருக்கிறது. அப்படி அமுதக்குடம் லிங்கத் திருவுருவில் நிலைத்து நின்ற இடமே கடவூர். அப்படி நிலைத்து நின்றவரே அமுதகடேசுவரர். இந்த அமுதகடேசுவரர் சந்நிதி மேற்கு நோக்கியே இருக்கிறது. கோயில் மிகப்பெரிய கோயில். கோயில் வாயிலில் இருக்கும் ராஜகோபுரம் மிகவும் கம்பீரமாக உயர்ந்திருக்கிறது. சமீபத்தில் புதுப்பிக்கப் பெற்றிருக்கிறது. வழக்கமாக வாரிக்கொட்டும் வர்ண விஸ்தாரங்கள் இல்லாமல் கண்ணுக்கு இனிமையாய் இயற்கையான

'செமண்ட்' வர்ணத்திலேயே இருக்கிறது. கோயில் பஞ்ச பிரகாரத்துடன் இருக்கிறது. மூன்று பிராகாரத்தைக் கடந்தே மகாமண்டபம் வரவேணும், அந்த மண்டபத்தின் இடப்பகக்கத்திலே இருப்பவர்தான் கள்ளவாரணப் பிள்ளையார். தேவர்கள் கொண்டு வந்த அமுத கலசத்தைக் களவாடி எடுத்து ஒளித்து வைத்து, பின்னர் அவர்கள் வீழ்ந்து வணங்கிய பின்னரே கொடுத்தார் என்பது தல வரலாறு. ஆம்! திரிபுர சம்ஹார காலத்திலேயே, தன்னை நினையாது தன் தந்தை புறப்பட்டார் என்பதற்காக அவருடைய தேரின் அச்சையே முறித்தவராயிற்றே. அவர் சும்மா விட்டு விடுவாரா இந்தத் தேவர்களை? நாமும் அவரை முதலிலேயே வணங்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் எதையாவது நம்மிடமிருந்தும் திருடி ஒளித்து வைத்து விடுவார்.

இந்த மண்டபத்தின் வலப்பக்கத்திலேதான் காலசம்ஹாரர் அழகிய சபை ஒன்றில் கோயில் கொண்டிருக்கிறார். கடிந்த காலனை நிக்கிரஹ அனுக்கிரகம் பண்ணின அவசரத்தில் தெற்கு முகமாக எழுந்தருளி யிருக்கிறார். வலது கரங்களில் சூலமும் மழுவும், இடது கரங்களில் பாசமும் தர்சனி முத்திரையும் ஏந்தியவராய் நிற்கிறார். வலது காலை ஊன்றி இடது காலை உயர்த்தி உதைக்கும் நிலை. யமனோ காலசம்ஹாரர் காலடியில் தலைகீழாக விழுந்து கிடக்கின்றான், கூப்பிய கையராய் மார்க்கண்டேயரும் நிற்கிறார் அங்கே. இந்தக் காலசம்ஹார மூர்த்தி செப்புச்சிலை வடிவில் அமைந்த கம்பீரமான திருவுரு என்றாலும் இந்த மூர்த்தியை அவன் இருக்கும் வண்ணத்திலே நாம் காண முடியாது. வெள்ளி மஞ்சத்தில் ஏறி நின்று தங்கக் கலசமும் பட்டுப் பீதாம்பரங்களும் அணிந்தவராய்த்தான் காட்சி கொடுப்பார். இவருக்கு வருஷத்துக்குப் பதினொரு தடவைதானே அபிஷேகம். அபிஷேக காலத்துக்குக்கூட ஆடை அணிகளைப் பூரணமாகக் களையமாட்டார்களே. இந்தக் காலசம்ஹாரர்

எப்படி லிங்கத் திருவுருவிலிருந்து எழுந்தார் என்பதைக் காண, கோயில் முதல் பிராகாரத்தில் இருக்கும் பிச்சக் கட்டளை ஆபீசுக்கே போகவேணும். அங்கே சின்னஞ்சிறு உருவில் இருப்பவரைப் பார்த்தே திருப்தி அடைய வேணும். மகா மண்டபத்திலிருக்கும் காலசம்ஹாரர் சந்நிதிக்கு எதிரே யமனார் அவருடைய எருமை ஊர்தியுடன் கூப்பிய கையராய் நிற்கிறார். இறைவன் திருவடியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் பக்கம் போகக்கூடாது என்ற ஞான உதயம் அவருக்கு வந்திருக்கும் அல்லவா?

காலசம்ஹாரரை வணங்கி எழுந்தபின் நாம் அமுதகடேசுவரர் சந்நிதிக்குச் செல்லலாம். இந்தச் சந்நிதி முன்புதான் சங்கு மண்டபம் இருக்கிறது. கார்த்திகை மாதம் சோமவாரங்களில் எல்லாம், வலம்புரிச் சங்குடன் கூடிய ஆயிரத்தெட்டு சங்குகளில் தீர்த்தம் நிறைத்து, பூசை முதலியன செய்து அந்தச் சங்கு தீர்த்தத்தைக் கொண்டே அமுதகடேசுவரருக்கு அபிஷேகம் நடக்கும். மார்க் கண்டேயர் இந்த மூர்த்தியைச் சங்காபிஷேகம் செய்தே வழிபட்டார் என்று ஐதீகம். இந்தச் சங்காபிஷேகம் நடக்கும் போது அமுதகடேசுவரரைத் தரிசிக்கும் பேறு கிடைத்தால் லிங்கத் திருவுருவில் அன்று யமன் மார்க்கண்டேயனைச் சுற்றி வீசிய பாசக்கயிற்றின் தழும்பு இருப்பது தெரியும். இந்த அமுதகடேசுவரரை வணங்கிய பின் வெளியே வரலாம். வெளியே வந்தபின் அந்த வெளிப்பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவராய் இருக்கும் அன்னை அபிராமியைக் கண்டு தொழ அவரது கோயிலுள் நுழையலாம்.

இந்த அபிராமிதான் காலசம்ஹாரரையும் அமுதகடேசுவரரையும் விடப் பிரசித்திபெற்றவள். ஆயுள் விருத்தியை விரும்புபவர் காலனைக் காய்ந்த கடவூர் உறை உத்தமனை வழிபட்டால், வாழ்க்கையில் இடர் உற்று இன்னல் அடைபவர்கள் எல்லாம் அன்னை அபிராமியையே வழிபடுகிறார்கள். சரஸ்வதி தேவியே

அபிராமியைப் பூஜித்து அருள் பெற்றாள் என்றால் அதிகம் சொல்வானேன். இந்த அபிராமியினிடத்திலே அளவுகடந்த பக்திகொண்டிருக்கிறார் ஒரு பட்டர். பக்திமுற்ற முற்ற உன்மத்தராகவே ஆகிவிடுகிறார். இதைக் கண்டு அர்ச்சகர்கள் அவரை வெறுக்கிறார்கள், பொறாமையே அடைகிறார்கள். ஒரு நாள் தஞ்சை மன்னன் வந்தபோது, அமாவாசையைப் பௌர்ணமி என்றே இவர் கூற, அதை வைத்தே அர்ச்சகர்கள் கயிறு திரிக்க தம் தவறை உணர்ந்த பட்டர் பாட ஆரம்பிக்கிறார். 'உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம்' என்று துவக்கி எழுபத்து எட்டுப் பாட்டுக்கள் பாடி விடுகிறார். இனி எழுபத்து ஒன்பதாவது பாட்டு வருகிறது.

**விழிக்கே அருளுண்டு அபிராம**
**வல்லிக்கு, வேதம் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு**
**எமக்கு, அவ்வழி கிடக்க**
**பழிக்கே சுழன்று வெம்**
**பாவங்களே செய்து பாழ்நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர்**
**தம்மோடு என்னகூட்டு இனியே?**

'தம்மோடு என்னகூட்டு இனியே?' என்று அவர் பாடி முடித்தாரே இல்லையோ, அபிராமி தன் காதில் இருந்த தோடு ஒன்றைக் கழற்றி ஆகாயத்திலே வீசி எறிகிறாள். அந்தத் தாடாங்கமே வான வீதியிலே பூரண சந்திர வடிவமாகக் காட்சி அளிக்கிறது. ஆம்! அமாவாசை அன்றே பௌர்ணமி நிலவு உதிப்பதைக் கண்டு அரசன் அர்ச்சகர்கள் எல்லாரும் வியந்து நிற்கின்றனர். பட்டரின் திருவடியில் விழுந்து வணங்கி அவரது மன்னிப்பை வேண்டுகின்றனர். இப்படி அவர் பாடிய நூறு பாட்டுக்கள்தான் அபிராமி அந்தாதி. இந்தப் பட்டரே அபிராமி பட்டர் என்றும் பெயர் பெறுகிறார். அந்தாதிப் பாடல்கள் எல்லாம் அருமை

யானவை. தேவியைத் தொழுவதற்கேற்ற பாசுரங்களாக அமைந்தவை. இன்னலுற்று இடர்ப்படுவார் இந்தப் பாடல்களைப்பாடி அன்னை அபிராமியை வழிபட்டால் எல்லா நலமும் பெறுவர் என்பது நம்பிக்கை. அபிராமியின் கடைக்கண் நோக்கினால் மக்கள் பெறும் பேறுகள்தான் எத்தனை எத்தனை; அதையுமே சொல்கிறார் அபிராமி பட்டர்.


**தனந்தரும், கல்விதரும்,**
**ஒருநாளும் தளர்வு அறியா**
**மனந்தரும், தெய்வ வடிவும்தரும்**
**நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனந்தரும், நல்லன எல்லாம்தரும்,**
**அன்பர் என்பவர்க்கே,**
**கனம் தரும் பூங்குழலாள்**
**அபிராமி கடைக்கண்களே**

என்பதுதான் பாட்டு.

இத்தனையும் தெரிந்துகொண்டே அபிராமி சந்நிதி முன் சென்று அவளை வணங்கலாம். அன்னை அபிராமியின் திருவுருவம் மிக்க அழகு வாய்ந்தது. மூன்றடி உயரத்திலே அழகானதொரு பீடத்திலே நான்கு கரங்களோடு நின்று கொண்டிருக்கிறாள். அபய வரதமுத்திரைகள் தாங்கிய இரண்டு கைகள் போக மற்றைய இரண்டு கரங்களிலும் மாலையும் மலரும் தாங்கி அழகொழுக நிற்கிறாள். என்றைக்குமே அவள் அலங்காரம் பிரமாதம்தான். அதிலும் சோமவாரத்திலும் சுக்கிர வாரத்திலும் அவள் திருக்கோலம் பன்மடங்கு பல்கிப் பெருக அலங்கரித்து மகிழ்கின்றனர். சின்னஞ் சிறு பெண்ணாய், வழிபடும் அடியவர் துயர்துடைக்கத் துடித்துக் கொண்டிருக்கும் அன்னையாய் அவள் காட்சி கொடுக்கிறாள் பக்தர்களுக்கு எல்லாம். இப்படியெல்லாம் அருளாட்சி செய்து அன்பர் துயர்

துடைக்கும் தேவியாக இருப்பதனாலேதான் 'கரும்பினில் கட்டி போன்ற கடலூர் வீரட்டானரை' விடப் புகழ் பெற்றவளாக விளங்குகிறாள். ஆம்! இந்தக் காலத்தில் யார் நீண்ட நாள் வாழவேண்டும் என்று விரும்புகின்றார்கள்? இருக்கின்ற நாட்களில் நோய் நொடி இல்லாது இன்னல் இடர் இல்லாது, வாழ்வதைத்தானே விரும்புவார்கள். அதை அருளுபவள்தானே அபிராமி.

இத்தலத்தைப் பற்றி இன்னும் எவ்வளவோ கூறலாம். ஏழு கன்னிகைகள், துர்க்கை முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றிருக்கிறார்கள். தன் மனைவியின் தாலியை விற்றுக் குங்கிலியத் தொண்டைச் செய்த குங்கிலியக் கலையரும், அரசனிடம் பொருள் பெற்றுப் பல திருப்பணிகள் செய்த காரிநாயனாரும் அவதரித்து முத்தி பெற்றிருக்கிறார்கள். தேவாரம் பாடிய மூவரும் இத் தலத்துக்கு எழுந்தருளிக் கடலூர் வீரட்டனாரைக் கசிந்து பாடி இருக்கிறார்கள். இம்மட்டோடு இக்கோயில் சரித்திரப் பிரசித்தியும் பெற்றிருக்கிறது. ஐம்பத்து நாலு கல் வெட்டுக்கள் இக்கோயிலில் இருக்கின்றன. சோழ மன்னர்களில் ராஜராஜனும் ராஜேந்திரனும் இன்னும் முதற் குலோத்துங்கன் விக்கிரமன் முதலியவர்களும், பாண்டிய மன்னர்களில் மாறவர்மன், கோனேரின்மை கொண்டான், விஜயநகர மன்னர்களில் கிருஷ்ண தேவராயர், வீர விருப்பண்ண உடையார் முதலியவர்களும் ஒருவருக் கொருவர் போட்டியிட்டுக் கோயிலைக் கட்டவும் நிபந்தங்கள் ஏற்படுத்தவும் செய்திருக்கிறார்கள் என்று இக்கல் வெட்டுக்களால் அறிகிறோம். இக்கோயில் இன்று தருமபுர ஆதீனத்தலைவர் ஆளுகையில் இருக்கிறது; மிக்க சிறப்போடு பரிபாலிக்கிறார்கள். அபிராமியை அழகு செய்து பார்ப்பதிலே மகா சந்நிதானம் அவர்களுக்கு மிக மிக ஆர்வம்; அதை அங்கு சென்றால் நேரிலேயே பார்க்கலாமே.



இக்கோயிலுக்குப் போனதுதான் போனோம், இந்த வீரட்டானர் கோயிலுக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்திலேயுள்ள கடலூர் மயானம் என்னும் தலத்துக்கும் சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் பெரிய பெருமான் அடிகள், மலர்க்குழல் மின்னம்மை இவர்களையும் வணங்கிவிட்டே திரும்பலாம். சிவபெருமான் ஒரு கல்பத்தில் பிரமதேவரை நீறாக்கி அவரை மீளவும் உயிர்ப்பித்து படைப்புத் தொழிலை நிகழ்த்திய இடம் ஆனதால் மயானம் என்று பெயர் பெற்றது என்பர். இறப்பும் பிறப்பும் மயானத்திலேயே நடந்திருக்கிறது. நமது பழவினைகளை எரித்து நம்மையும் உய்யக் கொள்ளும் இறைவன் திருவிளையாடல்கள் புரிய எந்த இடம் என்று உண்டா?

# 16

# ஆக்கூர் ஆயிரத்து ஒருவர்

நளவெண்பாப் பாடிய புலவர் புகழேந்தி என்பவர். இவரை ஆதரித்த சிற்றரசனோ சந்திரன் சுவர்க்கி. தன்னை ஆதரித்தவரை மறவாது, நானூறு பாடல்களே உடைய நளவெண்பாவில் நான்கு இடங்களில் பாராட்டுகிறார் புகழேந்தி. கவிச்சக்கரவர்த்தி கம்பனை ஆதரித்துப் போற்றியவர் வெண்ணெய் நல்லூர் சடையப்பர். பதினாயிரம் பாடல்கள் கொண்ட இராம கதையிலே கம்பன் இவரைப் பத்து இடங்களிலேதான் பாராட்டுகிறான். இந்தத் தகவலைச் சொல்லிக் கம்பனிடம் ஒரு தமிழ் அன்பர் கேட்கிறார்: 'கவிஞரே! நானூறு பாட்டில் அவர் நான்கு இடங்களில் சந்திரன் சுவர்க்கியைப் புகழ, நீர் பத்தாயிரம் பாடல்களில் பத்துத் தரம் தானே பாராட்டுகிறீர்; இதுதானா உமது நன்றி அறிதல்?' என்று. இந்தக் கேள்விக்குப்பதில் சொல்லக் கம்பன் சளைக்கவில்லை. 'உண்மைதான்! புகழேந்தி சந்திரன் சுவர்க்கியை நூற்றுவரில் ஒருவராக மதிக்கிறார். நானோ வள்ளல் சடையப்பரை ஆயிரத்தில் ஒருவராக மதிக்கிறேன்' என்பதுதான் அவனது பதில். இப்படி ஒரு வரலாறு கர்ண பரம்பரையில். வள்ளல் சடையப்பருக்கு ஆயிரத்தில் ஒருவர் என்ற பெயர் நிலைத்ததோ இல்லையோ? அறியோம். ஆக்கூரில் உள்ள

தான் தோன்றி அப்பருக்கு 'ஆயிரத்து ஒருவர்' என்ற பெயர் நிலைத்திருக்கிறது. கதை இதுதான். சோழ அரசன் ஒருவன் ஆயிரம் பெயருக்கு அன்னம் அளிப்பது என்று சங்கல்பம் செய்துகொள்கிறான். எண்ணிக்கையில் கொஞ்சமும் குறைந்து சங்கல்பம் தவறிவிடக் கூடாதே என்று எண்ணி ஆயிரம் இலைகளைப் போட்டு விட்டு வந்திருந்த அந்தணர்களை எண்ணுகிறான் (அப்போதெல்லாம் பட்டினிப் பட்டாளம் நாட்டில் கிடையாதே. சாப்பாட்டுக்கே ஆள் பிடிக்கத்தானே வேண்டியிருக்கும்) வந்திருப்பவர்களை எண்ணினால் 999 பேர்கள்தான் இருந்தார்கள். கொஞ்சம் காத்திருந்து பார்த்து, ஒருவருமே வராததுகண்டு மன வருத்தத்தோடேயே வந்தவர்களை இலைகளில் உட்காரச் சொல்லிப் பரிமாற ஏற்பாடு செய்கிறான். பரிமாறிய பின் இலை ஒன்றுமே காலியாக இருக்கக் காணோம். இது என்ன? என்று புரியவில்லை அரசனுக்கே. உண்டுவிட்டு அந்தணர்கள் வெளியே போனபோது திரும்பவும் ஒவ்வொருவராக எண்ணிப் பார்க்கிறான். 999 பேர்தான் இருக்கிறார்கள். இது என்ன அதிசயம் என்று வியந்து நின்றபோது, இறைவனே அசரீரியாக 'அரசனே நாமே ஆயிரத்தில் ஒருவராக கிழ வேதிய வடிவில் வந்து உன் சமாராதனையில் கலந்துகொண்டோம் மெத்த மகிழ்ச்சியோடு' என்கிறார். இறைவனது அருளை எண்ணி அரசன் மகிழ்கிறான். ஆயிரம் திருநாமம் படைத்தவன், ஆயிரத்தில ஒருவனாக அங்கு வந்திருக்கிறான். இந்த ஆயிரத்தொருவராம் இறைவனைக் காணவே ஆக்கூருக்குச் செல்கிறோம் நாம்.

ஆக்கூர், மாயூரம்–தரங்கம்பாடி ரயில் பாதையில் உள்ள ஒரு சிறிய ஊர். ஆக்கூர் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி அரை மைல் நடந்தால் ஊர் போய்ச் சேரலாம். இல்லை. மாயூரம் ஜங்ஷனில் இறங்கி காரிலோ, பஸ்ஸிலோ, வண்டியிலோ பத்து மைல் கிழக்கு நோக்கிச் சென்றாலும்

சென்று சேரலாம். கோயில் கிராமத்தின் கீழ்ப் பகுதியில் இருக்கிறது. சிறிய கோயில்தான். ஆனால் அது நல்ல மாடக் கோயில். 'எண்தோள் ஈசற்று எழில் மாடம் எழுபது செய்து' உலகாண்டவன் கோச்செங்கட் சோழன். ஏதோ முந்திய பிறவியில் யானையினால் இடர் உற்றவன் ஆனதால், யானை ஏறாத, ஏற முடியாத கோயில்கள் எழுபது கட்டியிருக்கிறான் என்பது வரலாறு. இந்தக் கோயிலுக்குத் தான் தோன்றி மாடம் என்றும் இங்குள்ள இறைவனுக்குத் தான்தோன்றி அப்பர் என்றும் திருநாமம். மிகப் பழைய கோயில் இது என்பதைச் சம்பந்தர்,

நீரார வார் சடையான்,
நீறுடையான், ஏறுடையான்
காரார் பூங் கொன்றையினுள்
காதலித்த தொல்கோயில்

என்றுதானே பாடி அறிவிக்கிறார். இந்தக் கோயிலில் உள்ள மூர்த்தியும் சுயம்பு மூர்த்திதான். அதுதான் தெரிகிறதே, தான்தோன்றி ஈசுவரர் என்று சொல்வதிலேயே. கோயிலுள் சென்று தான்தோன்றி நாதரை வணங்கி விட்டு, அவரது துணைவியாம் வாள் நெடுங் கண்ணியையும் கண்டு தொழலாம். ஆனால் அன்று சிற்பி அமைத்த வாள்நெடுங் கண்ணி உருவில் ஏதோ சிறிது ஊனம் உற்று விட்டதால் அவளை வெளியே மண்டபத்தில் கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறார்கள். பின்னால் இன்னொரு அம்மையைச் சிலையாக வடித்து நிறுத்தி இருக்கிறார்கள் கர்ப்பக் கிருஹத்துக்குள்ளே. இந்த அம்பிகையின் திரு வுருவில் அந்தப் பழைய அம்பிகை முகத்திலுள்ள களை இல்லை. இவர்களோடு நடராஜருக்கு ஒரு தனிச் சந்நிதி. அங்கு நடராஜர் சிவகாமி அம்மையுடன் எழுந்தருளியிருக்கிறார். இவர்களைத்தான் எல்லாக் கோயில்களிலுமே பார்க் கிறோமே. அந்த ஆயிரத்தொருவரை இங்கே வடித்து வைத்திருக்கிறார்களா என்று அறியத் துடிக்கும் உங்கள்

ஆத்திரத்தை அறிவேன். ஆம்! அவரையுமே செப்புச் சிலையாக வடித்து மகாமண்டபத்தில் ஒரு மேடைமீது நிறுத்தியிருக்கிறார்கள். ஏதோ கிழ வேதியராக வந்தார் என்பதுதான் வரலாறு. என்றாலும் மூர்த்தியாக நிற்பவர் கிழவராக இல்லை. நல்ல வாலிப முறுக்கோடேயே நிற்கிறார். கையில் ஒரு கோல் பிடித்திருக்கிறார், கோல் ஏதோ நன்கு ஊன்றிக் கொள்வதற்காக ஏற்பட்ட ஒன்று அன்று; அவரது கௌரவத்துக்கு ஏற்ற ஒன்றாகத்தான் இருக்கிறது. கோலின் கைப்பிடியில் அபூர்வ வேலை. பிடியின் இரண்டு புறங்களிலும் இரண்டு கிளிகள் இருக்கின்றன. நல்ல சந்திரசேகர மூர்த்தம். இரண்டு கைகளில் மானும் மழுவும். வலது கையில் ஒன்று அபயகரம்; இடது கை ஒன்று தாழ்ந்து கோலூன்றி நிற்கிறது. நல்ல சோழர் காலத்திய செப்புப் படிமம்.

இக்கோயிலுக்குச் சம்பந்தர் வந்திருக்கிறார். அப்பர் வந்திருக்கிறார். சம்பந்தரையும் அவருடன் வந்த அடியவர்களையும் அங்குள்ள வேளாள மக்கள் மிகவும் நன்றாக உபசரித்திருப்பார்கள் போல் இருக்கிறது. ஆதலால் கோயிலைப் பாடவந்த சம்பந்தர் வேளாளரது வள்ளன்மையையும் சேர்த்தே பாடுகிறார்.

**வாளார்கண் செந்துவர்வாய்**
**மாமலையான் தன்மடந்தை**
**தோள் ஆகம் பாகமாப்**
**புல்கினான் தொல்கோயில்,**
**வேளாளர் என்றவர்கள்**
**வள்ளண்மையான் மிக்கிருக்கும்**
**தாளாளர் ஆக்கூரில்**
**தான் தோன்று மாடமே.**

என்பதுதான் அவர் பாடிய தேவாரம்.

அப்பரும் தான்தோன்றியப்பரை நாவாரத் துதிக்கிறார்.

கண்ணார்ந்த நெற்றி உடையார்
போலும், காமனையும் கண் அழலால்
காய்ந்தார் போலும்,

உண்ணா அருநஞ்சம் உண்டார்
போலும், ஊழித்தீயன்ன
ஒளியார் போலும்,

எண்ணாயிரங்கோடி பேரார்
போலும், ஏறு ஏறிச் செல்வர்
இறைவர் போலும்

அண்ணாவும் ஆரூரும் மேயார்
போலும், ஆக்கூரில்
தான்தோன்றி அப்பனாரே.

என்பது அப்பர் பாடிய பத்துப் பாட்டில் ஒரு பாட்டு. இந்த ஆக்கூரில்தான் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான சிறப்புலி நாயனார் பிறந்து வளர்ந்து முத்தியடைந்திருக்கிறார். அடியார்களை எல்லாம் விருப்புடன் வரவேற்று உபசரித்து அன்னம் அளித்து அஞ்செழுத்து ஓதி ஈசன் திருவடி மறவாமல் வாழ்ந்து வந்தவர் அவர் என்பர் சேக்கிழார். சீர்கொண்ட வள்ளல் சிறப்புலியல்லவா அவர்.

இக்கோயிலிலும் கல்வெட்டுக்களுக்குக் குறைவில்லை. அதில் ஒரு கல்வெட்டு சோழமன்னர் காலத்தில் கிராம நிர்வாகம் எப்படி நடந்தது, அரசியல் எப்படித் தாழ்ந்திருந்தது என்பதைக் குறிக்கும். விஷயம் இதுதான்: இந்தக் கிராமத்தையடுத்த நடுவில் கோயில் என்ற பகுதியில் ராஜராஜ விண்ணகரம் என்று ஒரு விஷ்ணு கோயில் இருக்கிறது. இங்குள்ள பெருமானைத் திருமஞ்சனம் ஆட்ட வைகாசி மாதத்தில், சிவன் கோயிலை அடுத்துள்ள ஆனந்த புஷ்கரணிக்கே எடுத்துச் செல்லும் வழக்கம்

இருந்திருக்கிறது. இந்த வழக்கத்தை மூன்றாம் ராஜராஜனது அதிகாரிகள் தடை செய்திருக்கிறார்கள். கி.பி. 1230-ல் இப்படி ஏற்படுத்திய தடை சரியானதன்று என்று கிராம நிர்வாகிகளான கூற்றப் பெருமக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் ராஜராஜ விண்ணகர் எம்பெருமானைக் காவிரிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு பண்ணி அதற்குப் பாதை ஒதுக்க நிலங்களைத் தானம் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலங்களை இறையிலி நிலங்களாகக் கணக்குகளில் பதிந்திருக்கிறார்கள். இதைக் கல்வெட்டிலும் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்னுமொரு ரசமான வரலாறு, மூன்றாம் ராஜராஜன் காலத்தில் முக்கிய படைத் தலைவனான கோப்பெருஞ் சிங்கனைப் பற்றியது. இந்தக் கோப்பெருஞ் சிங்கன் மைசூரிலிருந்த ஹொய்சலர்களை யெல்லாம் அடக்கி வெற்றி கண்டு கோப்பெருஞ் சிங்கன் பரகேசரி என்ற விருதுப் பெயரோடு சோழ நாட்டில் காவிரிக் கரையில் உள்ள கோயில்களுக்கு வந்து மூர்த்திகளைத் தரிசித்திருக்கிறான். அவன் ஆக்கூருக்குமே வந்திருக்கிறான். ஆக்கூர் மக்கள் அன்றைய வரிகளைக் கொடுக்க இயலாத வர்களாக வெளியூர் சென்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து, அவர்கள் கொடுக்க வேண்டிய வரிகளையெல்லாம் தள்ளுபடி செய்து, திரும்பவும் அவர்களை ஆக்கூருக்கே அழைத்துக் குடியேற்றியிருக்கிறான். சோழர் காலத்தில் மாத்திரம் என்ன? பின்னர் வந்த நாயக்க மன்னர்கள் காலத்திலும் ஆக்கூர் முக்கியத்துவம் வாய்ந்த கிராமமாகவே இருந்திருக்கிறது. கி.பி. 1517-ல் விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயர் தம்முடைய திக்விஜய ஞாபகார்த்தமாக, கோயில் நிலங்களுக்கு விதித்திருந்த வரி பதினாயிரம் வராகனை தள்ளுபடி செய்திருக்கிறார். அப்படி வரித் தள்ளுபடி செய்யப்பட்ட கோயில்களிலே இந்த ஆக்கூர் தான்தோன்றி மாடமும் ஒன்று என்று வரலாறு கூறுகிறது.

இந்த வரலாற்றை யெல்லாம் படித்துத் தெரிந்த நான், இந்தத் தலம் சென்றிருந்தபோது, அன்று அந்த நடுவிற்

கோயிலில் இருந்த ராஜராஜ விண்ணகரத்து எம் பெருமானைத் தேடித் திரிந்தேன். ஊராரோ அல்லது சிவன் கோயில் அர்ச்சகர்களோ அந்தக் கோயில் இருக்கும் இடம் சொல்லவில்லை. ஆனால் ஊர்ப் பிள்ளைகள் சிலர் ஊருக்குத் தென்பக்கத்தில் தோப்புக்குள்ளிருந்த ஒரு சிறு கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். அந்தக் சிறு கோயிலின் கதவோ சாத்தியிருந்தது. அக்கோயில் அர்ச்சகரைத் தேடிப் பிடிப்பதோ மிக்க சிரமமாக இருந்தது. அவரைக் கண்டு பிடித்துக் கோயிலைத் திறக்கச் சொன்னால் அந்தக் கோயில் ராஜகோபாலன் கோயில் என்று தெரிந்தது. கோயிலில் உள்ள கற் சிலைகளைவிட அங்கிருந்த செப்புச் சிலைகள் மிக்க அழகாயிருக்கின்றன.

அன்று கோகுலத்தில் பசுக்களை மேய்த்துத் திரிந்த கோபாலன் நல்ல ராஜ வடிவத்திலே உருவாகியிருக்கிறான். பின்னால் நிற்கும் பசுவின் பேரில் சாய்ந்து கொண்டு ஆநிரை மேய்க்கும் அழகான மூர்த்தியாக நிற்கிறான். அவன் அணிந்திருக்கும் அணிகளும் பணிகளும் மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கின்றன. அவன் மாத்திரந்தானா நிற்கிறான் அங்கே? இல்லை, ஸ்ரீதேவி பூதேவி சமேதனாக நிற்கிறான். சோழர் காலத்துச் செப்புப் படி மங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு இந்த வடிவங்கள். ஏதோ இவையெல்லாம் கவனிப்பாரற்ற ஒரு சின்னக் கோயிலுக்குள்ளே ஒளிந்து கொண்டிருக்கின்றன. இப்படி எத்தனை எத்தனை வடிவங்களோ இந்தத் தமிழகத்துக் கோயில்களில்? ஆக்கூர் தான்தோன்றி நாதரையும், ஆயிரத்து ஒருவரையும் பார்க்கப் போன இடத்திலே இந்த ராஜகோபாலன் தம்பதிகளையும் பார்க்கக் கிடைத்தது நமது பாக்கியமே. இதனால்தான் சம்பந்தர் 'விண்ணொளிசேர் ஆக்கூர்' என்று பாடுகிறார். இப்படி சம்பந்தர் பாடிய பெருமையைச் சேக்கிழார் நினைக்கிறார்.

பொன்னிநீர் நாட்டின் நீடும்
பொற்பதி 'புவனத்து உள்ளோர்
இன்மையால் இரந்து சென்றோர்க்கு,
இல்லை என்னாதே ஈயும்
தன்மையார்' என்று நன்மை
சார்ந்த வேதியரைச் சண்பை
மன்னனார் அருளிச் செய்த
மறைத்திரு ஆக்கூர் அவ்வூர்

என்பதுதானே ஆக்கூரைப் பற்றி அவரது அறிமுகம். சைவ வைணவ பேதமில்லாமல் நாமும் எல்லா மூர்த்திகளையும் பார்த்து வணங்கிவிட்டே மேல் நடக்கலாம்.

# 17

# நனிபள்ளி நற்றுணை நாயகர்

**சோ**ழப் பேரரசர்களில் மிக்க பெருமை யுடையவன் ராஜராஜன். அவனையும் விடப் புகழ்படைத்தவன் அவன் மகன் ராஜேந்திரன். இவன் கி.பி. 1014 முதல் 1044 வரை அகண்ட தமிழகத்தை ஆட்சி புரிந்திருக்கிறான். தந்தை இட்ட பெயர் மதுராந்தகன் என்றால், முடி சூடியபோது ராஜேந்திரன் என்று அபிஷேகப் பெயர் சூடிக்கொள்கிறான். இவனும் தந்தையைப் போலவே பிறநாடுகளின் பேரில் படை கொண்டு சென்று அந்தந்த அரசர்களை வெற்றி கண்டு தமிழகத்தை மிகவும் விரிவுடையதாக ஆக்கியிருக்கிறான்.

இவன் ஆட்சியின் கீழிருந்த சோழ சாம்ராஜ்யம் இன்றையச் சென்னை ராஜ்யத்தையும், மைசூரில் ஒரு பகுதியையும், ஈழ நாட்டையும் கொண்ட பெரிய ராஜ்யமாக இருந்திருக்கிறது. இவனுடைய ஆசை எல்லாம் வங்காளம் முதலிய வடநாடுகளையும் வென்று கங்கையையும் காவிரியையும் இணைத்து விடுவது என்பதுதான். அதனால் வடக்கு நோக்கிப் படையெடுத்து அங்குள்ள அரசர்களை வென்று மகிபாலன் என்பவனது தலையில் கங்கை நீர் நிரப்பிய குடம் ஒன்றை ஏற்றித் தன் தலைநகருக்கே கொண்டு வந்திருக்கிறான். இப்படிக் கங்கையைக் கொண்டுவந்த பேரரசனைக் கங்கை கொண்டான் என்றே

பாராட்டி யிருக்கிறார்கள். இத்துடன் விட்டானா இவன்? கப்பற் படைகளைக் கடல் நடுவில் செலுத்தி இன்றைய மலேயாவில் ஒரு பகுதியான கடாரத்தையும் கைப்பற்றி யிருக்கிறான். அதனால்தானே கல்வெட்டுக்களில் எல்லாம் 'பூர்வதேசமும், கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்' என்று இவன் மெய்க்கீர்த்தி பாடப் பட்டிருக்கிறது. இப்படி இவன் கங்கையையும் கடாரத்தையும் கொண்டதை,

> **களிறு கங்கைநீர் உண்ண, மண்ணையில்**
> **காய் சினத்தோட கலவு செம்பியன்**
> **குளிரு தெண்திரை குண கடாரமும்**
> **கொண்டு மண்டலம் குடையுள் வைத்ததும்**

என்று ஜயங்கொண்டார், கலிங்கத்துப் பரணியில் பாராட்டியிருக்கிறார். கங்கை கொண்டதன் ஞாபகார்த்த மாகக் கங்கை கொண்ட சோழீச்சரம் எழுந்து நிற்பதை அறிவோம். மேலும் தெற்கே திருநெல்வேலி வரை இவன் யாத்திரை செய்திருக்கிறான் என்பதை வலியுறுத்த அங்கே கங்கைகொண்டான் என்றே ஒரு சிறிய கிராமத்துக்குப் பெயரிட்டு இருக்கிறான் என்பதையும் அறிவோம். ஆனால் கடாரம் கொண்ட வெற்றியை நிலைநிறுத்த ஒரு ஞாபகச் சின்னம் நிறுவினான் என்று சரித்திரம் திட்டமாகக் கூறவில்லைதான். கங்கை கொண்டதைவிட, கடல் கடந்து சென்று கடாரம் கொண்டதுதானே பெரிய வெற்றி. தன்னுடைய சிறந்த கப்பற்படையைக் கடல் நடுவில் செலுத்திக் கடாரத்து அரசனாகிய சங்கிராம விஜயோத் துங்கவர்மனைப் போரில் புறங்கண்டு, அவனது பட்டத்து யானையையும் பெரும் பொருளையும் வித்யாதர தோரணத்தையும் கவர்ந்து கொண்டு ஸ்ரீவிஜயம், பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம் முதலிய இடங்களைக் (ஆம்! இன்றைய மலேயா, சுமத்ரா முதலிய தீவுகளில் உள்ள நகரங்களின் அன்றையப்

பெயர்களே இவை) கைப்பற்றினான் என்று இவன் மெய்க்கீர்த்தி சிறப்பாகச் சொல்கிறது. கடாரம் இன்றைய மலேயாவின் மேல்கரையிலுள்ள 'கெடா' என்ற பெயருடைய நகரமே என்றும் தெரிகிறோம். இப்படிக் கங்கா நதியும், கடாரமும் கைக் கொண்டு சிங்காதனத்திருந்த செம்பியர்கோனை, கங்கை கொண்டான் என்று எப்படி அழைத்தார்களோ, அப்படியே கடாரம் கொண்டான் என்றும் அழைத்திருக்க வேண்டுமே. கங்கை கொண்ட சோழீச்சரம் போல், கடாரம் கொண்ட சோழீச்சரம் ஒன்றும் உருவாக்கியிருக்க வேண்டுமே.அப்படி உரு வாக்காமலா இருந்திருப்பான் என்று எண்ணிக் கொண்டே சரித்திர ஏடுகளைப் புரட்டினேன். சோழ நாட்டில் உள்ள தலங்களின் பெயர்களை அலசி ஆராய்ந்தேன். கண்டு பிடித்தேன் ஓர் உண்மையை. தஞ்சை ஜில்லாவிலே மாயூரத்துக்கு வடகிழக்கே எட்டு மைல் தூரத்தில் ஒரு சிறிய ஊர் 'புன்செய்' என்ற பெயரில் இருக்கிறது. இந்த ஊருக்கே தேவாரத்தில் நனிபள்ளி என்ற பெயரும் வழங்கியிருக்கிறது. ஆனால் அந்த வட்டாரத்தில் விசாரித்தால் புன்செய் என்ற பெயரும் தெரியாது,நனிபள்ளி என்ற பெயரும் தெரியாது. மக்கள் இந்த ஊரை அழைப்பது எல்லாம் 'கிடாரம் கொண்டான்'என்ற பெயரில்தான். கடாரம் கொண்டான் என்ற மிக்க பெருமையோடு வழங்க வேண்டிய பெயர் எப்படிச் சிதைந்து கிடாரம் கொண்டான் ஆகிவிட்டது என்று தெரிகிறபோது கொஞ்சம் வருத்தம் ஏற்படவே செய்கிறது. இன்று நாம் இந்தக் கிடாரம் கொண்டான் என்னும் நனிபள்ளிக்கே செல்கிறோம்.

இந்த நனிபள்ளிக்கு மாயூரத்திலிருந்து காரிலோ, வண்டியிலோ போகலாம். இல்லை, மாயூரம்–தரங்கம்பாடி ரயில் வழியில், செம்பொன்னார் கோயில் ஸ்டேஷனில் இறங்கி வண்டி வைத்துக் கொண்டும் செல்லலாம். நல்ல மண் ரோடுதான். ஆதலால் விரைவில் போய் விரைவில்


வந்துவிட முடியாது. கொஞ்சம் சாவதானமாகவே போய்த் திரும்ப வேண்டும். செம்பொன்னார் கோயில், இல்லை, அந்தச் செம்பொன் செய் கோயில் சேர்ந்ததுமே அங்கு கோயில் கொண்டிருக்கும் சொர்ணபுரி ஈசுவரரையும் மருவார் குழலியையும் கண்டு வணங்கலாம். 'தேவர் சென்று வணங்கும் செம்பொன் பள்ளியான் மூவரால் முதலாய் நின்ற மூர்த்தி' என்பர் அப்பர். இக்கோயிலில் விசேஷமாகக் காண வேண்டியவை ஒன்றும் இல்லைதான். என்றாலும் கர்ப்பக் கிருஹத்தில் இருக்கும் மருவார் குழலி மற்றையக் கோயில்களில் காண்பது போன்று நான்கு திருக் கரங்களோடும் சமபங்க நிலையிலும் நின்று கொண்டிருப்பவள் அல்ல. மதுரை மீனாக்ஷியைப் போல் இரண்டே திருக்கரம். அதிலும் இடக்கரம் ஒயிலாகத் தொங்க விடப்பட்டும், வலக்கரம் உயர்ந்து செண்டேந்தியும் இருக்கும். செப்புச் சிலையில் வடிக்கும் அழகை, கற்சிலையிலேயே அமைத்துப் பார்த்து மகிழ்ந்திருக்கிறான் சிற்பி. சந்தணக் காப்பிட்டுக் கண் குளிரக் கண்டால் அம்மையின் அழகு முழுவதையும் அப்படியே அள்ளிப் பருகலாம்.

மருவார் குழலியைக் கண்டு தரிசித்த தெம்போடேயே நனிபள்ளி நோக்கி நடக்கலாம். போகிற வழியிலேயே இந்த நனிபள்ளிதான், திருஞானசம்பந்தரது தாயாகிய பகவதி அம்மையார் பிறந்த தலம் என்பார்கள். சின்னஞ்சிறு பிள்ளையாய்த் தாளம் ஏந்திப் பாடிக்கொண்டே சென்ற ஞானசம்பந்தர், தம் பாட்டன் பாட்டி வீட்டுக்கு வராமலா இருந்திருப்பார்? வந்திருக்கிறார், அங்குள்ள நற்றுணை அப்பரைப் பாடியும் இருக்கிறார்.

தோடு ஒரு காதனாகி
ஒரு காது இலங்கு
சுரிசங்கு நின்று புரளக்,

காடு இடமாக நின்று
கன லாடும் எந்தை
இடமாய காதல் நகர்தான்,
வீடு உடன் எய்துவார்கள்
விதி என்று சென்று
வெறிநீர் தெளிப்ப விரலால்
நாடுஉடன் ஆடு செம்மை
ஒலி வெள்ளம் ஆரும்
நனிபள்ளி போலும் நமர்காள்

என்பதே சம்பந்தர் பாடிய பாடல். நாமும் சம்பந்தர் பாடிய பாடல்களைப் பாடிக் கொண்டே செல்லலாம். (நான் இந்தக் கோயிலுக்குச் சென்றது நான்கு வருஷங்களுக்கு முன். அன்று கோயில் கவனிப்பாரற்றுக் கிடந்தது. கோபுர வாயிலுக்குக் கதவு கூட இல்லை. ஏதோ தட்டி வைத்து அடைத்திருந்தார்கள். நாடெல்லாம் கும்பாபிஷேகம் நடக்கும் இந்நாளில், இக்கோயிலும் செம்மை செய்யப் பட்டிருக்கிறதோ என்னவோ?') இந்தக் கோயில் உள்ளே இருக்கிற மூர்த்தியை விட வெளியே கோஷ்டத்தில் இருப்பவர்கள்



நனிபள்ளி விமானம்

பிரமாதம். கர்ப்பக் கிருஹத்தைச் சுற்றிய பிராகாரம் ஒன்றே ஒன்றுதான். அந்தப் பிராகாரமும், கோயிலின் கர்ப்பக் கிருஹமும் முழுக்க முழுக்கக் கல்லாலேயே கட்டப் பட்டவை. ராஜேந்திரன் தன் கடார வெற்றியைக் கொண்டாடக் கட்டியிருக்க வேண்டும். இக்கோயிலின் மேற்கு நோக்கிய கோஷ்டத்தில் நல்ல லிங்கோத்பவர் இருக்கிறார். தெற்குக் கோஷ்டங்களில் தக்ஷிணாமூர்த்தியும் விநாயகரும் இருக்கிறார்கள். விநாயகர் நல்ல காத்திரமான உரு. பருத்த தொந்தியுடன் நன்றாகச் சப்பணம் கூட்டியே உட்கார்ந்து விடுகிறார் அவர். வட பக்கத்துக் கோஷ்டத்திலே பிரம்மா நின்ற திருக்கோலம். துர்க்கை மிகவும் கம்பீரமாக நிற்கிறாள், அங்கு சக்கரம் ஏந்தியகையாளாய். ஒருகரத்தால் அபயம் அளித்து ஒரு கையை இடுப்பில் வைத்து, ஒரு கால் மடக்கி ஒரு காலை நீட்டி, கன கச்சித அழகோடு உருவாகியிருக்கிறாள் கல்லிலே. இரண்டு முனிவர்கள் காலடியிலே வணங்கி நிற்கிறார்கள். கலை உலகிலே ஒரு அற்புத சிருஷ்டி. இந்த ஐந்து கோஷ்ட விக்கிரகங்களை உங்களுக்கு அறிமுகப் படுத்தவே, இந்தக் கோயிலுக்கு உங்களை அழைத்து வந்திருக்கிறேன் இத்தனை தூரம்.



அறுமாமுகன்

இவர்களையெல்லாம் கண்டு களித்த பின்னரே நற்றுணை

அப்பரையும், மலையான் மடந்தையையும் தொழுது வணங்கக் கோயிலுள் நுழையலாம். நான் போனபோது அர்ச்சகர் அருமையாக என்னை அர்த்த மண்டபத்துக்கே அழைத்தார். நானோ மிக்க பணிவுடனே, மகா மண்டபத்திலேயே நின்றுகொண்டு தரிசித்தேன். இந்தப் பணிவுக்குக் காரணம் 'என்றும் பணியுமாம் பெருமை' என்பதனால் அல்ல. அர்த்த மண்டபத்தின் முன் வாயில் நிலையில் மேல் தளத்துக்கல் இரண்டாகப் பிளந்து எப்போது கீழே விழுவோம் என்று காத்துக் கொண்டிருந்ததை நான் கண்டுவிட்ட காரணமே. அர்ச்சகருக்கு இருந்த மனத் துணிச்சல் எனக்கு இல்லை. ஆதலால் வெளியே நின்றே தரிசித்தேன். இந்தக் கோயிலில் சில செப்புப் படிவங்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. அவைகளில் ஒன்று மயிலேறி விளையாடும் மாமுருகன் திருஉரு. இந்த முருகனுக்குப் பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண் தோள்களும் இருக்கின்றன. ஆனால் அச்சம் அகற்றும் அயில் வேலைக் காணோம். அதோடு ஏதோ கண்ணை மூடித் தியானத்தில் இருப்பவன்போல் இருக்கிறான். 'கருணைத் திருஉருவாய் காசினியில் தோன்றிய குருபரன்' இவன் என்றே கூறத் தோன்றுகிறது எனக்கு. நல்ல அழகு வாய்ந்த செப்புப் படிமம்.

இனி கோயிலை விட்டு வெளியே வரலாம். இங்கு கோயில் கொண்டிருக்கும் நற்றுணை அப்பரை, நனிபள்ளி அடிகளை அப்பர் பாடியிருக்கிறார்; சுந்தரர் பாடியிருக்கிறார். சமணராய் இருந்து மாறிய அப்பர் அடிகளை, சமணர் அரசனான பல்லவ மகேந்திரவர்மன் நஞ்சு கொடுத்துக் கொல்ல ஏற்பாடு பண்ணியிருக்கிறான். ஆனால் அந்த நஞ்சும் இறைவன் அருளால் அப்பருக்கு அமுதமாகவே மாறியிருக்கிறது. இதைக் கூறுகிறார், அப்பர் இந்தத் தலத்துக்குரிய பதிகத்தில்.

துஞ்சு இருள் காலை மாலை
தொடர்ச்சியை மறந்து இராதே,

அஞ்சு எழுத்து ஓதின் நாளும்
அரன் அடிக்கு அன்பதாகும்,
வஞ்சனைப் பால்சோறு ஆக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சு அமுதாக்கு வித்தார்
நனிபள்ளி அடிகளாரே!

என்பதுதான் அப்பர் தேவாரம். நல்ல அகச்சான்று தரும் பாடல் அல்லவா?

இத்தலம் நல்ல சரித்திரப் பிரசித்தி உடையது என்பதை முன்னரே அறிந்தோம். இக்கோயிலில் பதினெட்டுக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ராஜேந்திரன் வீர வெற்றியைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் உண்டு. அவன் காலத்தில் ரிஷப வாகன தேவர்க்குத் திருவிழா நடத்த இறையிலி ஒப்பந்தம் செய்யப்பட்டதெல்லாம் குறிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் விஜயநகரத்து கிருஷ்ண தேவராயன் மெய்க்கீர்த்திகளையெல்லாம் இக் கல்வெட்டுக்கள் கூறுவதால், கோயில் முன்பகுதி கோபுரம் எல்லாம் நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். இந்த வட்டாரமே ஆதியில் பாலையாய் இருந்து, பின்னர் ஞான சம்பந்தரால் நெய்தல் நிலமாக்கப்பட்டு, அதற்கும் பின்னர் காடாகவும் வயல்களாகவும் மாறியிருக்கின்றன. இந்தத் தகவல் நமக்குப் பதினோராம் திருமுறை ஆளுடையபிள்ளையார் அந்தாதியிலிருந்து கிடைக்கிறது. 'நாதன் நனிபள்ளி சூழ்நகர் கானமாகிய அஃதே போதில் மலிவயல் ஆக்கிய கோன்' என்றே ஞானசம்பந்தர் பாராட்டப்படுகிறார். இது என்ன பிரமாதமான காரியம் அவருக்கு. எலும்பையே பெண்ணுரு ஆக்கியவர் ஆயிற்றே. பாலையை வயலாக ஆக்குவதுதானா பிரமாதமாக காரியம்? தாயார் பிறந்த ஊரை நல்ல வளமுடையதாக்குவதில் அவருக்கு ஆவல் இராதா?

# 18

## மயூரத்து மயிலாடு துறையார்

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
　　　　மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்து ஒல்கி
　　　　நடந்தாய் வாழி! காவேரி!
கருங்கயற்கண் விழித்து ஒல்கி
　　　　நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
　　　　அறிந்தேன் வாழி காவேரி!

என்று இளங்கோவடிகள் காவேரியின் பெருமையைப் பாடுகிறார். இல்லை, காவிரிப்பூம் பட்டினத்தில் உள்ள பெண்கள் பாடிப் பரவுகிறார்கள். குடகு நாட்டிலே தலைக் காவேரி என்னும் இடத்திலே பிறந்தவள் காவிரி. கல்லும் மலையும் கடந்து மைசூர் ராஜ்யத்தை வளம் படுத்திப் பின்னர் சோழ நாட்டிலே புகுந்து மெல்ல நடக்கிறாள். இந்தக் கன்னிப் பெண். அவளது எண்ணமெல்லாம் சமுத்திர ராஜனிடத்துச் சென்று சேர்த்து அவனோடு கலந்து உறவாடுவதில் அல்லவா ஈடுபட்டிருக்கிறது. அதற்காக ஆயிரங் கரங்களை நீட்டிக் கொண்டு மிக்க ஆவலோடே விரைகிறாள். இவள் நடக்கும் வழியெல்லாம் ஒரே பச்சைப் பசும் கம்பளங்கள். வண்ணமலர் சூட்டி மகிழும் கோதையருக்குத்தான் கணக்கு உண்டா? வழியெல்லாம்

பூவார் சோலையில் மயில்கள் ஆடுகின்றன. புரிந்து குயில்கள் இசை பாடுகின்றன. இந்தப் பண்ணுக்கும் பரதத்துக்கும் ஏற்றவாறு நடமாடிக்கொண்டே நடக்கிறாள் கன்னியாம் பொன்னி. இவள் தம் பெருமையை இளங்கோ மட்டும் அல்ல, கவிச் சக்கரவர்த்தி கம்பனும் பாடிப் பாடி மகிழ்கிறான், 'கங்கை என்னும் கடவுள் திருநதி' என்று கங்கையைப் பாராட்டியவன், 'தெய்வப் பொன்னியே பொருவும் கங்கை' என்றுதான் பொன்னிக்கு ஏற்றம் கூறுகிறான். இத்துடன் நிறுத்தினானா? 'கங்கையிற் புனித மாய காவிரி' என்றல்லவா முத்தாய்ப்பு வைக்கிறான். இது என்ன சொந்த நாட்டு அபிமானத்தால் எழுந்ததா? இல்லை. இதில் ஏதாவது உண்மை உண்டா? அதைத் தெரிய வேண்டுமானால் துலாக் காவேரி மகாத்மியத்தையே புரட்ட வேண்டும்.

காவிரியில் குளிப்பதற்குக் காலம் இடம் எல்லாம் பார்க்க வேண்டியதில்லைதான். என்றாலும் குடகு நாட்டிலே தலைக் காவிரியிலே குளிப்பதைவிட, அரங்கத்து அரவணையான் கோயிலுக்கும் மேற்கே அகண்ட காவிரியிலே குளிப்பதைவிட மாயூரத்திலே குளிப்பது விசேஷம். அதிலும் ஆடி பதினெட்டில் அவள் ஆண்டு நிறை பூப்ப மெல்ல நடக்கும்பொழுது அவளிடம் நீராடுவதை விட, ஐப்பசியாம் துலா மாதத்திலே மாயூரத்திலே ஸ்நானம் பண்ணுவது விசேஷம். மேலும் இந்தத் துலா மாதத்திலே மற்ற இருபத்தொன்பது நாட்கள் குளிக்கத் தவறினாலும், முப்பதாம் நாளாகிய கடைசி நாளன்று தவறாது குளிப்பது மிக மிக விசேஷம். அன்று நடக்கும் விழாதான் கடைமுக ஸ்நானம். இத்தனை விசேஷம் இந்தத் துலா ஸ்நானத்துக்கு வருவானேன்? அதையே தெரிந்து கொள்ளலாம் முதலில்.

கண்ணுவ மகரிஷி கங்கையில் நீராடும் விருப்பத்துடன் நடக்கிறார் வடக்கு நோக்கி. வழியிலே மூன்று சண்டாளக் கன்னிகைகளைச் சந்திக்கிறார். 'அவர்கள் யார்? ஏன் சண்டாளர்களாக இருக்கிறார்கள்?' என்று

விசாரித்தால் அவர்களே கங்கை யமுனை சரஸ்வதிஎன்ற தெய்வ நதிகள் என்றும் அவர்களிடம் பல்லாயிரக்கணக்கான மக்கள் தத்தம் பாவம் தீர முழுகிய காரணத்தால் அவர்களது பாவக்கறை யெல்லாம் இவர்களிடம் தோய்ந்து, இவர்களே சண்டாளர்களாக மாறிவிட்டார்களென்றும் அறிகிறார். சரிதான்; மற்றவர் பாவங்களையெல்லாம் கழுவிக்கழுவித் துடைத்தவர்களே பாபகாரிகளாக மாறிவிட்டால், இவர்கள் பாபங்களை யார் கழுவுவது? ஆம்! அப்படிக் கழுவும் ஆற்றல் பெற்றவள் ஒருத்தி இருக்கிறாள் என்று தெரிந்துதானே அவளைத் தேடித் தென்திசை நோக்கிச் சண்டாள உருவம் தாங்கிய இந்தத் தேவமாதர்கள் வந்திருக்கிறார்கள். எல்லோரது பாவங்களையும் நீக்கி முக்தி அருளவல்ல புனிதையே மாயூரத்தில் ஓடும் காவிரி அன்னை.

இப்படி இவள் பெருமையுற்றிருப்பதனாலேதான் துலா மாதத்தில் தேவர்கள், முனிவர்கள், சரஸ்வதி, லஷ்மி, கௌரி இன்னும் பக்த மாதர்கள் எல்லாம் இங்கு வந்து நீராடுகிறார்கள். முப்பது நாளும் குளிக்க முடியாதவர்கள் மூன்று நாட்களாவது முழுக வேண்டும். அதுவும் இயலாதவர்கள் துலாமாதத்தின் கடைசி நாளான கடை முகத்தன்றாவது நீராடத் தவறுதல் கூடாது என்பது விதி. அப்படி நீராடியவர்கள் பாபமெல்லாம் அன்றே கழுவித் துடைக்கப்படும். (சரிதான்? வருஷம் முழுதும் செய்த பாவத்தை எல்லாம் ஒரே முழுக்கில் கழுவி விட்டு மறுபடியும் பாப காரியங்களே செய்யலாம். திரும்பவும் அடுத்த துலா ஸ்நானத்திலே; கழுவத்தான் அன்னை காவிரியிருக்கிறாளே என்று எண்ணி விடாதீர்கள். துலா மாதம் பிறப்பதற்கு முன்னமே காலன் நம்மை அணுகி விட்டால், அந்த வருஷப் பாவம் அத்தனையும் அப்படியே நின்றுவிடுமே என்ற எச்சரிக்கையும் ஞாபகமிருக்கட்டும்!)

இந்தக் கடைமுக ஸ்நானத்தை ஒட்டி இன்னும் ஒரு ரஸமான வரலாறு. எத்தனையோ கோடி வருஷங்களாக மக்கள் இத் துலா ஸ்நானம் செய்து வருகிறார்கள்;

பாவங்களைக் கழுவிக் கொள்கிறார்கள். இதையெல்லாம் கேட்கிறான் நெடுந் தொலைவிலுள்ள ஒருவன். அவனோ முடவன். அவனால் விரைவாக நடப்பதோ இயலாது. என்றாலும் முயற்சியை விட்டுவிடவில்லை. துலாமாதம் பிறந்ததுமே, ஊரை விட்டுப் புறப்பட்டுவிடுகிறான். நடக்கிறான் பல நாட்களாக. ஆனால் அவன் மாயூரம் வந்து சேர்வதற்குள் துலாமாதம் கழிந்து விடுகிறது. அவன் காவிரிக் கரை வந்து சேர்கின்ற அன்று கார்த்திகை மாதம் பிறந்து விடுகிறது. 'ஐயனே என்ன செய்வேன்? ஒரு நாள் பிந்தி வந்துவிட்டதனால் அல்லவா என் பாவச் சுமையைக் கழுவ முடியாது போய்விடுகிறது' என்று பிரலாபிக்கிறான். முடவன் குரல் விழுகிறது இறைவன் திருச் செவியில், அவன் அளப்பரிய கருணை வாய்ந்தவன் ஆயிற்றே, 'சரி இந்தக் கடைமுக ஸ்நான ''கன்செஷனை'' இன்னும் ஒருநாள் நீட்டித் தருகிறேன். கார்த்திகை மாதம் முதல் தேதியில் முழுகினாலும் பலன் உண்டு' என்று அறிவிக்கிறான்.

ஆதலால் இன்றும் துலா மாதத்தில் மாத்திரம் அல்ல, முடவன் முழுக்கு என்னும் கார்த்திகை முதல் தேதியிலும் காவிரியில் முங்கி முழுகிப் பாபங்களைக் கழுவலாம் என்பது நம்பிக்கை. நம்மில் பலருக்கு உடலில் முடம் இல்லா விட்டாலும், உள்ளத்தில் முடம் உண்டே. ஆதலால் கடைமுகத்திலோ அல்லது முடவன் முழுக்கன்றோ சென்று காவிரியில் முழுகி எழுந்துவிட வேண்டும். கார்த்திகை இரண்டாம் தேதிக்கு இந்த 'கன்செஷன்' கிடையாது என்பது மட்டும் ஞாபமிருந்தால் போதும் இந்தக் கடைமுக ஸ்நானப் பெருமையுடைய மாயூரத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

மாயூரம் தஞ்சை ஜில்லாவில் உள்ள ஒரு பெரிய ரயில் நிலையம். போஸ்டாபீஸ்காரர்கள் எல்லாம்கூட மாயூரம் என்ற பெயரையே உபயோகிக்க இந்திய ரயில்வேக்காரர்கள் மட்டும் 'மாயவரம்' என்ற பெயரை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்களே, ஏன்? ஆனால் ஆங்கிலத்தில்

அவர்கள் எழுதியிருப்பதை மாயவரம் என்று மாத்திரம் அல்ல, மாயாவரம் என்றும் படிக்கலாம். அதனால் நம் உளத்துக்கு ஒரு நிம்மதியும் தேடிக்கொண்டே அந்த ஜங்ஷனில் இறங்கலாம்.

இந்தத் தலத்தில் காணவேண்டிய கோயில்கள் மூன்று. துலாமாதம் நீங்கள் சென்றால், காவிரியில் ஒரு முழுக்குப் போட்டு விட்டுத் துலாக் கட்டமாகிய இடபதீர்த்தக் கரையின் வடபக்கத்திலே உள்ள வள்ளலார் கோயிலுக்கே முதலில் செல்ல வேண்டும். இந்தக் கோயிலுக்கு ஒரு சிறிய கோபுரமே உண்டு என்றாலும் பிரசித்திபெற்ற தீர்த்த மண்டபம் இங்கே இருக்கிறது. இங்குள்ள இறைவர் பெயர் வழிகாட்டும் வள்ளல். எவ்வளவு அழகான பெயர்! துன்பமே நிறைந்த இவ்வுலகில் உள்ள மக்கள் எல்லாம் உய்ய நல்ல வழி காட்டும் வள்ளலாக அல்லவா அவர் எழுந்தருளியிருக்கிறார். இங்குள்ள அம்மை ஞானாம்பிகை. நல்ல வழி காட்டியின் துணை நாடிச் சென்றால் ஞானம் பிறவாமல் இருக்குமா? இங்குள்ள வள்ளலாரையும், ஞானாம்பிகையையும் விடப் பிரசித்தி பெற்றவர் இக்கோயிலில் உள்ள தக்ஷிணாமூர்த்திதான். வழக்கம் போல் யோகாசனத்தில் ஞானமுத்திரைக் கையராகவே எழுந்தருளியிருக்கிறார். என்றாலும் மற்றத் தலங்களைப் போல் அல்லாமல் நந்திபெருமான் மேலேயே ஏறி உட்கார்ந்திருப்பார் இந்த ஆலமர் செல்வர். இறைவனையே தாங்கும் பெருமை என்னிடம் தானே இருக்கிறது என்று தருக்கித் திரிந்த இடபதேவரின் செருக்கடக்கி, ஞானோபதேசம் பண்ணியவர் இந்தத் தக்ஷிணாமூர்த்தி. அதனால்தான், அவரை ஏற்றியிருக்கிறார்.

மலிதவப் பெருமை காட்டி
வயங்கிடு மற்றோர் கூற்றில்
பொலிதரு சேமேற் கொண்டு
தென்முகம் பொருந்த நோக்கி


மாயூரம் நடராஜர்

இருக்கும் இறைவனை வணங்கி, அங்குள்ள ஞானமிர்தசரஸ் என்னும் தீர்த்தமும் ஆடியபின் மேலும் நடக்கலாம் மயூரநாதர் கோயிலை நோக்கி.

மயூரநாதர் கோயில் மாயூர நகரின் தென்பகுதியிலே தரங்கம்பாடி ரோட்டையொட்டி இருக்கிறது. இங்கு கோயில் கொண்டிருப்பவரை மயிலாடுதுறையார் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அன்னையும் மயிலம்மை தான். அபயாம்பிகை, அஞ்சல்நாயகி என்றும் அழைப்பர். இந்தத் தலம் மயூரம் என்றும் இங்குள்ள இறைவன் மயூரநாதர் என்றும் அழைக்கப்படுவதன் காரணம் தெரியவேண்டாமா? இறைவனை மதியாது தக்கன் வேள்வி செய்கிறான். தக்கன் மகளாகிய இறைவி தாக்ஷாயணி தந்தையிடம் வாதாடச் செல்கிறாள். அவளையுமே மதிக்கிறானில்லை தக்கன். அவன் செய்யும் சிவ நிந்தனையைக் கேட்டு உலகமே அஞ்சுகிறது. அப்போது பக்கத்திலிருந்த மயிலும் அஞ்சி அம்மையை வந்து அடைகிறது. அவளும் மயிலுக்கு அபயம் கொடுக்கிறாள்.

பின்னர் தாக்ஷாயணி தக்கனின் வேள்வித் தீயிலே வீழ்ந்து விடுகிறாள். இறைவன் சங்கார தாண்டவம்

ஆடுகிறான். பின்னர் அம்மை விரும்பிக் காப்பாற்றிய மயிலுருவில் அவள் எழுக என அருள் புரிகிறான். அவளுடன் கலைமகளும் அலைமகளுமே மயிலுருப் பெற்று எல்லோரும் சேர்ந்து ஆடுகின்றனர் இக்காவிரிக் கரையிலே. அம்மை மயிலாய் ஆடிய துறைதான் மயிலாடுதுறை. அம்மை பூஜித்த இறைவனே மயூரநாதர். அம்மையும் மயூரநாதரும் கோயில் கொண்டிருக்கும் இடமே மயூரம். அஞ்சி வந்த மயிலுக்கு அபயம் கொடுத்த அன்னையே அபயாம்பிகை, அஞ்சல்நாயகி என்றெல்லாம் தல வரலாறு கூறும். 'மதிநுதல் இமயச் செல்வி மஞ்ஞையாய் வழிபட்டு ஏத்தும் இது துலாப் பொன்னித் தானம்' என்றே பரவுவார் திருவிளையாடல் புராணம் பாடிய பரஞ்சோதியார்.

இத்தலத்துக்குச் சம்பந்தர் வந்திருக்கிறார்; அப்பர் வந்திருக்கிறார். அப்பர் இம்மயிலாடுதுறைக்கு ஒரு தனிப் பதிகமே பாடியிருக்கிறார். அதைவிட அழகாக எந்த எந்தத் துறைகளில் எல்லாம் இறைவன் தங்கியிருக்கிறான் என்ற நீண்ட ஜாபிதாவையே கொடுக்கிறார் திருத்தாண்டகத்திலே.

கயிலாய மலை எடுத்தான்
கரங்களோடு சிரங்கள் உரம்
நெரியக்கால் விரலால் செற்றோன்
பயில்வாய பராய்த்துறை
தென்பாலைத்துறை, பண்டெழுவர்
தவத்துறை, வெண்துறை, பைம்பொழில்
குயில் ஆலந்துறை, சோற்றுத்துறை,
பூந்துறை, பெருந்துறையும்
குரங்காடு துறையினோடும்
மயிலாடுதுறை, கடம்பந்துறை,
ஆவடுதுறை, மற்றுந்துறை
அனைத்தும் வணங்குவோமே

அப்பருடன் சேர்ந்து இந்தத் துறைகளிலே நீராடி இறைவனை வணங்கிய பேற்றை நாமும் பெறலாம்தானே. இங்குள்ள கோயில் பெரிய கோயிலுமல்ல, சிறிய கோயிலும் அல்ல. கருவறையைச் சுற்றிய கோஷ்டத்தில், ஆனந்தத் தாண்டவர், கங்காதரர் எல்லாம் கற்சிலைகளாக உருவாகியிருக்கிறார்கள். திருத்தொண்டர் அறுபத்து மூவரும், கல்லிலும் செம்பிலும் கவினுற அமைந்திருக்கிறார்கள். செப்பு வடிவத்தில் இருப்பவை நல்ல அழகான படிமங்கள். இந்தக் கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தார் நிர்வாகத்துக்கு உட்பட்டது. இந்தக் கோயிலுக்குள் ஒரு சிறு கோயில் குமரனுக்கு. அதற்குக் குமரக் கட்டளை என்று பெயர். இந்தத் தேவஸ்தானம் தருமபுரம் ஆதீனத்தார் நிர்வாகத்தில் இருக்கிறது. அருணகிரியார் இத்தலத்தை ரத்தினச் சிகண்டியூர் என்று குறிப்பிடுகிறார்.

**எழில் வளமிக்குத் தவழ்ந்து உலாவிய**
**பொனிநதி தெற்கில் திகழ்ந்து மேவிய**
**இணையிலி ரத்னச் சிகண்டியூர் உறை பெருமாளே !**

என்பது அருணகிரியார் திருப்புகழ்.

இக்கோயிலில் பதினாறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. முதற் குலோத்துங்கன், இரண்டாம் ராஜாதி ராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் ராஜராஜன் முதலிய சோழ மன்னரும், சடையவர்மன் சுந்தர பாண்டிய மன்னனும் ஏற்படுத்திய நிபந்தங்கள் குறிக்கப் ப்பட்டிருக்கின்றன. மூன்றாம் குலோத்துங்கன், தன்னைக் 'கோனேரின்மை கொண்டான் வீர ராஜேந்திரன் திரிபுவன வீரதேவன்' என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறான். குமர கோயிலைப் பற்றிய கல்வெட்டுக்கள் இல்லை.

மாயூரத்திலே பார்க்கவேண்டிய கோயில் இன்னொன்றும் உண்டு. அதுதான் துலாக் கட்ட

மண்டபத்துக்குத் தெற்கேயுள்ள விசுவநாதர் கோயில். இந்தக் காசி விசுவநாதரும் அவர் துணைவி விசாலாக்ஷியும் காசிக்கு வர இயலாத தமிழ் மக்களைத் தேடி, தமிழ் நாட்டுக்கு வந்து, இங்குள்ள எல்லாக் கோயில்களிலும் இடம்பிடித்து உட்கார்ந்து கொள்கிறார்கள்; தரிசனமும் கொடுக்கிறார்கள். கங்கையும் யமுனையும் சரஸ்வதியுமே இங்கு வந்து விட்டார்கள் என்று தெரிந்தபின், விசுவநாதரும் விசாலாக்ஷியும் இங்கு எழுந்தருளியதில் வியப்பில்லை. இவர்கள் வந்துவிட்டார்களே என்று காசித்துண்டி விநாயகர் பூதகணங்கள் எல்லோருமே புறப்பட்டு வந்து சேர்ந்திருக்கிறார்கள், இந்தக் காவிரிக்கரைக்கு. ஆகவே துலாக் காவேரி ஸ்நானத்துக்குப் போனால் மயிலாடு துறையார், வழி காட்டும் வள்ளலார், காசி விசுவநாதர் எல்லோரையும் கண்டு வணங்கித் திரும்பலாம்.

மாயூரம் வரை போய்விட்டு அடுத்துள்ள தருமபுரம் போகாமலும், அங்குள்ள ஆதீனத்தார் அவர்களைப் பாராமலும் திரும்ப முடியுமா? தருமை ஆதீனம் பழம் பெருமையுடையது. ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்து வளர்ந்த குரு ஞானசம்பந்தர் செந்தமிழ்ச் சொக்கரை ஆத்மார்த்தமாகப் பூஜைபண்ணி, கமலை ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெற்று, தருமபுரம் வந்து மடம் நிறுவியர்கள். இம்மடம் நாளும் வளர்ந்து இன்று இருபத்தேழு கோயில்களின் பரம்பரைத் தர்மகர்த்தர்களாக இருந்து வருகிறார்கள். இப்போது மடாதிபதியாக இருந்து அருளாட்சி செய்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிய பரமாச்சாரிய சுவாமிகள். அவர்கள் செய்துவரும் அறப்பணிகள் அனந்தம். திருக்குறள் உரைவளம் வெளியிட்டதைத் தொடர்ந்து திருமுறைகளை யெல்லாம் அழகாக அச்சிட்டு வழங்குகிறார்கள். கல்வி கேள்விகளில் சிறந்த ரசிகர் அவர்கள். அவர்களைத் தரிசித்து, அவர்களோடு அளவளாவ, அவர்கள் அருள்பெற, எல்லாம் கொடுத்து வைத்தவர்கள் பாக்கியசாலிகளே. அந்தப் பாக்கியம் நிறைய எனக்கு உண்டு.

# 19

## வழுவூர் கஜசம்ஹாரர்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பாடிய பாடல்களில் பிச்சைக்காரர் கும்மாளம் என்று ஒரு பாட்டு. சத்திரத்திலே சாப்பாட்டுச் சாவடியிலே தூங்கும் பிச்சைக்காரர்கள் வாழ்க்கை எவ்வளவு கவலையற்ற வாழ்க்கை என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்கள் கவிமணி. உண்டு வயிறு நிறைந்து உள்ளக் கவலை ஒழித்து நிற்கும் அவர்கள் வாழ்வு சிறந்தது என்றே சொல்கிறார்கள். அவர்கள் கற்பனையில் உருவான பிச்சைக்காரர் போடும் கும்மாளத்தைத்தான் பாருங்களேன்.

ஆலமரத்தின் நிழல் இதுவே-நல்ல
ஆயிரங்கால் எழு மண்டபமாம்
சாலவே தங்கும் பறவையெலாம்-அதில்
சங்கீதம் பாடிடும் பாடகராம்.

என்றெல்லாம் பெருமிதத்துடன் பாடும் பிச்சைக்காரர்கள் கடைசியில்,

ஆதிசிவனும் ஓர் ஆண்டியடா-அவர்க்கு
அன்பான பிள்ளைகள் நாமேயடா
ஓது மெய்ஞ்ஞானியார் யாவருமே-நமக்கு
உற்ற உறவினர் ஆவாரடா

என்று இறைவனோடேயே உறவு கொண்டாட ஆரம்பித்து விடுகிறார்கள். இந்தப் பாட்டைப் படித்த நான் எண்ணுவதுண்டு: உண்மைதானே. பணக்காரரில் பணக்காரனாக இருக்கும் இறைவனே பின்னர் மிக்க எளியவனாகப் பிச்சைக்காரரில் பிச்சைக்காரனாகவும் இருக்கிறானே என்று. கற்பனை கற்பிக்கும் கடவுளாக உருப்பெற்றவர்கள்தான் எத்தனை எத்தனையோ பேர்? நடனராஜனாக, நீல கண்டனாக, சந்திரசேகரனாக, திரிபுராந்தகனாக, கஜ சம்ஹாரனாக, எல்லாம் இறைவனைக் கற்பனை பண்ணி யிருக்கிறார்கள். அப்படிக் கற்பனை பண்ணிய கலைஞர்கள் தாம் பின்னர் பிக்ஷாடனாகவும் கற்பித்திருக்கிறார்கள்.

இப்படி இறைவனையே பிச்சைக் காரனாகக் கற்பனை பண்ணுவதற்கு எத்தனை துணிச்சல் இருக்க வேண்டும் இவர்களுக்கு. நாள் தவறாமல் நாம் இறைவனிடம் கேட்கும் பிச்சைகள் அனந்தம். பொன் வேண்டும், பொருள் வேண்டும், மண் வேண்டும், மனை வேண்டும், மக்கள் சுற்றம் எல்லாம் நிறைய வேண்டும் வேண்டும் எனத் தினசரி பிச்சைகேட்டு நிற்கும் மனிதன் அத்தனையும் கொடுக்கும் இறைவனையே பிச்சைக் காரனாகக் கற்பனை பண்ணுவது என்றால் அதை என்ன என்று கூறுவது? அப்படி அவன் நம்மிடம் என்ன பொருளைத்தான் பிச்சையாகக் கேட்கிறான்? நாமோ உள்ளத்தில் உறுதி இல்லாது இறைவனிடமிருந்து அகன்று அகன்றே ஓடுகிறோம். அவனோ அளப்பரிய கருணையோடு நம்மைத் தொடர்ந்தே வருகிறான். நம்மிடம் நமது அன்பைப் பிச்சை கேட்கிறான். அப்படி அன்பையும் ஆணவத்தையும் நம்மிடமிருந்து பெற்றுக் கொண்டு நமது வினைகளை யெல்லாம் களைகிறான். சாயுஜ்ஜியத்தையே அருளுகிறான். 'சொல்லாதன எல்லாம் சொல்லி நம்மைத் தொடர்ந்து ஆட்கொண்டு பொல்லா வினை தீர்க்கும் புண்ணியனாக' அல்லவா உருப் பெற்று விடுகிறான் இந்த இறைவன். இப்படி ஒரு கற்பனை. இந்த அதீத கற்பனைக்கு ஒரு உருவம்


கொடுத்து விடுகிறார்கள் நம் கலைஞர்கள். அவனே பிக்ஷாடனன். இந்தப் பிக்ஷாடனன் அநேகமாய்ப் பழம் பெருமையுடைய சிவன் கோயில்களில் எல்லாம் இருப்பவன். ஆனால் அவனது சிறந்த திரு உருவைக் காண வேண்டுமென்றால் நாம் போக வேண்டுவது அந்த அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்றான வழுவூருக்கே. வழி வழுவாது அங்கேயே செல்கிறோம் நாம் இன்று.

மாயூரம் திருவாரூர் ரோட்டில், மாயூரத்திலிருந்து ஆறு மைல் தெற்கே வந்து அதன்பின் ஒரு மைல் மேற்கு நோக்கிச் சென்றால், இந்த வழுவூர் சென்று சேரலாம். ரயிலிலேயே போனால் இலந்தங்குடி ஸ்டேஷனில் இறங்கி ஆறு பர்லாங்கு நடந்து செல்ல வேண்டும். பிரளய காலத்தில் உலகமெல்லாம் அழிந்தபோதும் இவ்வூர் அழியாது வழுவின காரணத்தால் வழுவூர் என்ற பெயர் நிலைத்ததாகத் தலபுராணம் கூறுகிறது. பல தலங்களின் நடுவில் கைலாயம் போல் இருப்பதால் பர கைலாசம் என்றும், தன்னை அடைந்தவர்களுக்கு எல்லாம் சிவஞானத்தை அருள்வதால் ஞானபூமி என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

வட மொழியிலே சுயுதபுரி என்றும் பிப்பலாரண்யம் என்றும் கூறப்படுகிறது. இங்குள்ள கோயில் நல்ல பெரிய கோயில். கோயில் வாயிலை நூற்று ஐம்பதடிவரை உயர்ந்த கோபுரம் அழகு செய்கிறது. கோபுரத்தைக் கடந்து சென்றால், ஈசான தீர்த்தம் என்னும் திருக்குளம் இருக்கிறது. இதனை வலம் வந்தே கோயிலுள் நுழைய வேண்டும். கோயிலின் தென் வடல் 342 அடியும் கிழமேல் 380 அடியும் உள்ள மதிலால் சூழப்பட்டிருக்கிறது. கோயிலின் மூன்றாவது வாயிலையும் கடந்துதான் மகா மண்டபம் வந்து சேர வேண்டும். அங்கு வந்து வடக்கே திரும்பினால் இரும்புக் கிராதியிட்ட ஒரு மேடைமீது முன்னர் குறித்த பிக்ஷாடனர் நின்று கொண்டிருப்பார். சோழர் காலத்துச் செப்புப் படிமங்களில் சிறந்த ஒன்று அது. மூன்றடிக்குமேல் உயர்ந்த

திருஉரு. அடியில் கொடுத்த பாதுகையைப் பார்த்தால், எங்கோ அவசரமாகச் செல்லும் வேகம் தெரியும். கையிலே பிக்ஷைப் பாத்திரம் ஏந்திய நிலை. அந்த நிலையிலும் மானுக்குப் புல்லளிக்க மறக்கவில்லை இறைவன். ஆம். கல்லினுள் சிறு தேரைக்கும், கருப்பை அண்டத்து உயிர்க்கும் உணவு அளித்துக் காக்கும் கருணையுடையவன் அல்லவா அவன்.

மற்றொரு பக்கத்திலே பூதகணம் ஒன்றும் தலையில் ஏந்திய பாத்திரத்துடன் நிற்கிறது. அரையைச் சுற்றிப் பன்னகம், தலையைச் சுற்றி அழகான கிரீடம், ஆடை அணிகள் எல்லாம் இல்லாமல் நிர்வாண கோலத்தில் நிற்கிறார் அவர். பிக்ஷாடனரின் தத்துவத்தைத்தான் இவர் உரு எடுப்பதற்குரிய புராண வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாமே. தாருக வனத்திலே உள்ள முனிவர்கள் சகல கலைகளிலும் வல்லவர்கள். அதனால் தருக்கித் திரிந்தவர்கள். இவர்கள் ஆணவத்தை அடக்கவே புறப்பட்டிருக்கிறார் சிவபெருமான். உடன் வந்திருக்கிறார் மகாவிஷ்ணு. இருவருமே தங்கள் உருவத்தை



வழுவூர் பிக்ஷாடனர்

மறைத்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். ஆடை அணியாத ஆண் அழகனாகப் பிக்ஷைப் பாத்திரம் ஏந்திப் புறப்பட்டிருக்கிறார் சிவபெருமான். இவரது அழகில் மயங்கி நிறை அழிந்து நிற்கின்றனர் ரிஷி பத்தினிகள், மகா விஷ்ணுவோ காண்பவரை மயக்கும் மோஹினியாக வந்திருக்கிறார். அவரைத் தொடர்ந்து நடந்திருக்கிறார்கள் முனிபுங்கவர்கள். (ஆம். அன்று மாறுவேடப் போட்டி என்று ஒன்று நடந்திருந்தால் இவர்கள் இருவருமே முதல் பரிசு, இரண்டாம் பரிசு இரண்டையும் தட்டிக் கொண்டு போயிருப்பார்கள் போலிருக்கிறது!) இப்படி இந்த முனிவர்கள், அவர்களது துணைவியர் கர்வத்தை அடக்கி, அவர்கள் அன்பையும் ஆணவத்தையும் பிச்சையாகப் பெற்று அவர்களை உய்வித்திருக்கிறான் இறைவன் என்பது கதை. நல்ல ரஸமான கதைதான். பிக்ஷாடனரைப் பார்த்த கண் கொண்டே மோகினி அவதாரத்தையும் செப்புச் சிலை வடிவில் அந்த மேடையிலேயே பார்த்துவிட்டு நடக்கலாம்.

இந்த மண்டபத்தைக் கடந்து அடுத்த கட்டுக்குச் சென்றால் அங்குள்ள ஞானசபையிலே கம்பீரமாகக் காட்சி கொடுப்பவர் கஜசம்ஹாரர். ஒரு காலத்தில் யானை வடிவு கொண்ட கஜாசுரன் என்பவன் பிரமனை நோக்கித் தவஞ்செய்து அரிய வரங்களைப் பெற்றுத் தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தியிருக்கிறான். தேவர்களும் முனிவர்களும் முறையிட இறைவன் கஜாசுரனுடன் போர் ஏற்று, அவன் உடல் கிழித்து, அந்த யானையின் தோலையே போர்வையாகப் போர்த்துக் கொண்டிருக்கிறார். இங்குள்ள கஜசம்ஹாரர் மூன்று நான்கு அடி உயரத்தில் அற்புதமாக உருவாகியிருக்கிறார். மேலைநாட்டுக் கலை உலகிலே பிரசித்தி பெற்ற ஒன்று லாவக்கூன் என்னும் சிலை. ஒரு தந்தையையும் அவன் மக்கள் இருவரையும் இரண்டு மலைப்பாம்புகள் சுற்றிக் கொள்ள அந்தப் பிடியிலிருந்து மீளத்தந்தையும் மக்களும் திருகிக்கொண்டு தவிப்பதை

உருவாக்கியிருக்கிறான் சிற்பி. இந்தச் சிற்பி வடிவத்தின் முதுகுக்கு மண்காட்டியிருக்கிறது இந்தக் கஜசம்ஹார செப்புச்சிலைவடிவம். யானையின் உள்ளே புகுந்து திருகிக்கொண்டு வரும் மூர்த்தியின் முன்பாகமும் பின்பாகமும் தெரியும்படி அல்லவா சிற்பி வடித்திருக்கிறான். என்ன அற்புதமான வடிவம்! பக்கத்திலே அஞ்சி ஒடுங்கும் அன்னை. அந்த அன்னையின் கரத்திலே தந்தையின் வெற்றி கண்டு மகிழும் குழந்தை முருகன். எல்லோருமே உருவாகியிருக்கிறார்கள் செப்புச் சிலை வடிவில். இந்தக் கஜசம்ஹார மூர்த்தத்தையே கபில பரணரும், சமய குரவர் மூவரும் பாடியிருக்கிறார்கள்.

**பேரானை ஈர்உரிவைப்**
**போர்த்தானை, ஆயிரத்து எண்**
**பேரானை ஈர்உருவம்**
**பெற்றானைப் – பேரா நஞ்சு**
**உண்டானை, உத்தமனை**
**உள்காதார்க்கு எஞ்ஞான்றும்**
**உண்டா நாள் அல்ல உயிர்**

என்று சங்கப் புலவர் பாடி மகிழ்ந்தால்,

**விரித்தபல் கதிர்கொள் சூலம்**
**வெடிபடு தமரு கங்கை**
**தரித்ததோர் கோலகால**
**பயிரவனாகி வேழம்**
**உரித்து உமை அஞ்சக்கண்டு**
**ஒண்திரு மணிவாய் விள்ளச்**
**சிரித்து அருள்செய்தார் சேறைச்**
**செந்நெறிச் செல்வனாரே**

என்று அப்பர் பாடுகிறார். இப்படிக் கவிதை வளர்த்த கலையாக, கஜசம்ஹாரர் நிற்கிறார் இக்கோயில் உள்ளே.

இந்தப் பிக்ஷாடனர், கஜசம்ஹாரரையெல்லாம் பார்த்த பின் இங்கு பார்க்கவேண்டியவை ஒன்றுமே இராது. செப்பு வடிவத்தில் இருக்கும் நடராஜர் அவ்வளவு அழகான சிற்பம் இல்லை. அவரையும் தரிசித்துவிட்டு லிங்க உருவில் இருக்கும் மூலவரைத் தரிசிக்கலாம். இந்த மூலமூர்த்தியே விரட்டேசுவரர். வடமொழியில் கிருத்திவாஸேசுவரர் என்பர். அதற்கு யானையின் தோலைப் போர்த்தி அருளியவர் என்றுதான் அர்த்தம். இங்கு அம்மன் சந்நிதி கோயிலின் வட பக்கத்தில் தனித்திருக்கிறது. இவளையே பாலகுராம்பிகை என்றும் இளங்கிளைநாயகி என்றும் கூறுவார்கள். இளங்கிளை எவ்விதம் அழகு வாய்ந்ததாகவும், வளர்ச்சி உடையதாகவும் காணப்படுகிறதோ அவ்வாறே உலகத்தில் உயிர்களைத் தோன்றச் செய்து அவை வளர்ச்சி அடைய அருளுகிறாள் என்பது பொருள். இவளுக்கே கிருபாவதி என்ற பெயரும் உண்டு. இன்னும் இத்தலம் தீர்த்த விசேஷத்தாலும் சிறப்புற்றது. இறைவனுக்கு ஐந்து முகங்கள் என்பார்கள். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியயோசாதம் என்பவை அவை என்றும் விளக்குவார்கள். இந்த ஐந்து முகங்களின் பேராலும், ஐந்து தீர்த்தங்கள் இக்கோயிலையொட்டி உருவாகியிருக்கின்றன. போதிய அவகாசத்தோடு கோயிலுக்குப் போகிறவர்கள் இத்தீர்த்தங்களில் நீராடி, புராணங்களில் சொல்லியிருக்கின்ற அத்தனை பலன்களையுமே பெறலாம். மாசி மகத்தன்று இக்கோயிலில் பெரிய விழா நடைபெறுகிறது. அன்று உதயத்தில்தான் கஜசம்ஹார விழா நடனக்காட்சி. மார்கழித் திருவாதிரை அன்றுமே கஜசம்ஹார நடனம் சிறப்பாக நடைபெறும். திருவாதிரைக்கு முந்திய நாள் புனர்பூசத்தில் கஜசம்ஹாரரை வெண்மையாக அலங்காரம் செய்து பக்தர்கள் கண் குளிரக் காண்பார்கள். கோயில் நிரம்ப வருவாயுள்ள பெரிய கோயில் அல்ல; என்றாலும் இந்த இறைவன் ஏழையுமன்று. இந்த வீரட்டானேசுவரருக்கு

வருஷத்துக்கு 5000 கலம் நெல் கிடைக்கிறது. ரூ.2000 ரொக்கமாக வேறே வருகிறது. போதாதா, நெல்லுக்கு நல்லவிலை இருக்கும் இக்காலத்தில்?


இதில் பதினைந்து கல்வெட்டுக்கள் உண்டு. கல்வெட்டுக்களில் இவ்வூர் வழுகூர் என்று இருக்கிறது. திருவழுதூர் நாடு என்றும், ஐயங்கொண்ட சோழ மண்டலத்தைச் சேர்ந்ததென்றும் குறிக்கப் பெற்றிருக்கிறது. இத்தலத்து இறைவனை வீரட்டானாம் உடையார், வழுவூர் நாயனார் என்றெல்லாம் கல்வெட்டுகள் கூறுகின்றன. கோயிலில் விளக்கிட, திரும்வெம்பாவை ஓத எல்லாம் நிபந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மதில், கோபுரம் முதலியவற்றை அழகப் பெருமாள் பிள்ளை கட்டியது என்றும் அறிகிறோம். இரண்டாம் ராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் பல நிபந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் தான் அம்பிகையின் கோயில் கட்டப்பட்டது என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. விஜயநகர மன்னன் வீரபொக்கண்ண உடையார் காலத்தில் 1324ல் காவிரி வெள்ளத்தால் சேதம் அடைந்த நிலங்களுக்குத் தீர்வை வஜா ஆகியிருக்கிறது.

முன்னர் எல்லாம் இக்கோயிலுக்குள் சென்றால் பிக்ஷாடனர், கஜசம்ஹாரர், மோஹினி முதலிய திரு வுருவங்களின் வஸ்திரங்களைக் களைந்து மூர்த்திகளின் வண்ணத்தைக் காட்டமாட்டார்கள் அர்ச்சகர்கள். இக்கோயிலில் இருபது வருஷகாலமாக இருந்த ஒரு தருமகர்த்தருக்கு, கஜசம்ஹாரர் பக்கத்தில் உள்ள அன்னையின் இடையில் முருகன் இருக்கிறான் என்பதே தெரியாதாம். காரணம், அன்னையையும் குமரனையும் சேர்த்தே சேலை கட்டி வைத்திருக்கிறார்கள். இப்போதெல்லாம் அத்தனை கெடுபிடி பண்ணுகிறதில்லை அர்ச்சகர்கள். விரும்பினால் கஜசம்ஹாரரின் முழுக்

கோலத்தையும் காட்டுவார்கள். அன்னையைக் காட்டுவார்கள், முருகனையுமே காட்டுவார்கள். கண்டு தொழுது கலை அறிவு பெற்றுத் திரும்பலாம் நாம். நடன உலகில் பிரசித்தி பெற்ற ஆசிரியர் வழுவூர் ராமையா பிள்ளை என்பது தெரியும். கஜசம்ஹார நடனம் நடந்த இடத்தில் பிறக்கும் பாக்கியம் பெற்றவர் சிறந்த நடன ஆசிரியராகப் பணியாற்றுவது வியப்பில்லை. வழுவூரால் அவர் பிரசித்தி பெற்றிருக்கிறார். ஏன்? ராமையா பிள்ளையாலுமே வழுவூர் இன்று கலை உலகில் பிரசித்தி பெற்றதாகத்தானே இருக்கிறது.



காட்சி கொடுத்த நாயகர்



இறைவன் இறைவி பறை உருவில்

# 20

# அம்பர் மாகாளத்தான்

ரஷ்ய நாட்டிலே ஒரு சிறு கிராமம். அங்கு மார்ட்டின் என்று தோல் வேலை செய்பவன் ஒருவன். வயது முதிர்ந்த கிழவன் அவன். மனைவி மக்களை எல்லாம் இழந்து தளர்ந்தவன் என்றாலும், இறைஅருளிலே நல்ல அழுத்தமான பக்தி உடையவன். தன்னைத்தேடி வருபவர்களுக்கு எல்லாம் உண்டி, உடை, உறைவிடம் எல்லாம் கொடுத்து ஆதரிக்கத்தவறாதவன். அவனுக்கு ஓர் ஆசை, தன்னைப் படைத்துக் காக்கும் இறைவனை நேரில் காணவேண்டுமென்று. தான் வணங்கும் இறைவனிடம் பல தடவை இந்தப் பிரார்த்தனையைச் செய்து கொள்கிறான். ஒரு நாள் இரவில் கனவில் இறைவன், ''மார்ட்டின்! மார்ட்டின்! நாளை உன்னைக் காணவருகிறேன்' என்கிறார். மார்ட்டினுக்கோ ஒரே மகிழ்ச்சி. வரும் இறைவனை வரவேற்கத்தக்க முஸ்தீபுகளோடு இருக்கிறான். பகல் பொழுது கழிகிறது; இரவிலுமே பத்துமணி வரை ஆகிவிடுகிறது. இறைவன் வரக்காணோம். உள்ளம் தளர்கிறது. இறைவன் நம்மை ஏமாற்றி விட்டாரே என்று நினைக்கிறான்.இப்படி இவன் குறைபட்டுக் கொண்டிருந்த பொழுது ஒரு அசரீரி கேட்கிறது. 'மார்ட்டின் உன் விருப்பம் பூர்த்தியாயிற்றல்லவா?' என்று. 'என்ன சுவாமி? சொல்லியபடி வராமல் என்னை ஏமாற்றிவிட்டு, இப்படிக்

கேட்கிறீரே?' என்று அங்கலாய்க்கிறான் மார்ட்டின். அதற்கு இறைவன் சொன்னபதில் இதுதான்: 'அன்பனே! இன்று காலை ஒரு வயோதிக சிப்பாய் வந்தானே அவனை அன்போடு வரவேற்று அவனுக்கு ரொட்டியும் டீயும் கொடுத்தாயே, அவன் யாரென்று நினைக்கிறாய்? நடுப்பகலில் கைக்குழந்தையுடன் ஏழைப் பெண்ணொருத்தி வந்தாளே அவளுக்கு உணவு அளித்துக் குழந்தைக்குப் பால் கொடுத்து, குளிருக்குப் போர்வையும் கொடுத்தாயே, அந்தப் பெண் யாரென்று நினைக்கிறாய்? மாலையில் கூடையில் பழம்விற்றுக்கொண்டிருந்த கிழவியிடம் பழம் திருடி உதைபட இருந்த சிறுவனுக்குப் பிணைநின்று அவனைத் திருத்தி வீட்டுக்கு அன்போடு அனுப்பி வைத்தாயே, அந்தப் பையன் யாரென்று நினைக்கிறாய்? வயது முதிர்ந்த சிப்பாயாக, ஏழைப்பெண்ணாக, திருந்தாத பையனாக வந்தவன் நானேதான். என்னை நீ கண்டு கொள்ள வில்லையா?' என்கிறார். மார்ட்டின் உணர்கிறான். கருணை நிறைந்த இறைவன் என்ன என்ன வேடங்களில் வந்து தன்னை ஆட்கொண்டிருக்கிறான் என்று நினைந்து நினைந்து மகிழ்ச்சியில் ஆழ்ந்து விடுகிறான்.

இப்படி ஒரு கதை. லியோ டால்ஸ்டாய் என்ற அறிஞர் 1885ம் ஆண்டிலே எழுதியிருக்கிறார். (இந்தக் கதையின் விரிவைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் டால்ஸ்டாயின் இருபத்து மூன்று கதைகள் என்ற புத்தகத்தை வாங்கிப் படிக்கலாம்) இந்தக் கதை எழுதுவதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன்னாலே சோமாசிமாற நாயனார் விரும்பியபடி, அவர் நடத்திய சோமயாகத்துக்கு இறைவனே நேரில் எழுந்தருளியிருக்கிறார். ஆனால் வந்த திருக்கோலமோபறையன் உருவில். பக்தர்களை ஆட் கொள்ள இறைவன் எந்த எந்த வடிவத்தில் வருவான் என்பதை யாரால் சொல்லக்கூடும்? எப்படி சோமாசிமார நாயனாரது வேள்விக்கு அவன் எழுந்தருளினான் என்ற முழு

விவரமும் தெரிந்துகொள்ள நாம் அம்பர் மாகாளம் என்னும் கோயிலுக்கே போகவேணும். அங்கேயே போகிறோம். இன்று.

அம்பர் பெருந்திருக்கோயில், கோயில் திருமாகாளம் என்று இரண்டு கோயில்கள் அடுத்தடுத்து இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திலே மாயூரம், திருவாரூர் ரயில்வே லைனிலே பேரளம் என்னும் ஜங்ஷனில் இறங்கி, தென் கிழக்காக நாலு மைல் நடந்தோ வண்டியிலோ ஏறிச் சென்றால் கோயில் திருமாகாளம் என்னும் அம்பர் மாகாளம் போய்ச்சேரலாம். இன்னும் கொஞ்சம் ஆறு பர்லாங்கு நடந்து சென்றால் அம்பர் பெருந்திருக்கோயிலுக்கும் போகலாம். செல்கிறவர்கள் அவசரப்படாமல், சாவ தானமாக இரண்டு கோயில்களையும் பார்த்து விட்டுத் தான் திரும்ப வேணும். ஒன்றைப் பார்த்து ஒன்றைப் பார்க்கத் தவறி விடுதல் கூடாது. இக்கோயில்களுக்குச் செல்லுமுன் சோமாசிமாற நாயனார் சரிதத்தையும் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேணும்.

அம்பர் என்ற திருத்தலத்திலே சோமாசிமாறர் என்ற அந்தணர் பிறந்து வளர்ந்து நல்ல சிவநேசச் செல்வராக வாழ்ந்து வருகிறார். பிரணவ மந்திரம் ஓதி ஓதி உயர்கிறார். அவர் திருவாரூர் சென்று தியாகேசனை வணங்கிய பொழுது, அங்கு வன்தொண்டராம் சுந்தருடன் இறைவன் தோழமை கொண்டு அவர் இட்ட ஏவலைச் செய்கிறார் என்பதையெல்லாம் கேட்டு அறிகிறார். இவருக்கும் ஒரு ஆசை பிறக்கிறது. 'நமக்கு இந்த இறைவன் அப்படி ஒன்றும் பெரிய தொண்டுகள் செய்ய வேண்டாம். நாம் செய்யும் யாகத்துக்கு நேரில் எழுந்தருளி அவிர்ப்பாகம் பெற்றுக் கொண்டால் போதும்' என்று நினைக்கிறார். இந்த ஆசையைச் சுந்தரரிடம் விண்ணப்பித்து, முடித்துக்கொள்ள நினைக்கிறார். அதற்காகப் பரவையாரிடம் 'சிபார்சு' பண்ணச் சொல்கிறார். அந்த அம்மையும் சுந்தரரிடம், சோமாசிமாறரது விருப்பதை நிறைவேற்றி வைக்க

வேண்டுகிறாள். ஆம்! உத்தரவு ஹோம் கவர்ன் மென்டிலிருந்தல்லவா பிறந்திருக்கிறது. சுந்தரர் ஒப்புக் கொள்ளாமல் இருப்பாரா? சுந்தரர் ஒப்புக்கொண்டு விட்டார் என்றால் இறைவனும் சரி என்று சொல்வதைத் தவிர வேறு ஏதாவது ஆக்ஷேபணை கிளப்பக் கூடுமா? சுந்தரரிடம், 'சரி வருகிறேன், உன் நண்பனை மிக்க கவனத்துடன் யாகத்தை நடத்தச் சொல்லு' என்று சொல்லி விடுகிறார். யாகம் நடக்கிறது விமரிசையாக.

தியாகேசர் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேள்விக் கூடத்துக்கு வருகிறார். நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக்கிப் பிடித்துக் கொள்கிறார். தம்பட்டம், மதுக்குடம், மாட்டு இறைச்சி எல்லாவற்றையும் சுமந்து கொண்டு வந்து சேர்கிறார். யாகத்தை நடத்திக் கொண்டிருந்த பிராமணர்களோ, 'அடே! சண்டாளனான பறையன் இங்கு வரலாமா? போ, ஒதுங்கிப் போ' என்று விரட்டுகிறார்கள். பறையன் வந்ததால் யாகமே கெட்டு விட்டது என்று சொல்லி ஓடிப் போய் விடுகிறார்கள். ஆனால் சோமாசிமாறருக்கு மட்டும் விஷயம் விளங்குகிறது. தம் மனைவியுடன் வந்த பறைத் தம்பதிகளை எதிர் கொண்டழைத்து உபசரித்து அவிர்ப்பாகம் கொடுக்கிறார். உடனே இறைவன் தாம் எடுத்து வந்த பறை உருவைக் களைந்து விட்டு ரிஷபாரூடராய்க் காட்சி கொடுத்து மறைகிறார். தம்மை வெறுத்து ஒதுக்கிய பிராமணர்களைச் சண்டாளர்களாகப் போகும்படி சபிக்கிறார். அவர்கள் இறைவன் அடிவீழ்ந்து சாப விமோசனம் வேண்ட அவர்களையும் அவர்கள் சந்ததிகளையும் தினமும் மத்தியானம் ஒரு மணி நேரம் நீசத்வம் அடையவும், மற்ற வேளைகளில் புனிதர்களாக வாழவும் அனுக்கிரகிக்கிறார். இவ்வளவும் உண்மையாக நடந்ததோ இல்லையோ? கதை என்றாலும் மிக்க சுவையுடைய கதை. இறைவன் தன் பக்தர்களை ஆட்கொள்ள எந்த நேரத்திலும், எந்த உருவத்திலும் வருவான், வரத் தவறான் என்ற உண்மையை அல்லவா உலகுக்குப் பறைசாற்றியிருக்கிறது. (எனக்கு

ஆச்சரியம் எல்லாம் இந்த உண்மையைத் தெள்ளெனத் தெரிந்து கொண்டல்லவா அந்தப் பெரியார் டால்ஸ்டாய் ஒரு அற்புதமான கதையை இந்தப் பகுத்தறிவு யுகத்திலே கூட மிக எளிதாகச் சொல்லியிருக்கிறார் என்பதுதான்). அம்பர் மாகாளத்துக்கும், அம்பருக்கும் இடையில் சோமாசிமார நாயனார் செய்த யாக குண்டம் இருக்கிறது. பறையனாக வந்தபோது 'ஒதுங்கிப் போ' என்று அந்தணர்கள் சொல்ல இறைவன் ஒதுங்கிய இடத்திலே இன்று ஒலியப்பர் கோயில் ஒன்று எழுந்திருக்கிறது. இந்த உத்சவம் வேறே வருஷந் தோறும் வைகாசி ஆயில்யத்திலே அம்பர் மாகாளத்திலே நடக்கவும் செய்கிறது.

இந்த ஒரு கதையைத் தெரிந்து கொள்ளவே இந்தத் தலத்துக்கு வரலாம். வந்த இடத்திலே இரண்டு கோயில்களில் உள்ள மூர்த்திகளை வணங்கலாம், மற்ற வரலாறுகளையுமே தெரிந்து கொள்ளலாம். முதலில் அம்பர் மாகாளம் சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் மாகாளநாதர், பயக்ஷயநாயகி முதலியோரை வணங்கி விடலாம். இந்தத் தலத்துக்கு அம்பர் மாகாளம் என்று பெயர் வருவானேன்? இதைத் தெரிந்துகொள்ள அம்பன் அம்பரசுரன் சரிதையைக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேணும்.

ஒரு நாள் துர்வாசர் சிவபெருமானைக் காண அவசரமாகக் ககன மார்க்கமாய்ப் போய்க்கொண்டிக்கிறார். மதலோலா என்ற தேவகன்னிகை புத்திரப்பேற்றை விரும்பி அவரை அணுகுகின்றாள். எதற்கும் எளிதாகக் கோபப்படும் இந்தத் துர்வாசர் ஏதோ அன்று கருணைகூர்ந்து மதலோலாவுக்கு எவராலும் வெல்ல முடியாத அசுர அம்சம் உடைய இரண்டு புத்திரர்கள் பிறக்கட்டும் என்று ஆசீர்வதிக்கிறார். அம்பரன், அம்பன் என்று இரண்டு புத்திரர்கள் பிறக்கிறார்கள். (அம்பரத்திலே பிறந்தவன் அம்பரன்; அவன் தம்பி அம்பன்) இவர்கள் இருவரும் சிவ

வழிபாட்டிலே திளைத்து நிற்பவர்கள் என்றாலும் தேவர்களுக்கும் தேவமாதர்களுக்கும் இடுக்கண் விளைக்கும் அசுர தர்மத்தையும் விட்டுவிடவில்லை. தேவர்கள் எல்லோரும் கைலாசம் சென்று முறையிடுகிறார்கள். தமது பக்தர்களைத் தாமே அழிப்பது உசிதமில்லை என நினைந்து, துணைவியாம் மனோன் மணியையும் மைத்துனர் விஷ்ணுவையும் அனுப்பி வைக்கிறார். இறைவி தம் அம்சமும் அழகும் நிறைந்த காளிகாதேவியை ஒரு இளங்கன்னியாகச் சிருஷ்டித்து அனுப்புகிறாள். இந்தப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு கிழவேதியர் வடிவில் வந்த விஷ்ணு, அம்பரன் அம்பன் வசிக்கும் அம்பர் என்னும் தலத்தில் ஒரு இடத்தில் வீற்றிருக்கிறார். அழகான கன்னிகையைக் கண்ட அசுரர்கள் இருவரும், பெண்ணைத் தங்களுக்குத் திருமணம் முடித்துக் கொடுக்கக் கேட்கிறார்கள். விஷ்ணுவும் இருவரில் ஒருவருக்குக் கொடுக்கச் சம்மதிக்கிறார். அதனால் அம்பரன் தன் தம்பி அம்பனைக் கொன்றுவிட்டுத் தானே கன்னியை மணந்து கொள்கிறான்.

கன்னிகையான காளியை அவன் தழுவியதும், அவள் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தி அம்பரனைத் துரத்தி அவன் உயிரைக் குடித்துவிடுகிறாள். அதன் பின் உலகம் காத்தலை மேற்கொண்டு காளி கன்னிகையாக அத்தலத்தில் கோயில் கொள்கிறாள். சிவபூசை செய்து அசுரர்களைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொள்கிறார்கள். அம்பரன் இருந்த ஊர் அம்பர். மகாகாளி கோயில் கொண்ட இடம் மகாகாளிபுரி என்று வழங்கப்படுகிறது. மகாகாள ரிஷி பூசை செய்து முத்தி பெற்ற இடம் ஆனதால் மகாகாளம் என்று பெயர் பெற்றது என்றும் ஒரு வரலாறு உண்டு. அன்று திருமால் வந்து வீற்றிருந்த இடத்தில் வீற்றிருந்த பெருமாள் கோயில் இருக்கிறது. காளியின் வடிவைப் பூசைக்குக்கூட ஒருவரும் இன்று தீண்டுவதில்லை. தூர இருந்து கோல் ஒன்றின் உதவி யாலேயே ஆடை முதலியன சாத்தி

வழிபடுகிறார்கள். அம்பர் மாகாளம் என்னும் கோயில் திருமாகாளத்தில் உள்ள கோயிலே சோமாசிமார நாயனார், அவர் மனைவி, சுந்தரர், பரவை இவர்களது வடிவங்கள் இருக்கின்றன. இவர்களுக்கு எதிரில் தியாகராஜர் அவரது தேவியின் படிமங்களும் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, பறையன் உருவில் வந்த சிவபிரானது வடிவமும் பின்னர் சோமா சிமாரருக்குத் தன் உண்மை உருவைக் காட்டிக் காட்சி கொடுத்த நாயகர் வடிவமும் இருக்கின்றன செப்புச்சிலை வடிவில். இரண்டும் நல்ல அழகு வாய்ந்த திருவுருவங்கள். பறை கொட்டும் பாணியிலே, உமையையும் பறைச்சி யாக்கிக் கூட்டிக்கொண்டு வரும் அழகுதான் என்னே!

இக்கோயிலுக்கும் இதனை அடுத்த அம்பர் பெருந்திருக்கோயிலுக்குமே ஞானசம்பந்தர் வந்திருக்கிறார்.

பழக மாமலர் பறித்து, இண்டை கொண்டு
இறைஞ்சுவார் பால் செறிந்த
குழகனார் குணம் புகழ்ந்து ஏத்துவார்,
அவர் பலர் கூட நின்ற
கழகனார், கரி உரித்து ஆடும்
கங்காளர், காளி ஏத்தும்
அழகனார், அரிவையோடு இருப்பிடம்
அம்பர் மாகாளந் தானே

என்பது தேவாரம். ஞானசம்பந்தர் போக மறக்காத அம்பர் பெருந்திருக்கோயிலுக்கு நாமும் போய் வந்து விடுவோம். கோயில் கட்டு மலைமேல் இருக்கிறது. கோச் செங்கட் சோழன், யானை ஏறாப் பெருந்திருக்கோயிலாகக் கட்டிய மாடக் கோயில்களில் ஒன்று இது. கோயில் கிழக்கு நோக்கி யிருக்கிறது. நாலு பக்கமும் இலுப்பை மரங்கள் சூழப்பட்ட தோப்பின் மத்தியில் இருக்கிறது. கோவிலுக்கு எதிரில் வடபக்கம் இந்திர தீர்த்தம் இருக்கிறது. மேக ராஜாவின் பெயரில் ஏற்பட்டிருக்கும் இக்குளத்திலோ தண்ணீர்

கிடையாது. அத்தனை வறட்சி இப்பக்கத்தில் இந்தக் காவிரி நாட்டிலே என்றால் வியப்புத்தான். கோயில் கிழமேல் 242 அடி, தென்வடல் 169 அடி என்றால் கொஞ்சம் அளவிட்டு அறிந்து கொள்ளலாம் தானே? கோயிலுள் சென்றதும் அக்கினி பாகத்தில் புன்னை மரத்தடியில் ஆதி மூர்த்தியாம் சிவபிரான் எழுந்தருளியிருக்கிறார். புன்னையே இங்கு தல விருக்ஷம். பக்கத்திலேயே 'அன்னமாம் பொய்கை' ஒன்றும் இருக்கிறது. மலை ஏறு முன்னரே படிக்காசு விநாயகரை வணங்கிவிட வேண்டும்.

> கடிக்காசு வளர்படப் பூண்
> முடிக்காசு மதியொடு அணி
> கடவுள் எங்கள்
>
> குடிக்காசு தவிர்த்து அருள்
> செய் படிக்காசு மழகளிற்றை
> குறித்து வாழ்வாம்

என்று மகாவித்வான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய பாட்டையே பாடிப் பரவலாம். இனி கட்டு மலை மேல் ஏறினால் அங்கு பிரம்மபுரி ஈசுவரர் லிங்கத் திருவுருவில் காட்சி கொடுப்பார். இந்த லிங்கத் திருவுரு இருக்கும் கருவறையின் உட்சுவரிலே கைலாசநாதன், உமை, கந்தன் சகிதம் உப்புச உருவிலே இருப்பான். இங்கு செப்பு விக்ரஹங்கள் நிறைய இருக்கின்றன. அம்பர் நகர்ப் பெருங்கோயில் அமர்ந்த இந்த இறைவனை வணங்கிவிட்டு மலையைவிட்டு இறங்கி, தெற்கு நோக்கியிருக்கும் சுகிர்த குந்தளாம்பிகையின் சந்நிதிக்கு வரவேணும். பூங்குழல் அம்மை என்று அழைக்கப்படும் இந்த அம்பிகை அழகான திருவுரு. இவர்களைத் தரிசித்த பின் சுற்றுக் கோயில்களில் உள்ள பரிவார தெய்வங்களையுமே கண்டு வணங்கலாம். இத்தல புராணத்தைப் புரட்டினால், பிரமன் பூசித்து அருள் பெற்றது, சம்ஹார சீலனை வதம் செய்த விமலன் அருள்

பெற்றது, மன்மதன் சாபம் நீங்கப் பெற்றது என்றெல்லாம் வரலாறுகள் விரியும். சங்கார சீலனைக் கொன்ற பைரவரே ஆபத்தோத்தாரணர் என்ற பெயரோடு சட்டைநாதர் திருவுருவில் அக்கினி திக்கில் கோயில் கொண்டிருக்கிறார்.

இத்துணை பெருமையுடைய இந்த அம்பர் இலக்கியப் பிரசித்தியும் உடையது என்று சொல்ல வேண்டும் என்பது ஊரில் உள்ளவர்கள் எண்ணம். அதற்கு ஒரு வரலாறும் கூறுவர். இங்குள்ள சிலம்பி என்னும் தேவதாசியிடம் ஆயிரம் பொன் கேட்டு அவள் கொடுத்த ஐந்நூறு பொன்னுக்கு அரைப்பாட்டு பாடி இருக்கிறான் கம்பன். பின்னர் வந்த ஔவை சிலம்பி கொடுத்த கூழைக் குடித்து விட்டுப் பாட்டைப் பூர்த்தி செய்திருக்கிறாள். முழுப்பாட்டும் இதுதான்.

**தண்ணீரும் காவிரியே!**
**தார்வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழ**
**மண்டலமே!–பெண்ணாவாள்**
**அம்பர்ச் சிலம்பி**
**அரவிந்தத் தாளணியும்**
**செம்பொற் சிலம்பே சிலம்பு**

'அம்பொற்' சிலம்பியை அம்பர்ச் சிலம்பியாக்கித் தங்கள் ஊருக்குப் புகழ் தேடிக் கொள்கிறார்கள், அம்பர் ஊர்க் காரர்கள். அவர்கள் கெட்டிக்காரர்கள்தான்.

# 21

# செங்காட்டாங்குடி உடையான்

திருத்தொண்டர் பெரிய புராணம் எழுதியவர் சேக்கிழார். அறுபத்துமூன்று நாயன்மாரது சரித்திரத்தை வரலாற்று முறையில் எழுதியிருக்கிறார். தெய்வம் மணக்கும் செய்யுள்களில் சிறந்த பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டக் கதைகளைச் சொல்கிறார் அவர். அந்தப் புராணத்தில் வரும் நாயன்மார்கள் எல்லோருமே அவரவர் கடைப்பிடித்த காரியத்தில் எத்தனை இடையூறு வந்தாலும் அத்தனைக்கும் ஈடு கொடுத்து, வெற்றி கண்டவர்கள். செயற்கரிய செயல்கள் பல செய்தவர்கள். இவர்களில் திருத்தொண்டின் உறைப்பிலே தலை நின்றவர் சிறுத்தொண்டர். அவரது வரலாறு ரஸமானது . ஏன்! கொஞ்சம் பயங்கரமானதும் கூட.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் படைவீரர்களில் ஒருவராகச் சேர்ந்து படிப்படியாக உயர்ந்து சேனாதிபதியாக உத்தி யோகம் ஏற்கிறார் பரஞ்சோதி. மகேந்திரவர்மனது மகனான நரசிம்மன் என்னும் மாமல்லனுக்கு உற்ற துணைவனாகப் பணியாற்றுகிறார். காஞ்சி வட்டாரத்தில் சளுக்க மன்னன் புலிகேசி செய்த அட்டூழியங்களுக்குப் பழிவாங்க, மாமல்லன் சளுக்கர்கள் மீது படையெடுத்துச் சென்றபோது, படையை முன்னின்று நடத்திய வீரர் பரஞ்சோதி, சளுக்கர் தலைநகரமான வாதாபியைத் தீக்கு இரையாக்கி வெற்றி கண்டார்.

மன்னவர்க்குத் தண்டுபோய்,
வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத்
துணைநெடுங்கை வரை உகைத்து,
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகலரசன் முன் கொணர்ந்தார்

அவர், என்று சேக்கிழார் பாராட்டுகிறார். இப்படிப் போருக்குச் சென்று வீரர் எல்லாம் பலப் பல பொருள்கள் கொண்டு வர, சேனாதிபதி பரஞ்சோதியார் மட்டும் வாதாபிக் கோட்டை வாயிலில் இருந்த கணபதியைக் கைப்பற்றிக் கொணர்ந்து தம் சொந்த ஊராகிய திருச்செங்காட்டாங்குடியில் ஒரு கோயில் கட்டிப் பிரதிஷ்டை செய்து விடுகிறார். வாதாபிப் போரில் இரு தரத்து மக்களும் மற்ற உயிரினங்களும் பட்ட துயரை யெல்லாம் அறிந்து அன்றே சேனாதிபதிப் பதவியை உதறி விட்டு, துறவு பூண்டு தம் ஊரிலேயே தங்கி விடுகிறார், மனைவி வெண்காட்டு நங்கையுடனும், மைந்தன் சீராள னுடனும். இப்படித்தான் 'தம் பெருமான் திருத்தொண்டர் சிறுத்தொண்டர்' என்ற பெயரோடு வாழ்ந்து வருகிறார் செங்காட்டாங்குடியில்.

இவரது தொண்டின் சிறப்பை உலகுக்கு உணர்த்த விரும்புகிறான் இறைவன். பைரவ வேடத்துடன் வந்து சேருகிறான். சிறுத்தொண்டரிடம் தன்னை உத்தராபதியான் என்று அறிமுகம் செய்து கொள்கிறான். அமுது செய்தருள வேண்டும் என்று கேட்ட சிறுத்தொண்டரிடம், 'ஒரு தாய்க்கு ஒரு மகனாக, அங்கம் பழுதில்லாத மைந்தன் ஒருவனை, அறுத்துக் கறி சமைத்துத் தந்தால் உண்போம்' என்கிறான். பள்ளி சென்ற பாலனாம் சீராளனையே அழைத்துவந்து, சிறுத்தொண்டரும், வெண் காட்டு நங்கையும் அரிந்து கறி சமைக்கிறார்கள். உத்தராபதியாரை உள்ளே அழைக்கிறார்கள். எழுந்தருளிய அவரோ, உடன் உண்ணப் பிள்ளையை அழைக்க

வேண்டுகிறார். 'இப்போது அவன் உதவான்' என்று சொல்லிப் பார்த்தும் கேளாததால், அவர் விரும்பியபடியே வெளியே சென்று 'மைந்தா! வருவாய்!' என்று அழைக்கிறார் சிறுத்தொண்டர். நங்கையும், 'செய்யமணியே சீராளா! வாராய் சிவனார் அடியார் யாம் உய்யும் வகையால், உடன் உண்ண அழைக்கின்றார்' என்றே ஓலமிடுகின்றாள். அப்பொழுதே சீராளன் பள்ளியிலிருந்து ஓடி வருபவன் போல ஓடி வருகிறான். வந்த உத்தராபதியாரும் மறைந்து ரிஷபாரூடராகக் காட்சி அளிக்கிறார். என்னே இவர் தம் திருத் தொண்டின் உறைப்பு? வாளால் தன் மகவையே அரிந்து சிவனடியாருக்கு ஊட்ட முனைகின்ற தொண்டு எவ்வளவு சிறந்தது? இப்படித் தொண்டு செய்தவர்தான் சிறுத் தொண்டர் என்னும் அரிய பெரிய தொண்டர். அவர் பிறந்து வளர்ந்த பதியே திருச் செங்காட்டாங்குடி. அந்தப் பழங் குடிக்கே செல்கிறோம் நாம் இன்று.

திருச்செங்காட்டாங்குடி, தஞ்சை ஜில்லாவில் திருவாரூர் - மாயூரம் ரயில்பாதையில் நன்னிலம் ஸ்டேஷனுக்குக் கிழக்கே ஏழு மைல் தொலைவில் இருக்கிறது. ஸ்டேஷனிலிருந்து வண்டி வைத்துக் கொண்டு செல்லலாம். தஞ்சை ஜில்லாவில் மொட்டை மாடுகள் பூட்டிய வில் வண்டிகள்தான் பிரசித்தமானவை ஆயிற்றே. இல்லை, கார் வசதி உடையவர்கள் எல்லாம் அந்த நன்னிலம், நாகப்பட்டினம் சாலையில் திருப்புகலூர் போய் முடிகொண்டான் ஆற்றின்மீது சமீபகாலத்தில் கட்டி யிருக்கும் பாலத்தைக் கடந்து கண்ணபுரம் வழியாய்ப் போகலாம். இந்தத் திருப்புகலூர்,கண்ணபுரத்தில் உள்ள கோயில்களுக்குமே நாம் இனிப் போகப் போகிறோம். ஆதலால் நேரே விறுவிறு என்று வண்டியையோ காரையோ நன்னிலம் ஸ்டேஷனுக்கு நேர்கிழக்கே எட்டுமைல் தொலைவில் உள்ள திருமருகலுக்கே தட்டிவிடலாம். அதுதானே செங்காட்டாங்குடிக்குப் பழைய பாதை.

செங்காட்டாங்குடி போகுமுன் திருமருகலில் கோயில் கொண்டிருக்கும் மாணிக்க வண்ணரையும்,வண்டுவார் குழலியையுமே தரிசித்து விடலாம். இந்த மருகலுக்கு வந்து இறைவனை வணங்கிய அப்பர்,

**பெருகலாம் தவம்; பேதமை தீரலாம்;**
**திருகலாகிய சிந்தை திருத்தலாம்;**
**மருகலாம் பரம் ஆயதோர் ஆனந்தம்;**
**மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே**

என்று பாடியிருக்கிறாரே. தவத்தால் பெறும் பேற்றையும், பேதைமை தீர்வதையும்விட திருகிக்கொண்டே இருக்கும் சிந்தனையையே திருத்திக் கொள்ளலாம் என்றல்லவா கூறுகிறார் அப்பர். திருகு சிந்தையைத் திருத்தத் தெரியாமல் தானே பெரிய அவதிக்கு உள்ளாகிறோம் நாம். ஆதலால் மருகல் சென்று திருகும் சிந்தையைத் திருத்திக்கொண்ட பின்னரே மேல் நடக்கலாம். மருகல் கோயிலில் இறைவன் இருப்பது ஒரு கட்டு மலைமேலே. சோழன் செங்கணான் கட்டிய மாடக் கோயிலில் ஒன்று இது. இங்கிருக்கும் மாணிக்கவண்ணர் சுயம்பு மூர்த்தி. இம்மூர்த்தி நல்ல வரப்பிரசாதி என்பதை விஷம் தீண்டி இறந்த செட்டிப் பிள்ளையை ஞானசம்பந்தர் உயிர்ப்பித்தருளிய கதை யிலிருந்து தெரிந்து கொள்கிறோம். கதை இதுதான். செட்டியார் மரபைச் சேர்ந்த இளைஞன் ஒருவன். அவன் மாமன் மகளை வேறு ஒருவனுக்குக் கட்டிக் கொடுக்க அவளது பெற்றோர் முனைகின்றனர். ஆனால் காளையும் கன்னியுமோ நல்ல இளங் காதலர்கள். ஆதலால் அவன் தன் காதலியைக் கூட்டிக் கொண்டு ஊரைவிட்டே புறப்படு கிறான். மருகல் வந்து இரவில் ஒரு திருமடத்தில் தங்கு கிறார்கள் இருவரும். இளைஞனை அன்றிரவு பாம்பு தீண்டிவிடுகிறது. அவன் உயிர் துறந்து விடுகிறான். செட்டிப் பெண்ணோ கதறித் துடிக்கிறாள். அப்போது ஞானசம்பந்தர் அந்தத் தலத்துக்கு வந்து சேருகிறார். பெண்ணின் துயரை அறிகிறார், பாடுகிறார்;

கடையனாய் எனுமால், சரன் நீ எனுமால்
விடையாய் எனுமால், வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே?

என்று தான் கேட்கிறார் மருகல் உறை மாணிக்கத்தை. விடம் தீண்டிய செட்டி உயிர் பெற்று விடுகிறான். (அன்பர்கள் கேட்கலாம். காதலரின் உடன் போக்குக்கு இறைவனும் அடியாரும் துணை நிற்கிறார்களே, ஆதலால் உடன் போக்கில் ஈடுபடுவர்களை உற்சாகப்படுத்தலாம் போல் இருக்கிறதே என்று.உற்சாகப்படுத்தலாம். ஆனால் ஒன்று மட்டும் ஞாபகம் இருக்கவேண்டும். இடையில் துயர் வரும் என்பதும், அத்துயர் துடைக்க இப்போதெல்லாம் ஞான சம்பந்தரைப் போன்ற அடியார்கள் கிடையாது என்பதும்) மருகல் கோயிலில்பார்த்து அனுபவிக்க வேண்டிய சிற்ப வடிவங்கள் இல்லை. ஆனால் தெற்கு வாயிலுக்கு எதிர்புறம் சீராளன் படித்த பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியில் இன்றைய தேவஸ்தானம் ஆபீஸ் இருக்கிறது. அதையும் பார்த்துவிட்டு மேற்கு நோக்கி இரண்டு மைல் சென்றால் செங்காட்டாங்குடி வந்து சேரலாம். (ஒரே ஒரு எச்சரிக்கை. மழை காலத்தில் வண்டியோ, காரோ ஒன்றும் போகாது. நடந்துதான் போகவேண்டும். ஆகையால் நல்ல வேனிற் காலத்திலேயே போய்த்திரும்பலாம். ஆம். சித்தரைப் பரணியில்தானே அங்கு அமுது படையல் விழா. அதற்குப் போனால் போகிறது)

தூரத்தில் வரும்போதே கோபுரம் தெரியும். அதனால் நேரே கோபுரத்தை நோக்கியே நடந்துவிடக் கூடாது. கோபுரம் எப்போது கீழே விழுவோம் என்று காத்துக் கொண்டிருப்பதால் வாயிலை நன்றாகச் சுவர் வைத்து அடைத்திருக்கிறார்கள். கோபுர வாயிலுக்கு வட பக்கத்தில் மதிலை வெட்டி ஒரு பாதை அமைத்திருக்கிறார்கள். நாம் அந்தப் பாதையைக் கூட விட்டு விடலாம்.

தெற்கு வீதிக்கே சென்று அந்தத் தெற்கு வாயில் வழியாகவே கோயிலுக்குள் செல்லலாம். அந்த வாயிலுக்கு எதிரே நம்மை எதிர்நோக்கியே நிற்கிறாள் வாய்த்த திருக்குழலி. அவளைக் கண் குளிரத் தரிசித்து விட்டே அப்பர்.

**முருகுவிரி நறுமலர்மேல், மெய்த்தவத்தோர்**
**துணையை, வாய்த்த**
**திருகுகுழல் உமை நங்கை பங்கன் தன்னை**
**செங்காட்டாங் குடியதனில் கண்டேன் யானே**

என்று பாடியிருக்கிறார். நாமும் அவருடன் சேர்ந்தே பாடி வாய்த்த திருக்குழலியை வணங்கியபின் உள்ளேசெல்ல லாம். இனி மேற்கு நோக்கி நடந்து மகா மண்டபத்தையும் கடந்து அர்த்த மண்டபத்துக்குச் சென்று கோயிலுள் இருக்கும் இறைவனையும் வணங்கலாம். வணங்கும்போதே ஓதுவார் ஒருவர் ஞானசம்பந்தர் பாடிய பதிகத்திலிருந்து,

**நுண்ணியான், மிகப்பெரியான்,**
**நோவுஉளார் வாய்உளான்,**
**தண்ணியான், வெய்யான்,**
**தலைமேலான், மனத்துளான்,**
**திண்ணியான் செங்காட்டாங்**
**குடியான், செஞ்சடைமதியக்**
**கண்ணியான், கண்ணுதலான்**
**கணபதீச்சுரத்தானே.**

என்ற பாட்டைப் பாடுவார். இந்தச் செங்காட்டாங் குடியுடையானைக் கணபதீச்சுரத்தான் என்று கூறுவானேன்? என்று கேட்கத் தோன்றும் நமக்கு. கஜமுகாசுரன் என்பவன் தேவர்களுக்கு இடுக்கண் செய்ய, அவனை ஒழித்துக்கட்ட சிவ குமாரரான விநாயகர் யானை முகத்துடன் அவதரித்து அவனைச் சம்ஹரித்திருக்கிறார். இந்தக் கஜமுகாசுரனை சம்ஹரித்தபோது அவனது இரத்தம் செங்காடாய்ப் பெருகிய காரணத்தால் செங்காட்டாங்குடி என்ற பெயர் நிலைத்

திருக்கிறது. இந்தப் பழி நீங்க இத்தலத்தில் இறைவனைக் கணபதி வழிபட்ட காரணத்தால்தானோ என்னவோ, வாதாபி கணபதியும், தமிழ்நாட்டுக்குள் முதல் முதல் இந்தத் தலத்திலேயே புகுந்திருக்கிறார். சேனாபதியார் பரஞ் சோதியார் துணை கொண்டு. இன்னும் இத்தலத்துக்கு எத்தனை எத்தனையோ பெயர்கள்.அத்தனையையும் விவரிக்கப் புகுந்தால் அதுவே ஒரு பெரிய 'ராமா யணம்'ஆகும்.

கணபதீச்சுரத்தானை வணங்கிக்கொண்டு நிற்கும் போதே பக்கத்தில் ஒருவர் வந்து நிற்பார். அவர் யாரென்று உற்று நோக்கினால் அவரே சிறுத்தொண்டர் என்று அறிவோம். கூப்பிய கையோடு, தம் மனைவி வெண்காட்டு நங்கை, பையன் சீராளன் எல்லோரையும் கூட்டிக்கொண்டே வந்திருப்பார் அவர்! ஆம். செப்புச்சிலை வடிவத்தில்தான். அவரது முகத்திலோ சாந்திதவழும். பணிவும் லளிதமும் ஒருங்கே தோன்றக்கைகூப்பி நிற்கும் கோலம் அழகு வாய்ந்தது. பிள்ளைக்கறியமுதுக் கதையைப்பற்றிக் கொஞ்சம் நஞ்சம் சந்தேகம் உள்ளவர்களும், இத்தகைய பக்தர் எதையும், அருமைச் சீராளனையுமே இறைவனுக்கு அர்ப்பணிக்கத்தயங்கமாட்டார் என்பதையுமே உணர்வார் கள். சீராளன் திருவுரு அவ்வளவு அழகானதாக இல்லை. அறுத்துக் கறி சமைத்த பிள்ளையைத் திரும்பவும் அவசரத்தில் தானே பிசைந்து உருவாக்கியிருக்கவேண்டும். எப்படியும்பிள்ளை உயிர் ஓவியமாக நிற்கின்றானே. அது போதாதா? இனிமேல் தான் தென் பக்கமுள்ள சந்நிதிக்கு வந்து உத்தராபதி ஈசுவரரைக் காணவேணும். நின்றகோலத் தில் இருக்கும் பைரவமூர்த்தம். இவ்வடிவம் உருவானதைப் பற்றி ஒரு கதை. ஐயடிகள் காடவர் கோன் விருப்பப்படி, சிற்பிகள் உத்திராபதியார் சிற்பவடிவை உருக்கி வார்க்க முயன்று வெற்றி காணவில்லை.அந்தச் சமயத்தில் ஒரு சிவயோகி வந்து குடிக்கத்தண்ணீர் கேட்டு, சிற்பிகள்

கொடுத்த கொதிக்கின்ற கருவையே உண்டு செப்புச் சிலையாக நின்றுவிட்டார் என்பார்கள். உண்ண வந்து அமர்ந்தவர் நின்று கொண்டா இருந்திருப்பார் என்று எண்ணிய நிர்வாகிகள் அவரையே இருந்த கோலத்திலும் புதிதாக ஒரு வடிவம் வார்த்து வைத்திருக்கிறார்கள். இந்த உத்தராபதி ஈசுவரர் சந்நிதிக்கு எதிரேதான் அவர் வந்து முதலில் தங்கியிருந்த ஆத்திமரம். மரத்தைப் பார்த்தாலே அது எவ்வளவு பழையமரம் என்று தெரியும். இனி வெளிப் பிராகாரத்துக்கு வந்து மேற்க நோக்கி நடந்தால், வாதாபி கணபதியைத் தரிசிக்கலாம். இத்தலத்திலே நிறைய விநாயகர் வடிவங்கள் உண்டு. இன்னும் சிறப்பாக இங்கு ஒரு அம்சமும் உண்டு. வாதாபி கணபதி, உத்தராபதியார், அம்பிகை எல்லோருக்குமே இரண்டிரண்டு கைகள்தாம். இவை யெல்லாம் கூர்ந்து கவனிக்கத்தக்கவை.

மேலப் பிராகாரத்துக்கு வந்து வடக்கே திரும்பினால் இத்தனை சிரமப்பட்டு இத்தலத்துக்கு வந்து இவ்வளவு நேரம் சுற்றியதும் வீண் அல்ல என்று காண்போம். இங்குதான் நவதாண்டவ மூர்த்திகள் நிற்கிறார்கள், நல்ல கற்சிலை உருவிலே. சிவதாண்டவம் ஏழு என்பர் ஒரு சிலர். அதுவும் தவறு, தாண்டவத்திருவுருவம் நூற்றுஎட்டு என்பர் சிற்ப நூல் வல்லார். ஒரு கணக்கிலும் சேராமல் நவதாண்டவம் என்று எழுதியிருக்கும். அங்கே இருப்பது என்னவோ எட்டுப்பேர்கள்தான். புருங்கலளிதர், கஜசம்ஹாரர், ஊர்த்துவ தாண்டவர், காலசம்ஹாரர், கங்காளர், பிக்ஷாடனர், திரிபுரசம்ஹாரர், பைரவர் என்பவர்களே அவர்கள். இவர்களுடன் உத்தராபதியாரையும் சேர்த்தே ஒன்பது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவர்களில் நால்வரே தாண்டவத்திருவுருவினர். மற்றவர் தாண்டவர்கள் அல்ல. போகட்டும்; இந்த விவாதம் எல்லாம் நமக்கு வேண்டாம். இருக்கும் சிலாவடிவங்கள் அத்தனையும் அழகு வாய்ந்தவை. அழகுக்கு அஞ்சலி செய்து அமைதி

பெறலாம். இக்கோயிலில் இன்னொரு சிறப்பும் உண்டு. காலையில் தொழுதால் வினை அகலும், உச்சி வேளையில் தொழுதால் இப்பிறப்பின் துயர் அகலும். மாலையில் தொழுதால் ஏழ் பிறப்பின் வெந்துயரம் எல்லாம் விடும் என்பர். ஆதலால் மாலை வேளையே செல்லுங்கள்.

இக்கோயிலில் 32 கல்வெட்டுகள் இருக்கின்றன. சோழ மன்னர்கள் விஜயநகர மன்னர்கள் செய்த திருப்பணிகள், ஏற்படுத்திய நிபந்தங்கள் எல்லாவற்றையும் விரிவாகக் கல்வெட்டுகள் கூறும். இவர்களில் முக்கிய மானவன், ராஜராஜசோழன் காரியஸ்தனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவனே. அவன்தான் கோயிலின் பெரும் பகுதியைத் திருப்பணி செய்திருக்கிறான். இன்று கோயில் கோபுரம் எல்லாம் திரும்பவும் திருப்பணி செய்யவேண்டிய நிலையில் இருக்கின்றன. தென்னவன் மூவேந்த வேளான் திரும்பவும் அவதரிக்க மாட்டான். ஆதலால் திருப்பணி செய்யவேண்டியவர்கள் தமிழ்மக்களே என்பதை மட்டும் ஞாபகமூட்டிவிட்டு நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

# 22

## கண்ணபுரத்து அம்மான்

காளமேகப் புலவர் என்றால் யார் என்று தமிழர்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் அவரது பூர்வாசிரம வரலாறு எல்லோருக்கும் தெரிந்திராது. வைஷ்ணவ மரபிலே பிறந்த இவர் ஸ்ரீரங்கம் பெரிய கோயிலிலே பரிசாரகராக இருந்திருக்கிறார். ஆனால் இவரது ஆசையோ திருவானைக் காவில் உள்ள கணிகை ஒருத்தியிடம். அவளோ நல்ல சிவ பக்தை. வைணவரான இவரை ஏற்க மறுக்கிறாள். இவருக்கோ காதல் பெரிதே ஒழிய, கடவுள் பெரிது இல்லை. ஆதலால் வைஷ்ணவத்தை உதறித்தள்ளிவிட்டுச் சைவனாகவே மாறி விடுகிறார். சைவனாக மாறி, ஆனைக்கா கோயிலில் காதலிக்காகக் காத்துக் கிடந்த காலையில், அன்னை அகிலாண் டேசுவரியின் அருள் கிடைக்கிறது. அந்த அருள் காரணமாகக் கவிமழை பொழியத் துவங்குகிறார். நாற்கவி ராஜ நம்பியாகவே தமிழகத்தில் உலவுகிறார். திருமலைராயன் பட்டினத்தில், யமகண்டம் பாடி அதிமதுர கவிராயரை வென்று வெற்றிக் கொடியே நாட்டுகிறார். மதம் மாறிய புதிய சைவர் ஆனதால் விஷ்ணுவைப் பாடுவதில்லை என்ற வைராக்கியம் உடையவராக வாழ்கிறார்.

ஒரு நாள் இரவு இவர் கண்ணபுரம் வருகிறார். கண்ணபுரம் என்ற உடனேயே தெரியும் அங்கு கோயில்

கொண்டிருப்பவர் பெருமாள் என்று. இவர் அந்த ஊர் வந்து சேர்ந்தது அகாலத்தில். அப்போது நல்லமழைவேறே. மழைக்கு ஒதுங்க இடந்தேடி அலைந்து கண்ணபுரத்துக் கண்ணன் கோயிலுக்கே வருகிறார். பெருமாளுக்கோ இவர் பேரில் ஒரே கோபம், தன் பக்தனாக இருந்தவன் ஒரு கணிகையின் காதலுக்காகச் சிவபக்தனாக மாறிவிட்டானே என்று. ஆதலால், இவரைக் கோயிலுக்குள் அனுமதிக்க விரும்ப வில்லை. 'கண்ணபுரம் கோயில் கதவடைத்துத் தாழ் போட்டார் மண்ணையுண்டார், வெண்ணெய் உண்டமாயனார்.' காளமேகமோ சொட்டச் சொட்ட மழையில் நனைந்து கொண்டே கோயில் வாயிலுக்கு வந்து விடுகிறார். கதவடைத்துத் தாழ் போட்டிருப்பதைப் பார்க்கிறார். பெருமாளின் கோபத்தை அறிகிறார். பெருமாளைத் திருப்திப் படுத்துவார் போல் பாட ஆரம்பிக்கிறார். 'கண்ணபுர மாலே! கடவுளிலும் நீ அதிகம்' என்று துவங்கினாரோ இல்லையோ, பெருமாளுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. காளமேகத்துக்கு இரங்கிக் கதவைத் திறந்து விடுகிறார். உள்ளே நுழைந்த காளமேகமோ, தொடர்ந்து பாடுகிறார் பாட்டை, 'உன்னிலுமோ நான் அதிகம்' என்று. ஐயோ! நாம் ஏமாந்து விட்டோமே என்று பெருமாள் எண்ணுவதற்குள், தாம் சொன்னதற்கெல்லாம் காரணத் தையுமே விளக்குகிறார் பாட்டில். முழுப்பாட்டும் இதுதான்.

கண்ணபுர மாலே!
கடவுளிலும் நீ அதிகம்;
உன்னிலுமோ நான் அதிகம்;
ஒன்று கேள்! – முன்னமே
உன்பிறப்போ பத்து,
உயர் சிவனுக்கு ஒன்றும் இல்லை,
என்பிறப்போ எண்ணத்
தொலையாதே.

உண்மைதானே. பிறவி ஒன்றும் இல்லாததற்கு அவதாரம் பத்து பெரிதுதான். பத்தைவிட எண்ணத்

தொலையாத பிறவிஎடுக்கும் மனிதன் இன்னும் பெரியவன் தானே. கணக்கும் சரியாக இருக்கிறதே. இப்படிக் கணக்குப் போட்டுக் கண்ணபுரமாலை அறிமுகப்படுத்தி வைக்கிறார் காளமேகம் நமக்கு. அந்தக் கண்ணபுரத்தானைக் காணவே இன்று போகிறோம் நாம் கண்ணபுரத்துக்கு.

இக்கண்ணபுரம் தஞ்சை ஜில்லாவில் நன்னிலம் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே ஐந்து மைல் தொலைவில் இருக்கிற சிறிய ஊர். முந்திய நாட்களில் நேரே திருமருகல், திருச்செங்காட்டாங்குடி எல்லாம் சென்று சுற்றி வளைத்துக் கொண்டுதான் இத்தலம் வந்து சேரவேணும். இப்போதோ, திருப்புகலூர்வரை நல்லரோட்டில் சென்று முடிகொண்டான் ஆற்றின் மேல் கட்டப்பட்டிருக்கும் பாலத்தைக் கடந்து, மண் ரோட்டில்ஒரு மைல் சென்றால் இத்தலத்துக்கு வந்து சேரலாம். இந்தத் தலத்தின் தேர்வீதி எல்லாம் மிக மிக விசாலமானது. வண்டியில் சென்றால் நம்மை, கோயிலுக்கும் நித்ய புஷ்கரணிக்கும் இடையில் உள்ள பாதையில் இறக்கிவிட்டுவிடுவர். அதன்பின் ராஜகோபுரத்தைக் கடந்து, கோயிலினுள் செல்லலாம். கண்ணபுரத்தானுக்கு நம்மிடம் யாதொரு பகையும் இல்லையே. ஆதலால் நாம் செல்லும்போது காள மேகத்துக்கு அடைத்ததுபோல் கதவடைத்து நிறுத்தி விடமாட்டான். கோயிலில் நுழைவதற்கு முன்பே இத்தலத்தின் மகிமைகளை அர்ச்சகர்களிடம் கொஞ்சம் கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது. இத்தலம் கிருஷ்ணா ரண்ய க்ஷேத்திரம் என்றும், அஷ்டாக்ஷர மகாமந்திர சித்தி க்ஷேத்திரம் என்றும் பெயர் பெற்றது. திருவரங்கச் செல்வனார்க்கு இது கீழை வீடு. முத்திதரும் தலங்கள் எட்டு என்பர். திருவரங்கம், திருவேங்கடம், ஸ்ரீமுஷ்ணம், வானமா மலை, சாளக்கிராமம், புஷ்கரம், பதரி ஆச்சிரம், நைமி சாரண்யம் அவை. அஷ்டாக்ஷரமந்திரத்தில் ஒவ்வொரு அக்ஷர சொரூபியாக இந்த எட்டு தலங்களிலும் எழுந்தருளி யிருக்கிறான் பரந்தாமன். ஆனால் எல்லாப் புண்ணியங்

களும் ஒருங்கே அமைந்து அஷ்டாக்ஷர பூரண சொரூபனாய், எட்டெழுத்தின் முடிவினனாய் அவன் நிற்கும் இடம் இதுவே. அதனால் தான் முத்திதரும் தலங்களில் இது முதன்மையானது. நிரம்பச் சொல்வானேன், இதுவே பூலோகவைகுண்டம். ஆதலால் மற்ற தலங்களில் இருப்பதைப் போல் வைகுண்ட வாசல் இத்தலத்தில் இல்லை. இப்படிக் கண்ணன் எம்பெருமான் மிகமிக மகிழ்ந்து நித்தியவாசம் செய்யத் தேர்ந்தெடுத்த தலம் ஆனதால் இதற்கு கண்ணபுரம்என்றுபெயர். இங்கு கோயில் கொண்டிருக்கும் கண்ணனின் திருநாமம் சௌரிராஜன் என்றெல்லாம் விளக்கம் பெறுவோம்.

இவ்வளவும் தெரிந்துகொண்ட பின்னரே கோயிலுள் நுழையலாம். கோயில் பெரிய கோயில். கிழமேல் 316 அடி நீளமும், தென்வடல் 210 அடி அகலமும், உயர்ந்த மதில்களும் உடையது. இந்த வாயிலைக் கடந்து உள்ளே வந்தால் இடைநிலைக்கோபுரம் ஒன்றிருக்கும். அதுவும் 60 அடி உயரம். இக்கோயிலுக்கு முன்னர் ஏழு மதில்கள் இருந்தன என்றும், ஏழாவது மதில் கிழக்கே பதின்மூன்று மைல் தூரததில் உள்ள கடல்வரை பரவி இருந்தது என்றும், அதனாலேயே 'வேலை மோதும் மதில்சூழ் திருக்கண்ணபுரம்' என்று நம்மாழ்வார் பாடினார் என்றும் சொல்வர். இந்த மதில்களின் தடங்களைக்கூட இன்று காண இயலாது. இந்த மதில்கள் எப்படி அழிந்தன என்பதற்கு ஓர் கர்ண பரம்பரை வரலாறு உண்டு. சிவ பக்தனான சோழன் ஒருவன் இருந்திருக்கிறான். அவனே இம்மதில்களை அழிக்க முற்பட்டிருக்கிறான். மதில் அழிவது கண்டு பொறாத பக்தர் கண்ணபுரத்து அரையர் சௌரிராஜனிடம் முறையிட்டிருக்கிறான். சௌரிராஜன் நின்றநிலையிலேயே மௌனம் சாதிப்பது கண்டு, தன் கைத்தாளத்தை விட்டெறிந்து அவனை உசுப்பியிருக்கிறார். நெற்றியில் வடுப்பட்ட பின்னரும் சௌரிராஜன் சும்மா

இருக்கமுடியுமா? தன் சக்கரத்தைப் பிரயோகித்துச் சோழமன்னனது வீரர்களைத் துரத்தி அடித்திருக்கிறான். இன்னும் இதை ஒட்டியே ஒரு வரலாறு. சோழமன்னன் இப்படி மதிலைத் தகர்க்கும்போதுஅவனது மகனே, 'தந்தையே! இவ்வுலகில் திருவாய் மொழியும் ராமா யணமும் இருக்கும் வரையில் உம்மால் மாத்திரம் அல்ல உமது பேரனுக்குப் பேரனால்கூடவைஷ்ணவத்தை அழித்து விட முடியாது' என்று கூறித்தடுத்திருக்கிறான் என்றும் கூறுவர். கற்பனையில் எழுந்த மதில்கள் கற்பனையிலே அழிந்திருக்கிறது என்றாலும் அவைகளைச் சுற்றி எழுந்த கற்பனைக் கதைகள் சுவை உடையதாகவே இருக்கின்றன.

இனி நாம் மகா மண்டபத்தைக் கடந்து கர்ப்பக்கிருஹம் வந்து சேர்ந்து கண்ணபுரத்து அம்மானைக் கண்டு தொழவேண்டும். கருவறையில் பரமகம்பீரத்துடன் நிற்பவனே நீலமேகன். தங்கநீள் முடிகவித்த அரியபொன் மேனியன். ஆஜானுபாகு என்பார்களே அதன் அர்த்தம் இந்தப் பெருமானைத் தரிசிக்கிறபோது தெரியும். சங்கு ஒரு கையும், பிரயோகச் சக்கரம் ஒரு கையுமாக அபயம் அளிக்கும் வரதன் அவன். அவன் அணிந்திருக்கும் அணி பணிகள் எல்லாம் ஒரே தங்கமயம். சஹஸ்ரநாம மாலை ஒன்றே பல்லாயிரம் ரூபாய் விலை பெறும். இரண்டு நாச்சியார்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டே சேவை சாதித்து அருளுவான். இன்னும் இவனது இருமருங்கிலும் தண்டக மகரிஷியும் கருடாழ்வாரும் கூப்பிய கையுடன் நிற்கின்றனர். எல்லாம் நல்ல சிலாவடிவங்கள். இந்த மூலவராம் நீலமேகனுக்கு முன்னாலேயே 'காமனும் கண்டு காமுறும் கண்ணபுரத்து அமுதனான' உற்சவமூர்த்தி நிற்கிறான். இவனுக்கு சௌரிராஜன் என்று திருநாமம். சூரர் என்னும் வசுதேவரது மகனானதால் இப்பெயர் என்றாலும் மக்கள் சௌரியைச் சவுரியாக்கி, அவரது தலையில் சவுரி யையும் அணிவித்து அதற்கு ஒரு கதையையும் கட்டி இருக்கிறார்கள். கோவில் அர்ச்சகர் ஒருவர் தாசிலோலர்.

அவர் பெருமானுக்கு அணிவிக்கும் மாலைகளையெல்லாம் அன்றைக்கன்று இரவிலேயே அவளிடம் சேர்த்து விடுவார். அப்படி இருக்கும் போது ஒருநாள் அகாலத்தில் அந்த நாட்டு அரசன் சேவைக்கு எழுந்தருள, அர்ச்சகர் தாசியிடம் கொடுத்திருந்த மாலைகளைத் திரும்பப் பெற்றுப் பெருமானுக்கு அணிவித்திருக்கிறார். அந்த மாலையைப் பின்னர் அரசனிடம் கொடுக்க அதில் ஒரு மயிர் இருப்பது கண்டு அரசன் காரணம் வினவ, பெருமானுக்கே சவுரி(குடுமி) உண்டு என்று சாதிக்கிறார் அர்ச்சகர். அர்ச்ச கரைக் காப்பாற்ற சௌரிராஜன் தன் தலையில் சவுரியைத் தாங்கி இருக்கிறான். அன்று முதல் இந்தக் கதையையே கொஞ்சம் மாற்றிக் குடுமியான் மலையிலும் சொல் கிறார்கள். பக்திக்கு விளக்கம் கொடுக்க மக்கள் செய்யும் கற்பனை என்று மட்டுந்தான் இக்கதைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மூலவராம் நீலமேகன் துணைவியர் இருவர் என்றால், இந்தச் சௌரிராஜப் பெருமானுக்கு மனைவியர் நால்வர். பூதேவி, சீதேவி, ஆண்டாள் என்னும் மூன்று பேர் தவிர, பத்மினி என்ற நான்காவது பெண்ணையும் மணந்து கொண்டு பக்கத்துக்கு இருவராக நிறுத்தி நமக்குச் சேவை சாதிக்கிறான். ஆண்டாள் கதை நமக்குத் தெரியும். பத்மினியை மணந்த கதையையுமே கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமே.

உபரிசரவசு என்று ஒரு மன்னன் வலையர் குலத்திலே. வேட்டைக்கு வந்த இடத்தில் தினைக் கதிர்களைக் கொய்கின்றான் கிருஷ்ணாரண்யத்தில். தினைக் தொல்லையைக் காத்து நின்ற இளைஞன் தடுக்கிறான். இருவருக்கும் போர் நடக்கிறது. பின்னர் தினைப்புனங்காத்த கண்ணன் தன் திரு உருக்காட்டி மன்னனை ஆட்கொள்கி றான். மன்னனும் கண்ணனுக்குக் கோயில்கட்டி, கோயிலைச் சுற்றி வள நகரம் அமைக்கிறான். இம்மன்னன் மகளாகவே பிராட்டி பிறக்கிறாள். பத்மினி என்ற பெயரோடு வளர்கிறாள். அவளது விருப்பப்படி, கண்ணபுரத்துச் சௌரி

ராஜனே அவளை மணந்துகொள்கிறார். இந்தப் பத்மினியையே வலைய நாச்சியார் என்கின்றனர். மாசி மகோத்சவத்தில், சௌரிராஜன் தன் மாமனார் அகமாம், திருமலைராயன் பட்டினத்துக்கே சம்பிரமாகச் சென்று தீர்த்தம் ஆடிவருகிறான். இப்போது தெரிகிறது கண்ணபுரத் தானுக்கு ஏன் காதலிகள் நால்வர் என்பதற்குக் காரணம். ஆம்! கோகுலத்துக் கண்ணன் ராமனைப்போல் ஏகபத்தினி விரதன் அல்லவே. அவன் அறுபதினாயிரம் கோபியர்களை அல்லவா காதலிகளாகப் பெற்றிருக்கிறான். அறுபதினாயிரம் என்ன, உலகில் உள்ள ஜீவராசிகள் எல்லோருமே 'கண்ணன் எம் காதலன்' என்றுதானே அவனிடத்தில் ஈடுபட்டு நின்றிருக்கின்றனர். எத்தனை காதலியர்கள் இருந்தாலும் பட்டமகிஷி என்று ஒருத்தி இருக்கத்தானே செய்வாள். அவள்தான் இத்தலத்தில் கண்ணபுர நாயகி என்ற பெயரில் தனிக்கோயிலில் இருக்கிறாள். அவளையும் கண்டு தரிசித்துவிட்டுச் சேனை முதலியார், ராமன், விபீஷணாழ்வான் முதலியவர் சந்நிதிகளுக்கும் சென்று வணங்கித் திரும்பலாம். கோயில் திருப்பணி சிறப்பாக நடைபெறுகிறது.

பெருமாள் கோயிலுக்குச் சென்றால் நல்ல பிரசாதம் கிடைக்குமே, இங்கு ஒன்றும் கிடையாதோ? என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. உண்டு, ஆனால் இந்தக் கோயிலில் சர்க்கரைப் பொங்கலையோ அக்காரடிசிலையோ எதிர்பாராதீர்கள். ஏதோ சில சமயங்களில் அவை கிடைத்தாலும் சிறப்புடையதாயிராது. இத்தலத்துக்கென்றே விஷேசமான பொங்கல் முனையதரன் பொங்கல் தான். இது 5 நாழி அரிசி, 3 நாழி பருப்பு, 2 நாழி நெய் சேர்த்துப் பக்குவம் செய்யப்படுகிறது. முனையதரன் என்ற பரம பக்தர் தினமும் தம் வீட்டில் பொங்கல் பண்ணிக் கண்ணபுரத்தானுக்கு நிவேதித்து வணங்கியிருக்கிறார். மறுநாள் காலை பார்த்தால் முனையதரன் இல்லத்திலிருந்து நீலமேகன் சந்நிதிவரை இப்பொங்கல் சிதறிக்கிடந்திருக்கிறது. வெண்ணெய் திருடி உண்டதுபோல முனைய

தரன் வீடுவரை நடந்து பொங்கல் திருடி அவசரம் அவசரமாக எடுத்து வந்து உண்டிருக்கிறான் இவன்.

இந்தக் கண்ணபுரத்தானைப் பெரியாழ்வார், குலசேகரர், மங்கை மன்னன், நம்மாழ்வார் நால்வரும் மங்களாசாஸனம் செய்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து பாடிய பாடல்கள் 128 என்றால் அதில் 104 பாடல்கள் திருமங்கை மன்னன் பாடியவை. கலியனான திருமங்கை மன்னனுக்கு இக்கண்ணபுரத்து அம்மானிடம் உள்ள ஈடுபாடு எழுத்தில் அடங்காது. நாயகநாயகி பாவத்தில் திருமங்கை மன்னன் பாடியபாடல்கள் பிரசித்தமானவை.

'பேராயிரம் உடைய பேராளன்
பேராளன்' என்கின்றாளால்;
'ஏரார் கனமகா குண்டலத்தன்
எண்தோளான்' என்கின்றாளால்;
'நீரார் மழைமுகிலே நீள்வரையே
ஒக்குமால்' என்கின்றாளால்;
காரார் வயல் அமரும் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொல்லோ.

என்ற பாடல் எவ்வளவு சுவையுடையது.

மங்கை மன்னனுக்குச் சளைக்காமல் நம்மாழ்வாரும்

அன்பனாகும், தன்தாள்
அடைந்தார்க்கு எல்லாம்,
செம்பொன் ஆகத்து
அவுணன் உடல் கீண்டவன்
நன்பொன் ஏய்ந்த மதில்சூழ்
திருக்கண்ணபுரத்து
அன்பன், நானும் தன்
மெய்யர்க்கு மெய்யனே

என்றே பாடுகிறார்.

# 23



# புகலூர் மேவிய புண்ணியன்

'இறைவன் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவர் பக்ஷபாதமற்றவர் என்பதை மட்டும் ஒத்துக் கொள்ள மாட்டேன்' என்றார் ஒரு அன்பர். காரணம் கேட்டேன் அவரிடம். அவர் சொன்னார்: 'இந்த உலகிலே அவர் ஒருவனைச் செல்வச் சீமானாகப் படைக்கிறார், மற்றவர் களை ஏழைகளாகப் படைக்கிறார்; ஒருவனை நல்ல அறிவுடையவனாகப் படைக்கிறார், பலரை அறிவிலி களாகப் படைக்கிறார், ஏன் ஒருவனை நல்ல திடகாத்திர முடையவனாக நோய் நொடி இல்லாதவனாகப் படைக்கிறார், பலரை நோயாளிகளாகவே படைத்து விடுகிறார்; இது பாரபக்ஷமில்லாமல் என்ன? ஏன் எல்லோரையுமே செல்வந்தர்களாக, அறிவுடையவர்களாக, நோயற்ற வாழ்வு வாழக் கூடியவர்களாகப் படைக்கக் கூடாது?' என்பது நண்பர் கேள்வி. (ஆம், உண்மைதான்! இப்படி கடவுள் செய்யத் தவறியதைத் தானே இன்றைய சர்க்கார் பொதுஜன சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் செய்து தீர்த்தே விடலாம் என்று நினைக்கிறார்கள். போகட்டும்! கடவுள் செய்யத் தவறியதில் இவர்களாவது வெற்றி பெற்றால் நல்லதுதானே) நண்பரது கேள்வி என்

சிந்தனையைத் தூண்டியது. உலகில் உள்ள மக்கள் எல்லோரும் எப்படியேனும் போகட்டும். அவர் புகழ்பாட, அவரது சமயத்தைப் பரப்புவதற்கென்றே பிறந்தார்களே, அந்தச் சமயகுரவர் நால்வரிடத்தும் கூட ஒரே நிலையில் இந்த இறைவன் அன்பு காட்டவில்லையே. மூன்று வயது நிரம்புவதற்கு முன்னமேயே ஒருவருக்கு அவர் 'அம்மையே அப்பா!' என்று அழைத்த உடனேயே ஓடிவந்து அன்னையை ஞானப்பாலையே ஊட்டச் சொல்லியிருக்கிறார். இன்னும் ஒருவரை, அவர் திருமணம் செய்யமுனைந்தபோது, தடுத்து ஆட்கொண்டு, அவரைத் தம்பிரான் தோழர் என்று அழைத்து, அவர் ஏவிய பணிகளையெல்லாம் செய்து, அவருக்கு ஒன்றுக்கு இரண்டு மனைவியரைச் சேர்த்து வைத்திருக்கிறார். மேலும், பாண்டியன் கொடுத்த பணத்தோடு குதிரை வாங்கவந்தவரை எதிர்கொண்டு, திருப்பெருந்துறையிலே குருந்த மரத்தடியிலே எழுந்தருளி ஞானோபதேசம் செய்து, அவருக்காக நரியைப் பரியாக்கி, பரியை நரியாக்கி, பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்டு, வாழ்வித்திருக்கிறார்.

இப்படி சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் முதலிய மூவரிடத்தும், அவர்கள் விரும்புவதற்கு முன்னமேயே விழுந்தடித்துக்கொண்டு ஓடி அவர்கள் பால் தம் அருளைக் காட்டியவர், இந்தத் தருமசேனராம் நாவுக்கரசரிடம் மட்டும் பாரபக்ஷம் காட்டுவானேன்? ஏதோ உண்மை காண விரும்பும் ஆர்வத்தால் மதம் மாறினார் என்பதற்காக, அவரை யானையை விட்டு இடறச் செய்வானேன்? நீற்றறையில் போடுவானேன்? விஷம் கொடுப்பானேன்? கல்லில் கட்டிக் கடலில் தள்ளுவா னேன்? இப்படியெல்லாம் நினைத்துப் பார்த்தால் நண்பரைப் போல நாமும் இறைவனுடைய பக்ஷபாதத்தை எண்ணித் துயரே உறுவோம். இத்தனை துயரைக் கொடுப்பதன் மூலம் இறைவன் நாவுக்கரசரைப் புடம் இட்ட தங்கமாக ஆக்கு கிறான் என்று நினைத்தால்தானே நம் எண்ணம் மாறும். நாமும் வாழ்வில்

துயருறுகின்றபோது, இறைவனது இணையடியை நினைக்கும்பேறு பெற்றால் நாவுக்காரசரைப் போல, 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை' என்ற உறுதிப்பாடு உள்ளத்தில் தோன்றாதா? அது போதாதா? எங்கெங்கெல்லாமோ சுற்றிவிட்டு, புகலூர் மேவிய புண்ணியன் திருவடி சேர்ந்த நாவுக்கரசரது வாழ்வை நினைத்தால் தளரும் உள்ளத்துக்கே ஒரு தெம்பு பிறக்காதா? அதிலும்,

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ?
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன், மற்றோர் களைகண் இல்லேன்,
கழல்அடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்,
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்,
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே!

என்று நாவுக்கரசர் பாடிக்கொண்டே இறைவனுடன் இரண்டறக் கலந்து விட்டார் என்ற செய்தியை அறிகின்ற போது நமக்கும் அந்த அருள் கிட்டும் என்ற நம்பிக்கை ஏற்படாதா? இத்தனை எண்ணமும் அப்பர் முத்திபெற்ற தலமாம் திருப்புகலூருக்கு நான் சென்றிருந்தபோது என் உள்ளத்தில் எழுந்தன. அந்தத் திருப்புகலூருக்கே அழைத்துச் செல்கிறேன் உங்களை எல்லாம் இன்று.

திருப்புகலூர் செல்லத் தஞ்சை ஜில்லாவிலே மாயூரம் திருவாரூர் ரயில் பாதையிலே நன்னிலம் ஸ்டேஷனில் இறங்கவேண்டும். அங்கிருந்து நாகூர் செல்லும் பாதையில் நான்கு மைல் வண்டியிலோ, காரிலோ செல்லவேண்டும். அவசரம் ஒன்றும் இல்லையென்றால் காத்து நின்று பஸ்கிடைக்கும்போது போகலாம். சரியாய் நாலு மைல் சென்றதும் வடபக்கத்தில் ஒரு 'ஆர்ச்' அமைத்து அதில் திருப்புகலூர் அக்னீசுவரர் கோயில்–அப்பர்

முத்திபெற்ற தலம் என்று கொட்டை எழுத்தில் எழுதி வைத்திருப்பார்கள். அந்த 'ஆர்ச்' வழியாக உள்ளே நுழைந்தால் திருக்கோயில் வாயிலுக்கு வந்து சேருவோம். கோயில் பெரியகோயில். அதன் பரப்பு எழுபத்து மூவாயிரம் சதுரஅடி. கிழமேல் மதில் 325 அடி நீளம். தென்வடல் மதில் 225 அடி அகலம். இதைச் சுற்றி 130 அடி அகலமுள்ள அகழி. இந்த அகழியைச் சுற்றி விரிந்து பரந்து கிடக்கும் வெளி எல்லாமாகச் சேர்ந்து ஓர் அலாதிப் பிரேமையையே ஊட்டும் நம்மனத்தில். கோயிலின் நான்கு பக்கங்களிலும் அகழி இருந்தாலும் தென்கிழக்குப் பாகத்தில் கொஞ்சம் தூர்த்து, கோயிலுக்கு நல்லவழி ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இப்படிச் செய்யாவிட்டால் ஒன்று அகழியில் நீந்த வேண்டியிருக்கும் அல்லது தோணி ஒன்றின் உதவியை நாட வேண்டியிருக்கும். ஊருக்குத் தென்பக்கத்தில் உள்ள முடிகொண்டான் ஆற்றிலிருந்து பாய்காலும் வடிகாலும் இருப்பதால் அகழியில் எப்போதும் நீர் தெளிவாகவே இருக்கும்.

கோயிலை நெருங்கியதும் நாம் முதல் முதல் காண்பது ஞான விநாயகர் கோயில். இது தென் பக்கத்து அகழியின் தென்




அப்பர்

கரையில் இருக்கிறது. அப்பர் முத்தி பெற்ற தலத்தில் வழிபடுபவர்களுக்கு ஞானம் பிறக்கக் கேட்பானேன்? அதிலும் ஞான விநாயகரே நம்மை எதிர்கொண்டு ஞானம் அருள நிற்கும்போது, முதலில் இந்த விநாயகரை வணங்கிவிட்டுக் கிழக்கே திரும்பி வடக்கே நோக்கிச் சென்றால் புகலூர் நாதர் சந்நிதி வந்து சேருவோம். வாயிலை தொண்ணூறு அடி உயரமுள்ள வாயிலைக் கடந்து சென்றதும் நாம் காண்பது கருந்தாழ்குழலியின் சந்நிதியே.தெற்கு நோக்கிய தனிக்கோயிலில் அவள் நின்று சேவை சாதிக்கிறாள். 'பெருந்தாழ் சடை முடிமேல் பிறைசூடி கருந்தாழ் குழலியும் தாமும் கலந்து நிற்கும்' கோலத்தில் அம்மையை வழிபடலாம். அம்மையின் அருளை முதல் முதலிலேயே பெற்றுவிட்டோம் என்றால் அதன்பின் இறைவன் அருளைப் பெறுவது அவ்வளவு சிரமமான காரியம் இல்லைதானே. அம்மையின் 'சிபார்சை'ஐயன் தட்டிவிடமுடியுமா, என்ன? இத்தலத்தில் கண்டு பார்க்க வேண்டியவை கேட்டுத் தெரியவேண்டியவை நிறைய இருப்பதனால் விறுவிறு என்று நடந்து கர்ப்பக்கிருஹம் வரை சென்று அங்குள்ள அக்கினீஸ்வரரை கோணப்பிரானை வணங்கிவிடலாம் முதலில். இந்த மூர்த்தியை அக்கினீஸ்வரர் என்றும் கோணப்பிரான் என்றும் அழைப்பதற்குத் தக்க காரணங்கள் உண்டு. அக்கினிபகவான் தவம் செய்து வணங்கிய பெருமான் ஆனதனாலே அக்கினீஸ்வரர் என்று பெயர் பெறுகிறார். அக்கினி தவம் செய்யும்போது, தன்னைச் சுற்றி ஒரு தீர்த்தம் அமைத்துக் கொள்கிறார். அதுவே அகழியாக, அக்கினிதீர்த்தமாக இன்றும் இருக்கிறது. இன்னும் பாணாசுரன் தன் தாயாரின் பூஜைக்காக சுயம்பு லிங்கங்களை எல்லாம் பெயர்த்து எடுத்துச்சென்று கொண்டிருக்கிறான். அக்கினீஸ்வரர் அவனுக்கு அசைந்து கொடாத போது தன்னையே பலியிட முனைந்திருக்கிறான். அதனைத் தடுத்து அவன் தாயாரின் பூஜையை இருந்த இடத்தில் இருந்தே ஏற்றுக்கொண்டதாகக் காட்டத் தலைவளைந்திருக்கிறார்

இறைவன். இன்றும் வடபுறமாகக் கோணி, வளைந்தே இருக்கிறது லிங்கத் திருவுருவம். அதனால் கோணப்பிரான் என்றே அழைக்கப்படுகிறார். இவரையே சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் பாடி இருக்கிறார்கள்.

அக்கினீஸ்வரரே இக்கோயிலின் முதல்வர் என்றாலும் இவருடன் தோளுக்குத் தோள் சரி நிற்கிறவர், வடபால் உள்ள வர்த்தமானீச்சுரர். இவர் கோணாமல் நேரே நிமிர்ந்து நிற்கிறார். இவருக்கும் இவர் துணைவி மனோன் மணிக்கும் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட இடம் சிறிதே என்றாலும் இந்த சந்நிதியைத் தேடியே, இத்தலத்தில் அவதரித்த முருக நாயனார் வந்து நிற்கிறார். இந்த வர்த்த மானீச் சுவரரையே,



அக்கினி

'மூசு வண்டறை கொன்றை
முருகன் முப்போதும் செய்முடிமேல்
வாசமாமலர் உடையார்
வர்த்த மானீச்சரத்தாரே

என்று பாராட்டி, ஞானசம்பந்தர் தனியாக ஒரு பதிகமே பாடியிருக்கிறார். கோணப்பிரானையும் வர்த்தமானீச்

சுரரையும் வணங்கியபின் வெளியே வந்து உட்பிரா காரத்தைச் சுற்றினால், சந்திரசேகரர், திரிபுராந்தகர் அக்கினி, பிரம்மா முதலியவர்களையெல்லாம் செப்புச் சிலை வடிவில் காணலாம். பிரம்மா அளவில் சிறியவர்தான் என்றாலும அழகில் சிறந்தவர். இவருக்கு வேண்டாத திருவாசி ஒன்றை இன்று செய்து வைத்திருக்கிறார்கள். அக்கினி பகவான் இல்லாமல் நாம் வாழமுடியாது. என்றாலும் அவர் திரு உருவை இதுவரை அறியோம். இரண்டு முகங்கள், ஏழுசுடர்கள், மூன்று பாதங்கள், ஏழு கைகள் என்றெல்லாம் அமைத்துக்கொண்டு எழுந்தே நிற்கிறார் அவர்.

இக்கோயில் கர்ப்பக் கிருஹங்களைச் சுற்றிய கோஷ்டங்களில் அகஸ்தியர், நடராஜர், கணபதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர் மாத்திரம் அல்ல, அஷ்டபுஜ துர்க்கை, சதுர்புஜதுர்க்கை, கௌரிலீலா விநோதர் எல்லோருமே இருக்கிறார்கள். ததீசி, பிருகு, புலஸ்தியர், ஜாபாலி முதலியோர் பூசித்த லிங்கங்கள் பல இருக்கின்றன இங்கே. இவர்கள் வரிசையிலேயே வாதாபி கணபதி வேறே வந்து இடம் பிடித்துக் கொண்டிருக்கிறார். 'ஒரிஜினல்' வாதாபி செங்காட்டாங்குடியில் இருப்பதால், இவர் 'டூப்ளிகேட்' வாதாபியாகவே இருத்தல் வேண்டும். இன்னும் வடக்குத் திருமாளிகைப் பத்தியில் சனி பகவான், நளன், அன்னபூரணி, சரஸ்வதி எல்லோருமே இருக்கி றார்கள். நவக்கிரகங்கள் இங்கு மற்றக் கோயில்களில் இருப்பது போல் இருப்பது இல்லை. 'ட' என்ற அமைப்பிலே இருக்கிறார்கள். வியாழ குரு தான் 'டா'னா உத்தியோகம் பார்ப்பவர் என்று அறிவோம். எல்லாருக்குமே அந்த உத்தியோகத்தில் மோகம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவோ? இதே பத்தியில் திரிமுகாசுரன் வேறே நின்று கொண்டிருக்கிறான். நான்முகனுக்குச் சவால் விடுபவன் போல, பன்றி முகத்தால் நீரும், பறவை முகத்தால் மலரும் கொண்டு வந்து மனித முகத்தால் இறைவனை வழிபட்டிருக்

கிறான் இந்த அசுரன். இவனே இந்த வழிபாடு காரணமாக, புன்னை மரமாகி, அங்கேயே ஸ்தல விருட்சமாகவும் நிற்கிறான்.

இப்படியே வளர்த்திக் கொண்டு போவானேன்? இது நாவுக்கரசர் முத்திபெற்ற தலம் என்று முதலிலேயே பிரமாதப்படுத்தினீர்களே, அவருக்கு என்று தனிச்சந்நிதி கிடையாதா என்று ஆதங்கப்படுகிறீர்கள் நீங்கள். அப்பூதி அடிகள் பெயரிட்டது போல இங்கு நாவுக்கரசர் திருமடம், நாவுக்காரசர் நந்தவனம் என்றெல்லாம் இருக்கும்போது நாவுக்கரசர சந்நிதி இல்லாமல் இருக்குமா? மேலைத் திருமாளிகைப் பத்தியில் ஒரு சின்னஞ்சிறு கோயிலில் கல்லிலும் செம்பிலும் நாவுக்கரசர் நிற்கிறார், தனது 'பேடன்ட்' ஆயுதமான உழவாரப் படையுடன். பழைய செப்புவடிவம் மிகச் சிறியதாக இருக்கிறது என்று கண்டு பெரிய உரு ஒன்றையே சமீபத்தில் செய்து வைத்திருக்கி றார்கள். அளவில் சிறியவர் என்றாலும் சாந்தித்யம் அந்தச் சின்ன நாவுக்கரசருக்கே.

இக்கோயிலின் பெரியவிழா சித்திரைச் சதயத்தை ஒட்டி நடக்கும் அப்பர் திருநாள் தான். பத்துநாள் உற்சவம். அப்பர் சரித்திரம் முழுவதையுமே தெரிந்துகொள்ளலாம் இவ்விழாவுக்குப் போனால். அதிலும் நான்காவது தெப்பத்திருநாளன்று ஒரே கோலா கலம். அன்று மகேந்திர வர்மன் அப்பரைக் கல்லில் கட்டிக் கடலில் எறிந்தான் என்றும் அந்தக் கல்லே அவருக்குத் தெப்பமாகிக் கரையேறினார் என்றும் அறிவோம். ஆனால் இன்றோ அதே அப்பருக்கு மிகப் பெரிய தெப்பம் ஒன்று அமைத்து மின்சார விளக்குகளால் அலங்கரித்து, அக்கினி தீர்த்தத்தில் மிதக்க விடுகிறார்கள். எனக்கு மட்டும் ஒன்று சரியல்ல என்று படுகிறது. 'கந்தை மிகையாம் கருத்து'டைய அப்பருக்கு நவரத்தினப் பதக்கங்கள் அணிவித்து அழகு செய்து தெப்பத்தில் ஏற்றுகிறார்கள். அணிசெய்ய வேண்டுமானால், எல்லாம் உருத்திராக்க மாலைகளாகவே இருக்கலாம்.

பதக்கங்கள் அணிவதை நிறுத்திவிட வேண்டியதுதான். வாய் திறந்து சொல்லக் கூடுமானால் அப்பரே இதைச் சொல்லுவார். அவர் மானசிகமாகக் கட்டளையிட்டதைத் தான் நான் சொல்லுகிறேன். பொன்னையும் மணியையும் கண்டு மயங்காதவர், தெய்வ அரம்பையைக்கூட கண்டு சித்தம் பிறழாதவர், நாம் செய்யும் இந்த அலங்காரங்களிலா மயங்கிவிடப்போகிறார்? மயங்கமாட்டார். சித்திரைச் சதயத்தில்தான் அவர் முத்தி பெற்றவிழா. ஏதோ 'சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன். திருப்புகலூர் மேவிய தேவதேவே' என்று அவர் பாடிவிட்டார் என்பதற்காக அப்பரைச் சிங்கம் விழுங்குவது போல் ஓர் அர்த்தசித்திர வடிவம் அமைத்துக் கீழைச் சுவரில் வைத்திருந்தார்கள். அதை எடுத்துவிட்டு லிங்கத் திருவுருவில் கலந்து நிற்பதாக இப்போது அமைத்திருக்கிறார்கள்.

இத்தலத்தோடு தொடர்பு கொண்டிருந்த தொண்டர்கள் நற்குன்றவாணர், சிந்தாமணி என்று இரண்டு பேரைப்பற்றித் தெரிந்து கொள்ளாமல் திரும்ப முடியாது. பழைய ஜயங் கொண்ட சோழ மண்டலத்தில், நற் குன்றத்தில் பெருநிலக் கிழார் ஒருவர் இருந்தார். நல்ல தமிழ்ப் புலமையும், சிவபக்தியும் நிறைந்தவர் அவர். பஞ்சத்தின் கொடுமையால் அரசனுக்குக் கட்டவேண்டிய வரியைக் கட்ட முடிய வில்லை. அதற்காக ஊரைவிட்டே வெளியேறித் திருப்புக லூர் வந்து சேருகிறார். மன்னனது சேவகர்களுமே பின் தொடர்கின்றனர். திருப்புகலூர் வந்தவர் அங்குள்ள ஞான கணபதியைக் காண்கின்றார்.

உரைசெய் மறைக்கும் தலைதெரியா
ஒருகொம்பை என்றே
பரசும் அவர்க்கும் பெருநிழல் ஆக்கும்,
பழனம் எல்லாம்
திரை செய்கடல் துறைச்
சங்கம் உலாவும், திருப்புகலூர்

அரசின் இடத்து மகிழ் வஞ்சி
ஈன்ற ஓர் அத்தி நின்றே

என்று பாடுகின்றார். இப்பாட்டைக் கேட்ட கணிகை சிந்தாமணி, பாட்டு நன்றாயிருக்கிறதே, இதனை ஒரு அந்தாதிக்குக் காப்புச் செய்யுள் ஆக்கலாமே' என்கிறாள். நெற்குன்றவாணரும், 'ஆக்கலாம். அந்தாதிக்குக் காப்பு ஆக்கினால் அரசு இறைக்குப் பொருளாகுமா?' என்கிறார். விஷயம் அறிந்த சிந்தாமணி, அரசனுக்குக் கொடுக்க வேண்டிய வரிப்பணம் அத்தனையையும் தானே கொடுத்து, நெற்குன்றவாணரை அந்தாதி பாடச் சொல்கிறாள். திருப்புகலூர் அந்தாதி எழுந்த கதைஇதுதான். இந்தச் சிந்தாமணி பிரதிஷ்டை செய்த லிங்கத் திருவுருவே, சிந்தாமணீசர் என்ற பெயரோடு கோயிலுள் இருக்கிறார் இன்றும், கணிகையால் வாணர் வாழ்கிறார். வாணரால் இறைவனே வாழ்கிறார் நம்முடைய உள்ளத்தில்.

இக் கோயிலில் அறுபத்தேழு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ராஜராஜன் , ராஜேந்திரன் முதல் குலோத் துங்கன் முதலிய சோழ மன்னர்கள் ஏற்படுத்திய நிபந்தங்கள் அனந்தம். அதனால் இக்கோயில் பெரிய கோயிலாக மட்டும் அல்ல. நல்ல பணக்காரக் கோயிலாகவும் இருக்கிறது. சுமார் 1500 ஏக்கர் நிலம் இக்கோயிலின் சொத்து. ஒரு ஆண்டின் மொத்த வருமானம் ஒன்றே கால் லட்சம். வருமானம் எல்லாம் நல்லமுறையில் செலவு செய்யப் படுகிறது. தஞ்சை மாவட்டத்தின் தலை சிறந்த தேசபக்தர் திரு.M D.தியாகராஜ பிள்ளையவர்கள் இக்கோயில் தருமகர்த்தராக இருந்து மிக்க சிறப்பாகக் கோயிலைப் பரிபாலிக்கிறார்கள். கோணப் பிரான் மட்டுமே இங்கே கோணல், மற்றவைகளில் எல்லாம் கோணலே காண முடியாது.

# 24

# வீழி மிழலையார்

'எந்தப் பொருள் ஒன்று இல்லாதிருந்தால் இந்திய நாட்டின் கலை அழகு சிறப்பாக இராது?' என்று ஒரு கேள்வி. இந்தக் கேள்வியை நம்மிடம் கேட்டிருந்தால் நாம் விழித்திருப்போம். இந்தக் கேள்வியைக் கலாரசிகர் ஆனந்தக் குமாரசாமியிடமே ஒரு நண்பர் கேட்டிருக்கிறார். அவர் கொஞ்சமும் தயங்காமல் பதில் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லிய பதில் 'தாமரை' என்பது தான். கவிதை, காவியம், சிற்பம், சித்திரம், இசை, நடனம் முதலிய அருங்கலைகள் அனைத்தினுக்குமே உயிர் நிலையான பொருளாக அல்லவா தாமரை இருந்து வந்திருக்கிறது. 'பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை' எனக் கவிஞன் பாடுவான். ஏன், தூய்மைக்கே எடுத்துக் காட்டாகக் கூறப்படுவது தாமரைதானே. கமலம் பதுமம் எல்லாம் சிற்ப உலகிலும், சித்திர உலகிலும் பிரசித்தமானவையாயிற்றே! முகை அவிழ்தாமரையை நடனம் ஆடும் பெண் முத்திரை யாகக் காட்டுவதில்தான் எத்தனை எத்தனை அழகு. நிரம்பச் சொல்வானேன்? அலைமகளும் கலைமகளும் இன்னும் எண்ணற்ற தேவர்களும் இருப்பிடமாகக் கொண்டிருப்பது தாமரையைத்தானே. புத்தரும் அருகனும்கூட 'மலர்மிசை ஏகினான்' என்றுதானே அழகுணர்ச்சியைத் தூண்டி

அவனுக்கு ஆனந்தம் அளித்து அவனைக் கலைஞனாகச் செய்கிறாளே பெண், அந்தப் பெண்ணின் முகம், கண், வாய், கை, வயிறு, கால் எல்லாவற்றுக்கும் உவமை தேடித் திரிந்த கலைஞன் அத்தனைக்கும் தாமரையைத் தானே கண்டுத் பிடித்திருக்கிறான். இதை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார் தணிகைப் புராணம் பாடிய கச்சியப்ப முனிவர். மலர் களுக்கு எல்லாம் அரசியாகத் தாமரை ஏன் விளங்குகிறது என்பதற்குக் காரணமும் அவர் கூறுகிறார்.

திருமுகம் கமலம், இணைவிழி கமலம்,
செய்யவாய் கமலம், நித்திலம் தாழ்
வருமுலை கமலம், மணிக்கரம் கமலம்,
மலர்ந்த பொன் உந்தியும் கமலம்,
பெருகிய அல்குல் மணித்தடம் கமலம்,
பிடி நடைத்தாள்களும் கமலம்,
உரு அவட்கு அவ்வாறு ஆதலின் அன்றே
உயர்ந்தது பூவினுட் கமலம்.

என்பதுதானே அவர் பாட்டு. இப்படி மலர்களில் எல்லாம் உயர்ந்தது தாமரை என்பதையும், அந்தத்தாமரையை ஒத்ததே இணைவிழிகள் என்பதையும் அந்தத் திருமால் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார் எத்தனையோ யுகங்களுக்கு முன்பே. திருமாலுக்குச் சலந்தரனைச் சம்ஹரிக்கச் சக்கரம் வேண்டியிருந்திருக்கிறது. அதைப் பெறச் சிவனிடம் வருகிறார். ஆயிரம் தாமரை மலர்கள் கொண்டு அருச்சித்தால் எண்ணியது கிட்டும் என்று அறிகிறார். அப்படியே ஆயிரம் தாமரை மலர்கள் சேர்த்து அருச்சனை பண்ண ஆரம்பிக் கிறார். ஒன்று, இரண்டு, மூன்று என்று கணக்கிட்டுக் கொண்டே தான் அருச்சனை நடக்கிறது. 999 மலர் அருச்சனை முடிந்து விடுகிறது. ஆனால் அதற்குமேல் மலர் இல்லை, அவைகளை வைத்திருந்த தாலத்தில். அருச்சனை குறைவுபடக்கூடாதே என நினைக்கிறார். அதற்காக

இன்னொரு தாமரை மலர் தேடித்திரியவோ நேரமும் இல்லை. அப்போது தோன்றியிருக்கிறது நமது கண்களுமே நல்ல தாமரை மலர்கள் தானே என்று. உடனே அந்தத் தாமரைக் கண்ணன் தம் கண்களில் ஒன்றையே இடந்து இறைவனுக்குச் சாத்தியிருக்கிறார். அருச்சனையும் குறைவு படாமல் நிறைவு பெற்றிருக்கிறது. இறைவனும் திருமால் விரும்பியபடியே அவருக்குச் சக்கரத்தை அருளியிருக்கி றார். இப்படித் திருமால் தம் கண்ணையே இடந்து சாத்திய தலம்தான் திருவீழிமிழலை (விழிக்கும் வீழிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. மிழலை என்பது ஊரின் பெயர், வீழி என்பது அங்கு கிடைக்கும் ஒரு கொடி. அந்தக் கொடியின் பெயரையும் சேர்த்தே வீழிமிழலை என்று அழைக்கப் படுகிறது) இப்படித் திருமால் வழிபட்ட செய்தியை,

**நீற்றினை நிறையப்பூசி, நித்தம்**
**ஆயிரம் பூக் கொண்டு**
**ஏற்றுழி, ஒருநாள் ஒன்று குறைய**
**கண் நிறைய விட்ட**
**ஆற்றலுக்கு ஆழிநல்கி, அவன்**
**கொணர்ந்து இழிச்சுங் கோயில்**
**வீற்றிருந்து அளிப்பர், வீழி**
**மிழலையுள் விகிர்தானாரே.**

என்று பாடுகிறார் அப்பர். மணவாளக் கோலத்தோடு அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவடியில் திருமால் தம் கண்ணைப் பறித்து அருச்சித்த அடையாளமும் கீழே சக்கரமும் இருப்பதை இன்றும் பார்க்கலாம். இத்தகைய புகழ்பெற்ற தலமாகிய திருவீழிமிழலைக்கே செல்கிறோம் நாம் இன்று.

'காதல் வழி கரடு முரடானது' என்பர். திருவீழி மிழலைக்குச் செல்லும் வழியோ அதைவிட மிகக் கரடு முரடானது. இத்தலத்துக்கு எத்தனையோ வழிகள் உண்டு.

மாயூரத்தை யடுத்த குற்றாலம், ஆடுதுறை, இல்லை திருவிடைமருதூர் ஸ்டேஷனில் இறங்கிப் பத்துமைல் வண்டியில் வரலாம். எல்லா வழிகளுமே மண்பாதைகள் தாம். அவற்றில் வண்டிகள் மாத்திரமே போகும். மாயூரம் திருவாரூர் ரயில் பாதையில் பூந்தோட்டம் ஸ்டேஷனில் இறங்கி ஆறுமைல் மேற்கே வந்தாலும் இத்தலம் வந்து சேரலாம். இல்லை, கும்பகோணத்திலிருந்து நாச்சியார் கோயில் வந்து அங்கிருந்து கிழக்கே திரும்பி ஏழு எட்டு மைல் வந்தாலும் திருவீழி மிழலை வந்து சேரலாம். எனக்கு என்னவா இத்தனை வழிகளுமே சௌகரியமானதல்ல என்றுதான் தோன்றுகிறது. கும்பகோணத்தில் இறங்கி அங்கிருந்து காரைக்கால் செல்லும் பாதையில் பஸ் பிடித்தோ, கார் ஏற்பாடு பண்ணியோ சென்றால் பன்னிராண்டாவது மைலில் புதூர் வந்து சேருவோம். அங்கிருந்து தெற்கே திரும்பி இரண்டு மைல் வந்தால் கிழக்கே ஒரு பாதை பிரியும். அங்கே ஒரு கோபுரம் தெரியும். ஆனால் அது திருவீழிமிழலை இல்லை. விசாரித்தால் அது தான் கோனேரிராஜபுரம் என்பார்கள். இதனையே தேவாரத்தில் நல்லம்என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு தானே அந்தப் பிரபலமான நடராஜர் இருக்கிறார் என்பதும் ஞாபகத்துக்கு வரும். ஆதலால் அந்தப் பாதையிலே திரும்பிக் கோயில் முன்னுள்ள சக்தி தீர்த்தத்தையும் வலம் வந்தால் கோயில் வாசல் வந்து சேருவோம்.

கோயிலுள் நுழைந்து உமாமகேசுவரரையும், மங்கள நாயகியையும் தரிசிக்கும் முன் மகா மண்டபத்தையொட்டிய ஒரு மண்டபத்தில் நடராஜர் திருவுருவைக்காண்போம், செப்புச்சிலைவடிவில். செப்புச்சிலை என்றால் ஏதோ மூன்று அடி நான்கடி உயரம் என்றுதானே நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை. கீழே பீடத்திலிருந்து திருவாசிவரை ஒன்பது அடி உயரம். ஆறுஅடி அர்ச்சகர் பக்கத்தில் நின்றால் நடராஜரது தோள் உயரம் கூட இருக்கமாட்டார். நடராஜ ருக்கு ஏற்ற



கோனரி ராஜபுரம் நடராஜர்

உயரத்தில் சிவகாமி. இருவரும் செப்புச்சிலை வடிவில் இருந்தாலும் அவர்கள் நிலைத்தே நிற்கிறார்கள். உற்சவ காலத்தில் வெளியே எடுப்பது தெரு வீதிகளில் உலா வரப் பண்ணுவது என்பதெல்லாம் சாத்தியமே இல்லை. இதற்காகவே ஒரு சிறு நடராஜரையும் செய்து வைத்திருக்கி றார்கள். இரண்டு நடராஜரையும் ஒப்பிட்டு நோக்கினால் தான், கலை அழகு என்றால் என்ன என்பது தெரியும். காத்திரமான பெரிய நடராஜர்; கலை உலகிலேயே பெரியவர். இன்னும் திரிபுராந்தகர், திரிபுரசுந்தரி இருவரும் செப்புச்சிலைவடிவில் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர மணக்கோல நாதர் வேறே இருக்கிறார். எல்லோருமே நல்ல கலை அழகு வாய்ந்தவர்கள்.

முன்பு செங்கல்லால் கட்டப்பட்டிருந்த கோயிலைக் கற்றளியாக்கிய பெருமை, அந்தச் செம்பியன் மாதேவி என்ற பெருமாட்டியைச் சேரும். அவள் தன் கணவர் கண்டராதித்தர் சிவலிங்கத்துக்குப் பூஜைசெய்வதுபோல ஒரு சித்திரம் அமைத்து வைத்திருக்கிறாள். சிறியன சிந்தியாது பெரு உடையாருக்குப் பெரிய கோயில் எடுப்பித்த

ராஜராஜனே இக்கோயிலில் உள்ள பெரிய நடராஜனையும் உருவாக்கி இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது எனக்கு. அவனைத் தவிர இவ்வளவு பெரிய அளவில் உருவம் அமைக்கவேண்டும் என்று வேறு யாருக்குத் தோன்றப் போகிறது? இங்குள்ள திருக்கோலங்களைக் கண்டு வணங்கி மேலும் இரண்டு மைல் தெற்கு நோக்கி நடந்தால் திருவீழிமிழலை வந்து சேர்வோம். வழி கொஞ்சம் நீளமானதுதான் என்றாலும் அதற்குத்தான் தக்க பலன் கிடைத்து விட்டதே. கோனேரிராஜபுரம் நடராஜரைத் தரிசிக்கும் வாய்ப்பு எளிதில் கிடைக்கக் கூடியதா என்ன?


கோனேரி ராஜபுரத்து உமாமகேசுவரர் சந்நிதிமேற்கு நோக்கி இருந்தால், இந்த வீழிமிழலை நேத்திர அர்ப்பண ஈசுவரர் சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கும். (நேத்திரத்தை அர்ப்பணம் பண்ணியவர் திருமால், ஆனால் நேத்திர அர்ப்பண ஈசுவரர் என்ற பெயர் இத்தலத்தில் உள்ள இறைவனுக்கு நிலைத்திருக்கிறது. அர்ப்பணம் பண்ணிய வருக்குப் பெயர், புகழ் ஒன்றும் காணோம். அர்ப்பணம் ஏற்றுக்கொண்டவருக்கே புகழ், பிரபலம் எல்லாம். உலக இயல்பே அப்படித்தானே இருக்கிறது) இங்கும் கோயில் முன் ஒரு குளம் உண்டு. விஷ்ணுதீர்த்தம் என்று பெயர். குளத்தில் இறங்கி, நடந்த அலுப்புத்தீரக் கால், கை சுத்திசெய்து கொண்டு கோயிலுள் நுழையலாம். இத்தலத்தின் பிரதான வாயிலில் உள்ள ராஜ கோபுரத்தை விட, கர்ப்பக்கிருஹத்தின் மேல் இருக்கும் விமானமே சிறப்பானது. அதற்கு விண்ணிழிவிமானம் என்றே பெயர். சக்கரம் பெற்ற திருமால் பெரியதொரு விமானத்தையே வைகுண்டத்திலிருந்து கொண்டுவந்து இக்கோயிலை அலங்கரித்திருக்கிறார் என்பர்.

தன்தவம் பெரிய சலந்தரன்
உடலம் தடிந்த சக்கரம்
எனக்கு அருள், என்று

அன்று அரி வழிபாட்டு
இழிச்சிய விமானத்து இறைவன்
பிறை அணி விமானம்

அது என்பார் சம்பந்தர். இந்த விமானத்திலேதான் சம்பந்தர், சீகாழியில் தன்னை ஆட்கொண்ட தோணியப்பரைத் தரிசித்திருக்கிறார். சீகாழிக்கு வரவேண்டும் என்று அழைத்த அடியவர்களுக்கும் காட்டி இருக்கிறார். 'பொன்னியல் மாடம் நெருங்கு செல்வபுகலி நிலாவிய புண்ணியன், மிழலை விண்ணிழிகோயில்' விரும்பி வந்திருக்கிறார். அடியவன் செல்லும் இடமெல்லாம் ஆண்டவனும் தொடர்ந்தே வருகிறான் என்பதுதான் எவ்வளவு எளிதாக விளங்குகிறது நமக்கு. ஆலயத்தின் முதற் சுற்றிலே இருக்கும் நூற்றுக்கால் மண்டபம் சிற்ப வேலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அங்கு கல்லாலேயே அமைத்துள்ள கொடுங்கைகளும், வளைவுகள் நிரம்பிய கல்தூண்களும், வெளவால் ஒட்டுமண்டபமும் பார்த்துக்கொண்டு நின்று விடுதல்கூடாது. கோயிலுக்குள் சென்று நேத்திரார்ப்ப ணேசுரரையும் அவர்தம் துணைவி சுந்தர குசாம்பிகையையும் முதலில் வணங்கலாம். அப்படி வணங்கும்போதே மூல லிங்கத்துக்குப் பின் கர்ப்பக்கிருகச் சுவரில் பார்வதி பரமேசுவரருடைய திரு உருவங்கள் இருப்பதையுமே காணலாம். இனி மகா மண்டபத்துக்கு வந்து அங்கு தெற்கு நோக்கிய ஒரு பீடத்தில் எழுந்தருளியுள்ள கல்யாண சுந்தரமூர்த்தியைத் தரிசிக்கலாம். இவரே கார்த்தியாயன முனிவரின் மகளாக அவதரித்த கார்த்தியாயனியை மணந்து கொண்டு, என்றுமே 'மாப்பிள்ளைச்சாமி'யாக நிற்பவர். இவரது திருவடியிலேதான் மால் அருச்சித்ததாமரைக் கண் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதையுமே அர்ச்சகர்களைக் காட்டச் சொல்லிக்கண்டு மகிழலாம். அவர் கையிலே செண்டு என்னும் ஆயுதம் இருப்பதைக் காணலாம். மாப்பிள்ளைக்கோலத்தில் இருப்பவர்க்கு ஏன் இந்தச் செண்டு என்று தெரியவில்லை!

இத்தல வரலாற்றிலே திருமால் கண்ணிடத்து அருச்சித்த செயலுக்கு அடுத்தபடி சிறப்புடையது சம்பந்தருக்கும், அப்பருக்கும் இறைவன் படிக்காசு அருளியதுதான். ஞானசம்பந்தரும், அப்பரும் சேர்ந்தே வருகிறார்கள் இத்தலத்துக்கு. இவர்கள் வரும் போது நாடெல்லாம் பஞ்சம். மக்கள் எல்லாம் உண்ண உணவில்லாது மயங்குகிறார்கள். இந்த நிலையில் இவர் களுடன் வந்த அடியவர்களுக்கு உணவு அளிப்பது என்பதும் பெரிய பிரச்சினையாகவே இருக்கிறது. இரண்டு சமய குரவர்களும் கோயிலுள் சென்று இறைவனை வணங்கு கிறார்கள்; திருப்பதிகங்கள் பாடுகிறார்கள். மறுநாள் காலையில் கிழக்கு பலிபீடத்தில் ஒரு படிக்காசும் இருக்கிறது. ஒருவருக்கும் தெரியாமல் இரவோடு இரவாகவே, இறைவன் கட்டளைப் படி படிக்காசுகளை வைத்தருளிய படிக்காசுப் பிள்ளையாரும் மேற்கு பலிபீடத்தருகிலேயே உட்கார்ந்து கொள்கிறார். விடிந்தபின் பலிபீடங்களில் படிக்காசு இருப்பதை அறிந்து, சம்பந்தரும், அப்பரும் எடுத்து அவற்றைக் கொண்டு அடியவர்களுக்கு அமுதளிக்கிறார்கள்.


வீழிமிழலை நேத்திர அர்ப்பண ஈஸ்வரர்

இப்படிப் படிக்காசு அருளுவதில் கூட ஒரு சிறு விளையாட்டுச் செய்கிறார் இறைவன். அப்பர் வாசி இல்லா காசு (கமிஷன் இல்லாது மாற்றக்கூடிய காசு) பெறுகிறார். சம்பந்தர் பெறும் காசோ வாசியுடையது. சம்பந்தர் விடுவாரா?

வாசிதீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர், ஏசல் இல்லையே!

என்று பாடுகிறார். அதன்பின் அவருக்குமே வாசி இல்லாக் காசே கிடைக்கிறது. சம்பந்தருக்கு வாசியுள்ள காசையும் அப்பருக்கு வாசியில்லாத காசையும் ஏன்கொடுக்கிறார் இறைவன். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிறார் சேக்கிழார்.

திருமாமகனார் ஆதலினால்,
காசு வாசியுடன் பெற்றார்.
கைத்தொண்டர் ஆகும்படியினால்
வாசு இல்லாக் காசு படி
பெற்று உவந்தார் வாகீசர்

என்பார். உண்மைதானே. தொண்டு புரியும் அன்பனுக்கு வாசியுள்ள காசு கொடுத்தால் அவன் கடைத்தேறுவது ஏது? நாட்டில் பஞ்சம் நீங்கும் வரையில் படிக்காசுகள் பெற்றிருக்கி றார்கள் இருவரும். (நமது நாட்டின் நிதி நிலைமையையும் ஐந்தாண்டுத் திட்டச் செலவுகள் பெருகுவதையும் பார்த்தால் இப்படி இரண்டு அடியவரும், இப்படிப் படிக்காசு கொடுக்கும் பெருமானும் இன்று இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணத்தோன்றுகிறது.) இப்படி இறைவன் படிக்காசு கொடுக்கிறான் என்ற உடனேயே, இரு சமய குரவர்களும் அந்தத் தலத்திலேயே இரண்டு மடங்கள் அமைத்துக்கொண்டு நீண்ட காலம் தங்கியிருக்கின்றனர். வடக்கு வீதி கீழைக் கோடியில் சம்பந்தர் மடமும், மேலைக் கோடியில் அப்பர் மடமும் இருக்கின்றன. இன்னும், இவர்களுக்குக் காசு கொடுத்த வரலாற்றையெல்லாம் பின்னால் இத்தலத்துக்கு வந்த சுந்தரர் கேட்டிருக்கிறார்.

தமிழோடு இசை கேட்கும் ஆசையினால்தானே இறைவன் இவர்களுக்குக் காசு கொடுத்திருக்கிறான் என்பதையும் தெரிந்திருக்கிறார். இவரோ தாம் போகும் இடங்களில் எல்லாம் இறைவனிடம் கூசாமல் கை நீட்டுபவர். இங்கே சும்மா இருப்பாரா? இவருமே நீட்டியிருக்கிறார்.

**திருமிழலை இருந்து நீர்தமிழோடு**
**இசைகேட்கும் இச்சையால்**
**காசு நித்தம் நல்கினீர்**
**அருந்தண் வீழி கொண்டீர்**
**அடியேற்கும் அருளிதிரே**

என்றே பாடியிருக்கிறார். ஆசாமிதான் பொல்லாதவர் ஆயிற்றே. காசு பெறாமலா மேலே நடந்திருப்பார்?

இக்கோயிலில் மதுரை கொண்ட கோப்பர கேசரி வர்மன் ராஜராஜன் முதல் மூன்றாம் ராஜேந்திரன் வரையுள்ள சோழ மன்னர்கள், ஜடாவர்மன், சுந்தரபாண்டியன் இன்னும் விஜயநகர மன்னனான வீரப்பண்ணஉடையார்கள் காலங்களில் எல்லாம் ஏற்படுத்திய நிபந்தங்களைப்பற்றிய கல்வெட்டுக்கள் நிறைய இருக்கின்றன. கல்வெட்டுக்களில் இறைவனைத் திருவீழிமிழலை உடையான் என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்குள்ள திருமேனிகளில் பிரசித்தமானவை நின்றருளிய நாயனார் நெறிவார் குழல் நாச்சியார் என்றும் தெரிகிறது. இன்னும் திருவீழிமிழலை உடைய மகாதேவர் கோயிலைப் பொன்வேய்ந்தவன் விஜயராஜேந்திர தேவர் அணுக்கியார் பல்லவன் பாட்டாளி நங்கை என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. திருமுறைகள் ஓதத் திருக்கைகொட்டி மண்டபம் ஒன்றைக் கட்டி அதற்கு நில நிபந்தம் ஏற்படுத்தியிருக்கிறான் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன். இன்னும் எத்தனை எத்தனையோ தகவல்கள். இதையெல்லாம் தெரிந்து வீழிமிழலை விகர்தர்தம் அருளும் பெற்றுவிட்டால் அங்கிருந்து மீண்டு வருவதே அரிதாக இருக்கும். 'அறிவது அறிகிறார், வெறிகொள் மிழலையீர்! பிரிவது அரியதே' என்பதுதானே சம்பந்தர் தேவாரம்.

# 25

# அழுந்தூர் ஆமருவியப்பன்

தமிழ் நாட்டிலே சைவ வைஷ்ணவச் சண்டைகள் பிரசித்தம். 'ஆலமுண்டான் எங்கள் நீலகண்டன்' என்று சிவ பக்தன் பெருமைப் பட்டுக்கொண்டால். 'ஆம்! அண்டமுண்டபோது அந்த ஆலமுண்ட கண்டனையும்கூட உண்டான் எங்கள் பெருமாள்' என்று பெருமைப்படாத விஷ்ணு பக்தன் இல்லை. இந்தச் சைவவைஷ்ணவச் சண்டைகள் எல்லாம் அவர்களது பக்தர்களுக்கு இடையில் தான். ஆனால் அவர்கள் இருவருமோ அத்தானும் அம்மாஞ்சியுமாக உறவு கொண்டாடிக் கொள்கிறார்கள். விஷ்ணுவோ தன் தங்கை பார்வதியையே சிவனுக்கு மணம் முடித்துக் கொடுத்து உறவைப் பலப்படுத்திக் கொள்கிறார். எல்லா ஊரிலுமே இரண்டு பேரும் குடித்தனம் வைத்துக் கொள்வார்கள். ஊருக்கு நடுவில் ஈசுவரன் கோயில் கொண்டிருந்தால், ஊருக்கு மேல்புறத்தில் பெருமாள் கோயில் அமைத்துக் கொள்ளுவார். காவிரி ஆற்றிடையே ஒரு தீவு ஏற்பட்டால், அதில் மேல் பாகத்தை விஷ்ணுவும், கீழ் பாகத்தைச் சிவனும் பங்கு போட்டு இடம் பிடித்துக்கொள்வார்கள்.தனக்கு எதிரேயே தன் மைத்துனன் கால் நீட்டிப்படுத்துக் கொண்டிருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல் இன்முகத்தோடேயே ஏற்றுக்

கொள்வார் சிவன். இன்னும் சில ஊர்களில், ஒரு வீட்டுக் குள்ளேயே (ஆம், கோயிலுக்குள்ளேதான்) இருவரும் இடம்பிடித்துக் கொள்வார்கள். பிரபலமான தில்லைச் சிற்றம்பலத்திலே ஆடும் பெருமானான நடராஜர், அந்த கோவிந்தராஜனுக்கு நல்ல விசாலமான இடத்தையே ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். நிலாத் திங்கள் துண்டப் பெருமாளோ ஏகம்பரர் கோயிலுக்குள்ளே இடம் பிடித்துக் கொள்கிறார். இப்படியே சிக்கலில், பவானியில் இன்னும் பலதலங்களில் இருவரும் சேர்ந்தே வாழ்கிறார்கள் ஒரு கூரையின் அடியிலே.

இவர்களுக்குள் எவ்வளவு சௌஜன்யம் நிலவியது என்பதற்கு எத்தனையோ கதைகள். வேலைவெட்டி ஒன்றும் இல்லாத நேரத்தில் இருவரும் சொக்கட்டான் ஆடவும் கிளம்பியிருக்கிறார்கள். இப்படிச் சொக்கட்டான் சதுரங்கம் ஆடும்போது ஒரு கஷ்டம். வெற்றி தோல்வியை நிர்ணயிக்க இருவரும் அன்னை பார்வதியை நடுவராக இருக்கவேண்டுகிறார்கள். அப்படி வேண்டிக் கொண்டு, கடைசியில் விஷ்ணு வெற்றிபெற, அப்படி அவரே வெற்றிபெற்றார் என்று தீர்ப்புக்கூறியதற்காக இந்தச் சிவன் தம் மனைவியாம் பார்வதியோடு பிணங்கிக்கொண்டு பல நாட்கள் இருந்திருக்கிறார். இந்தப் பிணக்கெல்லாம் கொஞ்சநேரத்துக்குத்தானே. அன்னையின் சக்தி இல்லா விட்டால் ஐயனுக்குக் காரியங்கள் நடப்பதேது? ஆதலால் இருவரும் பின்னர் இணங்கியே வாழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் இணங்கியபின், அத்தானும் அம்மாஞ்சியுமே இணைந்து வாழ்வதில் வியப்பில்லைதானே. இப்படியே வேதபுரி ஈசுவரராம் சிவபெருமானும் ஆமருவிப் பெருமானாம் விஷ்ணுவும் இணைந்து வாழும் தலமே தேரழுந்தூர் என்னும் திரு அழுந்தூர். அத்தலத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

இந்தத் தேரழுந்தூர் மாயூரத்துக்குத் தென் மேற்கே ஆறு மைல் தொலைவில் உள்ள குத்தாலத்துக்குத்

தென்கிழக்கே மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. மாயூரம்–தஞ்சைப் பாதையிலிருந்து ஒரு நல்ல ரோடு ஊருக்கு அழைத்துச் செல்லும். மாயூரத்துக்கும் குத்தாலத்துக்கும் இடையே ரயில்வேக்காரர்கள் ஒரு சிறு ஸ்டேஷன் அமைத்திருக்கிறார்கள். அதோடு அந்த ஸ்டேஷனில் 'தேரழுந்தார் – கம்பன் மேட்டுக்கு இங்கே இறங்குங்கள்' என்று நல்ல ரஸனையோடு ஒரு போர்டையும் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். (ஆம், சொல்லமறந்துவிட்டேனே, இந்தத் தேரழுந்தூர்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த ஊர்) ஸ்டேஷனில் எல்லா ரயிலும் நிற்காது. சக்கடா வண்டி போலப் போகும் பாசஞ்சர், ஷட்டில்கள் மாத்திரமே நிற்கும். ஆதலால் போட் மெயிலில் வருபவர்கள் எல்லாம் மாயூரத்தலே இறங்கி வண்டி பிடித்துப் போகவேணும். காலில் தெம்புள்ளவர்கள் தேரழுந்தூர் ஸ்டேஷனிலிருந்து நடக்கலாம். தெம்பு இல்லாதவர்களுக்கு என்றுதான் கொம்பு இல்லாத மொட்டை மாடுகள் பூட்டிய வண்டிகள் தயாராயிருக்குமே. ஆதலால் வண்டியேறியே ஊர்போய்ச் சேரலாம். போகும்போதே வண்டிக்காரனிடம் 'ஏன் இந்த ஊருக்குத் தேரழுந்தூர் என்று பெயர் வந்தது?' என்று விசாரிக்கலாம். உபரிசரவசு என்ற ஒரு அரசன். அவனுக்கு ஒரு தேர். அந்தத் தேரோ வானவீதியிலேயே உருண்டு ஓடும் தன்மையுடையது. இந்த அரசன் கீழே பெருமாள் கோயில் கொண்டிருக்கிறார் என்பதை மதியாமல் அவர் தலைக்கு மேலே வானவீதியிலே தேரைச் செலுத்தியிருக்கிறான். பெருமாள் சும்மா இருந்தாலும், அவரது பெரிய திருவடியாம் கருடாழ்வார் சும்மா இதைச் சகித்துக் கொண்டிருப்பாரா? தம்முடைய மந்திர சக்தியால் தேரைக் கீழே இழுத்துப் பூமியில் அழுந்த வைத்துவிடுகிறார். பின்னர் உபரிசரவசு பெருமானை வணங்கி மன்னிப்புப் பெற்றுத்தேரோடு திரும்பியிருக்கிறான். (பதினைந்து வருஷங்களுக்கு முன் நான் இந்த ஊர் போகும்போது, நான் சென்ற வண்டி, அங்குள்ள மண்ரோட்டில் அழுந்திக் கொண்டது. அப்போது

நான் இந்த உபரிசரவசுவைப்போல் பெருமாளை மதியாது நடந்தவன் அல்லவே, ஏன் நம் வண்டி அழுந்தவேண்டும்?'' என்று நினைத்தேன். பெரிய திருவடியையும் பிரார்த்தித்துக் கொண்டேன். அழுந்திய வண்டி கிளம்பிற்று. இப்போதெல்லாம் அந்தக் கஷ்டம் இல்லை. நல்லதார்ரோடு அல்லவா போட்டிருக்கிறார்கள் நெடுஞ்சாலைப் பொறியாளர்கள்) இந்தத் தேரழுந்திய கதையைவிட இங்கு திரு வந்து அழுந்தியிருக்கிறது என்று சொல்லவே நான் ஆசைப்படுகிறேன். கம்பன் பிறந்த ஊர் திரு அழுந்திய ஊராக இல்லாமல், தேர்மட்டும் அழுந்திய ஊராகவா இருக்கும்?

நம்மை ஏற்றிச் செல்லும் வண்டிக்காரன் ஊருக்குள் நம்மைக் கூட்டிச் சென்றதும், நடுரோட்டில் நிறுத்திவிட்டு, ஒரு பிரச்சினையைக் கிளப்புவான். அவன் எழுப்பும் பிரச்சினை எந்தக் கோயிலுக்கு முதலில் போகவேண்டும் என்பதுதான். நாம் வண்டியிலிருந்து இறங்கினால் மேற்கே ஒரு கோபுரம் தெரியும். கிழக்கே ஒரு கோபுரம் தெரியும். கிழக்கேயுள்ள கோயில் வேதபுரி ஈசுவரராம் சிவன் கோயில். இவர் மேற்கே பார்க்க இருக்கிறார். மேற்கேயுள்ள கோயில் ஆமருவிப்பெருமாள் கோயில். இவர் கிழக்கே பார்க்க நிற்கிறார். இருவருக்கும் இடையில். உள்ள சந்நிதித் தெருவின் நீளம் எல்லாம் இரண்டு பர்லாங்கு தூரமே. ஒருவரையொருவர் எதிர்நோக்கியே இருக்கிறார்கள். ஆம்; அன்று எதிர் எதிராக இருந்துதானே சதுரங்கம் ஆடி யிருக்கிறார்கள். எந்த மூர்த்தியை முதலில் சென்று காண்பது என்ற தீர்மானத்துக்கு வரமுடியாமல் தவிப்போம் கொஞ்சநேரம். அந்த நேரம் அங்குள்ள தேரடிப்பக்கம் ஒரு சிறு கோயில் தெரியும். அந்தக் கோயிலில் இருப்பவர் வழிகாட்டி விநாயகர் என்பார்கள். அவரிடமே வழிகாட்டும்படி கேட்கலாம். ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னே இத்தலத்துக்கு எழுந்தருளிய, ஞானசம்பந்தருக்குமே இவர்தான் வழிகாட்டியிருக்கிறார்.

அதனாலேயே ஞானசம்பந்த விநாயகர் என்று பெயரும் பெற்றிருக்கிறார். இவர்தான் பிரம்மச்சாரியாயிற்றே. ஆதலால் அவருக்கு மாமனார் வீட்டில் அவ்வளவு அக்கறையில்லை. அவர் தம் தகப்பனார் இருக்கும் இடத்துக்கே வழி காட்டுவார். அன்றும் சம்பந்தருக்கு அப்படித்தானே வழி காட்டியிருக்கிறார். நாமும் அவர் காட்டிய வழியிலே கிழக்குநோக்கி நடந்து வேதபுரி ஈசுவரர் கோயில் வாயிலுக்கு வந்து சேரலாம். சம்பந்தருடன் சேர்ந்து,

> தொழுமாறு வல்லார் துயர்தீர, நினைந்து
> எழுமாறு வல்லார் இசைபாட, விம்மி
> அழுமாறு வல்லார் அழுந்தை மறையோர்
> வழிபாடு செய் மாமடம் மன்னினையே

என்று பாடிக்கொண்டே நாமும் கோயிலுக்குள் நுழையலாம்.

கோயிலின் வெளிப்பிராகாரத்திலே தென்மேற்குப் பகுதியிலேயே சௌந்தராம்பிகை தனிக்கோயிலில் இருக்கிறாள். இப்படி இவள் தனித்திருப்பதனால்தான், சதுரங்க விளையாட்டு, அதனால் இறைவன் இறைவி யரிடையே பிணக்கு என்றெல்லாம் கதை கட்டியிருப்பார்கள் போல் இருக்கிறது. திருக்கடவூரில் அபிராமியின் கோயிலும் இப்படித்தான் இருக்கிறது. அங்கு பிணக்கு என்ற பேச்சு இல்லையே. உண்மையைச் சொல்லப்போனால் அமிர்த கடேசுரர்கூட அபிராமிக்கு அடங்கியவராகத்தானே வாழ்கிறார். நாமும் முதலில் சௌந்தராம்பிகையை வணங்கிவிட்டு வேதபுரி ஈசுவரர் சந்நிதிக்குப் போகலாம். 'மாமடம்' என்று சம்பந்தர் குறிப்பிடுவதால் மாடக் கோயிலாக இருக்குமோ என்று எண்ணுவோம். இது மாடக்கோயில் அல்ல. ஆனால் வருஷத்துக்கு மூன்று

நாட்கள் (மார்ச்சு 6,7,8) மாலை ஆறு மணி சுமாருக்குக் கோபுரம் வாயில், கொடிமரம், பலிபீடம் எல்லாவற்றையும் தாண்டிக்கொண்டு சூரியன் கோயிலுக்குள் புகுந்து லிங்கத் திரு உருவைச் சோதிமயமாக ஆக்கிவழிபடுகிறான். சூரியன் மாத்திரம் என்ன வேதங்கள், திக்கு பாலகர்கள் எல்லாம் வழிபாடு இயற்றியிருக்கிறார்கள் என்பது புராண வரலாறு. நாமும் வேதபுரி ஈசுவரரை வணங்கிவிட்டு மற்றையப் பரிவாரதேவதைகளையும் வணங்கிவிட்டு வெளியே வரலாம். இக்கோயிலில் ஆறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவையெல்லாம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வெட்டப்பட்டவை. 'மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவன வீரதேவன்' என்று அவன் கல்வெட்டுக்களில் குறிப்பிட்டிருக்கிறான். இந்த வட்டாரம், ஜெயங்கொண்ட சோழவள நாட்டுத் திருவழுந்தூர் நாடு என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இத்தலமே திருமாவளவன் கரிகாலனது தாயாரது ஊர் என்றும், இங்கேயே அவன் மறைந்து பல காலம் தங்கியிருந்தான் என்றும் கூறுவர். சரித்திர வரலாறு இவ்வளவு போதும். இனி நாம் ஆமருவி அப்பன் சந்நிதிக்குச் செல்லாலாம்.

வேதபுரி ஈசுவரர் கோயிலிலிருந்து கண்ணை மூடிக்கொண்டு நேரே மேற்கு நோக்கி நடந்தால் ஆமருவி யப்பன் வந்து சேரலாம். ஆனால் கோயில் பக்கம் வருமுன் மூடிய கண்ணைத் திறந்துவிடவேண்டும். இல்லாவிட்டால் கோயில் முன்னிருக்கும் தர்சன புஷ்கரிணியில் விழுந்து விடவேண்டியதுதான். இந்தப் புஷ்கரிணியைச் சுற்றிக் கொண்டு வந்தால் ஊஞ்சல் மண்டபத்துக்கு வந்து சேருவோம். கோயிலில் நுழைந்த உடனேயே ராஜகோபுரத்தின் உள்பக்கம் தென்பக்கத்திலே இரண்டு மாடங்கள் இருக்கும். அந்த மாடத்தில் இருப்பவர்கள் 'கம்பர்களும் அவர் மனைவிகளும்' என்பார்கள். 'இது என்ன கம்பர்கள்?' என்று



ஆமருவி அப்பன்

கேட்டால் கோயில் நிர்வாகிகள், 'முன்னரே கம்பனையும் அவர் மனைவியையும் இங்கு பிரதிஷ்டை செய்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் பின்னமுற்றுவிட்டார்கள் என்பதனால் புதிதாகக் கம்பனுக்கும் அவன் மனைவிக்கும் சிலைகள் அமைத்துப் பழைய சிலைகளுடனே நிறுத்தியிருக்கிறோம்' என்பார்கள். ராமாயணம் என்னும் ராமகதை பாடினான் என்பதற்காக, வேதபுரி ஈசுவரர் கம்பனைத் தன் கோயிலுள் இருக்க அனுமதிக்கவில்லை. ஆனால் ஆமருவியப்பன் அவனுக்கு அக்ரஸ்தானமே கொடுத்திருக்கிறான். 'அரன் அதிகன், உலகு அளந்த அரி அதிகன்' என்றெல்லாம் வாதிட்டு மயங்குபவர்களை 'அறிவிலார்' என்றே கூறியிருக்கிறான்.

வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும்
விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னில்
படிவங்கள் எப்படியோ?

என்று வேதபுரியானைப் பாடினபிறகே,

தாய்தன்னை அறியாத கன்று இல்லை
தன் கன்றை
ஆயும் அறியும்; உலகின்
தாயாகி, ஐய!
நீ அறிதி எப்பொருளும்
அவை உன்னைநிலை அறியா
மாயை இது என் கொல்லோ?
வாராதே வரவல்லாய்!

என்று ஆமருவி அப்பனைப் பாடி இருக்கிறான். இனி அந்த ஆமருவி அப்பனையே காணக் கோயிலுக்குள் விரைந்து செல்லலாம். கிருஷ்ணாவதாரத்தில் கண்ணன் தன் தோழர்களுடன் பசுக்களை மேய்த்துக்கொண்டிருந்திருக்கிறான். பசுக்களை ஓரிடத்தில் விட்டு நீர் அருந்தச் சென்றிருக்கிறான். இந்த நேரத்தில் அவ்வழி வந்த பிரம்மா, பசுக்களைத் திருவழுந்தூருக்கு ஓட்டி வந்து விடுகிறார். இதைத் தெரிந்த கண்ணன் புதிதாக ஒரு பசுக்கூட்டத்தையே உருவாக்கி யாதவர்களுக்குக் கொடுத்து விடுகிறான். பிரம்மாவும் தம் பிழையை உணர்கிறார். அவர் வேண்டிக் கொண்டபடியே, திருவழுந்தூர் சென்ற பசு நிறைகாக்கும் கோவலனாகக் கண்ணன் இங்கு வந்துவிடுகிறான். 'ஆமருவி நிரை மேய்க்கும் அமரர் கோமானாக ' அமர்கிறான். கர்ப்பக் கிருஹத்தில் இருக்கும் உற்சவரது பின்புறம் பசு ஒன்று நின்று கொண்டிருப்பது கண்கூடு. இத்துடன் இவ்வூரைச் சுற்றியுள்ள கிராமங்களெல்லாம் இளங்கன்றுக்குடி, (இளங்கார்குடி என்பார்கள்) வெண்ணெய், கோமலர், கண்ணபுரம் என்றே பெயர் பெற்றிருக்கிறது. கிருஷ்ணனோடு மிகத் தொடர்புடைய ஊர் இது. பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரங்களில் இது ஒன்று என்பர் பெரியோர்.

உற்சவர் மிக அழகானவர். ஏதோ வருஷத்துக்கு இரண்டு மூன்று முறையே அபிஷேகம் பெறுகிறார். ஒரு அபிஷேகத்துக்குக் காவிரிக்கே எழுந்தருளுவார். அன்று

தான் அர்ச்சகர்கள், ஆமருவியப்பனின் முழு மேனி யழகையும் நமக்குக் காண்பிப்பார்கள். பங்குனிப் புனர்வசு ராமன் பிறந்தநாள். அன்று இந்தக் கண்ணனையே ராமனாக அலங்காரம் பண்ணிச்சிவன் கோயில் வரை உலா வரப் பண்ணுவர். இராமாவதாரம் பாடிய கம்பனுக்கு ஆமருவியப்பன், ராமனாகவே காட்சி கொடுத்திருக்கிறான் என்றும் கூறுவர். உற்சவராம் ஆமருவியப்பனைவிட, மூலவராம் 'திருவுக்கும் திருவாகிய செல்வன்' மிக்க அழகு வாய்ந்தவன். உயரம் பத்து அடிக்குக் குறையவில்லை. நல்ல ஆஜானுபாகு. நின்ற திருக்கோலத்தில் கரிய திருமேனியனாக அமைந்த நல்லசிலாவடிவம். தலையிலே தங்கக் கிரீடம். இடையிலே தசாவதார பெல்ட். கழுத்திலே சஹஸ்ரநாம மாலை. தோள்களிலே வாகுவலயம். மார்பிலே லக்ஷ்மி.எல்லாம் தங்கமயம். நெற்றியிலே வைரத்திருநாமம். எல்லா வற்றையும் விட மந்தஹாசத்துடன் சாந்தம் தவழும் திருமுக மண்டலம். இந்தத் திருமுக தரிசனம் பெற்ற திருமங்கை மன்னன்,

> **திருவுக்கும் திருவாகிய செல்வா!**
> **தெய்வத்துக் கரசே! செய்ய கண்ணா!**
> **உருவச் செஞ்சுடர் ஆழிவல்லானே!**
> **உலகுஉண்ட ஒருவா! திருமார்பா!**

என்று பாடிப் பரவியதுடன்,

> **செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர்**
> **திசைமுகனே அனையவர்கள் செம்மைமிக்க**
> **அந்தணர்தம் ஆகுதியின் புகையார் செல்வத்து**
> **அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோவே!**

என்றும் புகழ்ந்து ஏத்துகிறார். இந்தக் கருவறையிலேயே கருடாழ்வார், காவேரி, மார்க்கண்டர், பிரஹலாதர் எல்லோரும் இருக்கிறார்கள். அகஸ்தியரும் காவேரியும் பிணக்குற்றனர் என்றும் அதனால் ஒருவருக்கொருவர்

சாபமிட்டுக் கொள்ள, பின்னர் இருவரும் இத்தலம் வந்து சாபவிமோசனம் பெற்றனர் என்றும் வரலாறு. 'கம்பன் பிறந்த ஊர், காவேரி தங்கும் ஊர், கும்பமுனி சாபம் குலைத்த ஊர்' என்றுதானே இத்தலத்தின் புகழ் பரவியிருக்கிறது. மார்க்கண்டேயர் என்றும் பதினாறு வயது என்று அமிர்தகடேசுவரரிடம் வரம் பெற்றாரே ஒழிய, அழியாத சாயுஜ்யத்தைப் பெற ஆமருவியப்பனையே அடைந் திருக்கிறார். பிரஹலாதனின் பக்தியை மெச்சிய பெருமாள், அவனையும் தன் பக்கத்திலேயே இருத்திக் கொண்டிருக்கிறான். அதனால்தானோ என்னவோ முதல் நூலில் இல்லாத பிரஹலாத வரலாற்றைக் காவியத்திலே புகுந்தி வைத்திருக்கிறான் கம்பன். ஆமருவியப்பனைப் பார்த்த பின் அவன் துணைவியாம் செங்கமல வல்லித் தாயார் சந்நிதியும் சென்று வணங்கலாம். ராமனுக்கும் ஆழ்வாருக்கும் தனித்தனிச் சந்நிதிகள் உண்டு. கோயிலில் அவர்களையும் வணங்கிவிட்டு வெளியே வரலாம்.

இத்தனையும் பார்த்தபின் ஒன்று ஞாபகத்துக்கு வரும் இங்குதானே கம்பன் மேடு என்று ஒரு இடம் இருக்கிறது என்பது. அதைக் காண ஊரின் தென்மேற்குக் கோடிக்கே செல்லவேண்டும். அங்கு புதைபொருள் இலாக்காவினர் ஒரு போர்டு வைத்திருக்கிறார்கள்: கம்பன் குடியிருந்த இடம் அது என்பர். அங்கு சில ஓட்டாஞ்சல்லிகள்தான் கிடைக்கும். முன்னர் சில காசுகளும் கிடைத்தன என்பார்கள். நமக்கு எதற்கு 'ஓடும் செம்பொனும்' அவற்றை யெல்லாம் விட அழகான காவியமாம் இராமவதாரமே கிடைத்திருக்கிறதே. ஆதலால் கம்பன் பிறந்த ஊரில் பிறந்த பெருமானுக்கு வணக்கம் செலுத்துவதோடே, கம்பன் பிறந்து வளர்ந்த இடத்துக்கே நமஸ்காரம் பண்ணிவிட்டுத் திரும்பலாம்.

# 26

# சொன்னவாறு அறிவார்

*பாரதியார் பாடல்களிலே பாரதி அறுபத்தாறு என்று ஒரு பாடல். பல விஷயங்களைப்பற்றி அவரது சொந்த அபிப்பிராயங்கள் நிறைந்தது அது. அந்தப் பாடலில் காதலின் புகழைப் பாடுகிறார் கவிஞர்.*

**காதலினால் மானுடர்க்குக்**
**கவிதை உண்டாம்;**
**கானம் உண்டாம்; சிற்பமுதல்**
**கலைகள் உண்டாம்;**
**ஆதலினால் காதல் செய்வீர்**
**உலகத்தீரே!**

*என்று உலகோரைக் கூவியழைத்துக் கூறியிருக்கிறார். மேலும் காதலைப் பற்றிப் பேசும்போது,*

**நாடகத்தில் காவியத்தில்**
**காதல் என்றால்,**
**நாட்டினர்தாம் வியப்பு எய்தி**
**நன்றுஆம் என்பர்**
**வீடகத்தே, வீட்டில் உள்ளே**
**கிணற்று ஓரத்தே**
**ஊரினிலே காதல் என்றால்**
**உறுமுகின்றார்!**

என்று இன்றைய மக்களைப்பற்றியும் குறைப்பட்டிருக்கிறார். இத்தகைய மனிதர்கள் வாழும் இந்த நாளிலே, கடவுளர் வாழ்விலே காதல் அரும்பிற்று என்று நான் சொன்னால் சமயவாதிகள் என்ன என்ன சொல்வார்களோ? எவர் என்ன சொன்னால் என்ன? நான் படித்துத் தெரிந்ததைத் தானே சொல்கிறேன். ஒரு கதை; கைலாயத்தில் பார்வதி பரமேசுவரர்கள் இருக்கிறார்கள். பார்வதி கேட்கிறாள் பரமேசுவரனை, 'ஆமாம்! நமக்குக் கல்யாணமாகி எத்தனை வருஷங்கள், யுகங்கள் ஆகிவிட்டன. பூவுலகில் மக்களாகப் பிறந்து மணந்திருந்தாலும் சஷ்டி அப்த பூர்த்திக் கல்யாணம், சதாபிஷேகக் கல்யாணம் என்றாவது நடக்கும். அதற்குக் கூட இங்கு வழியில்லை. எனக்கென்னவோ திரும்பவும் நாமிருவரும் மணம் முடித்துக் கொள்ளவேணும்என்று ஆசையாக இருக்கிறது' என்கிறாள். மனைவியின் விருப்பத்தை நிறைவேற்ற நினைக்கிறார் இறைவன்.

அவர் கட்டளை இட்டபடியே காவிரிக்கரையிலே பரதமுனிவர் இயற்றிய வேள்விக் குண்டத்திலே அம்மை பெண்மகளாக அவதரிக்கிறாள். வளர்கிறாள். வளர்ந்து பருவமங்கையானதும் காவிரிக்கரையிலேயே மணலால் லிங்கம் அமைத்துப் பூஜிக்கிறாள். குறித்தகாலம் வந்ததும், அம்மையின் பூஜையை மெச்சி, லிங்கவடிவிலிருந்து இறைவன் மானிட உருவில் எழுகிறார். தமக்கு உரியவள் தானே என்று கொஞ்சலாக, அவளது கரத்தைப் பற்றுகிறார். அம்மையோ நாணிக்கோணிக்கொண்டு 'இது என்ன? இப்படிக் கையைப் பிடித்து, கன்னத்தைக் கிள்ளியா காதல் பண்ணுவது? நாலுபேர் அறிய என் தந்தையிடம் வந்து பெண் பேசி அல்லவா என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? அதையல்லவா நான் விரும்பினேன்' என்கிறாள். 'சரி, அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி மறு நாள் பரத முனிவரை அவரது குமாரியாம் நறுஞ்சாந்து இள முலையைப் பெண்கேட்டுச் சம்பிரமமாகத் திருமணம் செய்து கொள்கிறார். திருமணம் முடிந்ததும் அன்னையும் அத்தனும்

அந்தர்த்தியானம் ஆகிவிடுகின்றனர். அப்படி பூலோகத்துக்கு வந்து திரும்பவும் பார்வதியை மணம் முடித்துச்சென்றவரே 'சொன்னவாறு அறிவார்' என்ற பெயருடன் நிலைக்கிறார். நல்ல காதல் கதை. இறைவரது வாழ்விலும் அல்லவா இக்காதல் புகுந்திருக்கிறது. இந்தச் சொன்னவாறு அறிவார் கோயில் கெண்டிருக்கும் தலம் திருத்துருத்தி. அத்திருத் துருத்திக்கே செல்கிறோம் நாம் இன்று.

துருத்தி என்றாலும் திருத்துருத்தி என்றாலும் பூகோளப் படத்திலே ஊரைக்கண்டுபிடித்தல் இயலாது. தஞ்சை ஜில்லாவிலே உள்ள குத்தாலம் என்ற ஊரின் பெயரே அக்காலத்தில் துருத்தி என்று இருந்திருக்கிறது. துருத்தி என்றால் ஆற்றில் இடைக்குறை, அதாவது தீவு என்று அர்த்தம். காவிரி நதியிலே ஒரு சிறு தீவாக இத்தலம் இருந்திருக்க வேண்டும். பின்னரே காவிரி கோயிலுக்கு வடபக்கம் மாத்திரம் சென்றிருக்கவேண்டும். அந்தத் துருத்தி எப்படிக் குத்தாலம் ஆயிற்று? சொன்னவாறு அறிவார் வந்து நின்ற இடம், உத்தாலம் என்னும் ஒருவகை ஆத்தி மரத்தடியிலே.அந்த உத்தாலமே பின்னர் குத்தாலம் ஆகி, அதன்பின்னர் தென்பாண்டி நாட்டிலே தென்காசியை அடுத்து வட அருவியைக் கொண்ட திருக்குற்றாலத்துக்கு ஒரு போட்டிக் குற்றாலமாக விளங்குகின்றது இன்று. இந்தக் குத்தாலம், மாயூரம் தஞ்சை ரயில் பாதையில் மாயூரத்துக்குத் தென் மேற்கே ஆறு மைல்தொலைவில் இருக்கிறது. நல்ல ரயில், ரோடு வசதியெல்லாம் உடைய பெரிய ஊர்தான். எளிதாகவே சென்று சேரலாம். இந்தக் குத்தாலத்திலே மூன்று கோயில்கள். எல்லாமே சோழ மன்னர்கள் கட்டிய கற்றளிகள். சொன்னவாறு அறிவார் கோயில், கண்ட ராதித்த சோழதேவரது மனைவி சிவபக்த சிரோன்மணி, செம்பியன் மாதேவி எடுப்பித்தது. சோளேச்சுரர் கோயில் என்று அழைக்கப்படும் விக்கிரம சோழீச்சுரம் விக்கிரம சோழனால் எடுப்பிக்கப்பெற்றது. ஓங்காரேச்சுரம் என்னும்

கோயில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஆளுடைய நாயகரான பிள்ளை செயதரப்பல்லவராயர் கட்டியது. மூன்று கோயில் களுக்கும் போக அவகாசமிருப்பவர்கள் போகட்டும். நாம் இத்தலத்தின் பிரதான கோயிலான சொன்னவாறு அறிவார் கோயிலுக்குச் செல்வதோடு திருப்தி அடையலாம். கோயில் சமீபத்தில்தான் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் எல்லாம் நடந்திருக்கிறது. கோயில், கோயில் பிரகாரங்கள் எல்லாம் வெகு நேர்த்தியாய் வைக்கப்பட்டிருக்கும். பார்த்த உடனேயே 'இது தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த கோயிலோ?' என்று கேட்கத் தோன்றும். அந்த ஆதீனக் கோயில்களில் ஒன்றுதான் என்றும் தெரிந்து கொள்வோம்.

இங்குள்ள கோயில் மேற்கே பார்த்த சந்நிதி. கோயில் ராஜகோபுரத்தைக் கடந்ததும் நம்முன் நிற்பது உத்தால மரமும் அதைச் சுற்றிக் கட்டிய பீடமும்தான். அந்த மரத்து அடியிலே இரண்டு திருவடிகள் (ஆம்! பாதரக்ஷதான்) இருக்கின்றன. இறைவியை மணக்க வந்த இறைவன் பாதரக்ஷகளைக் கழற்றி விட்டுத் திருமணம் செய்திருக்கிறார். திரும்ப அந்தர்த்தியானமாகும் போது பாதரக்ஷயைக் காலில் மாட்டிக்



குத்தாலம் சண்டீசர்

கொள்ள மறந்திருக்கிறார். அவர் மணந்த அந்த நறுஞ்சாந்து இளமுளையாளும் அத்திருவடிநிலைக்கு எதிர்ப்புறமாகவே இருக்கிறாள். பக்கத்திலேயே தெற்கு நோக்கியவளாக அத்தலத்து இறைவியான அரும்பன்ன வளமுலையாள் சந்நிதி. இன்னும் அந்த முற்றப் பெருவழியிலேயே தலத்துப்பிள்ளையார் துணைவந்த விநாயகர் இருக்கிறார். இவர்தான் அத்தன் அம்மையை மணக்க வந்தபோது உடன் வந்திருக்கிறார். (நல்லபிள்ளை, தகப்பனார் தாயாரைத் திருமணம் செய்து கொள்ள, ஆம். இரண்டாம் தடவையாகத் தான் வரும்போது தனயனான இவரும் அல்லவா உடன் வந்திருக்கிறார்.) இந்தத்தாயார், பிள்ளையையெல்லாம் வணங்கியபின் உட்கோயிலில் நுழையலாம். வாயிலில் இருக்கும் துவார பாலகர்கள் கம்பீரமானவர்கள்; நல்ல வண்ண வண்ண உடைகளை அணிந்தவர்கள். அவர்களிடம் அநுமதிபெற்றுக்கொண்டே அர்த்த மண்டபம் சென்று லிங்கத் திருவுருவில் உள்ள சொன்னவாறு அறிவாரைத் தரிசிக்கலாம். இவர் நல்ல வரப்பிரசாதி என்பதையும் அறியலாம். 'தொட்டது துலங்காது; தீண்டிய பொருள்கள் யாவுமே தீய்ந்து சாம்பலாகும்' என்ற பழிநீங்க அக்கினி இத்தலத்தில் வழிபட்டுப் பழிபோக்கிக் கொண்டிருக்கிறார்.

விக்கிரம சோழனுடைய மனைவி கோவளைக்குக் குட்டம் நீங்கி யிருக்கிறது இங்கே. வருணனது சலோதரம் என்ற பெரு வியாதி நீங்கியதும் இங்கேதான். இன்னும் சூரியனுக்கும் பரத முனிக்கும் மற்றும் பலருக்கும்இருமை இன்பத்தை அளித்தவர் இத்தலத்து இறைவனே என்று தலவரலாறு கூறும். இத்தலத்துக்கு, சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் வந்திருக்கிறார்கள்; பதிகங்கள் பாடி இருக்கிறார்கள்.

**உன்னி எப்போதும் நெஞ்சுள்**
**ஒருவனை ஏத்துமின்னோ,**
**கன்னியை ஒருபால் வைத்து**
**கங்கையைச் சடையுள்வைத்து**

பொன்னியின் நடுவுதன்னுள்
பூம்புனல் பெழிந்து தேன்றும்
துன்னிய துருத்தியானைத்
தொண்டனேன் கண்டவாறே.

என்பது அப்பர் தேவாரம். சம்பந்தரும் அப்பரும் சும்மா தல யாத்திரையில்தான் இங்குவந்திருக்கிறார்கள். சுந்தரரோ, சங்கிலிக்குக் கொடுத்த சத்தியம் தவறி அதனால் கண்ணிழந்து, உடல் நலிந்து வந்திருக்கிறார். இழந்த கண்களைக் கச்சியிலும், திருவாரூரிலும் பெற்றிருக்கிறார். ஆனால் இத்துருத்தி வந்து இங்குள்ள பதும தீர்த்தத்தில் முழுகி எழுந்தே உடற்பிணி தீர்ந்திருக்கிறார்.

சொன்னவாறு அறிவார் துருத்தியார்,
வேள்விக் குடியுளார் அடிகளைச்
செடியனேன் நாயேன்
என்னை நான் மறக்குமாறு?
எம்பெருமானை என்னுடம்படும்
பிணியிடர் கெடுத்தானை!

என்றே பாடியிருக்கிறார். இந்தக் கோயிலில் உள்ள சிற்பங்கள் எல்லாம் இன்றையக் கொத்தர்களால் செய்தவையே. பழைய செப்புப் படிமங்கள் அதிகம் இல்லை. இருப்பவைகளில் மிக்க அழகு வாய்ந்தது கண்டீசரது வடிவமே.

இக்கோவிலில் மணக்கோலநாதர் வடிவைத் தேடினேன். கிடைக்கவில்லை. அவர்தான் உத்தால மரத்தடியிலேயே பாதரக்ஷையைக் கழற்றிவிட்டு அந்தர்த்தியானம் ஆகியிருக்கிறாரே. அத்துடன் இன்னொரு செய்தியுங்கூட. இத்தலத்தில் மணக்கோலநாதர் பகல் நேரத்தில் மாத்திரமே இருப்பாராம். இரவு நேரத்தில் பக்கத்தில் உள்ள வேள்விக் குடிக்குச் சென்று விடுவாராம். இப்படிப் பகலில் ஓரிடத்தும், இரவில் ஓர் இடத்தும் தங்குவதற்குக் காரணமும்

என்னவோ? இவர்தான் ஏகபத்தினிவிரதர் ஆயிற்றே. மைத்துனன் விஷ்ணுவைப் பின்பாற்றாதவராயிற்றே. அப்படி இருந்தும் ஏன் இந்தக் கஷ்டம்? எனக்குத் தோன்றுகிறது.உத்தால மரத்தடியில் தோன்றி நறுஞ்சாந்து இளமுலையை மணந்தவர் மறைந்தாரே ஒழிய, ஓடிவிட வில்லை. பக்கத்தில் உள்ள வேள்விக் குடியிலேயே பரிமள சுகந்த நாயகியுடன் கல்யாணக்கோலத்திலேயே நின்று கொண்டிருக்கிறார். அதனால்தானே, இத்தலத்துக்கு வந்த சம்பந்தர், இந்தத் துருத்தியாரையும் அந்த வேள்விக்குடியா ரை யும் சேர்த்தே பாடியிருக்கிறார் ஒரு பதிகத்தில்.

**கரும்பன வரிசிலைப் பெருந்தகை**
**காமனைக் கவின் அழித்த**
**சுரும்பொடு தேன்மல்கு தூமலர்**
**கொன்றை அம் சுடர்ச்சடையார்,**
**அரும்பன வனமுலை அரிவையோடு**
**ஒரு பகல் அமர்ந்த பிரான்**
**விரும்பிடம் துருத்தியார், இரவு இடத்து**
**உறைவர் வேள்விக்குடியே.**

வந்ததே வந்தோம், இந்த வேள்விக்குடி, அதை அடுத்து இருக்கும் திருமணஞ்சேரி, எதிர்கொள்பாடி எல்லாம் சென்று அங்குள்ள மூர்த்திகளையும் வணங்கியபின் திரும்பலாமே, என்ன? கொஞ்சம் நடக்கலாம் தானே. இங்கெல்லாம் செல்வதற்கு கார் உதவாது, ஜீப் இருந்தால் நல்லது. இல்லை வண்டிகளில்தான் செல்லவேண்டும். காலில் வலுவுள்ளவர்கள் நடந்தே செல்லலாம். குத்தாலத்துக் கோயிலைவிட்டுப் புறப்பட்டு, அக்கோயிலுக்கு வடபால் உள்ள காவிரியையும் கடந்து வட கீழ் திசை நோக்கி மூன்று மைல் சென்றால் வேள்விக்குடி வந்து சேரலாம். கோயில் சிறிய கோயில்தான். கல்யாணக் கோலத்தில் இறைவன் இங்கு எழுந்தருளியதற்குக் காதல் கீதம் ஒன்றும்

இடைபுகவில்லை. ஓர் அரசகுமாரன்; அவனுக்கு ஒரு பெண்ணை நிச்சயிக்கின்றனர். திருமணம் நடக்குமுன்னமே அரசிளங்குமரனின் தாய் தந்தையர் இறந்து விடுகின்றனர். அதனால் பெண்ணின் சுற்றத்தார் பெண் கொடுக்கத் தயங்குகின்றனர். இறைவனோ அரச குமாரனின் காதல் தாபத்தை அறிவார். அவரே அந்த நோய் வாய்ப் பட்டவர் என்பதைத்தான் முன்னமே பார்த்திருக்கிறோமே. அவர் சும்மா இருப்பாரா? தமது பூதகணங்களை விட்டு இரவுக்கிரவே பெண்ணைத்தூக்கிவரச்செய்து வேள்வி நடத்தித் திருமணத்தையும் முடித்து வைக்கிறார். பின்னர் தாமும் துணைவியுமாகத் திருமணக் கோலத்திலேயே நின்றுவிடுகிறார். இந்தக் கோயிலில் நல்ல அருமையான செப்புச் சிலைகள் பல இருக்கின்றன. எல்லாவற்றிலும் மிக்கச் சிறப்பு வாய்ந்தது கல்யாண சுந்தரர், பரிமள சுகந்த நாயகியார் சிலைகள் தாம். புது மணப் பெண்ணாம் அந்த அம்மையின் ஒவ்வொரு அங்கமுமே நாண உணர்ச்சியை வெளிப் படுத்தும். ஆம்! திருமணத்துக்கு முன்பு கை தொட்டதற்கே கோபித்துக் கொண்டவள் ஆயிற்றே அவள். மணம் முடித்துக்



திருமணஞ்சேரி மணக்கோல நாதர்

கைப் பிடித்து அழைத்துச் செல்லும்போது நாணம் வந்து புகுந்து கொள்ளாதா அவள் அங்கங்களில்? தமிழரின் சிறப்பக் கலை உலகிலே ஓர் அற்புதப்படைப்பு இந்த வடிவம்.

இதைப் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே அங்குள்ள அர்ச்சகர் சொல்வார் 'இன்னும் கொஞ்சம் நடந்தால் திருமணஞ்சேரிக்கும் போய் வந்து விடலாம்'என்று. 'என்ன? ஒரே திருமண மயமாக இருக்கிறதே இந்த வட்டாரம்?' என்று எண்ணுவோம். சந்தர்ப்பத்தை விட்டுவிடாமலே மேலே நடக்கலாம். திருமணஞ்சேரிக்கு இரண்டு வழி. வேள்விக் குடியிலிருந்து இரண்டு மைல் மேற்கு நோக்கி நடக்கவேணும். நடக்கத்தான் வேண்டும். வண்டிகூடப் போகாது அந்தப் பாதையில். இடையில் வரும் விக்ரமன் ஆற்றையும் கடக்க வேணும். நடக்கவே இயலாது என்பவர்கள், வேள்விக் குடியிலிருந்து குத்தாலம் வரும் வழியில் இரண்டு மைல் வந்து விக்ரமன் ஆற்றைக் கடந்து எதிர்கொள்பாடி வழியாக இரண்டு மைல் செல்லவேண்டும். இரண்டாவது வழியிலேயே போகலாம் நாம். வழியிலுள்ள மேலைத் திரு மணஞ்சேரி என்னும் எதிர்கொள்பாடியில் உள்ள ஐராவதேசுவரர், மலர்க்குழல் மாது அம்மையையும் வணங்கிவிட்டே செல்லலாம். வேள்விக் குடியில் திருமணம் செய்துகொண்டுதன் நகர் திரும்பிய அரச குமாரனை, அவனுடைய மாமனார் உருவில் எதிர்கொண்டு உபசரித்திருக்கிறார் இத்தலத்து இறைவன். அதனால் இத்தலமே எதிர்கொள்பாடி என்றுபெயர் பெற்றிருக்கிறது. கோயிலிலே இப்போது திருப்பணி வேலை மும்முரமாக நடப்பதால் நம்மை எதிர்கொண்டு அழைக்க ஒருவருமே இருக்கமாட்டார்கள். நாமும் அதை எதிர்பாக்காமலேயே நடந்து கீழைத்திருமணஞ்சேரிக்கே சென்று சேரலாம். கோயில் பெரிய கோயில். இங்கு கோயில் கொண்டிருப்பவர் அருள் வள்ளல் நாயகரும், யாழின் மென்மொழி அம்மை யும். இத்தலத்திலே மன்மதன்

பூஜித்திருக்கிறான். ஒன்றுக்கு மூன்றாகத் திருமணம் நடந்திருக்கிறதே இந்த வட்டாரத்தில், மன்மதன் பூஜியாமல் இருப்பானா? இங்கும் இறைவன் மணக்கோலத்திலேயே இருக்கிறார்.

இத்தலத்தில் மணக் கோலம் கொண்டதற்குக் கதை இதுதான்: வைசிய குலத்திலே இரண்டு பெண்கள். ஒருத்தி மற்றொருத்திக்கு நாத்தி. இவர்கள் இருவரும் ஒருங்கே கருப்பமுறுகிறார்கள். அப்போது தமக்குப் பிறக்கும் குழந்தைகளை ஒருவருக் கொருவர் சம்பந்தம் செய்து கொள்வது என்று பேசிக்கொள்கிறார்கள். ஒருத்தி பெண்ணைப் பெறுகிறாள். மற்றொருத்தி யோ ஆமை போன்ற மகனைப் பெற்றெடுக்கிறாள். அதனால் பின்னர் பெண்பெற்றவள் ஆமைக்குமரனுக்குப் பெண் கொடுக்க மறுக்கிறாள். ஆமைக் குமரனோ பெருமானைப் பூஜிக்கிறான்.ஆமை உரு நீங்கிக் குறித்த பெண்ணை மணக் கிறான். இந்த மணத்தையும் முடித்துவைத்த காரணத் தால் இங்குமே மணக்கோலத்தில் எழுந்தருளி விடுகிறார். இக்கோயிலிலுமே மணக்கோலநாதர் செப்புப்படிமம் அழகு வாய்ந்தது.இங்கு நல்ல செப்புச்சிலைகள் பல இருக்கின்றன. நடராஜர் இருக்கிறார். வீரசக்தி அம்மனும் இருக்கிறாள் தன் தோழியருடன். இந்தச் சொன்னவாறு அறிவார் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதோடு, சொல்லாத சொல்லையும் அல்லவா காப்பாற்றுகிறார். தான்தான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற நறுஞ்சாந்து இளமுலையைக் கல்யாணம் செய்து கொள்கிறார். அத்துடன் வேறு இரண்டு திருமணங்களையும் நடத்தி வைத்து மகிழ்கிறார். ஆதலால் திருமணம் விரும்பும் வாலிபர் – பெண்கள் எல்லாம் இத்தலங்களுக்குச் செல்லலாம். அதன்பயனாக விரைவிலேயே திருமணம் நடக்க அருள் பெறலாம். ஆம்! சொன்னவாறு அறிவார்தான் ஒரு 'மாட்ரிமோனியல் பீரோ' வே நடத்துகிறவர் ஆயிற்றே!

# 27

# கங்கை கொண்ட சோழீச்சுரர்

சோழவள நாட்டிலே கொள்ளிடத்திலிருந்து பிரியும் மண்ணியாற்றின் கரையிலே சேய்ஞலூர் என்று ஒரு சிற்றூர். சேயாம் குமரக் கடவுள் தாம் விரும்பி உறைவதற்கு நல்லஊர் என்று தேர்ந்து எடுக்கப்பட்ட தலம் அது. சேய் நல் ஊர்தான் சேய்ஞலூர் என்று பின்னால் பெயர் பெற்றிருக்கிறது. குமரனாம் சேயை மாத்திரம் அல்ல, இன்னுமொரு மகனையுமே இறைவன் பெற்றிருக்கிறான் இத்தலத்திலே. அந்தக் கதை இதுதான்: எச்சத்தன் என்ற அந்தணனுக்கு விசாரருமன் பிறக்கிறான்; வளர்கிறான். பசுக்களை மேய்ப்பது அந்தணரது தொழில் அல்ல என்றாலும் விசாரருமனுக்குப் பசுநிரை களை மேய்ப்பதிலே, அவற்றைப் பரிபாலிப்பதிலே அலாதிப் பிரியம். பசுக்களும் விசாரருமனிடம் மிக்க அன்போடு பழகுகின்றன. விசாரருமன் ஆற்றங்கரையிலே மணலால் சிவலிங்கம் ஒன்று அமைத்துப் பூசை செய்கிறான். பசுக்களோ அச்சிவலிங்க வழிபாட்டுக்குத் துணை செய்ய, தாமாகவே பால் சொரிகின்றன. சிவபூசையும் நாளுக்கு நாள் ஓங்கி வளர்கின்றது. யாரோ ஒருவன் இத்தனை விபரத்தையும் எச்சத்தனிடம் கூறுகின்றான். உண்மை அறிய எச்சத்தன் வருகிறான்; நடப்பதை அறிகிறான். பூசை நடக்கும்

இடத்துக்கு வந்து விசாரசருமனை அடிக்கிறான்; அங்குள்ள பால் குடங்களைக் காலினால் இடறுகிறான். விசாரசருமன் கோபங்கொண்டு தன் பக்கலில் உள்ள கோலை எடுக்க, அது மழுவாக மாற, அந்த மழுவினால் தந்தையாம் எச்சத்தன் காலையே வெட்டுகிறான். வெட்டுண்ட காலுடன் எச்சத்தன் கீழே விழுந்து மடிகிறான். சிவபூசைக்கு இடையூறு செய்தவனைத் தந்தை என்றும் பாராமல் வெட்டி வீழ்த்திய விசாரருமனுக்கு இறைவன் ரிஷபாரூடனாகக் காட்சி தருகிறான். தந்தையற்ற அத்தனையனைத் தன் மகனாகவே ஏற்றுக் கொள்கிறான். இத்துடன் தான் உண்ட பரிகலம், உடுக்கும் உடை, சூடும் மாலை, அணிகள் முதலியவற்றைக் கொடுத்துத் திருத்தொண்டர்களுக் கெல்லாம் தலைவனாக்கி சண்டீசப்பதவியையும் அருளுகிறான். தன் சடை முடியிலிருந்த கொன்றை மாலையையே எடுத்துத் தன் மகனாம் சண்டீசனுக்குச் சூட்டுகின்றான் இறைவன். இதனைப் பாடுகிறார் சேக்கிழார்,

அண்டர் பிரானும், தொண்டர் தமக்கு
அதிபன் ஆக்கி,'அனைத்து நாம்
உண்டகலமும், உடுப்பனவும்
சூடுவனவும், உனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோம்'
என்று அங்கு அவர் பொன்தட முடிக்கு
துண்டமதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

என்பது சேக்கிழார் தரும் சொல்லோவியம். இச்சொல் லோவியத்தைக் கல்லோவியமாகக் காண சேய்ஞலூரில் உள்ள சத்தியகிரி ஈசுவரர் கோயிலுக்குப் போய்ப் பிரயோசனமில்லை. அதைக்காணும் ஆவல் உடையவர்கள் எல்லாம் சென்று காண வேண்டியது அந்தக்கங்கை கொண்ட சோழபுரத்துக்கே. அங்கேயே செல்கிறோம் நாம் இன்று.

கங்கை கொண்ட சோழபுரம், திருச்சிராப்பள்ளியில் உடையார்பாளையம் தாலுகாவில் இருக்கிறது. அரியலூர் ஸ்டேஷனில் இறங்கி ஜயங்கொண்ட சோழபுரம் சென்று பின்னும் செல்லவேண்டும். இப்பாதை முப்பது மைல் தொலைவுக்குமேல் இருக்கும். இதைவிட நல்லவழி கும்பகோணத்திலிருந்து கல்லணை என்னும் 'லோயர் அணைக்கட்டு' பதினாறு மைல் தொலைவில் இருக்கிறது. அங்கிருந்து சென்னை செல்லும் ரோட்டில் நான்கு மைல் போய், அங்கிருந்து ஜயங்கொண்ட சோழபுரம் கிளைச்சாலையில் திரும்பவேண்டும். திரும்பி ஒரு மைல் சென்றால் இக்கோயில் இருக்கும் இடம் வந்து சேரலாம். கொள்ளிடத்தில் கட்டியுள்ள லோயர்அணைக்கட்டைக் கடந்ததுமே கோயில் விமானம் தெரியும். நல்ல பொட்டல் காட்டில் கோயில் இருப்பதால், எந்த ரோட்டில் வந்தாலும் ஏழுஎட்டுமைல் தூரத்திலேயே கோயில் விமானத்தைக் காணலாம். இந்தக் கோயில் இருக்கும் ஊர் கங்கை கொண்ட சோழபுரம் என்றும், இக்கோயில் கங்கைகொண்ட சோழீச்சுரம் என்றும் பெயர் பெற்றிருக்கின்றன. இக்கோயிலையும் கட்டி, இந்த நகரத்தையும் நிர்மாணித்த ராஜேந்திரசோழனை, கங்கைகொண்ட சோழன் என்று சரித்திரம் கூறுகிறது. கோயில் வாயில் செல்வதற்கு முன்னமேயே, தலம் கோயில், அரசன் இவர்கள் வரலாற்றைக் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமே. தஞ்சையில் இருந்து அரசாண்டு, உலகம் புகழும் அந்தத் தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்த ராஜராஜனைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

அந்த ராஜராஜனின் மகனே ராஜேந்திரன். சேரர், பாண்டியர், பல்லவர், சாளுக்கியர் எல்லோரையும் வென்றதுடன் கடல் கடந்து சென்று ஈழநாட்டையும் மும்முடிச் சோழ மண்டலமாக்கி, இன்னும் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும் கைக்கொண்டவன் ராஜராஜன். அவன்

மகனான ராஜேந்திரனோ, வடநாட்டில் கங்கை வரை சென்று வெற்றிக்கொடி நாட்டியவன். கிழக்கே மலாயா வரை சென்று கடாரத்தையும் கைப்பற்றியவன். அதனாலே அவன் கங்கை கொண்டான் என்றும் கடாரம் கொண்டான் என்றும் பாராட்டப் பெற்றிருக்கிறான் சரித்திர ஆசிரியர்களால். தந்தை ஒரு கோயில் கட்டினான் என்றால் தனயனும் ஒரு கோயில் கட்ட முனைகிறான். அக்கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கும் பிருஹதீசுவரருக்குக் கங்கை யிலிருந்தே நீர் கொண்டுவந்து குடமுழுக்குச்செய்ய விழைகிறான். இப்பணியை நிறைவேற்றத் தன் படை வீரர்களை ஒரு மாதண்ட நாயகன் தலைமையில் அனுப்பி வைக்கிறான். அம்மாதண்ட நாயகனும் இடையில் உள்ள தெலுங்குநாடு, வேங்கி நாடு, தென்கோசலம், வங்காளம் முதலிய நாடுகளையும் வென்று பகையரசர் தலையிலேயே கங்கை நீர் நிரம்பிய குடங்களை ஏற்றிக்கொண்டு திரும்பியிருக்கிறான். வெற்றியோடு மீண்ட மாதண்ட நாயகனை கோதாவரிக் கரையில் சந்தித்து அழைத்து வருகிறான் ராஜேந்திரன். கங்கை கொண்ட வீர ராஜேந்திரன் கங்கை கொண்ட சோழன் என்று பெயர் பெறுகிறான். அவன் அமைத்த நகரம் கங்கை கொண்ட சோழபுரம் ஆகிறது. அங்கு அமைத்தகோயில் கங்கை கொண்ட சோழீச்சுரம் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கங்கை கொண்ட வெற்றியைக் கூறுகிறது அவனது மெய்க்கீர்த்தி ஒன்று.

தொடுகடல் சங்குகொடு அடல்மகி பாலனை
வெஞ்சமர் வளாகத்து அஞ்சுவித்து அருளி
ஒண்திறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்
நித்தில நெடுங்கடல் உத்தரலாடமும்
வெறிமலர் தீர்த்தத்து எறிபுனல் கங்கை
மாப்பொரு தண்டால் கொண்ட
கோப்பரகேசரி வர்மரான
உடையார் இராஜேந்திர சோழதேவர்

என்பதுதான் மெய்க்கீர்த்தி.

இனி கிழக்கு நோக்கியிருக்கும் கோயிலை நோக்கி நடக்கலாம். முதலிலே கோயில் வாயில் என்று ஒன்று இருக்காது. அங்கு கோபுரம் ஒன்றும் அழகு செய்யாது. என்றாலும் முன்னால் ஒரு வாயிலும் கோபுரமும் இருந்து இடிந்து விழுந்திருக்கவேண்டும் என்பது மட்டும் தெரியும். கொள்ளிடத்தில் அணைகட்டியபோது இங்குள்ள கற்களை எல்லாம் இடித்து எடுத்துப்போய் உபயோகித்துக் கொண்டனர் என்பதும் பிரசித்தம். (உத்திரமேரூரில் குடவோலைச் சாஸனமுள்ள கற்களையே பெயர்த்து எடுத்து இன்று மக்கள் வீடு கட்டுகிறார்கள் என்றால், அன்றிருந்த ஆங்கில சர்க்கார் அதிகாரிகள், இக்கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில் மதில்கற்களை அணைகட்டுவதற்கு உபயோகித்துக் கொண்டார்கள் என்பதில் வியப்பு என்ன?)இன்று இடிந்து கிடக்கும் மதில் சுவர் கிழமேல் 584 அடி. தென்வடல் 372 அடி.ஆனால் கங்கை கொண்ட சோழன் இதைவிட விஸ்தாரமாக ஆறு கோபுரங்களுடன் சுற்றாலைகள் எல்லாம் அமைத்தான் என்பர் அங்குள்ளவர்கள்.

அது எல்லாம் எவ்வளவு உண்மையோ? இன்றிருக்கின்ற கோயிலே பிரும்மாண்டமானதாக இருக்கிறது. வெளிப்பிரகாரத்தில் கல்லாலும் சுதையாலும் கட்டப்பட்டபிரும்மாண்டமான நந்தி ஒன்றும்,அதை ஒட்டிச்சிங்கமுகக் கிணறு ஒன்றும் இருக்கும். இந்தக் கோயில் பிராகாரத்தில் வலம் வருவதும் கொஞ்சம் கஷ்டம். உறுத்தும் கல்லுக்கும் அழுத்தும் நெருஞ்சி முள்ளுக்கும் 'ஜவாப்' சொல்லவேண்டியிருக்கும். இதையெல்லாம் பொருட்படுத்தாமல்தான் வலம் வரவேணும். தெற்குப் பிரகாரத்தில் இருநூறு அடி வந்ததும், அங்கு எழுந்திருக்கும் விமானத்தைப் பார்க்கலாம். விமானம் நூறு அடி சதுரத்தில் தரையிலிருந்து இருபது அடிவரை உயர்ந்து அடிப்பீடத்தின் மேல் கர்ப்பகிருஹத்தின் மேல் 170 அடி உயரம் எழுந்திருக்கிறது. பிரும்மாண்டமான அப்பீடத்தின் பேரில் எழுந்து நிற்பதால், தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தில்

உள்ள கம்பீர்யம் இல்லை. அங்குள்ள விமானம் 80அடி சதுர பீடத்தின் மேல் 216 அடி உயர்ந்திருக்கிறது. கங்கை கொண்டானுக்கோ தந்தையை விஞ்சவேண்டுமென்று ஆசை. ஆதலால் அடிப்பீடத்தை நூறு அடி சதுரமாக்கி அதற்கேற்ற உயரத்தில் – ஆம். சுமார் 300 அடி உயரத்தில் விமானத்தை உயர்த்திவிடவேண்டும் என்று எண்ணம். சிற்பிக்கோ, அடித்தளத்துக்கு ஏற்ற வகையில் விமானத்தை உயர்த்த முடியவில்லை. இதைப்பற்றி ரஸமான வரலாறு கூட ஒன்று உண்டு.

அதுஇதுதான்: போட்ட அஸ்திவாரத்திற்கு ஏற்றவாறு விமானம் எழுப்ப வகை அறியாத சிற்பி, திருவாரூர் சிற்பியினிடம் கேட்கச் செல்கிறான். திருவாரூர் சிற்பியோ, அகண்ட கமலாலயத்தை ஒட்டி அதில் ஊறிவரும் தண்ணீரை வடிக்க வழியறியாது, இந்தக் கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பியைத் தேடிவருகிறான். இருவரும் நடுவழியில் ஒரு சத்திரத்தில் சந்திக்கிறார்கள். 'வாளை மலிந்த ஊரில் ஊற்றுக்கண்ணை அடைப்பதா பிரமாதம் ?'' என்கிறான் கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பி. 'பஞ்சு பெருத்த இடத்தில் விமானத்தில் கல் ஏற்றுவது என்ன கஷ்டம்' என்கிறான் திருவாரூர் சிற்பி. இருவரும் ஊர் திரும்புகிறார்கள்.

இறைக்கும் நீரிலே வாளை மீன்களை விட, அவை சென்று ஊற்றுக் கண்களில் புகுந்து ஊற்றுக் கண்களை அடைத்துக்கொள்ள நீரை இறைத்து வேலையை முடிக்கிறான் திருவாரூர் சிற்பி. பஞ்சு என்னும் சாரக் கட்டைகளை அடுக்கி அதன்மேல் கற்களை ஏற்றி விமானம் அமைக்கிறான் கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பி. எவ்வளவுதான் சாரம் கட்டினாலும் 170 அடிக்குமேல் விமானம் உயரவில்லை. என்றாலும் ஒன்பது நிலைகளோடு உயர்ந்து உயர்ந்து, மேலுள்ள பகுதி சரிந்து சரிந்து உச்சியில் குவிந்து குவிந்து ஒற்றைக் கலசம் தாங்கி நிற்கிறது விமானம். கலசத்தின் உயரம் பன்னிரண்டு அடி. அதற்கேற்றவாறே

அகலமும். (இது எப்படித் தெரிந்தது என்று கேட்காதீர்கள். பல வருஷங்களுக்கு முன்பு இக்கோயில் கலசம் விழுந்திருக்கிறது. 1951-ம் வருஷம், தஞ்சை வெற்றிவேல் பிரஸ் அதிபர் திரு.பக்கிரிசாமி பிள்ளையின் முயற்சியால் கலசம் புதுப்பிக்கப்பட்டுத் தஞ்சையில் இருந்து ஒரு பெரிய லாரியில் எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது உடன் இருந்து காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இனி நான் சொல்வதை நம்புவீர்களல்லவா?) கருவறையைச் சுற்றிய கோஷ்டங்களில், நர்த்தன விநாயகர், நடராஜர், அர்த்தநாரி, கங்காதரர், பிக்ஷாடனர், லிங்கோத்பவர் எல்லாம் இருக்கிறார்கள். நாம் காணவந்தது இவர்களை அல்லவே.

ஆகவே விறுவிறுஎன்று நடந்து வடக்குப் பிராகாரம் வந்து அங்கிருந்து அர்த்த மண்டபம் செல்வதற்கு அமைத்திருக்கும் படிகளில் ஏறி மேற்கே திரும்பினால் நான் முன்சொன்ன சண்டீச அனுக்கிரக மூர்த்தியைக் காணலாம். நல்ல கம்பீரமான கற்சிலை. அன்னை பார்வதியுடன் அத்தன் அமர்ந்திருக்கிறார் ஒரு பீடத்தில். அவர் காலடியில் சண்டீசர் கூப்பிய கையுடன் இருக்கிறார். இறைவனோ கொன்றை மாலையை, சண்டீசர் தலையைச் சுற்றி அலங்கரிக்கிறார்.



சண்டீச அனுக்கிரஹமூர்த்தி

மாடத்தில் இருக்கும் இந்தச் சிற்ப வடிவத்தைச் சுற்றிய சுவர்களிலே, சண்டீசர் கதை முழுவதுமே, சின்னச் சின்னவடிவில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

அன்னையையும் அத்தனையும் செதுக்கியதில் காட்டிய அக்கறையைச் சண்டீசரைச் செதுக்குவதில் காட்டவில்லை சிற்பி. நான் ஊகிக்கும் காரணம் இதுதான். கங்கைகொண்ட சோழனாம் ராஜேந்திரனுக்கே இறைவன் முடிசூட்ட முனைகிறான் என்ற குப்தமாகக் காட்டவே சிற்பி இச்சண்டீசரனுக்கு கிரஹமூர்த்தியை உருவாக்கி யிருக்கிறான். சண்டீசனது முகத்தை ராஜேந்திரனது முகம் போலவே அமைத் திருக்கிறான். இதைக்கண்டு ராஜேந்திரன் உள்ளம் மகிழ்ச்சியுற்றாலும், வேண்டாத அலங்காரங்களை, அச்சிற்ப வடிவுக்குச் செய்யவேண்டாம் என்று கட்டளையிட்டுத் தன் பணிவைக் காட்டியிருக்கிறான். அதனால்தான் அரைக்குக்கீழேஉள்ள பாகம் செம்மையாகச் செதுக்கப்பட வில்லை என நினைக்கிறேன். இந்தச் சிற்ப வடிவம் கலை உலகிலே பிரசித்தம். இந்த ஒப்பற்ற சிலைக்கு எதிர்த்த சுவரிலே, ஞான சரஸ்வதி கொலுவீற்றிருக்கிறாள். 'ஒன்றே யென்னில் ஒன்றே யாம்' என்று நமக்கெல்லாம் ஞான உபதேசம் செய்யும் நிலையில் இருக்கிறாள். இவளது அழகை வர்ணித்தல் இயலாது. சென்று கண்டு மகிழுங்கள் என்றுமட்டும் சொல்லவிரும்புகிறேன்.

இனி அந்த வடக்கு வாயில் வழியாகவே கோயிலுள் நுழையலாம். அர்த்த மண்டபத்தில் இருந்துகொண்டு மேற்கே திரும்பினால் கருவறையில் உள்ள பெரு உடையாரை, கங்கைகொண்ட சோழீச்சுரரைக் காணலாம். சாதார்ணமாக லிங்கத் திருவுருவின் பரிவட்டங்களைப் பற்றிப் பேசும்போது மூன்று முழமும் ஒரு சுற்று (லிங்கத் திருவுருவைச்சுற்ற ) என்பார்கள். இங்கு அந்தப் பருப்பு எல்லாம் வேகாது. லிங்கத்திருவுருவைச் சுற்ற 15 முழம் வேணும்; ஆவுடையாரைச் சுற்றவோ ஐம்பத்துநாலு முழமே வேணும். 13அடி உயரத்தில் உயர்ந்திருக்கும் பெருஉடையார்,

பெரிய திருஉருஉடையவரே. அபிஷேகம் முதலியன் செய்யப் பெரிய கிராதி கட்டவேண்டியிருக்கிறது. கருவறையில் வெளிச்சம் காணாது. நன்றாகத் தீப அலங்காரம் செய்தால் கோலாகலமான காட்சியாக இருக்கும். இந்தப் பெருஉடையாரை, சோழீச்சுரத்தானை வணங்கிய பின்பே,

**அன்னமாய் விசும்பு பறந்து**
**அயன்தேட, அங்ஙனே**
**பெரியநீ! சிறிய**
**என்னையாள விரும்பி**
**என்மனம் புகுந்த எளிமையை**
**என்றும் நான் மறக்கேன்.**

என்று திருவிசைப்பா பாடியிருக்கிறார் கருவூர்த்தேவர். நாம் அந்த இசைப்பாவைப் பாடிக்கொண்டே கிழக்கு நோக்கி நடந்து மகா மண்டபத்தைக் கடக்கலாம். பெரியமண்டபம்; அதற்கேற்ற தூண்கள். கலை அழகு ஒன்றும் இல்லை. செப்புப் படிமங்கள் பல இருட்டில் புதைந்து கிடக்கும். அவற்றையெல்லாம் தேடிப்பிடித்தே காணவேண்டும். இருட்டோடு இருட்டாக ஈசான மூலையிலே ஒரு சிலை. அதனை நவக்கிரஹம் என்பர். ஒரு சதுரமான கல். அதன் எட்டு மூலைகளிலும் எட்டுக் கிரஹங்கள். மேல் தளத்தில் ஒரு மலர்ந்த பதுமம். பக்கத்தில் ஏழு குதிரைகள் இழுக்கும் பாவனை. அதனை ஓட்டும் அருணன் என்றெல்லாம் அமைந்திருக்கும். நவக்கிரஹ அமைப்பில் இது ஒரு புதிய முறை. தவறாமல் பார்க்கவேண்டிய தொன்று. கோயிலுள் பார்க்க வேண்டியவை இவைகளே.

இனி வெளிச்சுற்றுக் கோயில்களையும் பார்க்கலாம். விநாயகர், மஹிஷமர்த்தினி, சண்டீசர், அம்பிகை சந்நிதிகள் எல்லாம் தனித்தனி. இங்குள்ள விநாயகர் கணக்க விநாயகர் என்ற பெயருடன் விளங்குகிறார். இந்தப் பெரிய கோயில கட்டும் பொறுப்பை ஓர் அமைச்சரிடம் ராஜேந்திர சோழன்

ஒப்படைத்திருக்கிறான். அமைச்சரோ நிறைந்த சிவபக்தி உடையவர். பணத்தை வாரிவாரித் திருப்பணிவேலையை நடத்துகிறார். அவருக்கோ கணக்கு என்று ஒன்று எழுதி வைத்துக்கொள்ள நேரமில்லை. அரசரிடம் யாரோ கோள் மூட்டியிருக்கிறார்கள். அரசரும் அமைச்சரிடம் தாம் கணக்குகளைப் பார்வையிட விரும்புவதாகச் சொல்கிறார். அமைச்சர் என்ன பண்ணுவர்? ஆனால் அமைச்சரையும் முந்திக்கொண்டு விநாயகர் கணக்குப் பிள்ளைவடிவத்தில் அரசர் முன் ஆஜராகிறார். கணக்கை வாசிக்கிறார். 'எத்து நூல் எண்ணாயிரம் பொன்' என்று கணக்கைப் படிக்க ஆரம்பித்ததுமே 'போதும் போதும்' என்று நிறுத்தி விடுகிறார் அரசர். கற்களை வெட்டிச் செதுக்குமுன் கயிற்றை சுண்ணாம்பில் தோய்த்துக் குறிசெய்து கொள்வான் சிற்பி. அந்தக் கயிற்றுக்கே எத்துநூல் என்று பெயர். எத்துநூலே எண்ணாயிரம் பொன் என்றால் மற்றச் செலவுகளை எப்படிக் கணக்கிடுவது. இப்படி ஒருகணக்குப் பிள்ளையாக வந்த விநாயகரே கணக்கவிநாயகராக அந்தக் கோயிலில் தங்கிவிடுகிறார்.

இந்தக் கங்கை கொண்ட சோழீச்சுரத்தின் பெருமையையும், விசாலமான பரப்பையும் வெளிப்படுத்தும் சின்னங்கள் பல அங்கே இருக்கின்றன. இங்கே பழைய அரண்மனைகள் இருந்தஇடம் இன்று மாளிகை மேடாய் விளங்குகிறது. அங்கே மேடு இருக்கிறது, மாளிகை இல்லை. இன்னும் தொட்டி குளம், பள்ளிவாடை, செங்கல்வேடு, குயவன்பேட்டை, யுத்தபள்ளம் என்றெல்லாம் பல பகுதிகள் அங்கு அன்று வாழ்ந்த மக்கள் தொகுதிகளைப் பற்றிக் கதை கதையாகக் கூறுகின்றன. எல்லாவற்றையும் தூக்கி அடிக்கும் சோழகங்கம் என்ற பெரிய ஏரி ஒன்றும் இருந்திருக்கிறது. அந்த ஏரியின் கரை 16மைல். அதற்கு வந்த கால்வாயின் நீளம் 60மைல். எல்லாம் இடிந்து இன்று கரைகள் மட்டுமே காணப்படுகின்றன.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அனந்தம். பாண்டி மன்னன் கோமாறவர்மன் இரண்டாம் குலசேகரதேவன், விக்கிரம பாண்டியன், கோநேரின்மை கொண்டான் சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டுக்கள் பிராகாரச் சுவர்களில் காணப்படுகின்றன. விஜயநகர மன்னர்கள் கல்வெட்டும் இரண்டு உண்டு. மற்றவை எல்லாம் சோழர் காலத்தியவையே. குலோத்துங்கன், வீரராஜேந்திரன், திரிபுவனச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் கல்வெட்டுக்கள் பிரசித்தமானவை. கோயில் சிதைந்தது போலவே கல்வெட்டுக்களும் சிதைந்திருக்கின்றன. என்றாலும் அவை சொல்லும் வரலாறுகளோ எண்ணிறந்தவை. இக்கோயிலைவிட்டு இக்கோயில் உள்ள ஊரைவிட்டு வெளியேறும்போது அந்தக் கங்கை கொண்ட சோழனவன் கனவில் உருவான கங்கையணி வேணியனின் கலைக்கோயில் பொலிவு இழந்து நிற்பது நம் நெஞ்சை உறுத்தாமல் போகாது.

# 28

# திருப்பனந்தாள் சடையப்பர்

திருநெல்வேலி மாவட்டத்திலே சில ஊர்களின் பெயர்கள் விசித்திரமானவை. தூத்துக்குடியை அடுத்து ஒரு 'டூவிபுரம்'. பாளையங்கோட்டைப் பக்கம் ஒரு 'பர்கிட் மாநகரம்'. ஸ்ரீ வைகுண்டத்துக்குக் கிழக்கே ஒரு 'பேட்மா நகரம்'. திருச்செந்தூர் செல்லும் வழியிலே ஒரு 'காம்பல்லபாத்'. என்றெல்லாம் சிறு ஊர்கள் சமீப காலத்தில் கிளம்பி இருக்கின்றன. என்ன இவையெல்லாம் 'டிம்பக்டூ'மாதிரியிருக்கிறதே என்று வியப்பு அடையாதீர்கள். கிராம மக்கள் வீடு மனைகள் இல்லாது திண்டாடுவது கண்டு, சர்க்கார் பணத்தைக் கொண்டு நிலங்கள் வாங்கி அங்கு மக்களைக் குடியேற்றிய சப்கலெக்டர்கள், கலெக்டர்கள் பெயரால் ஏற்பட்ட கிராமங்களே இவைகள். ஆம். திருநெல்வேலி மாவட்ட மக்கள் நன்றி மறவா உணர்ச்சியை எடுத்துக் காட்டவாவது இந்தச் சுவையற்ற பெயர்கள் உதவுகின்றனவே என்பதில் ஒரு திருப்தி எனக்கு.

இந்த நன்றி மறவாத உணர்ச்சி திருநெல்வேலிக் காரர்களுக்கு மட்டும் இருக்கவில்லை; அந்த இறைவனுக்குமே இருந்திருக்கிறது. பனைமரங்கள் நிறைந்த ஓர்ஊர் பனந்தாள் என்று பெயர் பெறுகிறது. அங்கு ஒரு கோயில். அக்கோயிலில் ஓர் இறைவன், செஞ்சடையப்பன் என்ற

பெயரோடு. அந்தச் செஞ்சடையப்பரை அசுரகுல மகளான தாடகை என்பவள் (ராமாயணத்தில் வரும் தாடகையல்ல) தினசரி பூமாலை புனைந்து ஏத்தி வணங்கி வருகிறாள். ஒரு நாள் மாலையுடன் இறைவன் திருமுன்பு வரும்போது அவள் தன் மேலாக்கு நழுவுகிறது. அவளுக்கோ இக்கட்டான நிலை. மேலாக்கைச் சரிசெய்ய மாலையைக் கீழே தரையில் வைக்கவேண்டும். மாலையைத் தரையில் வைக்கா விட்டால், மேலாக்கு நழுவிப் பலர் முன்னிலையில் மானம் இழக்கநேரிடும். இந்தநிலையில் இறைவன் அவள்தன் மானங்காக்க விரைகின்றான். அவள் எளிதாகத் தனக்கு மாலை அணிவிக்கும் வகையில் தலைதாழ்த்திக் கொடுக்கிறான். பக்தர்களது அன்புக்குக் கட்டுப்பட்டவன் அல்லவா! தலையை மாத்திரம்தானா தாழ்த்துவான்? உடலையே வளைத்துப் பக்தர்களது உள்ளத்துக்கு உவகையளிப்பவன் ஆயிற்றே.

இப்படித் தாடகையின் பக்தியை உலகறியச் செய்த அப்பெருமகன் செஞ்சடையப்பன் அன்று முதல்தான் கோயில் கொண்டிருக்கும் தலத்திற்கே அத்தாடகையின் பெயரைக் கொடுத்து, தாடகைஈச்சரம் என்றே அழைக்கிறான். அந்தப் பெயரே நிலைக்கிறது அக்கோயிலுக்கு. (திருநெல்வேலி சப்-கலெக்டர்களுக்கும் இச்செஞ்சடைவேதியனுக்கும் ஒரே ஒரு வித்தியாசம். அங்கே சப்-கலெக்டர்கள் தங்கள் தங்கள் பெயரையே விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். இங்கோ இறைவன் தன்பெயரைத் தியாகம் பண்ணிவிட்டு, தன் பக்தையின் பெயருக்குப் பிரதான்யம் கொடுத்து விடுகிறான். அவ்வளவுதான்) இந்தத் தாடகைஈச்சரம் என்னும் கோயில் இருக்கும் தலந்தான் திருப்பனந்தாள். அந்தப் பனந்தாள் என்னும் தலத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

இத் 'தண் பொழில் சூழ் பனந்தாள் தாடகை ஈச்சரம்' கும்பகோணத்துக்கு வடகிழக்கே பன்னிரண்டு மைல்

தொலைவில் இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து காரிலோ, பஸ்ஸிலோ ஏறிச்செல்லலாம். ரயிலில் செல்பவர்கள் ஆடுதுறையில் இறங்கிவிட வேண்டும். அங்கிருந்து ஆறு மைல் வண்டியிலே செல்லவேண்டும். பஸ்ஸுக்கெல்லாம் காத்து நின்றால் இடம் கிடைப்பது அரிது. மேலும் சாவதானமாக வண்டியில் சென்றால் ஆடுதுறை ஆபத்சகாயர் கோயிலுக்குச்செல்லலாம். பவளவல்லியாம் அம்மையை வணங்கலாம். அன்று சுக்கிரீவன் பூஜித்த தலம் ஆனதால் தென் குரங்காடு துறை எனப்பெயர்பெற்ற பதி இன்று ஆடுதுறை என்று குறுகி இருக்கிறது. 'நீலமாமணி நிறத்து அரக்கனை இருபது கரத்தொடும் ஒல்க, வாலினால் கட்டிய வாலியார் வழிபட்ட கோயில்' காவிரியின் வடகரையில் திருவையாற்றை அடுத்து வட குரங்காடுதுறை என்ற பெயரில் இருக்கிறது என்பதையும் இங்கேயே தெரிந்துகொள்ளலாம்.

இன்னும் வழியில் திருமங்கலக்குடி என்னும் பாடல்பெற்ற தலத்திற்கும், சூரியனார் கோயில் என்னும் பெயரில் சூரியனையே மூலமூர்த்தியாகக் கொண்ட கோயிலுக்குமே செல்லலாம். இதற்காகத்தான் வண்டிப் பயணம் நல்லது என்றேன். இல்லை, இது வேகயுகம், விரைவிலேயே செல்ல வேண்டும் என்றால்நேரே திருப்பனந்தாளுக்கே செல்லுங்கள். இங்கு தலவிருட்சம் பனை. பனையைத் தல விருட்சமாகக் கொண்டு இன்னும் வட ஆற்காடு மாவட்டத்தில் காஞ்சிக்கு மேற்கேஎட்டு மைல் தூரத்தில் உள்ள வன்பார்த்தான் பனங்காட்டூர் மற்றொன்று திருவாரூக்கு வடகிழக்கே எட்டு மைல் தொலைவில் ஆண்டிப்பந்தல் பக்கம் உள்ள பனை ஊர். பனையூர் போவது எளிதே அல்ல. பனக்காட்டூரில் பனையைக் கோயிலுள் கண்டதாக ஞாபகமில்லை. திருப்பனந்தாள் சடையப்பர் கோயிலிலோ கீழைப் பிரகாரவாயில் பக்கம் இரண்டு பனைகள் ஓங்கி வளர்ந்து நிற்கின்றன.

இப்பனந்தாளில் கோயில் மேற்கு நோக்கி இருக்கிறது. செஞ்சடையப்பராம் இறைவன் மேற்குநோக்கி இருந்தால் அவருக்கு வட பக்கத்தில் தனிக் கோயிலில் மேற்கு நோக்கி இருக்கிறாள் அம்மையாம் பெரியநாயகி. கோயில் வாயிலில் நீண்டுயர்ந்த கோபுரம் அழகு செய்கிறது. உள்ளே நுழைந்ததும் பதினாறு கால் மண்டபம் இருக்கிறது. அம்மண்டபத்தின் கீழ்ப்புறம் நாககன்னிகை தீர்த்தம் இருக்கிறது. நாகலோக அரசனான வாசுகியின் மகள் சுமதியம்மை இத்தலத்துக்கு வந்து அம்மையை வணங்கித் தவமியற்றி அவள் விரும்பிய அரித்துவசன் என்னும் மன்னனை மணந்து கொண்டாள் என்பது வரலாறு. நாக கன்னிகை வந்து வழிபட்ட இடத்திலே இன்று ஒரு கிணறு இருக்கிறது. அவள் முத்தி பெற்ற தீர்த்தமே நாககன்னி தீர்த்தம். கோயிலின் திருமாளிகைப் பத்திகளை நல்ல மண்டபங்கள் அழகு செய்கின்றன.



திருப்பனந்தாள் தாடகை

இத்திருச் சுற்றின் கீழ்ப் பக்கத்திலே தலவிருட்சமாம் பனைகளும் அதனை அடுத்துத்தாடகை வழிபட்ட

லிங்கமும் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றன. தாடகையின் மாலையை ஏற்று அருளிய அவசரத்தில், அவள் விரும்பிய வண்ணமே அவளது கைகள் பதினாறாகப் பெருக இறைவன் அருள் செய்திருக்கிறான். ஆம்! இரண்டே திருக்கரங்கள் இருந்ததனால் தானே ஆடை நெகிழ்வதைச் சரி செய்ய முடியவில்லை? கரங்கள் பதினாறு என்றால், எத்தனை மாலைகளை எப்படி எப்படி எல்லாம் சாற்றலாம்! அப்படிக் கைகள் வளர்ந்து பூஜை செய்யும் தாடகையின் சிலை ஒன்று மகாமண்டபத்தில் தென்மேற்கு மூலையில், சுவரில் உப்புச உருவில் இருக்கிறது.

இனி கோயிலுள் நுழைந்து செஞ்சடைஅப்பரை வணங்கலாம். அப்படி அங்கு போனதும் ஒரு கேள்வி எழும். 'தாடகைக்காகத் தலை தாழ்த்திய தலைவன், இப்போது தலைநிமிர்ந்து நிற்கிறாரே, இவர் எப்போது தாழ்த்திய தலையை நிமிர்த்தினார்?' என்று கேட்கத் தோன்றும். அதை அறிய சேக்கிழாரது பெரிய புராணத்தைப் புரட்டவேண்டும். குங்கிலியக்கலயர் வரலாற்றைப் படிக்கவேண்டும். வரலாறு இதுதான்: கலயர் திருக்கடவூரிலே அந்தணர் குலத்திலே பிறந்தவர். இறைவனது சந்நிதியில் இடையறாது குங்கிலிய தூபம் இடும் பணிசெய்து வந்ததால் குங்கிலியக் கலயர் எனப் பெயர் பெறுகிறார். வீட்டிலோ வறுமை. உணவுக்கு வழியில்லை. மனைவி தன் திருமாங்கல்யத்தைக் கொடுத்து உணவுப் பொருள் வாங்கிவரச் சொன்னால் அதைக் கொண்டு குங்கிலியப் பொதி ஒன்றை வாங்கித் தம் திருப்பணியை நடத்துகிறார். இந்தப் பக்தருக்குச் செல்வம் பெருக இறைவனும் அருள் புரிகிறார். இவர் பனந்தாளில் இறைவன் தாடகைக்காகத் தலை தாழ்த்தியதையும், பின்னர் அரசன் முதலாயினோர் எவ்வளவோ முயன்றும் தலை நிமிர வில்லை என்பதையும் அறிகிறார். இறைவன் என்ன இலேசுப்பட்டவனா? அவ்வளவு எளிதில் தாழ்த்திய தலையை நிமிர்த்திவிடுவானா? அவன் குங்கிலியக் கலயர்

வருகைக்காக அல்லவா காத்திருக்கிறான்! கலயர் வருகிறார், இறைவன் சடைமுடிக்கும், தம் கழுத்துக்கும் கயிறு கட்டி இழுக்கிறார். இறைவனும் நிமிர்கிறான். கட்டியிழுத்த கயிற்றின் வலியினாலா நிமிர்கிறான். அன்பெனும் பாசக்கயிற்றின் வலியினால் அல்லவா நிமிர்கிறான்.

தலை தாழ்த்திய தலைவன் நிமிர்வதற்குக் காரணமாயிருந்தவர் கலயர். இப்படித் தாழ்த்தியும் நிமிர்த்தியும் நின்ற காரணத்தால் இறைவன் ஆட்டம் கொடுக்கிறான். அதற்கென அளவெடுத்துப் புதிய ஆவுடையார் ஒன்றைச் செய்து கொண்டு வருகிறார். கலயர் தம் பணி சிறக்கவில்லையே என்று வருந்துகிறார்; வாடி நைகிறார்; அழுதுதொழுகிறார். இறைவனும் இரங்கித்தன் உருவை எக்கிக் கொண்டு கலயர் அமைத்த ஆவுடையாரில் பொருந்தி நிற்கிறார். (இந்தச் செஞ்சடையப்பர் நல்ல யோகாசனப் பயிற்சி பெற்றவர் போலும்! சர்வாங்க ஆசனம், நௌலி, உட்டியாணா எல்லாம் போடத் தெரிந்திருக்கிறார். தலையைச் சாய்க்கிறார், உடலை வளைக்கிறார், தலையை நிமிர்க்கிறார், வயிற்றை எக்குகிறார்,



குங்கிலியக்கலயர் குடும்பம்

இன்னம் என்ன எல்லாமோ செய்கிறார். யோகாசனம் பயில்பவர்கள் இவரையே குருவாக அடையலாம் போலும்.) கலயர் புகழ் வளர்கிறது. இவரது மகன் இறந்து பட, அந்த உடலைத் தகனம் செய்ய எடுத்துப் போக, வழியில் உள்ள பிள்ளையார் வழி மறித்து நாக கன்னிகைத் தீர்த்தத்தில் தீர்த்தமாட்டி வீட்டுக்கு எடுத்துச் செல்லச் சொல்கிறார். வீடு சென்ற மகன் உயிர் பெற்று எழுகிறான். இப்படி வழி மறித்த விநாயகரே இன்று திருப்பனந்தாளிலே வாயு மூலையிலே பிணம் மீட்ட விநாயர் என்ற பெயரோடு வதிகிறார். இத்தனை விவரங்களையும்,

நினைவரிய தாடகைக்கு
அருள் மேனி சாய்த்தவன்,
நிமிராமல் மன்னனுக்கு

நிறை கலையனார்க்கு
முன்போல் நிமிர்ந்தவன்,
நிறை கலையனார் அளித்த

தனயன் உயிர் போனபின்
மீட்ட நாயகன்

என்று சிதம்பர முனிவர் அயிராவதப் பிள்ளையின் பிள்ளைத் தமிழில் பாடுகிறார்.

செஞ்சடையப்பர், பெரியநாயகி, தாடகை, கலயர் எல்லோரையும் அறிமுகம் செய்து கொண்டபின் சுற்றுக் கோயில்களுக்கும் செல்லலாம். ஆலயத்துக்குத் தென் மேற்கு மூலையில் உள்ள ஊருடையப்பர் கோயிலிலும் சென்று வணங்கலாம். பிரமன் ஐராவதம் முதலியோர் வழிபட்டது என்பர். இன்னும் இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்றவர்கள் அனந்தம் என்று தலவரலாறு கூறும். இந்தச் செஞ்சடை அப்பர் கோயிலுக்குச் சம்பந்தர் வந்திருக்கிறார், ஒரு பதிகம் பாடியிருக்கிறார்.

விடை உயர் வெல் கொடியான், அடி
விண்ணொடு மண்ணும் எல்லாம்

புடைபட ஆடவல்லான், மிகு
பூதம் ஆர் பல் படையான்,
தொடைநவில் கொன்றையொடு
வன்னி துன் எருக்கும் அணிந்த
சடையவன் ஊர், பனந்தாள்
திருத் தாடகை ஈச்சரமே.

என்பது சம்பந்தர்தேவாரம். அக்கோயிலைக் கட்டியவர் திருப்பனந்தாள் நக்கன் தரணி என்று ஒரு கல்வெட்டு கூறும். இக்கோயில் அம்மன் சந்நிதியைக் கட்டியவர்கள் வெண்கூறு உடையார், அன்பர்க்கரசு, மருதமாணிக்க வில்லவராயர் என்று இறைவன் கோயிலில் மகா மண்டபத்துத் தென்பால் உள் ள கல்வெட்டுத் தெரிவிக்கும். கோயிலைச் சோழ மன்னர்கள் எப்படிப் புரந்து வந்தார்கள் என்பதையெல்லாம் தெரிய ஒரு பெரிய கல்வெட்டு ஆராய்ச்சியே நடத்த வேணும். இன்னும் 1447ல் விஜயநகர வேந்தனாயிருந்த தேவராய மகாராயரின் மகனாகிய மல்லிகார்ச்சுன தேவன் இக்கோயிலின் வைகாசித் திருவிழாவுக்கு நிலம் அளித்த செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகிறது. இவைகளை விரிக்கில் பெருகும். இன்று இந்தக்கோயில் இருப்பது தருமபுரம் ஆதீனத்தின் கீழ். நிர்வாகம் சிறப்பாக நடக்கிறதுஎன்று சொல்லவா வேண்டும்?

அன்று இந்தத் திருப்பனந்தாளில் ஒரு பட்டன் இருந்திருக்கிறான். வரையாது கொடுக்கும் வள்ளன்மை உடையவன் அவன். அவனது கொடைத்திறனைக் காளமேகப் புலவர் பாடியிருக்கிறார்.

விண்ணீரும் வற்றிப் புவிநீரும்
வற்றி, விரும்பி அழக்
கண்ணீரும் வற்றிப் புலவோர்
தவிக்கின்ற காலத்திலே
உண்ணீர் உண்ணீர்' என்று உபசாரம்
பேசி, உண்மையுடன்

தண்ணீரும் சோறும் தருவான்
திருப்பனந்தாள் பட்டனே.

என்பது பாட்டு. இந்தப் பட்டனைப்பற்றி நாம் கேட்பதெல்லாம் கர்ண பரம்பரையில்தான். ஆனால் இன்று 'ரிக்கார்டு' பூர்வமாகத் தானங்கள் செய்யும் ஓர் அடிகளாரை அங்கு பார்க்கிறோம்நாம். திருப்பனந்தாள் மடாதிபதியைத் தான் குறிப்பிடுகிறேன். இன்று மடாதிபதியாக இருப்பவர்கள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள். சென்ற பதினாறு வருஷஅருளாட்சியில் அவர்கள் செய்துள்ள தருமங்கள் எண்ணில் அடங்கா. திருமுறை வளர்ச்சிக்கு, கல்வி அபிவிருத்திக்கு, அன்ன தானத்துக்கு, வைத்தியத்துக்கு இன்னும் என்ன என்ன காரியங்களுக்கு எல்லாமோ மொத்தம் 290 தருமங்களுக்கென ரூ.59,70,745 வரை வழங்கியிருக்கிறார்கள். இந்தக் கணக்கு சரியானது அல்ல. இவ்வளவும் 1960 மார்ச்சு மாதம் முடியும்வரைதான். அதற்குப்பின் தான் பல வருடங்கள் கழிந்துவிட்டனவே. இன்னும் எத்தனை லக்ஷம் இந்த இடைக்காலத்தில் கொடுத்திருக்கிறார்களோ நான் அறியேன். பிறர்க்கு உதவும் தருமங்கள் செய்யாத நாளெல்லாம் பிறவா நாள் என்று கருதுபவர்கள் ஆயிற்றே அவர்கள். அவர்களது அறங்கள் ஓங்க, பணி சிறக்க எம்பெருமான் செஞ்சடையப்பனை இறைஞ்சுகின்றேன். ஒரேயொரு விஷயம். பணம் படைத்த மற்றவர்கள் எல்லாம் பணத்தை இறுக்கி முடிந்து வைத்துக்கொண்டிருக்கும் போது இந்த மடாதிபதி மட்டும் இப்படி வாரி வழங்குவதன் ரகசியம் என்ன என்று பல தமிழ் அன்பர்கள் எண்ணுகிறார்கள் என்பது வாஸ்தவம்தான். 'இற்றைச் செய்தது மறுமைக்கு ஆகுமா?' எண்ணுபவர்கள்தான் மற்றவர்கள். அருள்நந்தி அடிகளோ இற்றைச் செய்வது இற்றைக்கே ஆகட்டும் என்ற திடமான கொள்கையுடையவர் என்று தெரிகிறது. அதில் பெறுகின்ற ஆத்ம திருப்திக்குமேல் வேறு திருப்தி உண்டா?

# 29

## இடைமருது ஈசனார்

ஒரு கவிஞன். கிராமத்தில் வாழ்கிறான். பட்டண நாகரிகம் எல்லாம் அறியாதவன். அவன் ஒருநாள் மாலை வேளையில் மதுரைத் திருநகருக்கே வருகிறான். தெரு வீதிகளையெல்லாம் சுற்றிச் சுற்றிக் கீழக்கோபுரவாயிலுக்கே வந்து விடுகிறான். அந்தச் சமயத்தில் ஒரு கணிகை, பேரழகு வாய்ந்தவள் அங்கு வருகிறாள். அழகை ஆராதனை பண்ணும் கவிஞன் ஆயிற்றே, ஆதலால் அவள் அழகைக் கண்டு மெய் மறக்கிறான்; அவள் பின்னாலேயே நடக்கிறான்; அவளை அணுகி அவள் வீட்டின் விலாசம் கேட்கிறான். இவனது நிலை கண்டு புன்முறுவல் பூத்தாலும், 'யாரோ ஒரு பட்டிக்காட்டுப் பைத்தியம் இது' என்றுதான் எண்ணுகிறாள் அவள். இதற்கு வீடு இருக்கும் இடம் சொல்வானேன் என்று கருதுகிறாள். 'இங்கே, இக்கோபுர வாயிலிலேயே நில்லும்; கோயிலில் இருந்து திரும்பும் போது நானே கூட்டிச் செல்கிறேன்' என்று சொல்லிவிட்டுக் கோயிலுக்குள் போகிறாள். போனவள் கீழக் கோபுர வாயில் வழியாகத் திரும்பாமல் தெற்குக் கோபுர வாயில் வழியாகவே வீட்டுக்குப் போய்விடுகிறாள். பட்டிக்காட்டுக் கவிஞன் காத்து நிற்கிறான், நிற்கிறான் பலமணிநேரம். தம் உள்ளம் கொள்ளை கொண்டவள் வராதது கண்டு, கோயிலிலிருந்து திரும்புவர்களிடத்து, அந்தக் கணிகையின்

அங்க அடையாளங்களைச் சொல்லி, 'அவள் கோயிலினுள் இருக்கிறாளா?' என்று கேட்கிறான். அவர்களோ, 'இல்லையே' என்கிறார்கள். பின்னர் அவர்கள் 'சரி' அந்தப் பெண்ணின் பெயர் என்ன? என்று கேட்டால், 'தெரியாதே' எனக் கையை விரிக்கிறான். இப்படியெல்லாம் பலமணிநேரம் நின்ற கவிஞனின் ஆதங்கம் எல்லாம் ஒரு பாட்டாக வருகிறது. பாட்டு இதுதான்:

**'இல்' என்பார் தாம் அவரை,**
**யாம் அவர்தம் பேர் அறியோம்;**
**பல் என்று செவ்வாம்பல்**
**முல்லையையும் பாரித்து,**
**'கொல்' என்று காமனையும்**
**கண்காட்டி, கோபுரக்கீழ்**
**'நில்' என்று போனார் என்**
**நெஞ்சை விட்டுப் போகாரே!**

பட்டிக்காட்டுக் கவிஞன் பாட்டில், 'கோபுரக்கீழ் நில்' என்று நிறுத்திவைத்துவிட்டு, கோயிலுள் சென்று மறைந்த கணிகை, அவள் வரவுக்காக ஏங்கி நிற்கின்ற கவிஞன் எல்லோரையுமே பார்க்கிறோம். ஆம்! இந்தப்பாட்டைப் பாடியவன் கவிச்சக்கரவர்த்தி கம்பன்தான். பட்டிக்காட்டுக் கவிஞன் இதயதாபத்தை நன்கு புரிந்து கொண்டல்லவா பாடியிருக்கிறான். இப்படித் தாபத்தோடு நிற்கிற கவிஞனைப்போல் சோழப் பிரமஹத்தி ஒரு கோயில் வாயிலில் காத்துக் கிடக்கிறது எத்தனையோ வருஷங்களாக. அது காத்துக்கிடக்க நேர்ந்த கதைக்கு இரண்டு உருவம். ஒன்று வரகுணபாண்டியனைப்பற்றி. மற்றொன்று சோழன் அஞ்சத்துவசனைப்பற்றி. மதுரையிலிருந்து அரசாண்ட வரகுணபாண்டியன் குதிரை ஏறி வருகிறான். வழியில் அயர்ந்து கிடந்த பிராமணன் ஒருவன் மீது குதிரை இடற, அதனால் பிராமணன் இறக்கிறான். இந்தத் தவறுக்காக,

வரகுணபாண்டியனைப் பிரமஹத்தி தோஷம் தொடருகிறது. அது காரணமாக எத்தனையோ தொல்லைகளுக்கு உள்ளாகிறான் பாண்டியன். இந்தப் பிரமஹத்தி தோஷம் எத்தனை பரிகாரம்பண்ணியும் நீங்கவில்லை. இறைஅருளில் நம்பிக்கை கொண்ட பாண்டிய மன்னன் திரு இடை மருதூர் வருகிறான். பிரமஹத்தியும் தொடர்கிறது. ஆனால் கோயில் கீழவாயிலில் நுழைந்து மகாமண்டபத்தைக் கடந்ததும், பிரமஹத்தியால் தொடர்ந்து செல்லமுடிய வில்லை. 'சரி உள்ளே சென்ற பாண்டியன் திரும்ப இப்படித்தானே வருவான்? வரும்போது அவனைத்தொடர்ந்து செல்லலாம்' என்று அக்கோயில் வாயிலிலேயே நின்றுவிடுகிறது. வரகுண பாண்டியனோ தோஷம் தன்னை விட்டு நீங்கிவிட்டது என்று அறிந்ததும், மகாலிங்கப் பெருமானை வணங்கி மேலக் கோபுரவாயில் வழியாகவே ஊர் திரும்பிவிடுகிறான். இந்தச் செய்தி பாண்டியன் பிரமஹத்தியைப்பற்றி. இதே முறையிலே சோழன் அஞ்சத்துவசனையும் பிரமஹத்தி தொடர்கிறது;அவனும் கோயிலுள் நுழைந்து இறைவனை வணங்கி மேலக் கோபுர வாயில் வழியாகத் திரும்பிவிடுகிறான்; சோழப் பிரமஹத்தி காத்தே கிடக்கிறது கீழ வாயிலில் என்றும்ஒரு வரலாறு.

எது எப்படியேனும் இருக்கட்டும், பிரமஹத்தி கீழவாயிலில் இடப்புறப் பொந்தில் இருப்பது (சிற்ப உருவில்தான்) இன்றும் கண்கூடு. அது காரணமாகவே அந்தக் கீழ வாசலில் நுழைபவர்கள் எல்லாம் இன்றும் வேறு வழியாகத்தான் வீடு திரும்புகிறார்கள். ஆம். கீழவாயில் வழியே திரும்பினால், நாம்தான் பாண்டியன் அல்லது சோழன் என்று' தொடர்ந்து விடக்கூடாதே என்று பயம். நம்மைப் பிரமஹத்திகள் தொடராது என்றாலும் வேறு எத்தனையோ ஹத்திகள், வறுமை, நோய் முதலியவை தொடரக் காத்துத்தானே கிடக்கின்றன. மகா லிங்கரை வணங்கிய பின்னும் அவை தொடரலாமா? அதற்காகவாவது நாம் கீழ வாயிலை விடுத்து வேறு வாயில்கள் வழியாக

வெளி வரவேண்டியதுதான். இப்படி, சென்ற வாசல் வழியாகத் திரும்பக் கூடாதென்ற திட்டத்தோடு இருக்கும் கோயில்தான், திருஇடை மருதூர் மகாலிங்கப் பெருமான் கோவில். அந்தத் திரு இடை மருதூருக்கே போகிறோம் நாம் இன்று.

திரு இடை மருதூர், தஞ்சைமாயூரம் ரயில் பாதையில் கும்பகோணத்துக்கு வடகிழக்கே ஆறுமைல் தூரத்தில் இருக்கிறது. ரயிலிலே போகலாம், காரிலே போகலாம், இல்லை பஸ்ஸிலும் போகலாம். ரயில்வேக்காரர்கள் திருவிடமருதூர் என்றே போர்டு போட்டிருக்கிறார்கள். ரயிலைவிட்டு இறங்கி இரண்டு பர்லாங்கு வடக்கு நோக்கி நடந்தால் தெற்கு வாயிலில் கொண்டு விடும். இன்னும் ஒரு பர்லாங்கு கிழக்கு நோக்கிநடந்து கீழக் கோபுர வாயில் வந்து, அங்குள்ள காருண்யாமிர்ததீர்த்தத்தில் நீராடிவிட்டு உள்ளே செல்லலாம். குடைவருவாயிலைக் கடந்ததும், திருவாவடுதுறை ஆதீனத்தார் கட்டளைப்படி மண்டபத்துத் தூண் ஒன்றில் கட்டிவைத்திருக்கும் பலகை ஒன்றைப் பார்க்கலாம். அதில் தலத்தை ரயில்வேக்காரர்களை விட 'அழகாகத்' திருவிடமருதூர் என்று எழுதி வைத்திருப்பார்கள். 'இந்துக்கள் அல்லாத பிற மதத்தினர் உள்ளே வரக்கூடாது' என்று எச்சரிக்கையும் செய் திருப்பார்கள். திரு இடை மருதூர் என்ற அழகான பெயர்தான் தமிழ் வளர்க்கும் ஆதீனத்தாரால் திருவிட மருதூர் என்று அழைக்கப்படுகிறது. இது கொஞ்சம் வருத்தத்தையே தருகிறது. (இந்த போர்டை எவ்வளவு விரைவில் அகற்றுகிறார்களோ, அவ்வளவுக்கு நல்லது.) இனி கோயிலில் சுதையால் அமைந்திருக்கும் அழகான நந்தியையும் முந்திக்கொண்டு படித்துறை விநாயகர் நமக்குக் காட்சி கொடுப்பார். வீரசோழன் ஆற்றங்கரைப் படித்துறையில் இருந்தவர் போலும் இவர். மருத மரங்கள் நிறைந்த சோலையின் நடுவே இறைவன் தோன்றி உரோமச

முனிவருக்கு ஜோதிர்லிங்கமாகக் காட்சி கொடுத்ததால், இடைமருதூர் என்று பெயர் பெற்றது என்பர். வீரசோழன் இங்குள்ள காடுகளை வெட்டி நிலத்தைப் பண்படுத்தி ஆலயத் திருப்பணி செய்த காரணத்தால் இதனை வீரசோழபுரம் என்றும் கூறுவர். வீரசோழன் பெயரால் ஓடும் காவிரியின் கிளை நதியும் இந்த ஊரை அடுத்தே ஓடுகிறது. இந்தத் தலம் பல தலங்களுக்கு நடுநாயகம். வலஞ்சுழியில் விநாயகர், சுவாமிமலையில் முருகன், ஆய்ப்பாடியில் சண்டீசர், சிதம்பரத்தில் நடராஜர், சீகாழியில் பைரவர், திருவாவடுதுறையில் நந்தி, சூரியனார் கோயிலில் நவக் கிரஹங்கள் என்றெல்லாம் சுற்றாலயங்கள் கொண்ட மகாலிங்கர் பெருமுலை நாயகியுடன் இங்கு கோயில் கொண் டிருக்கிறார். இத்தலத்தை மத்தியார்ஜுனம் என்றும் இங்குள்ள அம்பிகையைப் பிருஹத் சுந்தர குசாம்பிகை என்றும் நீட்டி முழக்கி அழைப்பார்கள் வடநூலார்.

இந்தக் கோயிலுக்கு மூன்று பிராகாரங்கள். முதல் பிராகாரம் அசுவமேதப் பிரதக்ஷனைப் பிரகாரம். இங்கு வலம் வருபவர் அசுவமேத யாகம் செய்த பலனைப் பெறுவர். அடுத்தது கொடுமுடிப்பிராகாரம். இங்கு வலம் வருபவர் திருக்கயிலையை வலம் வந்த பயன் பெறுவர். அடுத்தது பிரணவப் பிரகாரம். இதுவே கருவறையை ஒட்டியது. இங்கு வலம் வருபவர் மோக்ஷ சாம்ராஜ்யத்தையே பெறுவர். நாம், எல்லாப் பிரதக்ஷணத்தையும் சுற்றி எல்லா நலன்களையுமே பெற்றுவிடுவோமே. படித்துறை விநாயகர் அருள் பெற்று நந்தியையும் கடந்து அதன்பின்தான் உள் கோயிலுக்குச் செல்லவேண்டும். அந்த வாயிலின் வடபக்கத்திலே தான் சோழப் பிரம்மஹத்தி ஒரு பொந்தில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒரே சோக வடிவம்.நாம் பொந்தையோ,அதிலுள்ள பிரமஹத்தி சிலை வடிவையோ பார்க்கவேண்டாம். நாம் பார்க்கவேண்டிய பொந்து கர்ப்பக் கிருஹத்தில் அல்லவா இருக்கிறது. அதை மணிவாசகர்,

எந்தை எந்தாய் சுற்றம்
　　மற்றும் எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்து, என்னை
　　ஆண்டு கொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடை மருதில்
　　ஆனந்தத் தேன் இருந்த
பொந்தைப் பரவி நாம்
　　பூவல்லி கொய்யாமோ?

என்று அழகாகப் பாடுகிறாரே. ஆதலால் மேலேயே நடக்கலாம். அடுத்தப் பிரகாரத்தின் வடபக்கத்தில் தலவிருட்சமான மருதமரத்தையும், அங்கு இறைவன் திருமஞ்சனத்துக்குத் தண்ணீர் எடுக்கும் கிருஷ்ண கூபத்தையும் பார்க்கலாம். அதன்பின் அர்த்தமண்டபம் கடந்து, பிரணவப் பிரகாரம் வலம் வந்து மகாலிங்கரைக் கண்டு தொழலாம். பட்டுப் பட்டாடைகள் சுற்றி யிருப்பதோடு, நாகாபரணமும் அழகு செய்யும். சுடர் எறியும் விளக்குகள் ஒளி செய்யும். இவற்றுக்கிடையில் லிங்கத்திருவுருவமும் கொஞ்சம் தெரியும். அவரை வணங்கி எழுந்து, கீழவாயிலுக்கு வராமலேயே அப்படியே அம்பிகையின் சந்நிதிக்குச் சென்றுவிடலாம். கம்பீரமான கோலத்தில் நின்று கொண்டிருக்கும் பெருநலமாமுலை நாயகியைத் தொழுத பின்னர் அவளை வலம் வந்து வெளி வரலாம். அப்படி வந்தால் நாம் மூகாம்பிகை சந்நிதி வந்து சேருவோம். இங்கு இறைவி தவம் செய்யும் திருக் கோலத்தில் இருக்கிறாள். இம்மூகாம்பிகை வரசித்தி உடையவள். நீங்காத நோயும் இங்கு நீங்கும். இவளது சக்தி எல்லாம் பக்கத்தில் உள்ள மேரு வடிவில் உள்ள சக்கரத்தில் அமைந்துகிடக்கிறது. இத்தலத்தில் அகத்தியர்உமையை நோக்கித் தவம் செய்தார் என்றும், உமை தனித்து வந்து அகத்தியருக்குக் காட்சி கொடுத்தார் என்றும், பின்னர் உமையும் அகத்தியரும் செய்த தவத்துக்கு இரங்கிஇறைவன்

ஏகநாயகனாகக் காட்சி கொடுத்ததோடு இறைவியை வைகாசி உத்திரத்தில் திருமணம் செய்து கொண்டார் என்றும் புராண வரலாறு. இந்தஜூகாம்பிகை கோயில் விமானம் தமிழ் நாட்டுக் கோயில் விமானங்கள் போல் இராது. ஏதோ ஊசிக் கோபுரம் போல் இருக்கும்.

இத்தலத்தில் தைப்பூசத் திருவிழா சிறப்பானது. இக்கோயிலின் மேலக் கோபுரத்தைக் கட்டியவனும் மற்றும் பல திருப்பணிகள் செய்தவனுமான வீர சோழனே ஜோதிர் மகாலிங்கப்பெருமானுக்குப் பூச நீராட்டுதலையும் ஏற்படுத்தினான் என்பர். பூசத் தன்று ஏகநாயகர் காவிரியில் உள்ள கல்யாண தீர்த்தத்துக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தருளுவார். அன்று தேவர்கள் எல்லாம் வந்து விழாவில் கலந்து கொள்கிறார்கள் என்று ஒரு நம்பிக்கை. 'பூசம் புகுந்து ஆடப்பொலிந்து அழகான ஈசன் உறைகின்ற இடைமருது ஈதோ' என்றுதானே சம்பந்தர் அவரது பாடலில் இத்தலத்தினைச் சுட்டிக்காட்டுகிறார். ஆதலால் வசதி செய்து கொள்ளக் கூடியவர்கள், பூசநீராடி, காசிசென்று கங்கையில் நீராடிய பலனையெல்லாம் பெறுங்கள் என்பேன் நான்.

இத்தலத்தில் பட்டினத்தாரும் அவரது சீடர் பத்திரகிரியாரும் இருந்ததாக வரலாறு. கீழக்கோபுர வாயிலில் பட்டினத்தாரும் மேலக்கோபுர வாயிலில் பத்திரகிரியாரும் சிலை உருவில் இருக்கிறார்கள். இத்தலத்துக்குச் சம்பந்தர், அப்பர், சுந்தரர் எல்லோருமே வந்து பாடியிருக்கிறார்கள்.

கனியினும், கட்டிபட்ட கரும்பினும்,
பனிமலர்க் குழல்பாவை நல்லாரினும்,
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்,
இனியன் தன் அடைந்தார்க்கு இடை மருதன்.

என்ற அற்புத அனுபவத்தைப் பெற்றவர் அப்பர். இன்னும்இத்தலத்தைக் கருவூர்த்தேவர் திருவிசைப்

பாவிலும், பட்டினத்தார் மும்மணிக் கோவையிலும் பாடியிருக்கிறார்கள். இன்னும் அந்தாதி, உலா, கலம்பகங்கள் எல்லாம் உண்டு. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளும் அனந்தம். சுமார் 150 கல்வெட்டுகளுக்கு மேல் உண்டு. மிகப் பழைய கல்வெட்டுகள் மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மனுடையதாகும். 1200 ஆண்டுகளுக்கு முன்னமேயே சிவன் திருக்கோயில் உள்ளிடத்தைப் புதுப்பித்திருக்கிறான் இவன். இன்னும் இங்கு ஒரு சண்பகத் தோட்டம் அமைத்து அதனைத் திருவேங்கடப் பிச்சியான் தன் மேற்பார்வையில் வைத்திருந்தான் என்றும் கூறுகின்றது. இங்கு ஒரு நாடக சாலையமைத்து அதில் பண்ணும், பரதமும் நடந்திருக்கின்றன. அந்த நாடகசாலையே இன்று கல்யாண மண்டபமாக அமைந்திருக்கின்றது. பாடல்பாட, விளக்கெரிக்க எல்லாம் நிபந்தங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. இவற்றை விரிக்கில் பெருகும். இந்தக் கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் மேற்பார்வையில் இருக்கிறது. சமீபத்தில் நால்வர் மண்டபம் முதலிய திருப்பணிகள் செய்திருக்கிறார்கள் ஆதீனத்தார்.

திருவாவடுதுறை ஆதீனம் என்றதும், அன்று அங்கு ஆதீன கர்த்தர்களாக இருந்து தமிழ் வளர்த்த மகா சந்நிதானத்தின் பெருமைகள் எல்லாம் ஞாபகத்துக்கு வரும். ஆதலால் நேரமும் காலமும் உடையவர்கள் ஏழுஎட்டு மைல் வடகிழக்காக நடந்து அங்குள்ள மாசிலாமணி ஈசுவரர், ஒப்பிலா முலையாள் இருவரையும் தரிசித்து விட்டே திரும்பலாம். இங்கிருந்துதான் திருமூலர் திருமந்திரம் எழுதியிருக்கிறார். அவரது கோயில், அவர் தங்கியிருந்த அரசடி முதலியவற்றையும் வணங்கலாம். அத்தலத்தில் இறைவனை நந்தி பூஜித்தார் என்பது வரலாறு. கல்லால் சமைக்கப்பட்டிருக்கும் நந்தி பெரிய உரு. செப்புச் சிலை வடிவில் இருக்கும் நந்தியும் அழகானவர். இத்தலத்துக்கு

வந்த சம்பந்தர், தம் தகப்பனார் யாகம் செய்ய இறைவனிடம் பொன்வேண்டியிருக்கிறார். சம்பந்தரின் இனிய பாடலைக் கேட்டுக்கொண்டே இருந்த இறைவன் பொன் கொடுப்பதை மறந்திருக்கிறார். உடனே சம்பந்தர் 'இதுவோ எமை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல். அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே!' என்று கோபித்துக் கொண்டே புறப்பட்டிருக்கிறார். உடனே இறைவன் விழித்துக்கொண்டு பொற்கிழி கொடுத்திருக்கிறார். இப்படி எல்லாம் நாம் கோபித்துக் கொண்டு திரும்பவேண்டாம். நாம் வணங்கும்போது அந்த ஆவடுதுறை அப்பன் நம்மை 'அஞ்சல்' என்று அருள் பாலிப்பான். அப்படியேதான் சொல்கிறார். எப்போதும் பணத்துக்கே அடிபோடும் சுந்தரர்கூட.

# 30

# திரிபுவன் கம்பகரேசுரர்

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய புலவர் சேக்கிழார். செயற்கரிய தொண்டுகள் செய்த திருத்தொண்டர் சரிதையைப் பெரிய புராணமாக விரித்தவர். வரலாற்று முறையில் பலரது சரிதத்தை ஆய்ந்து ஆய்ந்து ஒரு பெரிய காவியத்தையே ஆக்கியிருக்கிறார் அவர். அவர் பெரிய புராணம் பாட நேர்ந்ததற்கு ஒரு கதை உண்டு. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணி நல்ல அழகான பல்சுவைக் காப்பியம். அதனால் கற்றோரும் மற்றோரும் அதனை விரும்பிக் கற்க ஆரம்பித்தனர். அது காரணமாகத் தெய்வ நம்பிக்கை, இறைவன் திருத்தொண்டு முதலியவைகளில் அழுத்தமான பற்றில்லாதிருந்தனர் மக்கள். இதனைக் கண்ட சோழ அரசர் 'வளம் மருவுகின்ற சிவகதையைப் பாடித் தருபவர் இல்லையா' என்று ஏங்கினார். ஆதலால் தொண்டர் பெருமை சொல்லும் சிவகதையை, நவகதையாய்ப் பாட ஆரம்பித்தார் தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் சேக்கிழார் மரபில் பிறந்த அருள்மொழித் தேவர். இவர் சோழ மன்னனிடம் அமைச்சராக இருந்தவர்; தெய்வ பக்தி மிகுந்தவர்; அம்பலவாணனிடம் ஆறாத காதல் உடையவர். தில்லை சென்று தொழுது நின்றபோது, அம்பலத்தாடும் ஆனந்தக்

கூத்தன் 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுக்க, பெரிய புராணத்தைப் பாடத் துவங்கினார். புராணம் பாடி முடிந்ததும், தில்லையிலேயே அரங்கேற்றம் நிகழ்ந்தது. செயற்கரிய செய்த தொண்டர் சீர் பரவிய சேக்கிழாரை, யானை மீது ஏற்றி, அரசனும் உடன் இருந்து கவரி வீசி அவரது பணியின் சிறப்பைப் பாராட்டியிருக்கிறான்.

செறிமத யானைச் சிரத்தில்
பொற்கலத்தோடு எடுத்து, திருமுறையை
இருத்தியபின் சேவையார் காவலரை

முறைமைபெற ஏற்றி, அரசனும் கூடஏறி
முறைமையினால் இணைக்கவரி
துணைக்கரத்தால் வீச

மறை முழங்க, விண்ணவர்கள்
கற்பகப்பூமாரி மழை பொழியத்
திருவீதி வலம் வந்தார்.

என்று உமாபதி சிவாச்சாரியார் பாடி மகிழ்கிறார். இப்படி அமைச்சரது திருத் தொண்டினைப் பாராட்டிய அரசன்தான் அநபாயன் என்னும் குலோத்துங்கன். இவனையே சரித்திர ஆசிரியர் மூன்றாம் குலோத்துங்கன், திரிபுவனதேவன் என்றெல்லாம் அழைக்கிறார்கள். திரிபுவன வீரதேவன் என்று எப்படிப் பெயர் பெற்றான் என்று அறியச் சரித்திர ஏடுகளைப் புரட்டவேணும். இரண்டாம் ராஜராஜனுக்குப் பின் பட்டத்துக்கு வந்து கி.பி. 1178 முதல் நாற்பது வருஷ காலம் அரியணை இருந்து அரசு செலுத்தி யிருக்கிறான்; இரண்டு முறை பாண்டிய நாட்டில் விக்கிரம பாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்கும் நடந்த போரில் இவன் விக்கிரம பாண்டியனுக்குத் துணை நின்று வெற்றியை அவனுக்குத் தேடித் தந்திருக்கிறான். இரண்டாவது போரில் வீரபாண்டியனுக்குத் துணையாக

வந்த சேரப் படைகளையும் முறியடித்து வெற்றி கண்டிருக்கிறான். பின்னர் ஈழம், கொங்கு, வடநாடு முதலிய இடங்களிலும் வெற்றி கண்டு, கடைசியில் விக்கிரம பாண்டியன் மகனான குலசேகர பாண்டியனையுமே வென்று மதுரையில் பட்டம் சூடிக்கொண்டிருக்கிறான். இப்படிச் சேரர், பாண்டியர், கொங்கர், தெலுங்கர் எல்லாரையும் வெற்றி கண்ட விறல் வீரன் திரிபுவன வீரதேவன் என்று பட்டம் சூடிக்கொண்டதில் வியப்பொன்றுமில்லை. ராஜராஜன், ராஜேந்திரன் போன்ற சோழப் பேரரசர்கள் வரிசையிலே வைத்து தானும் எண்ணப்படவேண்டும் என இத்திரிபுவனதேவன் நினைக்கிறான். உடனே ஒரு பெரிய கோயில் கட்ட முனைகிறான். அந்தக் கோயிலே இன்று திரிபுவனம் என்னும் தலத்தில் கம்பகரேசுரர் கோயிலாக அமைந்திருக்கிறது. இந்தத் திரிபுவனத்துக்கே செல்கிறோம் நாம்.

இத்திரிபுவனம் கும்பகோணத்துக்கும் திருவிடை மருதூருக்கும் இடையிலுள்ள சிற்றூர். ரயிலில் செல்பவர்கள் கும்பகோணத்தை அடுத்த திருநாகேசுவரம் ஸ்டேஷனில் இறங்கி வண்டி வைத்துக்கொண்டு செல்லலாம். ஆனால் பாதை நன்றாயிராது. திருவிடை மருதூர் அல்லது கும்பகோணம் ஸ்டேஷனில் இறங்கி வண்டியோ, காரோ வைத்துக்கொண்டு செல்வதுதான் நல்லது. இந்த ஊரை அடுத்த அம்மா சத்திரத்திலே பட்டுப் புடவை நெசவு அதிகம். பெண்களை அழைத்துக் கொண்டு செல்பவர்கள் கையில் நிறைய பணமும் எடுத்துக்கொண்டே செல்ல வேண்டும். இல்லாவிட்டால் ஊர் திரும்பும்போது தாம்பத்ய உறவிலே பிளவு ஏற்பட்டால் அதற்கு நான் பொறுப்பாளியில்லை. கோயில் கோபுரம் ஊருக்குள் நுழைவதற்கு முன்னமேயே தெரியும். நீண்டு உயர்ந்து கம்பீரமாக இல்லாவிட்டாலும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். கோயில் வாயிலுக்கு நேரே கிழக்கே இருந்தும்

வரலாம். இல்லை, தென் பக்கத்து ரோட்டிலிருந்து பிரியும் கிளை வழியாகவும் வரலாம். பெரிய புராணம் என்னும் கலைக்கோயிலை எழுப்பிய சேக்கிழார், அங்கு தோரணத் திருவாயில், திருமாளிகைத் திருவாயில், திரு அணுக்கன் திருவாயில் என்ற மூன்று வாயில்களையும் ஒருமுற்ற வெளியையுமே காட்டித் தருகிறார்.

அந்தச் சொற் கோயிலுக்கு ஏற்ற கற்கோயிலாக இக்கோயிலைக் கட்டி யிருக்கிறான் திரிபுவன வீரதேவன். முன் வாசல் கோபுரம் தோரணத் திருவாயில் ஏழடுக்கு மாடங்களோடு கூடியது. இரண்டாம் கோபுரம் திருமாளிகைத் திருவாயில் மூன்று அடுக்கு நிலங்களுடையது. இந்த இரண்டு வாயில்களையும் கடந்துதான் கோயிலுக்குள் செல்ல வேணும். இனிக் கோயில் பிராகாரத்தை வலம் வரலாம். விரிந்து பரந்த பிராகாரம் அது. நன்றாகத் தளம் போட்டு மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும். ஏதாவது பெரிய சமய மகாநாடு அல்லது இலக்கியக் கூட்டம் நடத்த வேண்டுமென்றால் அழகாக நடத்தலாம்.

ஐயாயிரம் பேர்கள் உட்கார்ந்து அமைதியாகக் கேட்கலாம். அவ்வளவு விசாலமானது. இந்தக் கோயிலின் விமானம் சிறப்பு உடையது. தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் போல் உயரத்திலோ அல்லது காத்திரத்திலோ பெரியது அல்ல. என்றாலும் கண்கவரும் அழகு வாய்ந்தது. சச்சிதானந்த விமானம் என்றல்லவா பெயர் அந்த விமானத்துக்கு! ஆதலால் பார்ப்பவர் உள்ளத்துக்கு ஓர் அமைதி, ஆனந்தம் எல்லாம் அளிக்காதிருக்காது அந்த விமானம். விமானத்தை நல்ல வர்ணம் பூசி மேலும் அழகு செய்திருக்கிறார்கள். அதன் நிர்வாகஸ்தரான தருமபுரம் ஆதீனத்தார். விமான தரிசனம் செய்து கொண்டே மேலப் பிராகாரத்துக்கு வந்துவிட்டால் அங்கு கருவறையின் பின்சுவரில், மேற்கே பார்த்த கோஷ்டத்தில் லிங்கோத்பவர்

இருப்பார். தமிழ் நாட்டிலுள்ள லிங்கோத்பவர் திரு உருவங்களிலெல்லாம் சிறந்த உரு அது. பொங்கழல் உருவனாகக் காட்சி கொடுப்பார். அவர் அழல் உருவன் என்பதைக் காட்ட அங்கு சுடர்விடும் நீண்ட வட்ட வடிவையே சிற்பி உருவாக்கியிருக்கிறான்.

லிங்கோத்பவரை வணங்கி வலம் வரும்போதே கோயிலின் அடித்தளத்திலுள்ள யாளி வரிசை, யானை வரிசை முதலியவைகளையும் காணலாம். அவைகளைப் பார்க்கும் போது பேலூர், ஹலபேடு முதலிய இடங்களில் உள்ள ஹொய்சலர் சிற்பங்கள் ஞாபகத்துக்கு வரும். சொல்லடுக்குகளின் மூலம் இன்னிசை எழுப்புவது போல் கல்லிலே உருவ அடுக்குகளை அமைப்பதன் மூலம் ஒரு மன எழுச்சியையே உண்டாக்கலாம் என்று தெரிந்திருக்கிறான் சிற்பி. இதனைப் பார்த்துக்கொண்டே உட்கோயிலில் நுழையலாம். கருவறையில் இருப்பவர் கம்பகரேசுரர். நல்ல அழகு தமிழில் நடுக்கம் தீர்த்த நாயகர் என்பது அவர் திருநாமம்.

தல வரலாற்றைத் திருப்பினால் பிரகலாதன், திருமால், வரகுணன் முதலிய எத்தனையோ பேருக்கு இவர் நடுக்கம் தீர்த்திருக்கிறார். ஆம்! நாமும்தான் வறுமையால், வயோதிகத்தால், நோய் நொடியால் எப்போதுமே நடுங்கியபடியே தானே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்த நடுக்கம் எல்லாம் தீர்ந்து 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்ப தில்லையே! உச்சி மீது வான் இடிந்து விழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென் பதில்லையே!' என்று பாரதியுடன் சேர்ந்து பாடும் தெம்பு பெற இந்த நடுக்கம் தீர்க்கும் பெருமானை வணங்கத்தானே வேண்டும். ஆதலால் அவரை வணங்கிவிட்டு வெளியில் வரலாம்.

இந்தக் கோயிலில் உள்ள செப்புச் சிலைகளில் சிறப்பாய் இருப்பது பிக்ஷாடனத் திருக்கோலம். தனியாக

ஒரு பீடத்தில், அலங்காரம் பண்ணி நிறுத்தி வைத்திருப்பார்கள். கூடுமானால் மூர்த்தியை அவன் இருக்கும் வண்ணத்திலேயே காட்டச் சொல்லிக் கண்டு மகிழலாம். அதன்பின் மூலக் கோயிலுக்கு இடப்புறத்தில் அம்பிகையின் சந்நிதிக்கும் சென்று வணங்கலாம். அம்பிகையின் பெயர் அறம் வளர்த்த நாயகி. இறைவன் நமது நடுக்கங்களை யெல்லாம் தீர்த்தால் இறைவி அறம் வளர்த்து நம்மை யெல்லாம் புரக்கிறாள். அவளையும் வணங்கிவிட்டு வெளியே வரலாம்.

'இந்தக் கோயிலில் பார்க்கவேண்டியது எல்லாம் இவ்வளவுதானா?' என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகிறது. இனித்தான் நீங்கள் பார்க்க வேண்டிய அதிமுக்கியமான சரபர் சந்நிதி இருக்கிறது. சரபர் வரலாறு இதுதான். அதிக்கிரமங்கள் செய்து வந்த இரணியனை மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்து அழிக்கிறார்; பிரகலாதன் முதலான பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். இரணியன் உடல் கிழித்து உதிரம் குடித்ததும், நரசிம்மருக்கு ஒரு வெறியே ஏற்படுகிறது. பாதி மிருகம் தானே. ஆதலால் உலகத்தையே அழிக்க முற்படுகிறார்.

தலைவலி போய்த் திருகுவலி வந்த கதை ஆயிற்று அவரது காரியங்கள். தேவரும் மக்களும் அச்சமுற்றனர். சிவபிரானிடம் முறையிட்டனர். உடனே அவர் நரசிம்மத்தையும் வெல்லும் சரபராக உரு எடுக்கிறார். நரசிம்மத்தைத் தம் காலில் அடக்கி ஒடுக்குகிறார். சரபம் என்றால் அண்டப் பேரண்டப் பக்ஷி என்று கேட்டிருக்கிறோம். சிவபிரான் எடுத்த திருக்கோலம் சிங்க முகத்தோடே விரிந்த சிறகுகளோடே இத்தலத்தில் நடுக்கம் தீர்த்து அபயம் அளிப்பதாகும். இங்கு கம்பகரேசுரரோடு அச்சம் தீர்த்து அருள் புரிபவர் சரபருந்தான். நரசிம்மனை

அடக்கும் சரபராக இறைவன் எழுந்தார் என்று கொள்வது வைஷ்ணவ பக்தர்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். 'எல்லா மூர்த்திகளும் தோன்றி நின்று ஒடுங்கும் இறைவன் ஒருவனே; அவனே நரசிம்மன்; அவனே கம்பகரேசுரன்; அவனே சரபன்' என்று மட்டும் உணரத் தெரிந்து கொண்டால் அமைதி பெறலாம்.

சரபர் உருவத்தில் பயங்கரமாக இருப்பினும் வர பலத்தில் சிறந்தவர் அவர். ஆதலால் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாகவே அவரது சந்நிதிக்கும் சென்று வணங்கி அருள் பெற்று மீளலாம். தெற்கு நோக்கிய சந்நிதியில் சிலை உருவிலே மூலவராகவும், செப்புப் படிவத்திலே உற்சவராகவும் எழுந்தருளியிருக்கிறார். இந்தச் சந்நிதிக்குச் செல்பவர் களுக்குக் கலை அழகைக் காணும் பெருவாய்ப்பு ஒன்று காத்துக் கிடக்கும். சரபர் இருக்கும் மாடத்தின் வாயிலிலே இரண்டு பெண்கள் கொடியடியில் நிற்கும் மடக் கொடிகளாக நிற்பார்கள். கல்லிலே வடித்த கட்டழகிகள் அவர்கள். அவர்கள் நிற்கிற பாணியிலேதான் எத்தனைக் கவர்ச்சி?

நடந்தாள் ஒரு கன்னி மாராச
கேசரி நாட்டில் கொங்கைக்
குடந்தான் அசைய ஒயிலாய்,
அது கண்டு கொற்றவரும்
தொடர்ந்தார், சந்நியாசிகள் யோகம்
விட்டார் சுத்த சைவ ரெலாம்
மடந்தான் அடைத்து சிவபூசையும்
கட்டி வைத்தனரே.

என்று ஒரு பாட்டு.

அந்தக் கன்னி யாரென்று கவிஞன் கூறவில்லை. அந்தக் கன்னியே இரண்டு உருவில் இங்கு வந்து நிற்கிறாளோ என்று தோன்றும். இக்கன்னியர் இருவரும் சரபர் சந்நிதியில் நிற்பானேன்? சரபரைத் தரிசிக்கும்போது ஏற்படும் அச்சம் எல்லாம் நீங்கவும், திரும்பும்போது உள்ளத்திலே ஒரு கிளுகிளுப்பை ஊட்டவுமே இவர்களை இங்கு நிறுத்தி வைத்திருக்க வேணும். சிற்பி செதுக்கிய சாதாரணக் கற்சிலைகள் அல்ல அவை, உயிர் ஓவியங்கள். சரபரையோ இல்லை, கம்பகரேசுரரையோ கண்டு வணங்கக் கருத்து இல்லாத கலைஞர்கள்கூட இப்பெண்களைக் காண இத்திரி புவனத்துக்கு ஒரு நடை நடக்கலாம். அதன் மூலமாக, அழகை ஆராதனை செய்யத் தெரிந்து கொள்ளலாம்.

கலைதானே பக்தி வளர்க்கும் பண்ணை. இந்தப் பெண்களைப் பார்த்த கண்களை அங்கிருந்து அகற்றுவது கடினம்தான். என்ன செய்வது? வீடுவாசல், மக்கள் சுற்றம் என்றெல்லாம் இருக்கிறார்களே, அவர்களை நினைக்க வேண்டாமா? ஆதலால் வேண்டா வெறுப்போடு வெளியே வரலாம். வீடும் திரும்பலாம்.

இக்கோயில் எழுந்த வரலாற்றைத்தான் முன்னமேயே பார்த்துக் கொண்டோமே. இன்னும் பல விபரங்கள் தெரிய வேண்டுமென்றால் கல்வெட்டு ஆராய்ச்சி ஒன்று நடத்த வேண்டியதுதான். இந்தக் கோயில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்தது. அங்குள்ள ஏழு கல்வெட்டுக்கள் எத்தனை எத்தனையோ கதைகளைச் சொல்லுகின்றன. கல்வெட்டுக்களில் இறைவன் திரிபுவனமுடையார், திரிபுவன ஈசுவரர், மகாதேவர் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். இங்குள்ள கல்வெட்டுக்களில் பேசப்படும் பெருமக்கள் ஜடாவர்மன்

பராக்கிரம பாண்டியனும் மூன்றாம் குலோத்துங்கனுமே. குலோத்துங்கனின் ஆசிரியரும் ஸ்ரீகந்த சம்புவின் புதல்வருமான ஈசுவர சிவன் இக்கோயிலைப் பிரதிஷ்டை செய்தார் என்று ஒரு கல்வெட்டு கூறும். குலோத்துங்கன் பெற்ற வடநாட்டு வெற்றிகளைக் கூறும் கல்வெட்டுக்களும் உண்டு. மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்களைப் பற்றியெல்லாம் விவரிக்கும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. மேலும், மீமாம்சமும், தமிழும், திருப்பதிகங்களும் முறையே ஓத விரிவான பல்கலைக்கழகம் ஒன்றும் அங்கு இருந்திருக்கிறதென்று அறிகிறோம். இப்போதுகூட ஒரு பல்கலைக்கழகத்தை கலை வளர்க்கும் கூடத்தை அங்கே ஆரம்பிக்கலாம். அதைக் கவனிக்கவேண்டியவர்கள் ஆதீன கர்த்தர் அல்லவா; நான் இல்லையே.



000059